உ

கடவுள் துணை.

சைவ எல்லப்பநாவலர் பாடிய

# அருணாசலபுராணம்

## மூலமும் - உரையும்.

இஃது

கோகுலாபுரம்,

அருணாசல முதலியாரால்

பார்வையிடப்பட்டு,

இதன்விலை. அணா 4.

திருப்பதி.

## இரத்தினமுதலியார்

அவர்களாற்றமது.

கலைக்கியானமுத்திராக்ஷரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது,

1906.

சென்னை முத்து கிருஷ்ணனதெருவு. 34-ந வீடு.

உ

கடவுள் துணை.

# விளம்பரம்.

## வன்னியர்புராணம் - மூலமும் - உரையும்.

இதனால் வன்னிய மடாதிபதிகளுக்கும் அவ்வருணத்தாருக்கும் புத்தக வியாபாரிகளுக்கும் ஏனையோர்களுக்கும் தெரிவிப்பது யாதெனில்,)

இதுகாறும் வெளிவராதிருந்த இவ்வன்னிய புராணம் மூலமும் உரையும் பழைய ஏட்டுப்பிரதிகளைக் கொண்டு கூடியவரையில் பரிசோதித்து அச்சிட்டு வெளிப்படுத்தியிருக்கின்றனன். இதில் அநேக விஷயங்கள் உள அவையாவன வன்னியரின் பிறப்பு வளர்ப்பு சாதியிலெத்தனை பிரிவுகளடங்கியிருப்பதெனவும் நான்கு வருணத்தில் எவ்வருணத்தினரென்றும் அவ்வருணத்தாருக்கு இன்னகுலம் கோத்திரம், சூத்திரம், மாலை, கொடி, வாகனம், வாத்தியம், பட்டயம், முதலான பல அங்கங்கள் உடையவர்களென்றும் பிரம்மவன்னியவெச்சக்ஷத்திரியர் வீரவன்னியர் சோழவம்சத்தார் அக்கினிகுலஸ்தர் இன்னும் அநேகபேர்களும் அதற்கு காரணங்களும் வன்னியர் பராக்கிரமந்தோன்ற பரமசிவனுடைய அருளினாலும் துர்க்காதேவியுதவியைக்கொண்டுகடல்தாண்டி யுத்தஞ்செய்து வாதாபியை ஜயித்து அவனாளப்பட்ட இரத்தினபுரியை சூறையாடி யழித்து இராக்ஷசப்பூண்டை கருவறுத்து இன்னின்ன தேசங்களையாண்ட வீரமும் அநேக அரிய பெரிய விஷயங்களும் அடங்கியிருக்கின்றன அவைகளை எல்லாம் ஈண்டுவிரிக்கின் இதிலடங்காவென்றஞ்சி யிம்மட்டே விடுத்தனன்.


இப்புராணம் டெமி எட்டு பக்கங்கொண்டளவில் 328 பக்கங்கள் அடங்கியது புல்கலிகோ பயிண்டு. விலை ரூபா 1 8 0

| | |
|---|---|
| ஷை ஆப்பயிண்டு | 1 4 0 |
| நூற்றெட்டுதிருப்பதி கீர்த்தனை. | 0 4 0 |

இப்புத்தகம் வேண்டுபவர்கள் அடியிற்கண்ட விலாசத்தாருக்கு எழுதி பெற்றுக்கொள்ளலாம்.

டி. ஆர். வெங்கடேசமுதலியார்
அண்டு கோ
நெ. 34, முத்து கிருஷ்ணன் தெரு
தங்கசாலைபோஸ்டு மதராஸ்.





உ

அண்ணாமலையார் துணை.

# திருவண்ணாமலை தீபரத்தினம்.

விருத்தம்,

இந்திராதிமுதன்முனிவர்கொண்டாடுதீபமெண்
  டிசைகாணவோங்கு தீபம்
இமையபர்வதவல்லி கண்கொண்டதீபமிது
  யென்வினை யறுக்குதீபம்
சந்திராதித்தரொடு அட்டவயிரவரெவரும்
  சரணெனவணங்குதீபம
சாலோகசாமீப சாரூபமளவிடா
  சாயுச்ய தீபமிதுவே
சிந்தையிலிமைப்போது ஐம்பூதசாட்சியாய்
  தெரிசனம செய்தபேர்க்கு
செய்தவினையேவல்கொடு சூன்யமுதல்பிணியெலாம்
  ஜென்மரந்திரத்து மனுகா
கந்தமலர்சோலைகுளிர் தீமபுநல்நிறைச்சாலை
  கனகமலை மீதிலென்றும்
மண்ணார்மலர்க்கண்மால் விண்ணாரயன்காணா
  அண்ணாமலைதீமே, (க)

பரிதிமதிதிருவலம் செய்துத்தொழுந்தீபம்
  பங்கயன் வணங்குதீபம்
பாரளந்தோன்தேடி காணாததீபமது
  பார்வதிகண்டதீபம
சரியைகிரியாயோக ஞானமோனத்தவர்கள்
  சதாநிஷ்டைசெய்யுந்தீபம்
ஜனகாதிமுனிவர்மனமகலாததீபமது
  சச்சிதானந்ததீபம
விரிவானவெண்பத்து நான்குலட்சஞ்சீவ
  பேதத்தமர்ந்த தீபம
வினைப்பயனறிந்தந்த கருவிடைப்போக்கியே
  வேடிக்கை பார்க்குந்தீபம்
மருமலர்சோலைகுளிர் தீமபுநலநிறைச்சாலை
  மந்தரமலை மீதிலென்றும
பண்ணார்மலர்க்கண்மால் விண்ணாரயன்காணா
  அண்ணாமலைத் தீபமே. (உ)

பிஞ்சுமதிகங்கையை முடிமேற்பூண்டதீபமாம்
  பிணிமேலணிந்த தீபம்

# திருவண்ணாமலை தீபரத்தினம்.

பேசரிய மறையடியு நடுமுடியுமாந்தீபம்
பெண்கொடிமணந்த தீபம்
அஞ்செழுத்தாய்ப் பஞ்சபூதமாயென்னுடற்
காதாரமான தீபம்
அகிலபுவனங்களுக் கிகருகதிகந்தரும
அங்கிங்கெனாத தீபம்
தஞ்சமென்றடிமடியா நெஞ்சத்திருத்தியே
தன்னருட் காட்டுதீபம்
தந்தைதாய்குருதெய்வ தமர்தாரமகவுமாய்
தானுமாயாடுதீபம்
கஞ்சமலர்ச்சோலைகுளிர் திம்புனல்நிரைச்சாலை
கனகமலை மீதிலென்றும்
மண்ணார்மலர்க்கண்மால் விண்ணாரயன்காணா
அண்ணாமலைத் தீபமே. (௧)

ஜாதிமதபேதமாம் சுழற்கற்றமுதிரோர்
சமூகத்தி லங்குதீபம்
சதுமறையும்வேதமறு தொண்ணூற்றியாறுதத்
துவமெல்லாம் நிறைதீபம்
சோதிமலைமீதிற் சுயஞ்சோதியாயநின்றும்
சோதித்தழைக்குதீபம்
சும்மாவிருக்குஞ் சுகங்கொண்டமௌனியொடு
சும்மாயிருக்குந்தீபம்
நீதிபலபேசிடக வாதமிடுமடையாது
நெஞ்சைப்பிளக்குந்தீபம்
நின்றநிலைநிறைந்த திக்கெல்லாமிரவுபகல்
நிர்த்தமிடுநெடிய தீபம்
மாதுமலைமங்கையொடு ஆதிமலைமீதிலமர்
மணிமந்திர தீபசுடரா
மண்ணார்மலர்க்கண்மால் விண்ணாரயன்காணா
அண்ணாமலைத் தீபமே. (௨)

மாசிலாவாகம் புராணமறையாந்தீபம் மகாவாயுதித்ததீபம், மன்ன துரிகையைத் தன்னுடன்றத்தீபம் மாலைமகள் கழுவுதீபம், தேசமிடமாம் பொருள் வற்றவற்றுந்தீபம் தெளிவினை சாய்த்ததீபம் தேவேந்திரன்முனிவ ரமரர்கின்னரர்கள் சேடக்களித்ததீபம், ஆசைவன்பாசமா மாசாக்கருணைப முதன்பர்க்குதவுதீபம், அன்பாமபணிப்பூண்டு சிவசிவவெனத் தேம்பு மவர்க்கே இனிக்குந்தீபம், மாகின்மலர்ச்சோலைகுளிர் திம்புனல் நிரைச்சாலை மந்தரமலைமீதிலென்றும், மண்ணார்மலர்க்கண்மால் விண்ணாரயன்காணா வண்ணாமலைத்தீபமே. (௩)

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

# திருவண்ணாமலைத்
# தீபதரிசனச் சரித்திரச் சுருக்கம்.

அகண்டாகார சச்சிதானந்த பரிபூரணசுயம்பிரகாசப்பொருளாகிய ஸ்ரீகைலாசபதியானவர் இந்த உலகத்தினுள் ஆங்காங்கிருக்கும் ஆத்துமகோடிகள் உய்யும்பொருட்டுத் திருக்கோயில் கொண்டிருக்கின்ற பல தலங்களுள் ஆளுடைய பிள்ளையாராகிய திருஞானசம்பந்தசுவாமிகள் ஆளுடையவரசுகளாகிய திருநாவுக்கரசு சுவாமிகள் ஆளுடைய நம்பிகளாகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆளுடைய வடிகளாகிய மாணிக்கவாசக சுவாமிகள் என்னும் இந்நால்வர்கள் அருளிச்செய்த பாடல்களையுடையனவாய்ச் சோழதேசமுதலான தேசங்களில் இன்ன இன்ன நாட்டில் இத்தனை இத்தனை தலங்களென்று முன்னோர்கள் ஏற்படுத்தின கிரமப்படியே நடுநாட்டுக்குள்ளிருக்கும் தலங்களுள் விசேடமாகிய திருவண்ணாமலையென்னுந் திருப்பதி கிரேதாயுகத்தில் அக்கினிமலையாகவும் திரேதாயுகத்தில் மாணிக்கமலையாகவும், துவாபரயுகத்தில் வெள்ளிமலையாகவும், கலியுகத்தில் கல்மலையாகவும் திருவுருக்கொண்டு அருணாசலம், சோணாசலம், கௌரிநகரம், தேசுநகரம், முத்திநகரம் ஞானநகரம் சிவலோகம் என்று இவ்வாறு பல பெயர்களையுடையதும் சிவபெருமான் கிரிரூபமாயிருப்பதும், பார்வதியார் திருவவதாரமானதும் திருக்கண் புதைத்ததும், மகிடாசுரமர்த்தனஞ்செய்ததும், இடப்பாகம்பெற்றதும், சந்திரவம்சத்தனாகிய வச்சிராங்கதபாண்டியன் பேறுபெற்றதும் கலாதரன் காந்திசாலி தவஞ்செய்து பேறுபெற்றதும், அக்கினிவம்சத்தனாகிய வல்லாளராசன் புத்திரசோகந் தீர்த்ததும், இந்திரதீர்த்த முதலாகிய அனேகதீர்த்தங்களும் அன்பர்கள் திருமலைவலம்புரிதலும் ஆதித்தனுக்குத் தரிசனங்கொடுத்ததும் சூரியவம்சத்தனாகிய பிரதத்தராசனால் அநேககாணிக்கைகளைப்பெற்றதும் அஷ்டவசுக்களும் பிரமன்முதலானவர்கள் பாவநிர்த்ததும், புளகாதிபனபேறுபெற்றதும். நினைக்க முத்திதரும் தலமென்பதும் ஆகம புராணத்திற் சொல்லப்படுகின்றது.

பரமசிவம் மலையுருவானதற்குக் காரணம் யாதெனில் ஒருகற்பத்தில் மகாவிஷ்ணுவும் பிரமதேவனும் தாம் தாம் பிரமமென்றுவாதித்துப் போரிட்டதைத் தீர்க்கும்பொருட்டுச் சிவபெருமான் அக்கினி

லையாய் அவர்கள் மத்தியில நின்று கலகத்தைத்தீர்த்தருளி அவர்கள் வேண்டுதலினால ஒருசிறிய மலையாயுருககொள அதைக்கணட பிரமதேவனும் மகாவிஷ்ணுவும் சுவாமியைநோககிஇம்மலையினுச்சியில ஒருஜோதி என்றென்றுநதெரியுமபடி கிருபைசெயயவேண்டுமென்று பிராத்தித்தார்கள்.

அதற்குச சிவபெருமான் வாரும் பிரமவிஷ்ணுக்களே, கார்த்திகைமாதத்தில வரும் கார்த்திகை நட்சத்திரததில இம்மலையினுசசியில் ஒருஜோதிகாண்பிப்போம அச்சோதியைத் தரிசித்தவர்களின் தாரித்திரியமும வியாதியும நீஙகி இஷ்டகாமியஙகளைப் பெற்று வாழ்வார்கள் இவையல்லாமல, அரசாகளும தவசிகளும தரிசிப்பார்களானால் இடையூறின்றிவாழ்வார்கள். அல்லாமலும இதைக்தொழுதவாகளுககும் தரிசித்தவர்களுக்கும் அவர்மட்டிலலாமல் அவாகளுடைய கோத்திரத்தில இருபத்தொரு தலைமுறைக்கும மோட்சஙகொடுப்போம் என்று திருவாய்மலர்நதருளினார்.

மேலும இம்மலை சனனமென்னும் வியாதிககு மருநதுபோல் இருப்பதனால மலைமருந்தென்றும அழலவணணமா யிருப்பதனால் அருணாசலமென்றும பெயருள்ளது. இதைஒருதரம சொன்னவாககு பஞ்சாட்சரத்தை மூன்றுகோடிதரம் உசசரித்தபலன வருமெனறும அருளிசசெயதார்.

அதற்குப் பிரமதேவனும மகாவிஷ்ணுவும் ஆனந்தமடைந்துசிவபெருமானைப் பார்த்துத் தேவரீர் இவ்வாறு மலைகோலமாயிருநதால் அடியேங்கள் எப்படி பூசைசெய்யககூடும ஆகையால இநதமலையின் கீழ் ஒருசிவலிஙகமூர்ததியா யெழுநதருளவேணடுமென்றுவேணடிக் கொணடார்கள் சிவபெருமான் அப்படியே சிவலிஙகமூர்த்தமாகின்றேமென்று அந்த மலையினுளளே மறைய உடனே அம்மலையினிடத்தில சிவலிஙகம் தோன்றியது அதைககண்டு பரமானந்தமாய மயனென்னும் தேவதச்சனால் ஓராலயம் கட்டுவித்தார்கள், அப்போ தவ்விடத்தில் வளமபொருநதிய நகரமும மூன்றுறு தீர்த்தங்களும் உண்டாயின அல்லாமலும் ஆகாயகஙகை கிணறுகளாகவும கற்பக விருட்சஙகள் மரஙகளாகவும வநதிருந்தன. தேவர்களும ரிஷிகளும் மனிதாகளாக வந்து பிறநதார்கள, அரம்பாஸ்திரீகள தாசிகளாகப் பிறந்தார்கள் ஆகையால எல்லாத் தலங்களும் உடலெனறும அருணாசலத்தலம முகமென்றும அதில சிவபெருமான் கணணெனறும இத்தலத்தின் பெருமையை [illegible] விட்டுச் சொலலுதற் கருமையென்றும நடு[illegible] பெருமானாகிய [illegible]தி கேசுர் மார்க்கண்டேய முனிவருககு அநுக்கிரகஞ் செய்தார். அக்காலத்தில் சிவபெருமான திருவாய்மலர்ந்தருளியபடி அக்

மலையின்மேல் கார்த்திகைமாதத்தில் வருகின்ற கார்த்திகை நட்சத்திரத்தில் சோதிதரிசனமாகிக் கொண்டுவந்த பாவனையாக இப்போதும் அந்த மலையின்மேல் தீபதரிசனமாகின்றமையால் அத்தினத்தில் இந்திரதீர்த்த முதலாகிய தீர்த்தங்களில் ஸ்நானஞ் செய்து கிரியை வலம்வந்து அவரவர்கள் சத்திக்குத் தக்கபடி தருமங்கள் செய்து அருணாசலேசுவரரைத் தொழுது தீபதரிசனமுஞ் செய்து துதிப்பவர்கள் அளவிலாச்சம்பத்தையும் மோட்சத்தையுமடைவார்கள்.

ஆதிவாரத்தில் அந்தமலையை வலஞ்செய்தவர்கள் சூரியமண்டலத்தைப்பிளந்து சிவபதத்தைக் தமக்கு இடமாகச் சேர்த்துக்கொள்வார்கள். சோமவாரத்தில் வலம்வந்தவர்கள் இந்திரனைப்போல் ஏழுலகத்தையுமாண்டு சிவசாரூபியத்தை அடைவார்கள். மங்களவாரத்தில் வலஞ்செய்பவர்கள் தங்கள் கடனையும தரித்திரத்தையும் சங்கிலித்தொடர்போல் வருகின்ற ஏழுபிறப்பையும் நீக்குவார்கள். புதவாரத்தில் சிவபெருமானைப் பிரதட்சணஞ் செய்பவர்கள் நாலுவேதங்களையும் ஆறுசாஸ்திரங்களையும் அறுபத்துநான்கு கலைகளையுந்தெளிந்து முத்திக்கு நெருங்கினவராய்த் தேவர்களாவார்கள். குருவாரத்தில வலமாய் வந்தவர்கள் திரிமூர்த்திகளும் புகழுந் தேவர்களுக்கும் முனிவர்களுக்கு நாதராவார்கள். சுக்கிரவாரத்தில் வலஞ்செய்தவர்கள் விஷ்ணுபதத்திற்சேர்வார்கள். சனிவாரவுதயத்தில் வலம்வந்தவர்களுக்கு நவக்கிரகங்களும் பதினோராமிடத்தில் நற்பலனைக் கொடுக்கும். சிவராத்திரியிலும், வருஷப்பிறப்பிலும், ஐப்பசி முதலாகிய மூன்று மாதங்களிலும் வலம்வந்தவர்களுக்கு மேற்சொன்ன பலன்களிலும் அதிகமான பலன் சித்திக்கும்.

உருவந்தெரியாமல் சித்தரும் தேவரும் இத்திருமலையை வலஞ் செய்வதால் மற்றவர்கள் கிரிப்பிரதட்சணஞ் செய்யும்போது, வாகனத்தின்மேலேறிக்கொண்டு வாராமலும், போர்வை போர்த்துக்கொள்ளாமலும், குடைபிடித்துக் கொள்ளாமலும், பாதரட்சை தொடுத்துக்கொள்ளாமலும், தாம்பூலந்தரிக்காமலும், வேறொருசிந்தனையில்லாமலும், மனத்தினால் வந்தனஞ்செய்து அருணாசலேசுவரையே சிந்தித்துக்கொண்டு மிகுந்த பயபத்தியுள்ளவர்களா யிருத்தல்வேண்டுமென்றும், அந்நாளில் விரதமிருந்து சிவதரிசனஞ் செய்ய ஆலயத்திற்போகின்றவர்களுள் அனுகூலரல்லாதவர்கள் அவ்விடத்திலிருக்கும் ஆதிசைவாசாரியர்களைக்கொண்டு வில்வார்ச்சனை முதலியவைகளைச் செய்வித்தால் தங்கள் கையினால்செய்த பேறு கிடைக்குமென்றும் பிரமதேவர் சனகரிஷிக்குச் சொன்னார்.

ஸ்ரீகைலாசத்தில் உலகமாதாவாகிய பார்வதியாரோடு சிவபெமான் எழுந்தருளியிருக்கும்போது அவ்விடத்தில் ஏற்றியிருந்த நெய்த்தீபங்களில் ஓர் தீபம் அணைந்துபோகிற தருணத்தில் ஒரெலியானது அதிலிருந்த நெய்யை உண்ணப்போனது அவ்வெலியின் முகமானது அணைந்துபோகிறவத்தியைத் தூண்டிய மாத்திரத்தில் பிரகாசம் அதிகரித்ததினால் சிவபெருமானவர் கிருபைகூர்ந்து அவ்வெலிக்கு மானிடசரீரமும் அரசும் மற்றப்பேருந் தந்து பூமியில் பிறக்கும்படி கட்டளையிட்டார் அவ்வெலியானது மாபலிச்சக்கிரவர்த்தியாய்ப் பிறந்து சகல ஐசுவரியத்தையும் அநுபவித்திருக்குங் காலத்தில் ஒருநாள் சிவதரிசனத்துக்குப்போக எத்தனித்துத் தன் இராகச்சின்னமுதலிய சகல ஆடம்பர விபவத்துடன் சிவாலயத்துக்குட்பிரவேசித்துப் பிரதட்சணம் வருகையில் அவ்விடத்தில் ஏற்றியிருந்த தீபநெய்யின் ஓர்துளி இந்தச் சக்கரவர்த்தியின் தேகத்தில் ஒழுகினவுடன் அந்தச் சக்கரவர்த்தியின் தேகமுழுமையும் இரணங்கண்டு வெகுகாலம் வருத்தப்பட்டுக் கொண்டிருக்கும்போது ஒருநாள் சிவபெருமான் கிருபைகூர்ந்து சக்கரவர்த்தியே நீ மிகவும் அலங்காரியாகையால் நம்மா லுனக்குண்டாயிற்று நீ இன்றுமுதல் உத்தேசித்து நெய்முதலிய பொருள்களால் ஆலயங்களுக்குத்தீபமேற்றுவையேயாகில் உனக்கு இந்தவிரணந் தீர்ந்து சாயுச்சியபதங்கிடைக்குமென்று அசரீரியாய்த் திருவுளம் பற்றியதைக்கேள்வியுற்ற சக்கரவர்த்தியானவர் ஆநந்தமடைந்து அந்தக் கட்டளையின்படியே அன்றுமுதல் சிவாலயங்களிலும் மற்ற இருள்சூழ்ந்த ஆரணியங்களிலும் தீபம் ஏற்றிக்கொண்டு வருங்காலங்களில் ஒருநாள் ஸ்ரீகைலாசபதியாகிய சிவபெருமானவர் திருவுளமிறங்கிக் கார்த்திகைமாசம் பூர்வபட்சம் கார்த்திகைநட்சத்திரத்தில் தேசோமயமாயெழுந்தருளி அச்சக்கரவர்த்திக்குச் சாயுச்சியபத மளித்தருளினார்.

அக்காலத்தில் சிவதரிசனத்துக்கு வந்திருந்த தேவர்களெல்லாம் அந்தச்சோதியைக்கண்டு பயந்து துதிசெய்து சுவாமியினுடைய உஷ்ணம் தணியும்பொருட்டுப் பொரி அவல் நிவேதனம் செய்தார்கள். இவ்வாறு கைலாசபதியான சிவபெருமான் மாபலிச்சக்கரவர்த்திக்குச் சோதிசொரூபமாகத் தரிசனங்கொடுத்த காரணமாகச் சிவாலயங்டோறும் கார்த்திகைமாசம் பூர்வபட்சம் கார்த்திகை நட்சத்திரத்தில் தீபம் வைக்கவும் * சுட்கப்பனைகட்டவும் ஆயிற்று

* சுட்கப்பனையென்பது சொக்கப்பானையென்றுவழங்குகின்றது.

## தீபதரிசனச் சரித்திரச் சருக்கம்.

கார்த்திகை நட்சத்திரத்திற்கு முன்னாள் பரணி நட்சத்திரஞ் சாயங்காலை அதிவாச தீபத்தில் அக்கினி காரிய முதலியவைகளின் மூலமாய் மகாலிங்க மூர்த்தியாய் ஆவாகனம்பண்ணி அந்தத் தீபத்தைச் சுவாமி சந்நிதானத்திற்றானே பூசித்துவைக்கவேண்டும்.

மறுநாள் சாயங்காலை அர்த்தசூரிய மண்டலத்தில் தென்னமரம், பனைமரம், பாக்குமரம், வாழைமரம், மூங்கில்என்னும் இந்தமரங்களில் ஓர்விதமரத்தை ஆலயத்திற்கும் இந்திரதிக்குக்கும் மத்தியதானமாகிய பிர்மஸ்தானத்தில் நாட்டவேண்டும், இந்தமரத்துக்குத் தீபதண்டமென்றும் பெயராம்.

### தண்டவுன்னதப் பிரமாணம்.

சுவாமிகெர்ப்ப கிரகத்து விமானம் எவ்வளவு உயரமோ அவ்வளவு உயரமாவது அந்தவிமானக் கழுத்தினளவாவது இருக்கவேண்டும் இவ்விதமான தீபதண்டத்துடன் உலர்ந்த தென்னோலையாவது பனையோலையாவது, பாக்கோலையாவது, வாழைக்கருகாவது, தாழஞ்சருகாவது, அசோகச்சருகாவதுவிமானம்போல்கட்டவேண்டும்.

மேற்சொன்ன பரணிநட்சத்திர மறுநாளாகிய கார்த்திகை நட்சத்திரத்தில் பஞ்சமூர்த்தசமேதமாய்ச் சோமாஸ்கந்த மூர்த்தியை உற்சவாலங்காரத்துடன் எழுந்தருளச்செய்து மேற்படிதீபம் சுவாமிக்கு முன்னே வரும்படியாகச்செய்து தீபதண்டத்தைச் சமஸ்காரப்படுத்திக்கொண்டு அத்தீபத்தை அததண்டின்மேல் வைத்துச் சருகுகளைக் கொளுத்திவிட்டு அச்சருகுகள் எரிந்தபின்பு மேற்படி தண்டைச் சோதித்து விடவேண்டும் அச்சோதியைச் சிவபெருமானுகையாவனைபெய்து தரிசிப்பவர்களும் இம்மையில் செல்வமும் மறுமையில் மோட்சமுங் கிடைக்குமென்று ஆகமங்களிற் சொல்லுகின்றது.

### தண்டவிதி

உத்தமம்-தென்னமரம், மத்திமம்-பனைமரம், அதமம், பாக்குமரம், அதமா அதமம், வாழையும மூங்கிலுமாம்.


### தண்டவுன்னதப் பிரமாணம்

உத்தமம் உயர்வு, மத்திமம் அதன்கழுத்தளவு

மலையைச்சேர்ந்த தலங்களில் நட்சத்திரம் பிரதான மாகவும், சமுத்திரத்தைச்சேர்ந்த தலங்களும் பௌர்ணமிதிதி பிரதானமாகவும் தீபம்வைக்கவேண்டியதென்று ஆகமங்களில் சொல்லுகின்றது.

தீபதரிசனச் சரித்திரச்சருக்கம்

முற்றிற்று

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# அருணாசல புராணம்.

## மூலமும் உரையும்

---

### பாயிரம்.

#### விநாயகர் காப்பு.

கலிவிருத்தம்

மிக்கவேத வியாசர்விளம்பிய
விக்கதைக்கிதை யின்றருள்செய்திட
முக்கண்வெற்பினை மும்மதவாரியை
கைக்களிற்றினைக் கைதொழுதேத்துவாம்.

(இ-ள்) அநேகவேதங்களை இயல்பாகவே உணர்ந்த வியாசரால் அருளிச்செய்யப்பட்ட ஸ்காந்தபுராணத்தில் உருத்திரசங்கிதையினிருக்கும் இந்த அருணாசலசரித்திரத்தை இக்காலத்தில் தமிழினாற் செய்ய இதற்கு இணையில்லையென்று சொல்லும்படி அனுக்கிரகம் செய்வதற்கு மூன்றுகண்களுடைய மலைபோன்றவரைச் சமுத்திரம் போன்ற மும்மதத்தையும் தும்பிக்கையினையுமுடைய யானைமுகம் பொருந்திய விநாயகரைக் கையினாற் றொழுது தோத்திரஞ் செய்வோம் எடுத்த நூல் இடையூறில்லாமல் முடியும்பொருட்டு எ-று.()

# பாயிரம்

## சபாபதிதுதி.

சந்தக்கலிவிருத்தம்.

முதிருஞ்சுவை மதுரப்பெற மொழியுந்தமிழ் விரகர்ப்புகழ்
பதிகப்புனை சவனம்பினர் பவரஞ்சன ஞானலகதி
ருதிரும்படி பகிரண்டமு முடையும்படி யிலதும்பட
யதிரும்படி நடனம்புரி யதிருங்கழ லதிருங்கழல்

(இ-ள்) மிகுந்த மதுரசமுண்டாகப் பாடுகின்ற திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளால் தோத்திரஞ் செய்யப்பட்ட பதிகமாகியமாலையைத் தரிக்கின்றவராயும் தம்மையடைந்தவர்களை பிறவியைக்கொடுப்பவராகியும், மலரகிதராயும், விளங்கிய சூரியனுதிரவும், பகிரண்டமுடையவும் விளங்கிய பூமியதிரவும் நடனத்தைச் செய்யாநின்ற மிகவுஞ் சப்திக்கின்ற வீரகண்டாமணியைத்தரித்த சபாபதியினுடைய பாதத்தை வணங்குவோம். எ-று (௧)

இச்செய்யுளுக்குப் பயனிலை வருவிக்கப்பட்டது.

## இத்தலமகிமை

அறுசீர்கழிநெடிலாசிரியச் சந்த விருத்தம்.

இரவிகள் சந்திரர் வயிரவர் விஞ்சையரிமையவ ரெண்டிசையோ
ருரக ரருந்தவர் முனிவரர் பங்கய ருவண நெடுங்கொடியோர்
பரவி நெருங்கலி னுலக நிறைந்தவர் பணியுமிடங்கிடையா
தரகர வென்பது கடலின் முழங்கிய தருணைவளம்பதியே.

(இ-ள்.) சூரியரும் சந்திரரும் வயிரவரும் வித்தியாகரரும் தேவரும் அஷ்டதிக்குப்பாலகரும் நாகலோகத்தாரும் அரியதபசிகளும் முனிவரும் பிரமாக்களும் கருடக்கொடியையுடைய விஷ்ணுக்களும் பரந்து நெருங்குதலினால் உலகநிறைந்து அவர்கள் வணங்குதற்கு இடங்கிடையாததா லவர்களாலே சொல்லப்பட்ட அரகரவென்கிற சப்தமானது சமுத்திரத்திலும் அதிகமாகமுழங்கும் வளப்பத்தையுடைய அருணாசலமென்னும்தலமாம் எ-று. (௨)

இளமுலை மங்கையர் முகமுநெருங்கிய விருகுழையும் பகலே
யொளிபொரு சந்திர னுடனிரு செங்கதி ருதயமெனுந் தனியூர்
தளையவி ழுந்தொடை மகபதி தனபதி தனபதி தண்பதியா
மளகை வளம்பதி தனிலும் வளம்பதி யருணை வளம்பதியே.

(இ-ள்.) இளமையாகிய தனங்களையுடைய பெண்கள் முகங்களும் அவர்களணிந்த இரண்டு ரத்னகுண்டலங்களும் பகலிலே பிர

காசிக்கின்ற ஒருசந்திரனுடனே இரண்டுசூரியர் உதயமானார்களெ
ன்று சொல்லும்படியாகிய ஒப்பற்றமுறுக்கவிழ்ந்த கற்பகமாலையை
த்தரித்த தேவேந்திரனுடைய பட்டணமாகிய அமராபதியிலும் கு
பேரனுடைய நகரமாகிய அளகாபுரியைப்பார்க்கிலும் வளப்பத்தை
யுடையது, அருணாசலமென்னும் தலமாம் எ-று. (ச)

காலனைதீர்த்திட மார்பிலுதைத்தவர் காமனுருப் பொடியா
ரால மிடற்றினர் மாலை மதிக்குறை யாடரவப் பணியார்
நானு முகத்தவன் ஞால மளிப்பவ னுமெதற் கரியார்
சூல மெடுப்பவ மேவு திருப்பதி சோணகிரிப் பதியே,

(இ-ள்.) எமனெதிர்க்க மார்பிலே உதைத்தவராகியும் மன்மதனு
டைய தேகத்தைப் பொடியாகச் செய்தவராகியும், விஷத்தைக் கண்
டத்தில் தரித்தவராகியும், மூன்றாம்பிறையைத் தரித்தவராகியும், ஆ
டுகின்ற சர்ப்பத்தை ஆபரணமாகப் பூண்டவராகியும், பிர்மாவும்
விஷ்ணுவும் தேடுதற்கரியவராகியும சூலத்தைக் கையிலெடுத்தவரா
கியும், விளங்குகின்ற பரமசிவன் வாசஞ்செய்கின்ற அழகாகிய பதி
அருணாசலமென்னும தலமாம். எ-று. (ரு)

## பரமசிவவணக்கம்.

சந்தக்கலிவிருத்தம்,

உறவொடு பகையறு மொருமுத லெவனவ
னிறுதியி னுலகரு ளிறையவ னெவனவன்
மறைமுடி வினினடம் வளர்பவ னெவனவ
னறிவினி லறியவ னடியிணை தொழுதனம்.

(இ-ள்) உறவும்பகையு மில்லாத ஒப்பற்ற முதன்மையானவனெ
வன் சருவசங்காரமானபின்பு உலகத்தை உண்டாக்குகிறவனெவன்
வேதமுடிவிலே நடனஞ்செய்கிறவனெவன் அப்படிப்பட்ட தன்மை
யாயுடைய பரமசிவனது திருவடிகளை யாம் வணங்கினோம். எ-று()

## அருணாசலேசர் துதி

கலித்துறை,

மணிகொண்ட நெடுங்கடலில் விழிவளருந்திருமானு மறையி
னுலும், பணிகொண்ட பாதலத்தும் பூதலத்து மீதலத்தும் பரிந்து
தேட, வணிகொண்டபிரமாண்ட கோளகைபொற் கோளகையா யழ
குகாட்டக், கணிகொண்டவொருவரையா மொருவரையா மகலாது
கருத்துட்சேர்ப்பாம்,

(இ-ள்.) இரத்தினங்களுக்கிருப்பிடமாகிய நீண்டகடலிலே நித்திரைசெய்கின்ற விஷ்ணுவும் பிரமனும் நாங்கள் வாசஞ்செய்கிற பாதாளத்திலும் பூமியிலும் மேலுலகத்திலும் வருந்தித்தேட அவர்களால் எட்டப்படாமல் அழகாகிய பிரமாண்ட கோளகையானது பொன்னாற்செய்யப்பட் கோளகையாகிய அழகு காண்பிக்க எண்ணங்கொண்ட ஒப்பற்ற அக்கினிமலையாகிய பரமசிவத்தை நீங்காது இருதயகமலத்திற் சேர்த்துக்கொள்வோம் எ-று. (எ)

ஒருமானைக் கரத்தினில்வைத்தொருமானைச் சிரத்தினில்வைத் துலகமேழுந், தருமானை யிடத்தினில்வைத் தருள்வானைப் பவள நெடுஞ் சயிலம்போல, வருமானை முகத்தானை யளித்தானைப் பெருமானை மகிழவேறும், பெருமானையருணகிரிப் பெம்மானை யடிபணிந்து பிறவிதீர்ப்பாம்.

(இ-ள்.) தாருகாவனரிஷிகள் வரவிட்டமானைக் கையிலேவைத்தும் ஒருமானைபோன்ற கங்கையை முடியில்வைத்துப், ஏழுலகத்தையும்பெற்ற உமாதேவியை வாமபாகத்தில் வைத்தும், அடியார்க்கருள்செய்கிறவரும், பவளம்போல்வருகின்ற ஆனைமுகத்தை யுடைய கணபதியைப் பெற்றவரும், போர்செய்கிற இடபவாகனத்தில் எழுந்தருளுகின்ற ஆண்டவருமாகிய அருணாசலத்தலத்தில் வீற்றிருக்கின்ற பரமசிவனுடைய சீர்பாதத்தை வணங்கி இனிமேல் வரும் பிறப்பைத் தீர்த்துக்கொள்ளுவோம் எ-று. (அ)

## உண்ணாமுலையம்மை துதி.

காரொழுகுங் குழலாளைக் கருணை வழிந் தொழுகுமிரு கடைக்கண்ணாளை, மூரலிள நிலவொழுகப் புழுகொழுக வழகொழுகு முகத்தினாளை, வாரொழுகுந் தனத்தாளை வடிவொழுகித்தெரியாத மருங்குலாளைச், சீரொழுகும் பதத்தாளை யருணையுண்ணா முலையாளைச் சிந்தைசெய்வாம்.

(இ-ள்.) மேகம்போன்ற கூந்தலையும், கிருபைவழிந்தொழுகுகின்ற இரண்டு கடைக்கண்களையும், தந்தங்களின்காந்தி இளமையாகிய சந்திரிகைபோல் பிரகாசிக்கப் புழுகுவசிக்கின்ற அழகுபொருந்திய முகத்தையும், கச்சணிந்ததனங்களையும், அதிகவழகையுடையதாய் ஒருவருக்குந் தெரியாத இடையையும் சிறப்புப்பொருந்திய பாதங்களு

மூடைய அருணாசலத்தலத்தில் வீற்றிருக்கின்ற உண்ணாமுலையம்மையை மனத்தில் நினைத்துக்கொள்ளுவோம். எ-று. (க௯)

யானை திறைகொண்ட விநாயகர் துதி.

மதமூன்று மாறாக வருங்களிற்று முகத்தானை மனதிலேதான், பதமூன்று மருந்தவற்குப் பதமூன்று கடந்தபதம் பாலிப்பானை, விதமூன்றுபுரங்கடிந்தா னளித்தருளுமொருமுதலை வேரோடேசனு, சிதமூன்று பிறப்பொழிக்கு யானைதிறை கொண்டவனைச் சிந்தை செய்வாம்.

(இ-ள்.) மும்மதங்களும ஆறாகி ஓடிவருகின்ற யானைமுகமுள்ளவரும் மனத்தில் தம்முடைய சீர்பாதங்களைச் சிந்திக்கின்ற அரிய தவத்தையுடையவர்களுக்கு காண்காப்பதமாகிய சாயுச்சியத்தைக் கொடுப்பவரும், முப்புரங்களைத் தகனஞ்செய்த சிவபிரானாலே பெறப்பட்டவரும் ஒப்பற்ற மூன்றாகிய சஞ்சிதவினையையுடைய பிறப்பைக் கெடுக்கின்றவருமாகிய யானை திறைகொண்டவரென்னும் விநாயகரை மனத்திற் சேர்த்துக்கொள்வோம. எ-று. (உ0)

சிவசுப்பிரமணியர் துதி.

பொங்காருமணிச்சோலை யருணைநகரிங்கோபுரத்திற் குமரவேளை, வங்காளமாளிகை மடவீதி தனையுறையு மயிலோனை, கந்தாருங்கடக்களிற்று மகவார்ந்த நகரிறைவன் கனகநாடுந், தந்தானையலர்கடப்பந் தாரானைப் பணியவர்தாம் தலைமேற் கொள்வார்.

(இ-ள்.) பூங்கொத்துகளையுடைய சோலைசூழ்ந்த அருணாசலத்துக் கிழக்குக் கோபுரவாசலுக்கெதிரே கோபுரமண்டபத்திலிருக்கிறவரும், தம்மையடைந்தவர்களைப் பிழைப்பிக்கச்செய்யவடவீதியிலே வாசஞ்செய்கிற மயில்வாகனாரூடவருமாய், தறியிற் கட்டப்பட்ட மதம்பொருந்திய ஐராவதத்தை யேறுகின்ற தேவேந்திரனுக்குத் தெய்வலோகநகரத்தையும் சுப்பிரமணிய நட்சத்திரமாலைக் கொடுத்தவரும், கடப்பமாலையைத்தரித்தவருமாகிய வாரதா சிவசுப்பிரமணியக் கடவுளை வணங்குகிற அடியார்களுடைய பாதங்களைத் தலைமேல் வைத்துக் கொள்வோம். எ-று. (உக)

தேவாரம் பாடியருளிய மூவர் துதி.

வாதுகொண்டபரசமய கோளரியையடிவணங்கி வன்கற்றூணுற், மீதுகொண்டு கருங்கடலைக் கடந்தெழுந் தமிழ்க்கடலின் றிருத்தாள்போற்றி, காதுகொண்ட விழிப்பாவை திருமனைக்கெம்பெருமானைக் கால்களேவத், தூதுகொண்ட சுந்தரனைத் தம்பிரான்றோழனைத் துதிசெய்வோமே.

இ-ள் வாதுகொண்டு செயிக்கவந்த சமணர்களாகிய யானைகளுக்குசிங்கமாகிய திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளுடைய பாதத்தை வணங்கி வலிய கருங்கல்லோடுசேர்த்துக்கட்டிச் சமணர்கள்சமுத்திரத்திற்போட அக்கல்லினாலேதானே அந்தசமுத்திரத்தைக்கடந்த செந்தமிழ்க்கடலென்று சொல்லப்பட்ட அப்பர்சுவாமிகளுடைய பாதத்தை வணங்கி, காதளவுந் தாவிய கண்களையுடைய பரவைநாச்சியாருடைய திருமனைக்கு இரண்டு பாதங்களும் நோக எமதாண்டவனைத் தூதாக வனுப்பிய தம்பிரான் றோழராகிய சுந்தரமூர்த்திசுவாமிகளை வணங்குவோம் எ-று. (கஉ)

திருவாதவூரடிகள் துதி.

தரவுக் கொச்சகக்கலிப்பா.

அத்தனார் பெருந்துறைப் பரிவிலாக் கடற்கடாது
புத்தனார் மதங்கடிந்த புனிதமாகிய சிவனா
முத்தனார் மாணிக்க வாசகனார் முத்திக்கு
வித்தனார் வாதவூர் வித்தகனார் தாள்போற்றி.

இ-ள் பரமசிவன் குருமூர்த்தியாக எழுந்தருளியிருந்த திருப்பெருந்துறைக்குப்போய் அச்சுவாமியினுடைய அனுக்கிரகம் பெற்று அரிதாகிய சிவிக்கடலைக்கண்டு முற்காலத்தில் வியாபித்திருந்த பௌத்தர்களுடைய மதத்தைக் கண்டனஞ்செய்து பரிசுத்தமாகிய சிவன்முத்திநிலையையடைந்தவரும் ஆன்மசத்தியாகிய நிலத்திற்குவிளைவு யாகியும் திருவாதவூரிற் பிறந்த ஞானசொரூபியாகியும் இருக்கின்ற மாணிக்கவாசக சுவாமிகளுடைய பாதத்தைவணங்குவோம் எ-று.

திருத்தொண்டர்கள் துதி.

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

மனையாளைப் பரர்க்களித்தானெனச் சரிக்க வியற்பகையார் மலர்த்தாள்போற்றிக், தனையாளும் பெருமானுக்கெச்சிலிடுங் கண்ணப்பர் சரணம்போற்றி, வினையாளரறியாத திருநீலகண்டரடி விரும்பிப் போற்றி, எனையாளுமிளையான்றன் குடிமாற ரிணையடியையிறைஞ்சுவோமே.

இ-ள். பரமசிவன் அடியார்வேடம்பூண்டுவந்து பெண்சாதியை யெனக்குக் கொடுத்துவிடென்றுகேட்க அதற்காகச்சந்தோஷத்தை யடைந்து சுவாமிக்குத் தன்மனைவியாரைக் கொடுத்து அதனால் அதிகமகிழ்ச்சியடைந்த இயற்பகை நாயனாருடைய மலர்போன்ற பாதங்களைவணங்கித்தன்னையாட்கொண்ட சுவாமிக்குத்தான் தின்றருசிப்

பார்த்த எச்சிலைக்கொடுத்தகண்ணப்பதேவரதுபாதத்தை வணங்கிவி னையையுடையவர்கள் அறியாத திருநீலகண்ட நாயனாருடைய பாதத்தை மகிழ்ந்து வணங்கி அடியேனை ஆட்கொண்டருளும் இளையான்றன்குடிமாற நாயனாருடைய பாதத்தை வணங்குவோம் எ-று (கச)

ஐயடிகள் காடர்கோ னீரடியை வணங்கிமக வருத்தொம் மாற்
கு,நெய்யடிசி லுடன்படைத்தார் திருவடியை தொழுது திருநீற்றுச்
சோழன், மெய்யடியைப் புகழ்ந்து தெய்வவுலாச்சொன்ன சேரனடி
விரும்பியேத்திப், பொய்யடிமையில்லாத புலவர்முத லனைவரையும்
போற்றுவோமே.

இ-ள். ஐயடிகள் காடவர்கோன் நாயனாரது இரண்டு பாதத்தையும் வணங்கி எமதுசுவாமிக்குப்பிள்ளையை அறுத்துசமைத்த கறியை நெய்விட்ட அன்னத்துடன் படைத்த சிறுத்தொண்டநாயனாருடைய மெய்மையாகிய பாதத்தைவந்தித்து வெவ்வீகம் பொருந்திய திருவுலாப்பிரபந்தம்பாடிய சேரமான்பெருமான் நாயனாருடையபாதத்தை ஆசையுற்றுப்பணிந்து மெய்யடிமையை யுடைய புலவர்கள் முதலாகிய சகலரையும் வணங்குவோம். எ-று. (கரு)

நந்திகேசுரர் துர்க்கை கௌதமர் சண்டேசுரர் துதி.

நந்திதிரு வடியிறைஞ்சி விந்தையடிபுகழ்ந்துமறை நான்கிற்கை
ந்தாய், வந்தருளுங்கௌதமனார் மலரடியென் முடிக்குமுடி மாலையா
க்கித்தந்தையிரு பதஞ்சிதைத்துச் சிதையாதபதத்திருந்த தண்டிதா
ளைச்சிந்தையிசைக் குடியிருத்தியருணைகிரி நினைப்பவர்தாள்சென்னி
சேர்ப்பாம்.

இ-ள். நந்திகேசுரருடைய அழகியபாதங்களைத் தொழுது துர்க்காதேவியினுடைய பாதத்தை வணங்கி நான்குவேதத்தினின்றும் ஐந்தாம்வேத சொரூபமென்று சொல்லப்பட்ட கௌதமருடைய தாமரைபோன்ற பாதத்தை என்சிறத்துக்குத் தரிக்கப்பட்ட மாலையாகச்செய்து தம்முடையதகப்பனாரது இரண்டு பாதங்களையும் வெட்டி அதனால்கெடாத மோக்ஷபதத்திலிருந்த சண்டேசருடைய பாதத்தை இருதயத்திற் குடியிருக்கச் செய்து அருணாசலத் தலத்தை நினைப்பவருடைய பாதத்தைச்சிரத்திற் சேர்த்துக் கொள்ளுவோம் எ-று. (கசு)

அவையடக்கம்.

தேறுகின்றபலகலையுந் தெளிந்தசுவைபிருநான்குந் திகழும்பா
டல், கூறுகின்றபுலவர் முன்னே தமியேனுஞ் சிலபுகலக் குறித்த

வாறு, வீறுகின்ற மறைவிரிஞ்சனேறிவருமனத்தின் முன்னும் விரிஞ்சன்றனகை, யேறுகின்ற கருடன்முன்னு மொருமசகம் பறவையெனத்திரிதல் போலும்.

இ-ள். பலநூல்களையுங் குறைவறக்கற்றுஎட்டுச்சுவையும்பொருந்திய தமிழ்ப்பாடல்களைச் சொல்லுகின்ற வித்துவான்கள் முன்னே ஒன்றுமறியாத யானுஞ்சிலபாடல்களைப் பாடினேத்தவிதம் விளங்கியநாலுவேதங்களையுடைய பிரமனேறி நடத்தும் அன்னவாகனத்தின்முன்னும் அவன்தகப்பனாகிய விஷ்ணு ஏறும்படியான கருடன் முன்னும் ஒருசிறியகொசுகு தானுமொரு பறவையேனப் பறத்தல் போலும்-எ-று.

எட்டுச்சுவையாவன - சிங்காரம், வீரம் பெருநகை, கருணை ரௌத்திரம், குற்சை, பயம். (கஎ)

நீரிருக்கு தெனப்பழித்து விடுவரே வதுபாலி னிகழுமானால், நாரிருக்கு தெனக்கழித்து விடுவரோவதுமலரி னண்ணுமானா லாரிருக்குஞ்சடைமுடியார் விடமிருக்குந் திருமிடற்றாருணைநாதர், பேரிருக்குந்தகைமையினாலெனதுரையையிகழுவரோ பெருமையோரே

இ-ள். பாலோடு கலந்திருக்கின்ற நீரைச் சகவாசயோக்கியத்தால் தள்ளாமலெடுத்துக்கொள்ளுவார்கள், ஆத்திமாலையைச்சூடிய சடைமுடியையும் ஆலகாலமிருக்குங் கண்டத்தையுமுடைய அருணாசலேசருடைய நாமமிருக்கிற பெருமையினாலே என்னாற்செய்யப்பட்ட புன்பாடலையும் பெரியோர்கள் ஒப்புக்கொள்வார்களேயன்றி இகழார்கள். எ-று.

அழகுதரக் கனிந்த நச்சுமரம் பழைய தெனினுமதி லமுதுண் டாமோ, விழைவுதரு சுவைக்கரும்பு புதியதுவே யெனினுமதன் விரதம்போமோ, இழிவுறுபா மலுமுயர்வு தங்கியசெய்யுளுமவை போலிருக்குமாகில், பழமையென நலந்தருமோ புதுமையென விகழ்ந்திடுமோ கொள்ளுவோர்க்கே.

இ-ள். அழகியசிவப்புநிறம் பொருந்தப் பழம்பழுத்த எட்டிமரம்வெகுநாள் மரமாயிருந்தபோதிலும் அதில் மாதுரிய முண்டாகாதுயாவராலும் இச்சிக்கப்பட்டஇனிதாகிய கரும்பு கொஞ்சநாளையதாயிருந்தாலும் அதில்கசம்புண்டாகாது, அதுபோல் குற்றத்தோடுகூடியசெய்யுள் பழமையாயிருந்ததினாலேயே ஒருநன்மையைக் கொடுக்காது, யாதொருதோஷமுமில்லாத உயர்வானபாடல் சிலநாளைக்

குமுன் உண்டாயிருந்ததினாலே இகழப்படாது, பிரயோசனத்தைக் கொள்வோர்களுக்கு, எ-று. (க௮)

தினையளவுந் தமிழ்ப்பியற் றதிமதுரம் பிறந்தகல்வித் திறமை யோரும், தினையுமியற்சுவையறியாமூடர்பரு உவறிவின்முன்னே நிற் றலாமோ, வினையடருங் குவளைவிழி யணிச்சமலரனையதிரு மேனிமா னார், புனைவில்மதன் மலர்க்கணையைப் பொறுப்பதல்லா லவரினம்பு பொறுத்திடாரே.

இ-ள். கொல்லுந்தொழிலடைகின்ற நீலோற்பலப்போன்றகண் களையும் அனிச்சர்பூவொத்த உடம்பினையுமுடைய பெண்கள் கருப் புவில்லைத்தரிக்கின்ற மன்மதனாலே விடப்பட்ட புஷ்பபாணத்தைப் பொறுப்பார்களேயல்லாமல் கொடிதாகிய யுத்தத்தில் விடுகிற அம் பைப்பொறுக்கார்கள் அதுபோல தினையளவுகூடச் செந்தமிழ்ச்சரி த்திரம்இன்றி அதிகமதுரம்பிறந்த கல்வியல்லவர்களும் இலக்கணா சம்பேறியாதமூடர்கள் மிகுந்த அறிவையுடைய கல்விப்பிரசங்கத் தின் முன்னிற்கார்கள். எ-று. (க௯)

## நூல்வரலாறு.

கருத்துருகவிறை வனந்திக்கருள்புரிய நந்தியு மார்க்கண்டற் கோத, விருத்திமறை வியாசமுனிக்கவனுரைக்கச் சூதனுக்கு வியா சன்சொல்லப், பொருந்தமனவிருடியருக்கருட்சூதன் மொழிந்தசிவ புராணங்கோடி, யுருத்திரசங் கிதையுரைத்த வருணகிரி வளத்தினை யா னுரைக்க லுற்றேன்.

இ-ள். மனமுருகப் பரமசிவன் நந்திகேசுரருக்கு அருள்புரிய நந் திகேசுரரும் மார்க்கண்டேயருக் குபதேசஞ்செய்ய, மார்க்கண்டேயர் வே தங்களை யொழுங்குசெய்த வியாசருக்கருள்செய்ய, வியாசர் சூதமு னிவருக்குச்சொல்ல சூதர் ஒருவழிப்பட்ட மனமுடையசௌனகாதி ரிஷிகளுக் கருள்செய்த சிவபுராணங்கோடியாகும், அவைகளில் முக் கியமாகிய ஸ்காந்தத்தில் உருத்திரசங்கிதையிற் சொல்லியஅருணா சலத்தலமகிமையைச் சொல்லத்தொடங்கினேன்-எ-று. உ௰


அருணைநகர்வளமையுமா லயனகதை விடவழல்வெற் பானவா றும், பெருவினாக பழிசகதுவு மாதுமையன் னைந்துகண் பு தைத்தவாறும், அமைகிடைக்கிறலைத்தவு மிறைவியிடங் கலந்ததுவும் [illegible]ணு, இருவினையையகற்றியது மற்றுமுள சரிதையெலாமிய ம்புகின்றேன்.


இ-ள். அருணாசலத் தலமகிமையும், பிரம விஷ்ணுக்களுடைய கர்வமடங்க அக்கினிமலையானதும், ஒப்பில்லாத தக்கனுடைய யாகத்தை அழித்துப்போட்டதும், பரமசிவன் பார்வதியைக் கலியாணஞ்செய்ததும், அப்பார்வதி சுவாமியினுடைய கண்களை மூடியதும், மகிடாசுரனை உமாதேவிகொன்றதும் அப்பார்வதி வாமபங்கத்திற் சேர்ந்ததும், வச்சிராங்கத பாண்டியனுடைய பாவத்தை நீக்கினதும் மற்றுமுள்ளதுஞ்சொல்வேன். எ-று. (உக)

அங்கிகுல மோங்கரு வல்லாள பூபன்றனரியதொண்டிக், துங்க
மிகுத் தீர்த்தமுடன் திருமலையை வலம்புரியுஞ் சுடரோன்பேறும்,
பொங்குபிரதத்தனொடு வினைதீர்த்த வாறுபுள காதியரவு, மிங்கிதஞ்
சேர்வடகலையி லிருந்ததனைத்தென்கலையா லியம்பலுற்றேன்.

இ-ள். உலகின்கண் ஓங்குமுக்குலவேந்தருள் அக்கினிகுலோத்துங்கனென்று வழங்குஞ்சேரகுலாதிபனாகிய வல்லாளராசனுக்குப் பிள்ளைக்கலிநீக்கி முத்தியளித்ததும், அந்தலத்திலோங்குந் தீர்த்தங்களின்பெருமையும், அவ்வருணாசலத்தை வலஞ்செய்பவர்கள்பெறும்பேறும், ஆதித்தனென்னுங் கதிரவனுடைய கர்வத்தையடக்கி முத்தியளித்தவாறும் பிரதாபபெருந்திய பிரதத்தனென்னும் வேந்தனது சரிதையும், பாவந்தீர்த சரிதையும் புழுகு பூனையாகவிருந்து மூன்றுலோகங்களினுஞ் சஞ்சரித்துவந்த புளகாதிபனென்னுமரக்கனுடைய சரிமும், இங்கிதமிகுந்த வடமொழியென்னுங் கிரந்தத்திலிருந்ததை தென்மொழியாகிய தமிழினாற் சொல்லத் தொடங்கினேன் எ-று. உஉ

ஆக திருவிருத்தம் உஉ.





உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# திருநகரச்சருக்கம்.

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

தங்கமழு வெழுபிறப்பு அரிகை வலாதகைையான் றிகிரிக்குன்
றாடே, திங்களுமிழ் நிலவனைய வெண்பொடியான் சடைமுடியான்
செறிமுக்கண்ணான், பொங்குதிருவரைகளைப் புலித்தோலான் புய
நாலான் புரிமுந்நூலான், கங்கைதிகழ் சடையான் றிருவாணை
செலுத்தி வெள்ளிக்கயிலைசாரபான.

இ-ள். உயர்வாகிய மழுவாயுதத்தை ... பிறப்புக்களை அறுக்கின்ற
காதத்தையுடையவர் பாயிலையில் சந்திரன் பொழிகின்ற நிலவு
போலத் தேகத்தில் அணிந்த விபூதியையுடையவர், சடைமுடியை
யுடையவர் நெருங்கிய மூன்று கண்களையுடையவர் விளங்குகின்ற இடுப்
பில் என்றும் நீங்காத புலித்தோலையுடையவர், நான்கு புயங்களையுமு
டையவர் மூன்றுபுரியாகிய பூணூலையுடையவர் கங்கையுஞ் சந்திரனு
ந்தங்குகின்ற சடையையுடைய பரமசிவனது கட்டளையைச் செலுத்
திக்கொண்டு கைலாசகிரியைக் காக்கின்றவர் என்று.

தொய்வைசுபவர்க்கிறத தாணமையாருக் திருமிடறுறுதலமிள்
ளெற்றும் சைவபெறும் பயிர்தழைக்கக்கருணை மழைபொழிமேகந்

னன்னையொப்பர், வினைவரையு மகத்தடக்குஞ் சிலாதரற்குப் புறத்து
லவு மாவிபோல்வான், தெய்வமெலாந் தொழச்சிவந்த மலர்ப்பதத்
னந்தியெனுந் திருநாமத்தான்.

(இ-ள்.) கொய்யப்பட்ட தாமரைமலரொத்த நிறத்தையும், விடம் பொருந்திய கண்டத்தையும், நல்ல வெண்மையாகிய சைவசமயமென்னும் பயிர் தழைக்கக் கருணையாகிய மழையைப் பொழிகின்ற மேகம்போன்றவர் பஞ்சேந்திரியங்களையும் அகத்தில் நின்றும் புறத்தில் தீமையாகிய பொருள்களிற் போகவொட்டாமல் அடக்கிய சிலாதரரிஷிக்குப் புறத்திற் சஞ்சரிக்கின்ற உயிர்போன்றவர் விஷ்ணுமுதலாகிய தேவர்களெல்லாம் வணங்க அதனால் சிவப்பேறிய தாமரை மலரையொத்த பாதங்களை யுடையவர், இப்படிப்பட்ட தன்மையையுடைய நந்திகேசுரரெனகிற அழகிய நாமத்தை பெற்றவர்-எ-று. ௨

ஈசனணிகங்கைமதியுந் திருவுருவுந் திருவுருவி லிசைந்தநீறும்,
தேசுவெனவிளங்குமொரு கயிலாயச் சிலம்புளதச் சிலம்பின்மீதே,
வாசவனை முதலிமையோர் நெருங்குதலான மகுடமொடு மகுடந்
தாக்கி, ஓசையுடன் கனகமணிப் பொடியுதிர்ந்து கனகமலைக் குவ
மையாகும்.

(இ-ள்.) பரமசிவன் தரிக்கின்ற கங்கையுஞ் சந்திரனும் மேற்சொன்ன சுவாமியினுடைய வெண்மையாகிய திருவுருவமும் அவ்வுருவத்திலணிந்த திருநீறுமாகிய இந்நான்கினுடைய காந்திபோலப் பிரகாசிக்கும் கைலாயமென்னப்பட்ட ஒருதிருமலையுண்டு அந்தத்திருமலைமேல் வணங்குகின்றதற்காக தேவேந்திரன் முதலாகிய தேவர்கள் நெருங்குகிறபடியால் கிரீடத்தோடு கிரீடமிடிபட்டுச் சத்தத்துடனே சொர்ணப்பொடிகளும் இரத்தினப்பொடிகளும் உதிர்ந்து மகமேருகிரிக்குச் சமானமாகக் குவியும்-எ-று. ௩

இந்திரநீ லச்சிலையா லிசைத்தகடந் தெரியாம லெழுதிச்சேர்
த்து, மந்திரமா மெனவயிரத் தூணிறுத்தி மாணிக்க மதலை கூட்
டிச், செந்துகிராற் போதிகையு மரகதத்தா லுத்திரமுஞ் செறித்து
மீதே, சந்திரகாந்தத்தகடு பரப்பிய மண்டபமுளதச் சயிலமீதே.

(இ-ள்.) இந்திர நீலக்கல்லினாலே ஒன்றோடொன்று சேர்த்துச் சந்துதெரியாமல் சித்திரமெழுதிச் சுவர்வைத்து மந்திரகிரிபோல வயிரத்தூண்களை நிறுத்தி மாணிக்கத்தினால்செய்த கொடுங்கை சேர்த்துச் சிவப்பாகிய பவளத்தினாலே போதிகையும் மரகதத்தினால்

உத்திரமுஞ் சேர்த்து அதன்மேல் சந்திரகாந்தத் தக்டுமேய்ந்த மண்டபம் ஒன்று அந்த மலையின்மேல்-எ-று. ௯

இருமருங்குந் தரளமணி யிழைத்தவரி யாசனத்தி லிருந்து நீலப், பருமணியா லிழைத்தவொரு பாதபீடிகை யின்மலர்ப் பதத்தையூன்றி, மருவுபெருங் கயிலையின்மீ திருந்துமுய லகன்முதுகில் வலத்தாளூன்றி, பருமறையை முனிவருக் குரைக்குமிறை நலனென விருந்தானந்தவேளை.

(இ-ள்.) நந்திகேசுவரர் அந்தமண்டபத்தில் இரண்டுபக்கமும் முத்துகளிழைத்த சிங்காதனத்தி லிருந்து பெரிய நீலரத்தினத்தாலே இழைக்கப பட்டிருக்கிற பாதக்குறட்டின்மேலே மலாபோன்ற பாதங்களை வைத்துகொண்டு சிவாணங்களால் மருவப்பட்ட பெருமையாகிய கைலாயகிரியில் எழுந்தருளியிருந்து முயலகன்மேல்வலப்பாதத்தைவைத்து அரிதாகியவேதப்பொருளை முனிவர்களுக்குத்திருவாய்மலர்ந்தருளியபரமசிவம்போலஇருந்தார் அந்தவேளையில்-எ-று.

குற்சனும் ரோமசன் குமுகனைருமூதாக்கன் சகடாயன் கும்பசாதன், வற்சாவைசம்பாயனாக ணிசிமுனி புலிக்காலன்வாமதேவன் சனகன் சனற்குமான் வாதராயணன் மதங்கனடனத்தானை, யர்ச்சனைசெய் யனந்தமுனி முதலனந்த முனிவராதம மருகிறகூழ.

(இ-ள்.) குற்சர் உரோமசர் குருமூகாட்சர், சகடாய், அகத்தியர், வற்சர், வைசம்பாயனர், கணிசி, வியாக்கிரபாதர், வாமதேவர் சனகர், சனற்குமாரர், வியாசா, மதங்கா சுவாமியினுடைய நடனம் பொருந்திய திருவடிகளில அர்ச்சனைசெய்கின்ற பதஞ்சலி முதலாகிய அனந்தமுனிவாகள் தமமுடைய பககததிறசூழ-எ-று. ௰

மன்னிய மார்க்கண்டமுனி யுடனெழுந்து பணிந்துயர்கண் மழைமின்போல, விந்நிலத்திற் பிறப்பதுவு மிறப்பதுவு மிருவினையுமெமக்குத் தோன்றச், சொன்னவொரு தனிமுதலே முத்திபெரும் பரிசெமக்குச் சொல்வாயென்று, னன்னவுரை செவிப்புகவு நந்தியருள் சுரந்துமுனிக்கருள்வதானன்.

(இ-ள்.) நிலைபெற்ற வயதினையுடைய மார்க்கண்டேய முனிவர் சீக்கிரத்தில் எழுந்திருந்து நந்திதேவரை வந்தனஞ்செய்து சுவாமி மேகத்தில் தோன்றி அதிசீக்கிரத்தில் அழியு மின்னல்போல உயிர்கள் இவ்வுலகத்தில் பிறப்பதும் இறப்பதும் இவைகளுக்குக் காரணமாகிய நல்வினை தீவினைகளாகிய இரண்டும் எங்களுக்கு விளங்

கும்படியாக அருளிச்செய்த ஒப்பற்றகடவுளே நாங்கள் மோக்ஷத்தை யடைவதற்குத் தக்கவழியைக் கிருபைசெய்ய வேண்டுமென்று கேட்க அந்தவார்த்தையைக் கேட்டவுடனே மிகுந்த கிருபையுடையவராகி நந்திதேவர் மார்க்கண்டேயருக்கு அருளிச்செய்யத் தொடங்கினார்-எ-று. எ

கம்பநதிகும்பநதி காவேரிகோதாவேரி கண்ணவேணி, பம்பை
நதிவேகநதி வேகவதிசரயுநதி பரமாங்கங்கை, தெம்புநதி பொன்
முகிநல்யமுனைநதி நருமதைமேற் செப்புஞ்சோணை யம்புவியின்மிக
வுளவங்காடினாதம வினையகற்று மதுவல்லாமல்.

(இ-ள்.) கம்பநதி, கும்பநதி, காவேரி, கோதாவரி, கிருஷ்ணவேணி, பம்பைநதி, வேகநதி, சரயுநதி எல்லாம் நதிகளுக்கு மேலாகிய கங்காநதி, தாமிரபரணி, பொன்முகி, யமுனைநதி, நருமதைநதி மேன்மையாகச் சொல்லப்பட்ட சோணைநதியென்று அழகான பூவுலகத்தில் அநேக நதிகளுண்டு அவைகள் தம்மிடத்தில் ஸ்நானஞ்செய்தவர்களுடைய பாவத்தை நீக்கும் அதுவல்லாமல்-எ-று.

காசியெனு மொருதலமிக் கயிலையினுஞ் சிறப்புளது கங்கைநீத்
தம், வீசுதிரைகொழுந்தோட்டிப் பாகதிக்கு வேரோட்டும் விய
நது சூழ்ந்தன மாசிறுட லதிலிருந்தான மரமேனும விலங்கேனும
னிகரேனும், ஈசனருளுபதேசஞ் செவிப்புகல லிறைவனென விரு
க்கலாமே.

(இ-ள்) காசியென்கிற ஒருதிவ்விய ஸ்தலம் இந்தக் கைலாயத்தைப்பார்க்கிலும் சிறப்புள்ளது அக்காசியில் வருகின்ற கங்காப்பிரவாக மென்கிற அலைகளைக் கொழுந்தாக ஓடச்செய்து தன்னிடத்தில் விரும்பி முழுகினவர்களுக்கு மோட்சத்துக்கு வழிகாட்டும், களங்கம் உள்ளதேகம அவ்வூரில் விட்டால் பாமாவது மிருகமாவது மனிதராவது பரமசிவனுடைய தாரகப்பிரமோபதேசம் செவியிற் சொல்லாமலே சிவசாரூபபியத்வத யடைந்திருக்கலாம்-எ-று.

போகியொரு புற்றிடங்கொண்டிருப்பதுகண் டிடுதல்லார் புனி
தாபோற்றும், யோகியொரு புற்றிடங்கொண் டிருந்ததலங் கண்டது
ண்டோ வுரைப்பக்கேளும், நாகமிசை நடித்தவருங் குயிலேவேண்டித்
திருக்கவஞ்செய் நளினகர்கோயில், வதுமனத்தவரான பருவாரூர்
தனையெரிதரா திருவாரூரே.

(இ-ள்,) சர்ப்பப்புற்றை இடமாகக் கொண்டிருந்ததைப் பார்த்ததேயல்லாமல் ஞானிகள் போற்றுகின்ற யோகி புற்றினிடத்திலே யிருந்த தலத்தைப் பார்த்ததுண்டோ அதுயாதெனில், சொல்லக்

கேளுங்கள் காளிங்கனென்னும் பாம்பின்மேலேறி நடனஞ்செய்த விஷ்ணுவுக்கு உயிர்ப்பிச்சைவேண்டி இலட்சுமிபூசை செய்துக்கொண்டிருந்த கமலாலயமென்னுந்தலமாகிய வஞ்சகம்பொருந்திய மனமுடைய திரிபுராதிகளை யெரித்த சிவபிரான் வாசஞ்செய்கின்ற ஊராகிய திருவாரூர் என்னும் திவ்யத்தலத்தான்-எ-று. ௰

தக்கவிராட் புருடன்மனத் தலமெனுமோர் தளபுளகத் தலத்தின்மீதே, முக்கணனார் நடிப்பரவா மூர்த்தியிலாயிரத்திலொரு மூர்த்திதானே, இக்கயிலை யிடத்துறைவ தந்நிலத்தில் பெருமை நம்மா லிசைக்கலாமோ, வக்கனக சபைகண்டா ரரியயன் காணாத முத்தியடைகுவாரே.

(இ-ள்.) பெருமைபொருந்திய விராட் புருடனுடைய இதயத்தலமாகிய சிதம்பரமென்று ஓர்தலமுண்டு அதிலுள்ளதாகிய கனகசபையில மூன்று கண்களையுடைய பரமசிவன் ஆனந்த தாண்டவஞ் செய்வார் அவருடைய மூர்த்திதலத்தில் ஆயிரத்திலொன்றுதான், இக்கைலாய பதத்தி லிருக்குமென்றால் அத்தலத்தின் பெருமையை நம்மாற்சொல்லக்கூடுமோ அப்படிப்பட்ட அழகு பொருந்திய கனகசபையைக்கண்டவர்கள் விஷ்ணுவினாலும பிரமனாலும் காணப்படாத மோட்சத்தை யடைவார்கள்-எ-று. ௧௧

தாங்காழியவன்சிவனை வழிபடுந்தொல் பவனையந்தத் தலத்தைப்பார்க்கி, லோங்காரவடிவதிலே யுயிரிழந்தா லுடலழியா தொளிகெடாது, வீங்காது நெகிழாது பிறவுயிரால் வருந்தாது வெடித்திடாது, தீங்கானபணங்கிருமிபிறவாது கிடக்குமவைச்செவிமேலாக

(இ-ள்.) சக்கரத்தைக் கையில்தரிக்கின்ற விஷ்ணுமூர்த்தி பரமசிவனைப் பூசைபண்ணிய விருத்தாசலமென்று ஒரு தலமுண்டு அந்தத்தலத்தைப் பார்க்குமிடத்தில் அது பிரணவ சொரூபமா யிருக்கும் அந்தத் தலத்தில் உயிர்விட்டால் தேகமழியாது நிறங் குன்றாது வீங்கமாட்டாது கட்டுகுழவாது மற்றப் பக்ஷிமிருகங்களால பின்னமாகாது வெடிபடாது அதில் துர்க்கந்தமும் புழுவும் உண்டாகாமல் வலதுகாது மேலாகக்கிடக்கும்-எ-று. ௧௨

பொய்ம்மகிட முகனைவென்ற வம்மையிட மகலாத புனிதமூர்த்தி, செம்மையிட மொன்றிருந்த கருமகிட முகமாசச செறிந்தேக தார, மிம்மையிடர் மறுமையிடா ஞானமில்லாச் சிறுமையிட ரெல்லாந்தீர்க்கும், நம்மையிடம் பெருமலக்குக் கெளிதாகத் தனியிருந் தமூர்த்திபோலாம்.

(இ-ள்.) பொய்யாகிய எருமை முகத்தினையுடைய மகிடாசூரனைச் செயித்தபார்வதி வாமபாகத்தில் நீங்காதபரிசுத்தராகிய பரமசிவன்செம்மையாகிய இடம்இதுதானென்று எழுந்தருளி யிருக்கிற கறுப்பாகிய எருமையினது முகம்போல் விளங்கிய திருக்கேதாரமென்னுந்தலம் இந்தச்செனமத்தில் வருகிறதுக்கமும் மறுமையில் வருகிறதுக்கமும் ஞானமில்லாததனாலே உண்டாகிறதுக்கமு மாகிய எல்லாத்துயரத்தையும் தீர்ப்பதற்கு மூன்றுலகத்தாருக்கும் எளிதாகித்தனியே யிருந்தமுத்தி தானம்போல் இருக்கின்றது-எ-று. ௧௩

இருப்பனத்தன் கருப்பதத்திற் பிரமராம் பிகையுடனென் றிரண்டுபோதும், விழிப்பனத்தன் பணிந்திமையோ ருலகுமுதலனைத்துலகும் விதித்தான்மற்றைத், திருப்பதிக்கே யிருப்பவனுந் தேவர்களுஞ்சராசரமாய்ச் செனித்தவூரி, லிருபபதற்கு முயல்வரென்றாலெத்தலமு மத்தலத்துக் கிணையதாமோ.

(இ-ள்.) மல்லிகார்ச்சுன மென்னும் பர்வதத்தில் பிரமராம்பிகையுடனே பரமசிவன் எழுந்தருளி யிருக்கின்றாரென்று அன்னவாகனத்தையுடைய பிரமன்வந்து பத்தியோடு இரண்டுவேளையும் வணங்கி அவருடைய அருள்பெற்றுத் தேவலோகமுதல் எல்லாலோகத்தையும் படைக்கா மற்றத் திருப்பதியிலிருக்கிற வேங்கடாசலபதியும் தேவர்களும அந்தத்தலத்தில சரமாகவும அசரமாகவும் பிறந்திருப்பதற்குத் தவஞ்செயவார்க ளென்றால் எப்படிப்பட்ட தலங்களும் அந்தக்ஷேத்திரத்திற்குச் சமானமாகுமோ-எ-று.

விருப்படியார் சொரிந்தவறு கலநடனே விழியிடந்த வேடர்காலிற், செருப்படியுமுகந்தபிரான் காளத்திகிரமெனுந் தெய்வப்பூமி, பருப்பதமாகியும விளைகுந் தண்ணாருந்தொழிக்குமலப் பதுமையோடு, மருப்படியுந் துழாய்மார்பன வடமலைமே லிருந்துகண்டு வணங்க மாதோ.

(இ-ள்.) திருக்காளத்தியென்னுந் தெய்வீகம் பொருந்திய தலத்தில் ஆதிசைவப்பிராமணராகிய சிவகோசரியார்பத்தியோடு மிகுதியாக அர்ச்சனைசெய்த அறுகு புஷ்பங்கள் இவையுடனே கண்ணைப் பிடுங்கிப்பாதித்த பண்ணப்பதேவரது காற்செருப்பையும் விருப்பமாகவேறுக்கொண்ட லிங்கசொரூபமாகிய சிவபெருமான் தானே குளிர்ச்சிபொருந்திய தேனைச்சொரிகின்ற தாமரைமலரி லிருக்கின்ற இலட்சுமியோடு வாசனையுள்ள துளசிமாலையை யணிந்த மார்பினை

யுடைய விஷ்ணுமூர்த்தி திருவேங்கடமென்னுந் திருப்பதியில் நின்றுக்கொண்டு தரிசனஞ்செய்து வணங்கும்பொருட்டு அந்தக்காலத்தில் மலையாகியும் விளங்குகின்றார். ௧௫

தேக்குநாலிருதிசையும் புகழ்ந்தகொண்டை நாடெனு மோர் தெய்வநாட்டி, னாக்கினா வினையகற்று மொருநலமுண் டதன்பெயரை நுவலக்கேளும், வாக்குநாயகி கணவன் படைத்தபுவி தழைக்க வரம் வளர்த்தெந்நாளுங், காசகுநாயகியுடனே கம்பநாயக ருறையுங்கச்சிமூதூர்.

(இ-ள்.) அகன்ற எட்டுதிக்கி லுள்ளவர்களும் புகழ்ந்துகொண்டிருக்கின்ற தொண்டைமண்டலமென்னுந் தெய்வீகம் பொருந்திய நாட்டில் தரிசனஞ்செய்பவர்களுடைய பாவத்தைப் போக்குகின்ற ஒருநலமுண்டு அதன்பெயரைச் சொல்லக் கேளுங்கள் சரஸ்வதியின் கணவனாகிய நான்முகன் படைத்த உலகத்திலுள்ள உயிர்கள் பிழைக்கும்படி முப்பத்திரண்டு தருமங்களையும் பிரதானஞ்செய்து எந்நாளுங்காக்கின்ற காமாட்சியம்மையுடனே ஏகாம்பரேசர் எழுந்தருளியிருக்கிற காஞ்சிபுரமாகும்-எ-று. ௧௬

பழுதறவே பெருக்கடலு மெழுகிரியு மெழுதலமும் படைத்த வேதக் கிழவனுயி ரமுடியை யொருபால னுயிர்க்கப்பதி களத்தகத்தே பழுதகரு நடம்புரியு மிறைவருங் கயிலைப்பூரை யப்பனாருந் தழைபூவுக்கு மரிபூசையால் பூசை புரிந்ததிரு விரிஞ்சைபுரமே

(இ-ள்.) யாதொரு பழுது மில்லாமல் ஏழு சமுத்திரங்களையும் படைத்த பிரமனுடைய நாடாக-சி தலைக ஒரு ஆதிசைவப் பிராமணப்பிள்ளை அறிந்த தலங்களைச் சொல்லக்கேளுங்கள் ஆநந்த தாண்டவஞ்செய்த சுவாமிக்கு பார்வதியாரும் பிரமனும் இந்திரனும் விஷ்ணுவும் அர்ச்சனைபூசிக்க விரிஞ்சிபுரமென்னுந் தலமாம்

பொய்யாத புனல்பெருகுங் காவேரி நதிக்கரையிற் பூதாயும் பையாறு மிடைமருதுந் திருக்குடந்தை வளர்ந்தநம்பனிந்த வூ, வையாறு மிடர்காழி சீர்கலையு மாணிக்க மயிலாப்பூர் தானாம், பெய்யாத வரைறினைத் பெருமையெல்லாம் விரித்துரைக்கும் வேதந்தானே.

சுவாமி சிரத்தைப் பாலன் அபிஷேகமுதலியவை செய்கிறதற்குச் சுவாமியினுடைய திருமுடி ஒருதுருக்கு ளுடையபிள்ளைக்கு எட்டாமையினாலே அந்தப் பிள்ளையானது பூசாகாலந்தவறுகிறது என்னசெய்வேனென்று விசனப்பட அப்போது லிங்கவுருவாயிருந்த பரமசிவம் சிரம் வளைத்தருளினார்.

(இ-ள்.) பொய்க்காமல் பெருகிவருகின்ற காவேரிநதி இருகரையிலும் சீகாழி, திருவையாறு, திருவிடைமருதூர், வளம்பொருந்திய கும்பகோணம், திருவானைக்காவல் விஷமபொருந்திய கண்டத்தையுடையமாதொருபூகேசர் எழுந்தருளியிருக்கின்ற திரிசிரபுரம், இரத்தினகிரி இவைமுதலான தலங்களில் விளங்கிக்கொண்டிருக்கும் அநந்தக்கிஸ்ப க்ஷேத்திரங்களுடைய பெருமையெல்லாம வேதமானது அனைமெய்ம்மையாக விரித்துச்சொல்லும்-எ-று. க௫

பருவலைவார்ப் பரித்ததும்வைகை நதிக்கரையின் மதுரையறு பத்துநாலு, திருவிளையாட்டிறைவனியற் றியதலமாமதன் பெருமைசெப்பலாமோ, கருவிளையாட் டகற்றுமிராமேச்சரந்தென் கடற்கரையிற் காணுமங்கே, சொரிவிளையாட் டிராகவனு மிராவணனைத் தொலைத்தபழி தீர்க்கிட்டாரே.

(இ-ள்.) பெரியசங்குகள் முழங்குகின்ற வைகையாற்றின்கரையில் சோமசுந்தரக்கடவுள் அறுபத்துநாலு திருவிளையாடல் செய்தருளிய மதுரையென்று ஒருதலமுண்டு, அந்தத் தலத்தின பெருமை யாவராலுஞ் சொல்லப்படாது தென சமுத்திரத்தின் கரையில் சனனதுக்கத்தைப் போக்குகின்ற ராமேச்சரமென்று ஒருதலமுண்டு, யுத்தத்தை விளையாட்டாய்ச்செய்கின்ற இராமபிரான் இராவணனைக் கொன்றதனால் வந்தபாதகத்தை அந்தத் தலத்தில சிவனைப் பூசித்துத் தீர்த்துக்கொண்டார்-எ-று. க௬

அத்தகையார் தலங்கடமிற் பிறக்கவுடல் இறக்கவிழி யமையக் காணா, சுத்தவெளிதனிலடுத்த சுடரொளிக்கு மணமங்களிப்பத் தூய்தீட்ட, விருகமனைத் தெடுத்துரைத்துச் சிவாலயமும விரிபொழிலு மிசவுண்டாக்க உத்தமமாகியபரம கதியுமென்று மகாகமுனி யுரைப்பதானன்.

(இ-ள்) அப்படிப்பட்ட தன்மையுடைய தலங்களிலே யாவராகிலும், பிறந்தாலும இறந்தாலும்போய் தரிசித்தாலும பரிசுத்தமாகிய சிதாகாசத்தில் நிருத்தஞ்செய்யும்பிரகாசமே சொரூபமாகிய பரமசிவனுக்குத் திருவுள்ளங்களிக்குமபடி தூய்மையாகிய நீரினால் அபிஷேகஞ் செய்தாலும், திரவியங்களைச் செலவுசெய்து சிவாலயங் கட்டுவித்தாலும், விரிதருபூஞ்சோலை வைத்தாலும் உத்தமமான பரகதியுண்டாமென்று நாதிதேவர் அருளிச் செய்யக்கேட்டுமார்க்கண்டேயர்சொல்லத்தொடங்கினார்-எ-று. ௨௰

இத்திருநாதிதேவர் தலங்களோறு மிப்படியே மியற்றவென்றுன், மின்னியசீர்மயருக்குஞ்சித்தருக்குமுனிவருக்குமுடிவுறுத, மின்

னிசருஞ் சிறுவாழ்க்கை மனிதர்தமக் கெளிதாமோ மேவினுமன் னியமாம் பிறவுயிர்க்கு மரத்தினுக்குங் கிடையாதே யமலவென்றான்

(இ-ள்.) இப்படிப்பட்ட தன்மையுடைய நதிகள்தோறும் தலங்கள்தோறும் போய்த்தேவரீர் கட்டளையிட்டவிதமாகவே தீர்த்தமாடி வழிபாடு முதலானவைகளைச் செய்யவேண்டுமென்றால் மிகுந்த சிறப்புப்பொருந்தியதேவர்களாலும் சித்தர்களாலும் முனிவர்களாலும் முடியாது அப்படி மின்னல்போலத்தோன்றி க்ஷணத்தி லழியுஞ்சிறியவாழ்நாளையுடைய மனிதர்களுக்கு எளிதிலமுடியுமோ அப்படி முடிந்தாலும் மிருகங்களுக்கும் பட்சிகளுக்கும் விருட்சங்களுக்கும் கிடைக்கமாட்டாதே சுவாமி என்று சொன்னார் மார்க்கண்டேயர்-எ-று. ௨௧

ஆடுமந்த நதிதோறு மினிதெனுமத் தலந்தோறு மனந்தகாலம் தேடுகின்ற பயனலவுஞ் சிவஞானம வருந்தாமற் சித்திபோசி, நாடுகின்ற வுறுப்பிலர்க்கு மறிவிலார்க்கும் புலையருக்கு நரகர்கட்கு, மோடுகின்ற விலங்கினுக்கு மற்றவைக்குந் தருமமொன்றுரைப்பா யென்றான்.

(இ-ள்.) மனிதர்கள் ஆடுகின்ற அந்த நதிகள்தோறும் இனிதாகிய அந்தத்தலங்கடோறும் அநேககாலமாக ஸ்நானஞ்செய்து தரிசன முதலியவைகளைச் செய்கையால் உண்டாகிய பிரயோஜனமாகிய சிவஞானத்தை வருத்தப்படாமல் சொற்பகாலத்தில் காணப் பிரகட்சணஞ்செய்தல் கும்பிடுதல் தரிசனஞ்செய்தல் முதலியவற் றிற்கு ஏதுவாகிய கைகால்கள் [illegible] விவேகஞானியர் களுக்கும் நீசர்களுக்கும் நரகத்தில் விழுந்து [illegible] களுக்குஞ் சஞ்சரிக்கின்ற மிருகங்களுக்கும் மற்றுமுள்ள எல்லாப்பிராணி களுக்கும் கொடுக்கின்ற ஒருசகாயம் அருளிச்செய்யவேண்டுமென்று கேட்டார் மார்க்கண்டேயர்-எ-று. ௨௨

இப்படியே நமனைவென்ற பெருந்தவனுந் திருந்தவநம்பியம்பி யேத்திக், கைப்பதும மலர்கொடுதன் காற்றாமரை தீண்டுதலுங் கருணையாகி அப்படியே முத்திதரு மொருதலமுண் டுரைக்குது மென் றமைத்தான்பின்னை, மைப்படியுங் கண்டத்தா னருணகிரி நினைத்து பரவசத்தனானான்.

(இ-ள்.) எமனைச்செயித்த பெருமையாகிய தவத்தினுடைய மார்க்கண்டேயரும் மற்றுமுள்ள முனிவர்களும் இந்தப்பிரகார மாகச்சொல்லி தோத்திரஞ்செய்து தாமரைமலர்போன்ற கைகளால் நந்திதேவருடைய தாமரைமலரொத்த திருவடிகளைப் பரிசித்து வணங்கஞ் செய்யுமளவில் அவர்கிருபையுள்ளவராகி நீங்கள் சொன்ன

படியே மோக்ஷங்கொடுக்கிற தலம் ஒன்றுண்டு அதைச் சொல்லுகின்றோம் என்றுகையமர்த்திப் பின்பு விஷந்தாங்கிய கண்டத்தையுடைய பரமசிவம் எழுந்தருளியிருக்கிற அருணாசலமென்னுந் தலத்தை நினைத்துப் பரவசமானார் நந்திதேவர்-எ-று. (௨௧)

அங்கமெல்லா மயிர்பொடிப்ப நடுநடுங்கி விழியிரண்டு மருவிபாய, செங்கையிணை மலர்குவிய மொழிதவர நெடியபோது தெளிவில்லர்மற், கங்கையணி சடையானே யருணகிரிப்பெருமானே கனற்கண்ணானே, எங்களை யாளுடையானே யெனத்துதித்து விழித்ததற்பினிசைப்பதானான்.

(இ-ள்) தேகமெல்லாம் மயிர்கூச்செறியக் கம்பிதங்கொண்டு இரண்டு கண்களிலும் நின்று அருவிபோல் ஆனந்தபாஷ்பமுவரமலர்போன்ற இரண்டுகைகளும் ஒன்றாய்க்குவிய வார்த்தைதத் தடுமாற அநேக நாழிகை ஞாபகமில்லாமல் கங்கையைத் தரித்திருக்கிற சடையையுடையவரே அருணகிரியில் எழுந்தருளியவரே அக்கினிக்கண்ணையுடையவரே எங்களையாட்கொண்டவரே என்று தோத்திரஞ்செய்து விழித்துக்கொண்டு அதன்பின்புசொல்லத்தொடங்கினார்நந்திதேவர்-எ-று.

எழுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

சத்தியங்கான் மொழிவன் முத்திதருமூரது தனக்குரிய நாமமிகவுண், டத்தனையு நான்மொழிய வெந்தவிதமோவெனி லொற்றுளவளவே புகலுவேன், சத்திபுகவுதகனரி தேசாரொன்றுமோ யா தெரிகின்றருணை யென்றுபெயரிட். சிவநகரமிவ லோசநமென்று பெயர்பெற்றுவாயு நகரென்றுபேசுமே.

(இ-ள்) அப்படியே நான் சத்தியஞ்செய்கிறேன் நந்திதேவர்சொல்வார் கேளும் மார்க்கண்டேயரே சத்தியமாய்ச் சொல்லுகிறேன் மோக்ஷத்தைக் கொடுக்கிற தலமொன்றுண்டு அதற்குரியநாமங்களோ அநேகம் அத்தனைபெயரையுஞ் சொல்லுகிறதற்கு நான் எவ்வளவு சக்தியுடையவன் ஆனாலும் அவைகளில் சிலநாமமாத்திரஞ் சொல்லுகிறேன் சித்திகளைக் கொடுக்கிற தெளிநகரமென்றும் தேசநகரமென்றும் அழகிய அருணையென்றும் சிறப்புப் பொருந்திய சிவலோகநகரமென்றும் நாகரிகமிருக்கு வாயுநகரமென்றும் நூல்களில் சொல்லப்பட்ட திருநாமங்களை யுடையது-எ-று. (௨௨)

சத்தபுரியேழுக வெடுத்தலமாவுமொரு தட்டகனிலே, யத்தலமுமிட்டதி திரிருகலைகட்கதிக மானவொளிரா

தநகரம், முத்திநக ரென்றுபெயர்ஞானநகரென்றுபெயர் மூந்தியதலே ச்சுரமெனுமு, சுத்தநகரென்றுபெயர் தன்கயிலே யென்றுபெயர்சோண கிரியென்றுபெயரே.

(இ-ள்) பின்னும் ஆதிதேவர் சொல்வார்சத்திபுரிகளென்கிற அயோத்தி மதுரைமாயாபுரி காசி காஞ்சிபுரி அவந்தி துவாரகை முதலாகிய எல்லாத்தலங்களையும் ஓர் தட்டிலும் ஆக அருணசலத்தை ஓர் தட்டிலும் அந்த அருணசலத்தை ஓர் தட்டிலும் வைத்து நிறுக்க அந்தத் தலங்களுக்கெல்லாம் அதிகனத்தையுடையதாயிருந்து பிரகாசிக்கின்ற ஆகத் தலத்துக்கு முத்திநகரமெனவும் சத்திநகரமென்றும் தக்ஷணகைலாயமெனவும் சோணகிரியெனவும் பெயராம்-எ-று. ()

வாதமிகுகாலவழ லாழியுலே யோழியல் வரைதபுரியாதை நகரந், சீதமுதலானபிணி தீமையிடையூறுபசி சேரவரிதானநகரம, மாதவகன் மாதவர்கள் பூசைபுரியாநகரம் தவர்களுறைபலராம, போதிலுரைவேதியர்தொண்ணூறுபெய ரோடறவிா பூசைபுரிவேதநகரம.

(இ-ள்) இறுதிக்காலத்தி லுண்டாகிய பிரசண்டவாயுவினுலும் ஊழித்தீயாகிய வடவா முகாக்கினியினுலும பொங்கிவரும் சமுத்திரப்பிரளயத்தினுலும் யுகமுடிவில பொழிகின்ற ஏழுமேகங்களினுலும் யாதொரு வேதனையும் அடையாததலம், சத்தியம் முதலானபிணிகள் இமையாகிய இடையூறுகள் பசி இவைகள் சேராததலம் அப்படிப்பட்ட விஷ்ணுககளுடைய நாமினாமிய தாபனமலாகளில உண்டாகிய தொண்ணூறுறு பிரபாகள பூசித்த தெய்வீகமபொருந்தியதலம்அருணசலமெனனுந் தலமாம-எ-று. (உஎ)

ஒன்றளது பூமிதனி லீனறபுதி தன்றலகு முமமாறு முயர்ந்த வெளியு, மென்றளதா நளுளது வேதந்நிமிநினி லிருப்பதகலாபல திலோர், குன்றதனி லாகவொரு தெற்புளதுபுண்டரிக போனகையுமுருவியோ, நின்றளது தென்றிசையி லொன்று மறியாது நெடு நீறுலவு வாழ்வுபெறவே.

(இ ள்.) இப்படிப்பட்ட தன்மையையுடைய நகம் ஒன்றுண்டு அத்தத்தலம இன்றைக்குப் புதிதாகவந்ததலை இரா மீ பூவுலகமும மேலுலகமும ஆகாயவெளியும் என்றைக்கு உண்டாயினவோ அந்நாள்முதல தானே உண்டா யிருக்கின்றது நீங்காமல் வேதத்தின்முடிவிலுள்ளது அந்தத் தலத்தில் கேடுதலில்லாத ஒருமலையுண்டு அது தென் திசையில்

என்றும் நிலைபெற்றுப் பிரமாண்ட கோளகையை யூடுருவிநிற்கின்றது நெடியகடல்சூழ்ந்த பூமியிலுள்ளவர்கள் வாழும்படிக்கு-எ-று. ()

கலிவிருத்தம்.

ஆரிடமிராக்கத மசுரந்தெய்வந்த
தாருடைமானிடஞ் சாம்புவென்றுநாம
மேரிடுமிலிங்கமே பிறங்குமெங்கணு
மேருவைப்பருப்பத மிலிங்கமாவது.

(இ-ள்.) ஆரிஷமென்றும் ராக்ஷசமென்றும் அசுரமென்றும் தைவதமென்றும் மாலையைத் தரிக்கின்ற மானிடமென்றும் நாமங்கள்பெற்றலிங்கங்களெல்லாத் தலங்களிலும் பிரகாசிக்கும் இந்தத்தலத்திலோவென்றால் மலையே லிங்கமாயிருக்கின்றது ரிஷிகளாலே பூசை செய்யப்பட்டது ஆரிஷலிங்கம் ராக்ஷசர்களாலே ராக்ஷசலிங்கம் தேவர்களாலே தைவதலிங்கம் மானிடராலே மானிடலிங்கம்-எ-று. (உக)

செங்கனன்முதலயுகந் திரேதைமாமணி
பொங்கிய துவாபரம் பொலிதபொன்னிறந்
தங்கியகலியுகந் தன்னிற்கல்லிலை
யங்கமாந்தனைப்பெறு மருணைப்பூதரம்.

(இ-ள்.) முதல யுகமாகிய கிருதாயுகத்தில செப்பாகிய அக்கினியிலே யாகவும் திரேதாயுகத்திலே மாணிக்க மலையாகவும் துவாபரயுகத்தில மிகுந்த பிரகாசத்தைப் பொருந்திய பொன் மலையாகவும் கலியுகத்திலே கல்லு மலையாகவும் திருவுருக்கொண்டது அந்தமலைக்கு அருணாசலமெனனுந் திருநாமம்-எ-று. (௩௰)

கருவியாமுகக்கடைச் சொரிபுகாரெலா
முருவருமேழ்நூறி பொழ்வொன்றுகோடியாய்
பருவமாயிரத்துளி பனையிற்பெயினு
மருவியாவடங்குமவ் வசலத்தினில.

(இ-ள்) எல்லாச் சிவராசிகளும் கருவறும்படி யுகாந்தகாலத்திலே பொழிகின்ற மேகங்கள் ஏழ்கோடியென எண்ணித்தையில்லாமலுவவெகு னறு கோடியாக ஆயிரம வருஷம ஒவ்வொருதுளி பனைபோலப் பருமனாகப் பெய்தாலும அந்தமலையின்மேல சிறிய அருவியாகச்சுவறி அடங்கிப்போமல்லாமல புறத்தில வரமாட்டாது.

ஆரியனனாவிடா தனத்தகாலமாய்த்
திரிதலினதுகிலை செப்பலாகுமோ

சரநதிபரவசிற் சுனையினிருண
விரவதன்புரவிமே லேறிச்செல்லுமே.

(இ-ள்.) விஷ்ணு பன்றியாகவும் பிரமன் அன்னமாகியும அநேக்கோடிகாலமாயத் தேடி அடிமுடிகாணுமல வருந்துவார்களானல் அந்த அருணாசலத்துக்கு ஒன்றைச் சமானமாகச் சொலலககூடுமோ அதுவல்லாமல் ஆகாயகஙகை தனனிலு மூககியமென்று துதிசெய்கின்ற அந்த மலையிலிருககினற சுனையிலே நீருண்ணச் சூரியன் தேரிற்கட்டிய குதிரைகள் ஏறிநடக்கும்-எ-று. (௩௨)

வெண்மைசேர்புயலத னடியின்மேவுத
லெண்தகிழ்கயிலையி திருப்பதொககுமா
தண்மைசேர்கார்த்திகை விளக்கையேற்றுதல்
மண்மதன்மகுடமா மணிபிற்றேன்றுமே.

(இ-ள்) வெளளைநிறமாகிய மேகங்கள் அநத மலையடிவாரத்தில்சேர்ந்தால் யாவராலும எண்ணப்பட்ட கைலாயகிரிமேல் அந்தமலையிருக்கிறதுபோலாம குளிர்ச்சிபொருந்திய கார்த்திகை யாதத்தில் கிருத்திகாதீபம் அந்தமலைமேல் வற்றினால பூமிதேவியினுடைய கிரீடத்திலபதித்த ரத்தினமபோலாம-எ-று. (௩௩)

அன்றுமாறிசைமுக னவிடாமுதன்
மன்றலசேர்நதிடுமலை வடிவுகொள்கையா
னன்றுநமமருகனு நாமுமேயாமுவ
மென்றுளமகிழ்ந்தே யிமையபூதரம.

(இ-ள்) முறகாலத்தில் பிரமனுலும விஷ்ணுவினுலும்அறியப்படாத பரமசிவன் கீர்த்திபொருந்திய அநதமலையுருவக்கொண்டதினால இமயமலை இத்தனை காலம வரைக்கும மேருசாதியாயிருந்த நமமுடைய மருமகன் நமமுடைய சாதியாய்ப்போய்விட்டானென்றுமனஞ்சந்தோஷித்தான்-எ-று. (௩௪)

பன்னிருதிங்களும் பரிதியானது
மன்னியமத்திய மும்வலமதாய்வரு
மன்னிலையுரைக்கவென் னறிவுபோதுமோ
வுன்னியவாசையா லுரைக்கலுற்றனன்.

(இ-ள்.) பன்னிரண்டுமாதமும் சந்திரசூரியர்கள் மகாமேருவைவலஞ்செய்தல்போலப் பிரதட்சணஞ்செய்து வருவார்களென்றல் அந்த அருணாசலத்தின் பெருமையைச் சொல்வதற்கு அற்பமாகிய என்னு

டைய புத்திபோதுமோ, ஆனாலுஞ்சொல்ல வேண்டுமென்றுநினைவு கொண்ட புத்தியினால் சொல்லத் தொடங்கியது-எ-று. (கரு)

அர்க்கமாமலையுள தடுத்தகிழ்த்திசை
நற்கணாயிரத்தல னண்ணிவாழ்த்துவன்
தெற்கிலேயுளதுபுத் தேளிர்மாமலை
பொற்கையந்தகன்றினம் புகன்றுபோற்றுவான்.

(இ-ள்.) அருணாசலமென்னும் மலைக்கு அடுத்த கிழ்ப்பக்கத்தில் அர்ககமலையென்று ஒருமலையுண்டு அதில் ஆயிரங் கண்களையுடைய தேவேந்திரன் இருந்துகொண்டுசுவாமியை தோத்திரஞ்செய்வான் அவ்வருணகிரிக்கு அடுத்த தென்பக்கத்தில்தெய்வமலை யென்று ஒன்றுண்டு, அதில் சிவந்த கைகளையுடைய எமன் புகழ்ந்து வணங்குவான்-எ-று. (கசு)

மேற்றிசைத்தண்டமா மலைகளுண்டதிற்
சேற்றினாவருணன்றன் செங்கைகூட்புவன்
தோற்றிமேவடதிசைச் சூலமால்வரை
போற்றியவளகையான பொருநிவாழ்த்துவன்

(இ-ள்.) அந்த அருணாசலமென்னுந் திருமலைக்கு மேற்குப்பக்கத்தில் தண்டமலையென்று ஒருமலையுண்டு அதில் மகரவாகனத்திலேறி நின்று வருணராசன் சிவந்த கையைக்கூப்பி அந்தமலையை வணங்குவான் வடபாகத்தில் சூலமலையென்று ஒரு மலையுண்டு அதில்எவராலும் போற்றப்பட்டகுபேரன் இருந்துகொண்டு துதிசெய்வான்-எ-று

மற்றுநால்வரைகளில் வாயுதீயவ
னெற்றிசேர்சிழியவ னிருதிபோற்றுவர்
சுற்றுளமலைதொறுஞ் சுரருஞ்சித்தரு
முற்றசிர்வசுக்களு முறைநதுபோற்றுவார்.

(இ-ள்) மற்றநான்கு திக்குகளிலும் இருக்கிறமலைகள் நான்கிலுமிருந்துகொண்டு வாயு-அக்கினி-ஈசானன்-நிருதி இந்த நால்வர்களும் வணங்குவார்கள். அவைகளைச் சுற்றியிருக்கிறமலைகளிலெல்லாந்தேவர்களும் சித்தர்களும் சிறப்புப் பொருந்திய அஷ்டவசுக்களும் இருந்துகொண்டு வணங்குவார்கள்-எ-று. (கஅ)

தன்னையேசிகருமத் தலத்திலேபுவிக்
கன்னமாதலமபுரிக் ததிகமாகவே
என்னையாளுடையவ னிடங்கலந்தவள்
பின்னையுமதிலனம் பேசலாகுமோ.

(இ-ள்.) தனக்குத்தானே ஒப்பாகியவத்தலத்தில்பூலோகத்துக்குத் தாயாகிய பார்வதியம்மை மகத்தாகிய அரியதவசெய்து என்னை யாட்கொண்ட பரமசிவனுடைய இடப்பாகத்திற் சேர்ந்தாள் ஆனபடியினாலே அந்த அருணாசலத்தின் பெருமையைச்சொல்லவேண்டுமோ-எ-று

தன்னிகர்மந்திரம் புவனந்தத்துவம்
வன்னமாய்விளங்குமவ் வரையைமாலய
னன்னமுமேனமு மாகிநாடினு
மின்னமுமளவிடா திடுமைபீங்கினர்.

(இ-ள்) தனக்குத்தானேயொப்பாகியமந்திரம்புவனந்தத்துவம்இவைகளினுருவமாய் விளங்கும அருணாசலத்தை விஷ்ணு பிரமன் இருவரும் பன்றியும அன்னமுமாகித் தேடி இத்தன்மையையுடையதென்று அறியககூடாமையினாலேதங்களுடைய காவத்தைநீங்கினார்கள்-எ-று,

மருவியபெருப்புகழ் வச்சிராங்கத
னருணைவலம்புரிந் தமலனையினான்
கருவிபகலாதரன் சாந்திசாலியென
விருவரும்பரகதி யெய்தினாரதில்.

(இ-ள்.) மகத்தாகிய கீர்த்திபெற்ற சந்திரகுலதிலகனாகிய வச்சிராங்கதபாண்டியன் அருணாசலத்தைப் பிரதட்சணமவந்ததனாலேதன்னுடைய பாவத்தை நீக்கினான் பெருமைபொருந்திய கலாதரன் சாந்திசாலீ இவ்விருவரும் அந்தத்தலத்தை வலமவந்து மோக்ஷத்தையடைந்தார்கள்-எ-று. (௬௰)

எழுசீரக்கழிநெடிலாசிரிய விருத்தம்.

ஆதியாமிவர்களொடு டங்கியின்றளவுக கனேகருண்டருணையை நினைத்துங், காதலானுரைத்துங் கேட்டுமுன் கண்டுங காலகளாலவல மதிற்செய்தும். நீதியாயிருந்து நெறியினாடந்து நெடுங்கயம்படித்த லமபுரிந்துந், சோதிதா டொழும்பணிவிடைசெய்துந்துளகிலாமுத் திபெற் றிருந்தார்,

(இ-ள்.) முன்சொல்லப்பட்ட இவர்கள் ஆதியாகத்தொடங்கிஅன்று முதல் இன்றுவரைக்கும் அநேகம்பேர் அருணாசலத்தை நினைத்தும் ஆசையோடு தோத்திரஞ்செய்தும் கேள்விப்பட்டும தரிசனஞ்செய்தும் கால்களாலே பிரதட்சணஞ்செய்தும் அதில நீதிபொருந்தி வேதமார்க்கத்தை அனுசரித்துக்கொண்டிருந்தும் மகத்துவம்பொருந்திய தீர்

த்தங்களிலே முழுகியுந் தருமங்களைச் செய்துஞ்சோதிசொரூபமாகிய சிவனைத்தொழுதும் திருப்பணிசெய்தும் கெடுதலில்லாத மோட்சத்தைப் பெற்றிருந்தார்கள்-எ-று. (௪௨)

அப்பதி தமிழ்நாட் டுளதிடை பெண்ணை யாறுசெய் யாறுபிங்கலையாஞ். செப்பியகமலை நதிசுழுமுனையாஞ்செய்தவொன்றாயிரம்பலமாம் முப்பத்துமூன்றுகோடிதேவர்களுமுனிவருந்தவஞ்செய்வாரதற்கோர், ஒப்புவேறில்லை யிமயநாட் டிருந்துமும்பர் நாட்டிடத்துமென றுரைத்தார்.

(இ-ள்.) அவ்வருணாசலத்தலம் தமிழ் நாட்டிலிருக்கிறது அப்பதிக்கு வலப்பக்கத்தில் வருகிற பெண்ணையாறு இடையென்னும் நாடியாகும் இடப்பாகத்தில் வருகிற செய்யாறு பிங்கலையென்னும் நாடியாகுங்கமலை என்கிற நதி சுழுமுனை என்னும் நாடியாகும் அந்த நதிகளில் ஸ்நானஞ் செய்தால் ஒன்றுக்கு ஆயிரம் பங்குபலனாகும் முப்பத்து மூன்றுகோடி தேவர்களும் முனிவர்களும் அத்தலத்தில் தவஞ்செய்வார்கள் அதற்கு ஒப்பு இந்த உலகத்திலும் மேலுலகத்திலுமில்லையென்று சொன்னார் நந்திதேவர்-எ-று. (௪௩)

அற்றமில்லவச்சோ ணாசலையின் சிறப்பா லகமகிழ்ந்துருகிய முனிவன். மற்றுளதலத்தி னதிகமென் றுரைத்த வாய்மையை மனங்கொளாதுரைப்பான், சிற்றறிவுடையோர் தலமொரு சொற்றெனிச்சிலேனென்ச்சொலுவதற்கு, முற்றுமுணர்ந்தானவ் வொழியென மொழிந்தான் முனிவனுமதற்கிவை மொழிவான்.

(இ-ள்.) சிவபத்தியிற் சேர்ந்த நந்திதேவராற் சொல்லப்பட்ட அருணாசலத்தின் மான்மியத்தினாலே மனமகிழ்ந்துருக்கத்தையடைந்த மார்க்கண்டேயர் மற்ற சிவத்தலங்களெல்லாவற்றிலும் அருணாசலத்தலம் அதிகமென்று சொன்னதைமனத்தில் ஒப்புக்கொள்ளாமல் சொல்வார் சுவாமி நானோ சிறிய அறிவையுடையவனாதலால் நீங்கள் திருவுளம் பற்றியருளியது நம்புகிறேனில்லை என்று சொல்ல அதுகேட்டு சகலத்தையும் உள்ளத்திற் கொண்ட நந்திதேவர் உமக்குண்டான சந்தேகத்தைச் சொல்லுமென்று கேட்க மார்க்கண்டேயர் சொல்லுவார்-எ-று. (௪௪)

தில்லையாரூரைக் காசியிற் பிறக்கச் சிறந்தமா நூர்களிற் பிறக்க, வெல்லையில் பெருமை யருணையை நினைக்க வில்லலா முத்தியென்றுரைத்தீ ரெல்லையிலுறு தலங்களு மதற்கொக்குமென் றுரைத்திட நடிகே, வல்லி சூழருணை யதிகமென் றுரைத்த தருமென் வருள்செயல் வேண்டும்.

(இ-ள்) சிதம்பரத்தைத் தரிசனஞ் செய்தாலும் காசியிலே தேகத்தைவிட்டாலும் சிறப்புள்ள திருவாரூரிலே பிறந்தாலும் அளவில்லாதபெருமையுடைய அருணாசலத்தை நினைத்தாலும் முத்திகிடைக்குமென்று அருளிச்செய்தீர் இந்த நான்கு தலங்களையும் ஒன்றாகக்கொள்ளாது ஒப்பின்றி திருவுளம்பற்றுமல சுவாமி அல்லிமலர்களையுடைய தடாகஞ்சூழ்ந்த அருணாசலத்தை மாத்திரம் அதிகமென்று கட்டளையிட்டதை அனுக்கிரகஞ்செய்ய வேண்டுமென்று மார்க்கண்டேயர்கேட்க அதற்கு நந்திதேவரும் அருளிச்செய்கிறார்-எ-று. (௬௫)

இறைந்திடுந் தொழிலும் பிறந்திடுந்தொழிலு மெண்ணியபடியவைமுடியா, பறந்திடு மவைக்குஞ் சிலவிலங் கினுக்கும் பாதவமுதல்வோ ருயிர்க்கு. நிறைந்த புனிசரந்தசர் நமசகுநிறத்தமண்டபந்தொழுநோரா கறந்திகழ்பயனுர் சிலர்சிலர்க்கெளிதா வலவர்க்கரியதாமது வே.

(இ-ள்.) கே ம் மார்க்கண்டேயரே ஒருவன் இறக்குந்தொழிலும் பிறக்குந்தொழிலும நினைத்தபடிமுடியாது அதிருககட்டும்பட்சிசாதிகளுக்கும மிருகங்களுக்கும விருட்சமுதலாகிய ஓரறிவுயிருக்கும் புன்மைநிறைந்த நீசருககும குருடர்களும நடராஜனது நிர்த்தசபையைத் தரிசனஞ் செய்யககூடாது பூர்வஜனன புண்ணியத்தினாலே அந்தச்சபைக்குப் போய்க் காணத்தகுந்தவர்களாகிய சிலர்க்கு மாத்திரங் கிடைக்கும் மற்றவர்களுக்கு அரியதாகும் அந்தத்தலம-எ-று.

குண்டகர்பதிதர்கோளகர் புலையர் கொலையின ருறுப்பினிற் குறைந்தோர்,கண்டகர் நெடுந்தூரத்தினி லிருப்போர்கருணைசேரருணைபூதரத்தை, எண்டக வொருகா லினைத்திடமுத்தியெய்தலால் விலங்குபுன்மரங்கண், முண்டக முதலா யினவுமுன்காணமுளைத்திட முறதியே பெறும்ால.

(இ-ள்.) ஒருமாது தன்கணவனுக்கன்றி வேறொருவனுக்குப்பெறப்பட்ட குண்டகர்களுக்கும பாவிகளுக்கும் விதவைபெறப்பட்டகோளகருக்கும நீசருக்கும கொலை செய்கிறவர்களுககும அவயவங்குறைந்தவர்களுக்கும தீமை செய்கின்றவர்களுக்குமநெடுந்தூரத்திலிருப்பவர்களுககும கிருபை பொருந்திய அருணாசலத்தை நன்றாய் ஒருதரம்நினைக்க முத்திபுண்டாகும் இவர்களல்லாமல் மிருகங்கள் பட்சிகள் மரங்கள் தாமரைமுதலிய கொடி பூண்டுகளும் அவ்வூரில் முளைத்தால் முத்தியை யடையும-எ-று. (௬௭)

நிலையெலா நிலிங்கமது சிவலோகத் தேவர்பாதங்கள் பாதவங்க, ளலைபுலாம் புனல்கள் சடையுமாம் கங்கை யருந்துமு · னமரருண்

ணைமுதா, மூலவியேவருதல் புவிவலம்வருத லுரைத்தசொல்சுருதியா மூறங்கல், மலைவறுசமாதி யாகுமத் தலத்தை மானுமோ மற்றொரு தலமே.

(இ-ள்.) அத்தலத்திலிருக்கிற சிலைகளெல்லாம் லிங்கங்களானபடியி னாலே அதுசிவலோகமாகும், அத்தலத்திலிருக்கிற அலைபொருந்திய நீரெல்லாம் சுவாமியின் சடையிலிருக்கிற கங்கையாகும் அத்தலத்திலி ருக்கிறவர்கள் சாப்பிடுகிற உணவுகளெல்லாம தேவாமிர்தமாகும். அத் தலத்தில் சஞ்சரித்தல் பூமிப்பிரதட்சணஞ்செய்தலாகும் அவ்வூரில் சொல் வார்த்தைகள் வேதமாகும். அத்தலத்தில் நித்திரைசெயதல் நிஷ்டைகூடி சமாதியிருத்தலாம் ஆனபடியினாலே அற்தகு மற்றொரு தலம் ஒப்பாகுமோ-எ-று.

முத்தழல புரிந்தோர் நான்மறைதெளிந்தோ ரைவகை வேள்வி யுமுடித்தோ, ரெத்தவம் புரிந்தோ ரெவ்வறஞ் செயதோரெண்வகை யோகிய ரெனிநுவ, மத்தலநினையா தவர்க்கிலை முத்தியாதலாலமரர் வானிடத்துஞ், சுத்தமானிடராய்ப் பிறந்ததைநினைத்துத் துளக்கிலா முத்திபெற்றி திருப்பார்.

(இ-ள்.) காருகபத்தியம், ஆகமனியம், தட்சணாக்கினியம், என்ற மூ ன்றக்கினியை வளர்த்தவாகளும இருக்கு, யசுர், சாமம். அதர்வணம என்னும நான்குவேதங்களை உணர்ந்தவாகளும், பிரமயாகம், தெய்வ யாகம் பூசயாகம, பிதிர்யாகம், மானிடயாகம் என்கிற ஐவகை யாகங் களையும நிறைவேற்றினவர்களும் எத்தன்மையாகிய தவஞ்செய்தவர் களும், எப்பட்ட தருமஞ்செய்தவர்களும், இயமம, நியமம், ஆதனம பிராணயாமம், பிரத்தியாகாரம், தாரணை தியானம், சமாதியெனப்படு கின்ற அஷ்டாங்கயோகம் செய்தவர்களுமாகிய எப்படிப்பட்டவர்க ளாயிருந்தாலும் அவ்வருணாசலத்தை நினைக்காவிட்டால் அவர்களு க்கு முத்தியில்லை. ஆனபடியினாலேதான் தேவர்களாய்ச்சொர்கக லோகத்தி லிருந்தவர்களும் ஞானமுள்ள மானிடராகப்பூமியிற்பிறந்து அவ்வருணாசலத்தைத் தியானஞ்செய்து கெடுதலில்லாத முத்தியை அடைந்திருப்பார்கள்-எ-று. (௪௧)

பொருவிலாச் சுவர்க்கத் தமிர்தமுண்டிருப்போர் போகபூமியை த்தனிப்புரப்போ, ரருணைமாநகரிற் றிருமியாய்ப் பிறப்ப தகி.மென்று

தரங் கொள்வார், மருவுமப்பதியிற் பிறப்பது நூறு மகம் புரிந்தவர்க்க லாற்கிடையா, திருவருள படைத்தாரகெளிதல்லான் மற்றத தேவர்கள் யாவாகருமரிதே.

(இ-ள்.) ஒப்பில்லாத சொர்க்கலோகத்தில்-நரை-திரை-மூப்பு உண்டாகாதபடி அமிர்தமுண்டிருப்போர்களாகிய தேவர்களுமபோகத்தை அனுபவித்தற்குரிய அந்தச சொர்க்கமுதலான உலகங்களைத் தனித்தனி யாளுகின்றதேவேந்திரன முதலாகிய திசுருட்பாலகர்களும அருணாசலததலத்தில் கிருமியாகப்பிறககிறது சொர்க்காதிகளை பதத்தை அநுபவிப்பதைப்பார்க்கிலும அதிகமென்றுபிறப்பதற்கு ஆசைப்படுவார்கள் தெய்வத்தன்மைபொருந்திய அந்தப்பதியில பிறககிறது நூறுயாகஞ் செய்தவர்களுக்கு அல்லாமற்கிடையாது சுவாமியினுடைய கிருபை பெற்றவர்க்ட்குக கிடைக்கும அவர்களன்றி மற்ற தேவாகள் முதலான மகத்துவம பொருந்திய யாவர்க்கும அப்படிப்பிறககிறது கிடைக்க மாட்டாது-எ-று. (௬௰)

வெற்றிரும பிடத்தில் செம்பில வெண்கலத்தில் வெள்ளியிலவெள்ளியபொன்னிற, குற்றமொன்றில்லாக குயிற்றியமணி போற் குலவிய சிவனிருந்திடுவன், மற்றையதலத்தி லருணையென்றுரைக்குமவளம்பதினிலெழுந்தருள்வன பொற்றகட்டிடத்து மணியெனவுரைத்தான புனிதனாகியவருணந்தி.

(இ-ள்.) சொற்பவிலைபெற்ற இருப்பிலும், செம்பிலும், வெண்கலத்திலும வெள்ளியிலும, வெள்ளைப்பொனனிலும் பதிக்கப்பட்டயாதொருதோஷமிலலாத மாணிக்கரத்தினமபோல மற்றத்தலங்களிலெங்கும் நிறைந்த பரமசிவன் எழுந்தருளி யிருப்பார்பொனனாற்செய்ததகட்டில் பதிககப்பட்ட அந்த இரத்தினமபோல அருணாசலமென்று சொல்லப்பட்டவளம் பொருந்திய தலத்தில் எழுந்தருளியிருப்பாரென்று பரிசுத்தமாகிய நந்திதேவர் திருவுளம்பற்றினார், ஆதலால எல்லாத்தலத்திற்கும் இத்தலம அதிகமாம்-எ-று. (௬௧)

கண்ணினால் விளங்குந் திருமுகமுகத்தாற்கரியகண் விளங்குமவ்விரணடின, பண்ணினால் விளங்கு முடலெல்லாமவைபோற் பரமனுல்விளங்குமவ்வருணை, யண்ணன்றான் விளங்கு மருணைமாநகரா லமரரோடருணைமாநகரா, லெண்ணிலாப்பதிகளெலைகளும் விளங்குமெவற்றிலுஞ் சிறந்ததென் றிசைத்தான்,

(இ-ள்.) கேளும மார்க்கண்டேயரே. கண்களிருப்பதால் முகம்பிரகாசிக்கும், முகத்திலிருப்பதால அந்தக்கண்கள்விளங்கிச்சௌந்தருக்கும, இந்தவிரண்டினுடைய சோக்கை அழகினாலே தேகமெல்லாம் விளங்கும், இதைப்போல் பரமசிவனாலே அருணாசலம்சிறப்படைந்திருக்கும் அந்த அருணாசலத்தால் சுவாமியும் அம்பிகையுடையவராய் விளங்குகிறார் அத்தலத்தினாலும் அதில் எழுந்தருளியிருக்கிற சுவாமியினாலும் எண்ணிக்கையில்லாத எல்லாக்ஷேத்திரங்களும் சிறப்பாய்விளங்கும் ஆனதினாலே எல்லாத்தலங்களிலும அது சிறந்ததென்று திருவாய் மலர்ந்தருளினார்-எ-று. (௫௨)

இதனால் எல்லாத்தலங்களும் உடலாகவும், அருணாசலத்தலம்முகமாகவும், அதில சுவாமி கண்ணாகவும சொல்லப்பட்டது.

வீசல ரிலைமெய் குளிர்ந்திடுங் கொடியின் வேரினீர் சொரிந்திடி னதுபோற், பூசனை யருணை நகரிலே சிறிதும புறையறநடக்குமேயாகிற், காசியேமுதலெத் தலமெலாமபூசை கனப்பெற நடந்ததாயிலையே, வீசர்வாழ்நத் தலமெலாம் பூசை விழறிலே விடுந்திடாதிருந்தென்.

(இ-ள்) ஒரு கொடியினது வேரில் நீர் வார்த்தால அக்கொடியும அதிலிருக்கிற மணம்வீசுகின்ற புஷ்பங்களும் இலைகளும குளிர்ச்சியையடையும், அதுபோல அருணாசலத் தலத்தில சுவாமிக்கு எவ்வளவாகிலும் பூசை குறைவில்லாமல் நடக்குமானால் காசிமுதலாகிய எல்லாத்தலங்களிலும மேன்மையாகப் பூசை நடந்ததாகும், அத்திருவண்ணாமலையில பூசை நடவா விட்டால மற்றத் தலங்களில் நடந்ததென்ன நடவாவிட்டாலென்ன ஒருபயனுமில்லை-எ-று. (௫௩)

நிலந்தொழு மருணா சலந்தனி லிருந்து நெஞ்சினி லையமாய் பிரிந்தோர், தலந்தனை யிருமபி நடந்தனர்முன்செய் தவங்களு மாங்களுந் தவறுக், குலந்தனி லுதித்தோ ராயினும் புலைஞர் குறைந்தவ ராயினுங் கொடிய, நலந்தவருமிரோ டிருக்கினுமதற்கோருமையைசொன்னவர்க்குமீ தொக்கும்.

(இ-ள்) உலகத்தார் போற்றுகின்ற அருணாசலத் தலத்திலிருந்து இதைவிட உயர்ந்ததலங்கள் இருக்குமென்று மனதில சந்தேகங்கொண்டு பிரிந்து ஒரு க்ஷேத்திரத்தைநாடிநடந்தவர்களுக்கு அவர்கள் அந்த

ற்கு முன்செய்யப்பட்ட தவங்களும் பிரயோசனப்படமாட்டா அவர்கள் நலகுலத்தில் பிறந்தவர்களானாலும் நீசராவார்கள், நல்லகுணங்களையுடையவர்களானாலும் கொடியகுணத்தராவார்கள் அவர்கள் உயிரோடிருந்தாலும் இறந்தவர்களாவார்கள், அந்த அருணாசலத்துக்கு வேறுதலங்களை ஒப்பாகச் சொன்னாலும் இந்ததோஷங்களெல்லாமுண்டாகும்-எ-று. (ருச)

என்றுதானருணைச் சிறப்பெலா முனிவர்க் கேதுவோடெடுத்தினிதியம்பிக, கன்றுமான் மழுவுஞ் சுரிகையுந் தரித்த கடவுணன்கிருந்தன னவனைச், சென்றுசென்றிறைஞ்சிநெக்குநெக்குருகிச்சென்னிமேற் செங்கைவேரோட்டி, ஒன்றுமாநந்தப் பெருங்கடலிடைப்புக்குணர்ச்சியாய் முனிவனீ துரைப்பான்.

(இ-ள்) இப்படி அருணாசலத்தின் பெருமையை ஏதுவோடு முனிவர்களுக்கு இனிதாக எடுத்து அருளிச்செய்து, மான்கன்று, மழு உடைவாள் இவைகளைத் தரித்த நந்திதேவர் களிப்புற்றிருந்தார், அந்தநந்திதேவரைப் பலதரம் வந்தனஞ்செய்து நெக்குவிட்டுருகிச்சிரசின்மேல் சிவந்த கைகளை நெடுநேரங் கூட்டி ஒன்றுபட்டவராய் ஆனந்தசமுத்திரத்தில் முழுகித் தன்னை மறந்தவராகிப் பின்புஞாபகம்வந்து இதனைச்சொல்லுவார் மார்க்கண்டேயர்-எ-று. (ருரு)


முதலாவது திருநகரச்சருக்கம்-முற்றிற்று.

---

ஆக-திருவிருத்தம்-எச.

---





உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

இரண்டாவது

# திருமலைச்சருக்கம்.

---

கலித்துறை.*

எந்தையே யருணந்தியே யடியவர்க் கெளியாய்
சிந்தையானது மகிழ்ந்தன னருணையின் சிறப்பா
லந்தமாநக ரிடத்திலே சிவனழல் வடிவாய்
வந்த வாறுட னதுமலையாகிய வகையும்.

(இ-ள்.) அருணாசலத்தின் மகிமையைக்கேட்ட மார்க்கண்டேயர் சொல்லுவார் எம்முடைய ஆண்டவரே அடியேனுக்கு அருள்செய்த நந்திதேவரே, அடியார்க்கெளியவரே நீர் அருளிச்செய்ததிருவண்ணாமலையெனனும் தலத்தின் மகிமையினால் மனகளிப்படைந்தேன் அப்படிப்பட்ட தலத்தினிடத்திலேபரமசிவன் அக்கினிசொரூபமாய்த் திருவுருக்கொண்டதும் அதன் பின்பு மலையுருவமானதும்-எ-று. (க)

அம்மலைச்சுட ரடிதலை தெரிகிலா தயன்மா
லிம்ம லுற்றது மவர்க்கருள் செய்ததும் விளம்பாய்
கைம்மலைக்கட கரியுரி புனைந்திடும் கைலை
செம்மலைத்தொழுஞ் செல்வனே யெனவவனன் செப்பும்.

---

* நெடிலடி நான்காய் நிகழ்வது கலித்துறை என்ப திலக்கணம்.

(இ-ள்) அந்த அக்கினிமலையின் அடியும் முடியும் அறியக் கூடாமல்பிரமனும் விஷ்ணுவும் வருத்தப்பட்டதும் பின்பு சுவாமி அவர்களுக்கு அனுக்கிரகஞ்செய்ததும் திருவுளம் பற்றவேண்டும் கையுள்ள மலையை ஒத்ததாய் மதத்தை யுடையயானையின்தோலைத்தரித்தருளிய கைலாயவாசகராகிய பரமசிவனை வணங்கும்படியானசெல்வத்தை யுடையவரே யென்றுசொல்ல அதற்கு நந்திதேவர்சொல்லத்தொடங்கினார்-எ-று. (உ)

பஞ்ச பாதக மொருவனப் பதியிலே பண்ண
நெஞ்சி னினைத் திடினு நினைத்ததே பரமாமத்
தஞ்ச மாகிய முத்தியா மெனமறை சாற்று
மஞ்சொ லாவது மொழிந்தபோக் கென்னபே றறிதே.

(இ-ள்.) ஒருவன் அந்த அருணாசலத்திலே பஞ்சபாதகங்களைச்செய்யவேண்டுமென்று நினைத்தாலும் அப்படிநினைத்ததேமேற்பட்ட புண்ணியமாகி அதனால் பற்றுககோடாகிய முத்தியுண்டாமென்று வேதங்கள் முறையிடும், அனைய யுண்டாக்கும், நல்லசொற்களினாலே தோத்திரஞ் செய்பவர்களுக்கு என்னபேறு கிடைக்கமாட்டாதுஎ-று.

ஆகையா லூமைக் கன்றியே யெமக்குமுண் டதிகஞ்
சோக மோகங்கள் தவிர்ப்பவ னொருபரஞ் சுடராய்
மாக மூடுற வளர்ந்தது மாலயற் காகப்
போக விக்கமொன் றனதுமொருவகை புகல்வேன்.

(இ-ள்) ஆனபடியினாலே மார்க்கண்டேயரே இந்தமான்மியத்தை கேட்கின்ற உமைக்கே யல்லாமலெனக்கும் அதிகபலனுண்டாம், துக்கத்தையும் மோகத்தையும் நீக்கிவிடுகிற சிவபெருமானொப்பற்ற பெரிய சோதிவடிவாய்ப் பிரமவிஷ்ணுக்களுக்காக ஆகாயமளாவி வளர்ந்ததும். யாவருக்குமபோகத்தைக்கொடுக்கின்றஇலிங்கமென்று சொல்லும்படி திருவுருக்கொண்டதும் எனக்குத் தெரிந்தமட்டுமகொஞ்சம்சொல்லுகிறேன. எ-று. (ச)

ஒடுங்கு காளினி லேயன்றி யுருத்திரன் மகேச
னெடுஞ்ச தாசிவன் விந்துநா தஞ்சத்தி நெறியே
யடங்கி டும்பர சிவத்தினிற் பரசிவ மனைத்துங
கடந்த தத்துவ முடிவிலே நின்றது கருதி.

(இ-ள்.) சர்வசங்காரகாலத்தில் முறைப்படிச்சகல உயிர்களும்பிரமனிடத்தில்ஒடுங்கி பிரமன் விஷ்ணுவினிடத்திலொடுங்குவார், விஷ்

ணு உருத்திரனிடத்திலொடுங்குவார் உருத்திரன்மகேசுரனிடத்திலொ டுங்குவார் மகேசுரன் சதாசிவனிடத்திலொடுங்குவார் சதாசிவம்விந் துவினிடத்திலொடுங்குவார் விந்துநாதத்தினிடத்திலொடுங்கும் நாத மசத்தியினிடத்திலொடுங்கும் சத்திபரமசிவத்திலொடுங்கும அந்தப் பரமசிவம் திருவுளங்கொண்டு எல்லாம கடந்தத்துவமுடிவிலே சுகின றது-எ-று. (௩)

பரமசிவத்தினில்வருபரா சத்திடாற்குடிலை
யிடுவிடுமபரதத்துவ மடைவிலேவிரிந்த
மருவுமைவருமொடுங்கிய முறையிலேவந்தா
ரரிமகன்படைத்திடுவது நினைந்தனனகத்தில்.

(இ-ள்) அப்படியெல்லாம ஒடுங்கினகாலத்தில தனியாய நின்றபரம சிவம உலகமுண்டாகக வேணடுமென்று திருவுளங்கொண்ட அளவி ல் அந்தச்சிவனிடத்திலுண்டாகிய பராசத்தியினிடத்தில் குடிலையென் னும சத்திதோன்றியது அதிலெ முறைமையாக நாதாந்தத்துவங்கள் முறையே உண்டாயின பஞ்ச கிருத்தியங்களினாலும பிரமன விஷ்ணு உருத்திரன் மகேசுரன் சதாசிவன்முனனே ஒடுங்கிய முறையே உண் டாயினார்கள் விஷ்ணுவினுடைய புத்திரனாகிய பிரமன உலகத்தைச்சி ருஷ்டிப்பதற்கு மனதில் எண்ணினான்-எ-று. (௪)

மரீசியங்கிரன்புலத்தியன புலகனனமறையோா
கிருதுவத்திரிசனபதி யெழுவருங்கினைத்தா
ருரியதக்கனுமவலப்பரப் பெருவிரலுதித்தான
பிருகுமாரபினுமறந்திறை முகத்திலுமபிறந்தார்.

(இ-ள்) அப்படிபிரமன் நினைத்தவுடனேமரீசி அங்கிரசா-புலத்தியர் புலகிருது அத்திரி-சனபதி-எனனப்படும எழு இருஷிகளும் பிறந்தார்கள் தக்கன்வலதுகால்பெருவிரலிற் பிறந்தான பிருகு மார்பினிடத்தில பிற ந்தான் தருமதேவதை முகத்தில பிறந்தது-எ-று. (௫)

உன்னுமையவரின் மரீசியாற காசிபனுதித்தான
பன்னுதக்கனுமைமபது பெண்களைப்பயந்தா
னனைவரீசிபனைவரபதின் மூவரையளித்தான
முன்னவனாகியவதிதியா லிமையவர்முளைத்தார்.

(இ-ள்.) பிரமனிடத்திற் பிறந்த பின்னாய ஐய எழுவரில் மரீசிரிஷியி னிடத்தில் காசிபரிஷிபிறந்தார் தக்கனெனபவன ஐம்பதுபெண்களிற்

பதின்மூன்றுப் பெண்களைக் காசிபர் விவாகஞ்செய்தார் மூத்தவளாகிய அதிதிவயிற்றில் முப்பத்துமுக்கோடி தேவர்களும் பிறந்தார்கள்-எ-று

இருகைசேர்ந்திடுமிரணிய விரணியாக்கர்களும்
தெரியவின்றனள்சிறப்புறு திதியெனுமிளையாள்
தருணமைந்தரிலிரணியன் பிரகலாதனொ
டருமையைந்தர்களைவரைப்பயந்தனனவருள்,

(இ-ள்) அதன்பின்பு அதிதிக்கு இளையவளாகிய சிறப்புள்ள திதியென்பவள் இரணியன் இரணியாட்சனென்னும் இரண்டுபேரையும் பிரசித்தமாகப் பெற்றாள் இந்த இருவரில் இரணியன் பிரகலாதன்முதல் ஐந்துபிள்ளைகளைப் பெற்றான்-எ-று. (௯)

பிரகலாதனன்றவத்தினால் மூவரைப்பெற்றா
னருணமைந்தரில் விரோசனன்மாவலியளித்தான்
பரவுமாவலிவாணனென் றொருவனைப்பயந்தா
னரனருச்சனைபுரிந்தவ னயன்றொழவிருந்தான்.

(இ-ள்) அப்பிரகலாதனன் தவத்தினால்மூன்று பிள்ளைகளைப்பெற்றான் அந்த மூவரில் விரோசனனென்பவன் மாவலி என்பவனைப்பெற்றான் மாவலி வாணாசுரனைப் பெற்றான் அவ்வாணாசுரன்பரமசிவனைப்பூசித்துப் பிரமன்தொழும்படியான வாழ்வுபெற்றிருந்தான்-எ-று- ()

தனுவளித்தவன்சம்பரன் முதலினோர்பதின்ம
ரனையதானவர்பெற்றனன் சிங்கிகையணங்கு
பனியிராகுவேமுதலொரு நால்வரைப்பயந்தாள்
யிளையவளொடுமூன்றுபே ரசுரரைப்பெற்றாள்.

(இ-ள்) மலைகளினுடைய சிறகையரிவதற்குத் தேவேந்திரனுக்குத் தன்முதுகெலும்பைக் கொடுத்து தேகத்தை விட்டவராகிய ததீசிரிஷி என்பவர் சம்பரன் முதலாகிய பத்து அசுரர்களைப் பெற்றார் அப்பத்து பேரில் சிங்கிகையென்பவள் இராகுமுதல் நான்குப்பிள்ளைகளைப்பெற்றாள் அவளுக்கிளையவள் மூன்றுபேர் அசுரரைப் பெற்றாள்-எ-று. (௧௧)

காலகேயர்களறுவரைப் பயந்தனள்காலை
சாலநீள்சிறைக்கருடனு மருணனுந்தவிர
நாலுபாலரைப்புதல்வரா வினதையுயந்தாள்
ஆரோர்விழிக்கத்துரு பணிபெலாமளித்தான்

(இ-ள்) காலைஎன்பவள் காலகேயர்கள் ஆறுபேரையும்பெற்றாள் மிகவும் நீண்டிருக்கிற சிறகினையுடைய கருடன் அருணனோடுகூட நான்கு

பிள்ளைகளை விந்தை என்பவள் பெற்றாள் விடத்தையொத்த தந்தங்களையுடைய கத்துரு என்பவள் பாம்புகளைப் பெற்றாள்-எ-று. (கங)

அரிட்டையென்பவளிடத்திலே யரம்பையர்முதலாய்த்
திரட்டிமங்கையர்பிறந்தன ரிளங்கிளைமுனிவ
னருட்டவத்தினெண்ணிரட்டிகந் தருவரையளித்தா
ளருட்டுவாள்விழிக்கபிலைபாற் பதின்மர்வந்துதித்தார்.

(இ-ள்) அரிட்டை என்பவளிடத்தில் அரம்பை ஊர்வசி முதலான பெண்கள் பிறந்தார்கள் இளங்கிளை என்பவள் முனியினுடைய கிருபையினாலே பதினாறு வகையாகிய கந்தருவர்களைப் பெற்றாள் வாள்போன்ற கண்களையுடைய கபிலையினிடத்தில் பத்துப்பிள்ளைகள் பிறந்தார்கள்-எ-று.

அங்கிராசன்பதிகள்காந் தருவரையளித்தார்
கங்குலத்திரிகதிர்மதி புலத்தியன்றனையர்
பொருவிராக்கதர்வானரர் கின்னரர்புலக
னங்குமைந்தர்கிம்புருடர்பின் விலங்கையுமளித்தான்

(இ-ள்.) அங்கிராசனபதி என்கிற இருவரும் காந்தருவரைப் பெற்றார்கள் அத்திரியென்பவர் சூரியசந்திரரிருவரையும் பெற்றார், புலத்தியர் இராட்சதர்வானரர்கின்னரர் இவர்களைப்பெற்றார் புலகரிஷி என்பவர் கிம்புருடரையும் மிருகங்களையும் பெற்றார்-எ-று. (கச)

தருணராகியவசுக்களைச் சனபதித்தான்
பிருகுவென்பவன்கவியுடன் சவுனரைப்பெற்றா
னிருவரோடுசெந்திருவையும் பிருகுபெற்றெடுத்தான்
பருவமைந்தரிற்கவியுமோ வெள்ளுறைப்பயந்தான்.

(இ-ள்) சனபதி என்பவர் பின்னும் தருணம்பொருந்திய அஷ்டவசுக்களைப்பெற்றார் பிருகுஎன்பவர் கவிஎன்பவனையும் சவுனகரையும் பெற்றார் இவ்விருவரையும் பெற்றதுமல்லாமல் பின்பு இலக்குமியையும் பெற்றார் அப்பருவம்பொருந்திய பிள்ளைகளில் கவிஎன்பவர்சுக்கிரனைப்பெற்றார்-எ-று. (கரு)

பரியதானவன்றேவிமூங்கி ரண்டினார்பரிதி
யுரியவாமபரியாகியிந் திரியத்தையுற்ற
வரிசைபற்றியமருத்துவ ரிருவரும்வந்தார்
விரிசரா * சரமபிறந்தன பலபலவிதமாய்.

* சரம் நடையுள்ளனவும். அசரம்-நடை யில்லனவும்.

(இ-ள்) சூரியன் தன்மனைவியைச்சேருகிறதற்குஎத்தனப்பட்டபோது அவளதற்குப்பொருந்தாமல் பெண்குதிரையாயோடினாள் சூரியன் ஆண்குதிரையாய்த் துரத்த அவர்திரும்பிப்பார்த்தாள அப்போதுசூரியன் தனதுபெண்சாதியி னிரண்டுமூக்கிலும் இந்திரியத்தை யூற்ற வரிசையாகிய அசுவினி தேவர்களிருவரும பிறந்தார்கள் அதனைபின்பு விரிந்த சரமும அசரமும் அநேகவிதமாயுண்டாயின-எ-று. (கசு)

* கலிவிருத்தம்.

கணைமேலகலாமெனது கற்பனைகளென்றே
புண்டரிகவேதியன மதத்திரிபுரத்தில்
தணடியெதிர்கொண்டுபகை தங்கவிசைகண்டார்
வண்டுளபமாயவனை வைதுறைவழுக்கும.

(இ-ள்) இப்படிச் சகலமும உண்டாகிய பிரமதேவன் இந்தஉலகெல்லாம நம்முடைய சிருஷ்டியினாலல்லவோ உண்டாயின வென்றகங்காரங்கொண்டு அதனால் வைகுந்தத்தில் வலிதிறபோ யெதிர்த்துப்பகை கொள்ளும்படி சங்கீதமபாடுகின்ற வண்டுகள் சூழ்ந்த துளபமாலையைத் தரித்த விஷ்ணுவைப்பார்த்து அவமதித்துச் சிலவார்த்தைகள்தொடங்கினார்-எ-று. (கஎ)

ஏழுலகபேழுபில பேழுபுயலோரே
ழாழி புதலேழுகிரி யாமவைசயிபற்றி
வாழுமுயிர்யாவையும் வகுக்கிடமனத்தாற்
பாழிகொணபரீசிமுதன் மைநதர்கள்படைத்தேன்.

(இ-ள்) விஷ்ணுவே பதினாலுலோகங்களையும் சுறந்தமேகங்களையும் சத்தசமுத்திரங்களையும முதன்மையாகியசத்தகுலபருவதங்களை உண்டாகுமபடி மனததினால படைத்து இப்பொழுது வாழ்கின்றவெலாவுயிர்களையும் உண்டாக்க வலிமையமைந்த பரீசிமுதல்ரிஷிகளைப் பெறறேன்-எ-று. (கஅ)

மைந்தரதுமைந்தர்கல குருகளுடன்வானோர்
சந்திரன்முதற்பெரிய தானவர்களானோர்
கந்தருவர்கிம்புருடர் சித்தர்கணநாத
ரிந்திரன்முதற்றிசைத் தெட்டிறையிருப்போர்.

(இ-ள்) விஷ்ணுவே என்னுடைய பிள்ளைகளாய் பிள்ளைகள்குருவாகிய பிரகஸ்பதியுடனே எல்லாத்தேவர்களும் சந்திரசூரியர்களும் அ

* அறுசீரடிகாகிய கலிவிருத்தமமே என்பதிலக்கணம.

சுரர்களும் கந்திருவர் கிம்புருடர் சித்தர் கணநாதர்களும்தேவேந்திரன்முதலாகிய திக்குப்பாலகர்கள் எட்டுபேருமா யிருக்கிறார்கள் இவர்களெல்லோரும் என்னாலல்லவோ உண்டானார்க ளென்றுபின்னுஞ் சொல்லுவார் பிரமதேவர்-எ-று. (கக)

எஞ்சுதலாவிறைவனென்பதனையெண்பேர்
களேசனெனுமைந்தனை மறந்திடுகாத்தா
லஞ்சவில்படைப்பொழியி லெட்டியலனிப்பாய்
செஞ்சுவரிலாதெழுகு சித்திரமுமுண்டோ.

(இ-ள்.) குறைவில்லாத சகலத்துக்கும் நானே கர்த்தாவெனபதையும் என்பிள்ளைதான் பிரம னென்பதையும் மறந்துவிடு நான்கையினாலே உலகத்தைப் படைக்காவிட்டால நீஎப்படி காப்பாற்றுவாய் சுவரில்லாமலெழுதுகிற சித்திரமு முண்டோவென்றுபின்னுஞ்சொல்லுவார் பிரமதேவர்-எ-று. (உ0)

அளித்திடுகளிப்பினை யகத்தினில்விடாயேல்
வெளிப்படவொருத்தனை யளித்திடவிதிப்பேன்
குளிர்ச்சியசமற்கிடை குதித்திடதனுள்ளே
யொளித்திடுசுரத்திர ளுனேச்சருவுமுன்னே.

(இ-ள்.) விஷ்ணுவே சகலத்தையும இரட்சிக்கிறோ மென்கிறமதத்தைவிட்டுவிடு நீவிடாமற்போனால் உன் உத்தியோகத்தை நீக்கி மற்றொருவனையுண்டாக்கி இரட்சிக்குந் தொழிலுக்கு நியமித்தப்போடுவேன் நம்புத்திர பௌத்திரர்களாகிய தேவர் கூட்டங்கள்வந்து உன்னை கொல்லும்படி வளைத்துககொள்வதற்குமுன்னே திருப்பாற்கடலுக்குள்ளே குதித்து ஒளிதுப்போவென்று சொன்னார் பிரமதேவர் எ-று. (உக)

வித்தகமுலுப்பிருகு விட்டமுனிவாலே
பத்துருவெடுத்தனை பகுத்தறிகிலாயோ
வத்தனையுடற்களு மமைத்தபடியாலென்
கைததலமுமிட்பட கறுததபடிபாராய்.

(இ-ள்.) ஞானசொரூபியாகிய பிருகுரிஷியிட்ட சாபத்தினாலேபத்துதரம் பூமியிலே பிறந்தாய், நீ அதை பகுத்தறிய விலையோ எல்லாம் படைத்து என்கைகள் காப்பேறி எப்படிகறுத்துப் போச்சுது பாரென்று பின்னுஞ் சொலலுவார்-எ-று. (உஉ)

உக்கிரமனோராளென் விகழ்ச்சியுரைக்காதே
[illegible]ணிடை மூளைத்தனையுனக்குத்

தந்தையெனவோவலது தாயெனவோசொல்
செந்தழல்பிறந்துகழை தீப்பதறியாயோ.

(இ-ள்) விஷ்ணுவே நம்முடைய நாபிக்கமலத்திலேதான் வந்தா
னென்று நிந்தனைசொல்லாதே முன்னாலே நீ ஒரு தூணினிடத்திலே
பிறந்தாயே அந்தத்தூணை உனக்குத் தகப்பனென்று சொல்லட்டுமா
அந்தத்தூண் உனக்குத் தந்தையானால் எனக்குநீ தந்தையாவாய் செ
ந்நிறம்பொருந்திய நெருப்பு மூங்கிலினிடத்திலே பிறந்துமூங்கிலைத்
தானேகொளுத்திப்போடுவதை அறியாயோ அப்படி உன்னிடத்திலே
நான்பிறந்தாலும் உன்னை அழித்துப் போடுகிறேனென்றார் பிரமதே
வர்-எ-று. (உ௩)

வேதனிவைசொற்றனன் கொடும்படைவெதுப்பக்
காதிடைதொளைத்தனல் புகட்டினகடுப்பக்
கோதமொடெழுந்தபுகை கொண்டநகைகொண்டே
மாதவன்மதித்தனன் மறுத்திவையுரைப்பான்.

(இ-ள்.) பிரமன் இப்படி சொன்னவார்த்தைகள் விஷ்ணுவுக்குஇர
ண்டுகாதிலும் வேலாயுதத்தைப் பழுக்கக்காய்ச்சித் தொளைக்கவிட்டு
உள்ளேசெலுத்திய நெருப்புப்போல தகிக்க மிகுந்தகோபங்கொண்டு
புகையெழும்படியாக நகைத்து இவனுக்கு இந்த அகங்காரம் வந்
தது எந்தவிதத்தினாலேயென்று ஆலோசித்து சில வார்த்தைகளைச்
சொன்னார் விஷ்ணு-எ-று (உ௪)

வந்தவழிதன்னையும் நினைத்திலைமனத்தென்
னுந்தியுனதன்னையெனவுன்னுதலையில்லாய்
தந்தைசிறுமைந்தர்பிழை தன்னையுணராரென
நிந்தவுரைசொல்லினை யிகழ்ந்ததுபொறேனே.

(இ-ள்.) பிரமாவே நீவந்தவழியையும் நினைத்தாயில்லைஎன்னுடைய
நாபியைத் தாயென்று ஆலோசிக்கவும் இல்லை தந்தைகளாயிருக்கிறவ
ர்கள் செய்தபிழையை ஒருகுற்றமாக நினையார்களென்று இந்தவார்த்
தை சொல்லினையோ இனிமேல் இப்படி பொறுக்கமாட்டேனென்று
பின்னுஞ் சொல்லுவார்-எ-று. (உ௫

ஊன்றமதுவுக்கயிட வப்பகதோனை
மென்றனையராதரவு மிகழ்ந்துயிர்கொடுத்தேன்
மன்றநுவொருதீமைசெயின்மைந்தனெனவுண்டோ
வன்றிபுடனேயையுமறுத்தெரிகிலாரோ.

(இ-ள்.) கோபத்தையுடைய மதுவும் யானைபோன்றகைடவனும் எனக்குப் பிள்ளைகளல்லவோ என்னை யிகழ்ந்து எதிர்த்தபடியினாலே கொன்றுவிட்டேன் நிலைபெற்ற ஒரு தீங்குசெய்தால்மகனென்றுபார்க்கக் கூடுமோ அதுவல்லாமல தேகத்திலே ஒருகட்டி கண்டால் அதையறுத்தெறிந்து சொஸ்தப்படுத்திக கொள்ளாமல் இருக்கின்றார்களோ மனுஷர்கள்-எ-று. (உகூ)

பித்தனுளதோர்தலை பிடுங்கியெறிபோதி
லத்தலைநமக்கென வமைக்கவிதியில்லா
எத்தலைவனென்பதுனை யித்தலைமைகொண்டே
யைத்தலையராமுடிகொள் பாரிடம்விதித்தாய்

(இ-ள்.) பிரமனே பயித்தியககாரனாகிய சிவன் உன்னுடையதலைகளிலொன்றைப்பிடுங்கி எறிநதகாலததில அந்தத்தலையைமறுபடியுண்டாக்கிககொள்ள வகையில்லை உன்னை எப்படித்தலைவனென்றுசொல்லுகின்றது இந்தத் தலையைககொண்டுதானே படத்தையுடையஆதிசேடன் முடியிலிருக்கின்ற பூமியைப்படைத்தாயென்றார்விஷ்ணு-எ-று

மச்சவுருவமகொடு மறைத்தொகுதிதந்தேன்
விச்சையுளதானவரை வென்றுயிர்குடித்தே
னச்சமரமாகெனினும் வைத்தமரமென்றே
யச்சமுறுகின்றன னழிக்கவரிதென்றே.

(இ-ள்) பிரமனே சோமுகாசுரன் உன்னிடத்தில் வேதங்களைப்பிடுங்கிக்கொண்டு போனபோதுநான் மச்சாவதார மெடுந்து அவ்வசுரனைக்கொன்று வேதங்களை யுதவினேன் அதுவல்லாமற்சாமர்த்தியமுள்ள அநேக அசுரர்களைககொன்று தேவர்களோடு உன்னையுங் காப்பாற்றினேன் எட்டிமரமானாலும் தான்வைத்த மரமாகவிருந்தால் வெட்டார்கள் அதைப்போல [illegible] உன்னைககொல்லக கூடாதென்று பயப்படுகிறேனென்றார் பிரம்மா-எ-று.

என்றொருவருக்கொருவ ரெத்தனையுரைத்தார்
கன்றினர்புயத்தின்மிசை கைத்தலமடித்தா
ரின்றுலகுதித்தன ரொருக்கினர்நிமிர்ந்தார்
துன்றியகனற்பொறி கருகவெழவிழித்தார்.

(இ-ள்.) இப்படி ஒருவருக் கொருவர் எத்தனைவார்த்தைகளையோ சொல்லிக் கொண்டிருந்தார்கள் கோபித்துக்கொண்டு புஜத்தின்மேல் கையாலே அடித்துக்கொண்டார்கள் நின்று பூலோகத்தில் குதித்தா

ர்கள் நெருங்கினார்கள் நிமிர்ந்தார்கள் நெருப்புப்பொறி நெருக்கமாய் விழ சுழற்கனைக கண்களை விழித்தார்கள்-எ-று. (௨௯)

வெற்புகள்பொடித்தன வெடித்ததுகடாகம்
பற்பலசுடர்க்கதிர் பனிக்கதிரொளித்த
சர்ப்பமுநெளித்தது தலைச்சுமைபொறாதே
கற்பமுடிவென்றமரர் கணகளையிமைத்தார்.

(இ-ள்.) பிரமனும் விஷ்ணுவும் சண்டைசெய்யும்போது மலைகளெல்லாம் பொடியாய்ப்போயின அண்டகடாகம் படீரென்றுவெடித்தது பலகிரணங்களுடைய சந்திரசூரியர்கள் ஒளித்தார்கள் ஆதிசேஷன் தலைச்சுமை பொறுக்கமாட்டாமல் உடல்நெளிந்துகொண்டான் கற்பகாலமவந்து உலகமழியப் போகின்றதென்று தேவர்கள்கண்களை இமைத்துக்கொண்டார்கள்-எ-று. (௩௰)

உடுக்கணமுகிற்கண முதிர்ந்தவுலகெல்லா
மிடுக்கணில்விழுந்தன வெழுந்தனபராக
மடக்கினபகீரதிமுன் னானநதியெல்லா
மிடுக்கொடுமுழங்கின திசைக்கரிகளெட்டும.

(இ-ள்.) நட்சத்திரக்கூட்டங்களும் மேகக்கூட்டங்களும் உதிர்ந்தன உலகமெல்லாந் துன்பமாய இடுக்கணுக்குள்ளாய் விழுந்து தூளெழும்பின, கங்கைமுதலாகிய நதிகளெல்லாம்தண்ணீரில்லாமலவறிப்போயின. அவ்விடத்திலிருக்கிற யானைகள் திடுக்கிட்டுப்பயந்தன-எ-று

மேலினிதெடுத்தெறிவர் வீழ்வர்கடிதோடிக
கோலியெதிர்குத்துகென நின்றிடுவர்குத்திச்
சாலமடிதொட்டளவிலசாரிகைதிரித்தா
மாலையுமிருட்டுமவல மாய்வருதனமான.

(இ-ள்) ஒருவரையொருவர் மேலே எடுத்தெறிவார்கள் கீழே விழுவார்கள் மறுபடியும் எழுந்து விரைவில ஓடிவந்துஎதிரே நின்று குத்தென்று சொல்வார்கள். அப்படிக் குத்திக்கொண்டுமிகவும் மடியைப் பிடித்துச் சூரைப்போல அனேகவிசை சுழன்று திரிவார்கள அந்நேரமும் இருளும் வலமிடமாக வருதலையொத்திருக்கும்படி.

ஊருவனதத்துவன செல்வனவிணையோடே
சேருவனநின்றன திரித்தனதிரண்டார்
தாருவகையிற்றன தழைந்ததிருளெங்கு
மேருவரைபுக்கதெழு வேலையனறுக

(இ-ள்.) அவ்வேளையில் உலகத்தில் ஊர்ந்துபோகின்றவைகளும் தவழ்கின்றவைகளும் நடக்கின்றவைகளும் பறக்குஞ் சீவராசிகள் போல ஆகாயத்திலேபறக்கின்ற நிலையாகநின்ற விருட்சமும் மலைகளுந்திரிந்தன திரளாக நிறைந்த ஐந்துவகையாகிய தேவதருக்கள் பொடிப்பொடியாய்ப்போயின எவ்விடமும் அந்தகாரம் நிறைந்தது மகாமேரு அசைந்தது சத்தசமுத்திரங்களுஞ் சேறாயின-எ-று. (௩௩)

அந்தமுடிவெலைதனி லஞ்சியிமையோர்கள்
மிந்திரனையெய்தினர்க ளெய்தியதுரைக்கு
முந்தியவனுற்றதுயர் யாவையுமொழிந்து
வந்தவரவேதென வுரைத்துரைசெய்கின்றார்

(இ-ள்.) சருவசங்காரகாலம் வந்ததென்று சொல்லும்படி இருவருஞ் சண்டைசெய்யும் வேளையில் தேவர்களெல்லாம் பயப்பட்டுத் தேவேந்திரனிடத்திற்போய்ச் சேர்ந்துதங்களுடைய துக்கத்தைச் சொல்லுவதற்கு முன்னே தேவேந்திரன்பட்டதுன்பங்களெல்லாஞ் சொல்லிப் பின்பு நீங்கள் வந்தகாரியம் ஏதென்றுகேட்கத் தேவர்கள் சொல்லுவார்கள்-எ-று. (௩௪)

ஆரணனுமகாரணனு மானவிருமேருந்
தாரணியிலேமிகு சமரதொழில்விளைக்கக்
கோரணியமேறுதிசை யெலையெ வருகருமு
காரணனேயெழுதல கரியதென்றார்.

(இ-ள்) பிரமாவும் [illegible] இருவரும் பூமியிலிருந்து யுத்தத்தைச் செய்கிறார்கள் எங்களுக்குப் பெருங்கஷ்டமாக்கும் வேறேயில்லை எல்லோருக்கும் [illegible] பாரம் [illegible] தொழுது இந்தச் செய்தியைச் சொல்லவே காரியமென்று சொன்னார்கள்-எ-று. (௩௫)

நாயகனிசைந்துபோர [illegible]
தூயமலர்போலடி துதிசரிகையாக
மாயனுடனமானவர் வருந்தகமது [illegible]
தாமலருமைந்தாதுணை தாரணியிலுண்டோ

(இ-ள்) இப்படிச்சொலத் தேவேந்திரனும் சம்மதித்துப் பின்பு அவனோடு தேவர்களெல்லாரும் போய்ச் சிவனுடைய பரிசுத்தமாகிய தாமரைபோன்ற பாதத்தைத் தொழுது பணிவுடனாகவுசைகளுடனே விஷ்ணுவும் பிரமனும் சண்டைசெய்யப் பருவ லருக்குந்தத்தைத் தி

ர்க்கவேண்டும பிள்ளைகளுக்குத் தாயே துணையல்லாமல் மற்றொரு துணை பூமியிலுண்டோவென்று சொன்னூாகள-எ-று. (௩௬)

உருட்படுசகட்டைநிக ரூற்றலகின்மீதே
யிருட்படுபிறப்பினை யிறப்பினையுறாதே
பொருட்பெறவுனக்கடிமை புககளவிலாவுன்
னருட்கடலகுளித்திட வடைககலமதானோம்.

(இ-ள்) உருண்டுகொண்டு போகின்ற வண்டியினுடையசக்கரம்போல் அஞ்ஞானம்பொருந்திய பிறப்பையுமிறப்பையும மாறிமாறியடைந்து வருத்தத்தையனுபவியாமல மோட்சத்தைப்பெற உனக்கடிமையாகப் புகுந்து உன்னுடைய அளவிலலாத கிருபைககடலில குளிகக அடைககலமானோ மென்றாகள தேவர்கள்-எ-று. (௩௭)

புழுக்கடையுடற்சுமை பொறுககமுடியாத
விழுககுடையவிச்சைகெட விச்சையருளவேனே
முழுக்கடலிடைத்தினை முழுக்குறினுமாறா
மழுககுமலமற்றிட வடைககலமதானோம்.

(இ-ள்.) அநேகமபுழுககள் குடைந்து கொணடிருககின்றஉடற்பாரத்தைப் பொறுககமுடியாத இழுக்காகிய அஞ்ஞானங்கெடப்பிரியத்தினாலே கிருபைசெயகின்றசுவாமியே பெரிய சமுத்திரத்தினிடத்தில்தில் தினம் முழுகினுமபோகாத மும்மலமாகிய அழுககற்றுப்போக அடைக்கலமாயுமமைச் சேர்ந்தோமென்றூர்கள்-எ-று. (௩௮)

எண்ணமினிவேறிலை யெமககருளசெயென்றே
கணணுறுதலைவிண ணவர்கள் கற்றுமொழிபோதி
லண்ணலுமுணர்ந்தன னனைத்துயிரினுள்ளே
யெண்ணெயெனநிற்குமவ னீதறிகிலானோ.

(இ-ள்.) இனிமேல் வேறேஆலோசனையிலலை எங்களுக்குக்கிருபைசெயயுமென்று சிவனைத் தேவர்கள் புகழ்ந்துதோத்திரஞ்செய்கையில சுவாமியும அவ்விருவருக்குமெட்டாத சண்டையின மூலத்தையறிந்தார் எல்லாவுயிாகளிடத்திலும எள்ளினிடத்து எணணெய்போல் நிற்கும் சுவாமி இது அறியமாட்டாரோ அறிவார் எ-று. (௩௯)

அறுசீாக்கழிநெடிலாசிரியவிருத்தம்.

நடுக்கமுறுமுனிவரெலாமமரரெலாம பயந்தவிரநாகமீது
படுக்கைபுரிதிருமாலும பங்கயத்திலுறையனும்பலககைதீர
வடுக்கிடுமபுவனமெலாமடுககழியா திருசதமனதகருளவநாகி
கடுக்கரியதழலுருவத்தொருவரையாயிருவரையுந்தடுப்பதானுன்

(இ-ள்.) நடுக்கமடைந்த முனிவர்கள் தேவர்களெல்லாரும் மயங்கும்படி சர்ப்பசயனத்தில் நித்திரைசெய்கின்ற விஷ்ணுவும் தாமரைப் புட்பத்தில் வீற்றிருக்கின்ற பிரமனும் ஒருவருக்கொருவர்பகையை நீக்கவும் அடுக்கடுக்காயிருக்கும் அண்டங்களெல்லாம் அடுக்குக் குலையாமலிருக்கவும் கிருபைசெய்வதாய்த் தடுத்தற்கரிய அக்கினிசொரூபத்தோடு கூடிய ஒருமலையாகி இவ்விருவரையுந் தடுக்கும்படி எழுந்தருளினார் பரமசிவன்-எ-று. (௪௰)

பாதலத்திற்பணிகளெல்லாம் விழுதாக வதனைக்கீழ்ப்பருவேரோடிப், பூதலத்திற் கிளைத்திமையோருலகெல்லாமலர்ந்துமலர்ப் புண்டரீகன், மீதலத்து முகடுடைத்துக் கடாகவெளிகடந்துபெரு வெளிக்குமேலா, மாதலத்துக் கிதுவுமொருகனன்மேரு வடுத்ததென விளாந்தமாதோ.

(இ-ள்) பாதாளலோகத்திலிருக்கும் பாம்புகளெல்லாம் அம்மலைக்குச் சலவிவேராகவும் அதனைக்கீழ் பருத்தவேரோடி பூமியிற்பெரிதாய்க் கிளைத்துத் தேவலோகங்களெல்லாந்தாண்டிப் பிரமலோகத்து முகட்டையுடைத்து அண்டகடாக வெளியைக்கடந்து அதற்கப்பாலிருக்கும்பெரிய வெளிக்கு மேலாயிருக்கிற இடத்துச்சுரும் அக்கினிசொரூபமாகிய மகாமேரு அடுத்ததென்று சொல்ல வளர்ந்தது.

மூளைக்குநெடுஞ் சுடரிரவி புரவியுலவாவுல, முழுதுமோடிக், கிளைக்குமணியிருவாசற்ற வேற்றிவைத்த விளக்கெனவேகிளாக்கையாலே, யாளக்கரலாமளப்பரிய வடவைபழலபரந்தென வரத்தமானத், கிளைக்கு மெழுகிரிகளெல்லா மதுசொரிந்த சிறுபொறி போற்சிவந்தமாதோ.

(இ-ள்) உதயமாகி நெடுந்தூரம் கிரணங்களை வீசுகின்ற சூரியனுடையதேரிற்கட்டிய குதிரைகள் சஞ்சரிக்கக்கூடாத உலகமெல்லாம் ஒடிகிளைத்த நீலமணிபோலுங்கரிய இருளையோட்டுவதற்கு ஏற்றிவைத்த விளக்குப்போல பிரகாசிப்பதினாலே சமுத்திரமெல்லாம்சொல்லுதற்கரிய வடவாமுகாக்கினி பரந்ததுபோலச் சிவப்புநிறம் பொருந்திய சத்தகுல பர்வதங்களெல்லாம் அந்தப் பிரகாசத்தினாலே அந்த அக்கினிமலை செறிந்த அக்கினிப்பொறிகள்போலச் சிவந்தன-எ-று. (௪௨)

கலிநிலைத்துறை.

வானக்கண்ணமுலா யதுகண்டமலரோனும்
கானக்கண்ணனு மஞ்சியகன்றார்கடாகாணர்

ஞானக்கண்ணினர்காணுவ தல்லாவைசேரு
மீனக்கண்ணினருக்கெளியானோ வெம்மானே.

(இ-ள்.) இப்படி ஆகாயபரியந்தம அக்கினிசொரூபத்தைக்கண்டபிரமனும் வேணுகானத்தைச்செய்கின்ற கிருஷ்ணனாகிய விஷ்ணுவும்பயப்பட்டு ஒதுங்கினார்கள். ஞானக்கண்களையுடையவர்கள் காணுவதல்லாமல குற்றம்பொருந்திய ஈனமாகிய முகத்திறக்கண்ணுடையவர் காணுகிறதற்கு எளியவரோ நம்முடைய பரமசிவன்-எ-று. (௬௩)

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

கண்ணிலன விடவரிய சுடரினைக்கண் டிருவருமாயக்கலையானு
ரெண்ணிலித னடிமுடியை யறிபவரேபெரியரென் றிசைத்தாரிந்த
மண்ணினடியறிவனெனப் பணியிடையிற்றாக்கமிககோன் வராகமானு
ன், விண்ணின்முடியறிவனென் றனவடி வெடுத்தயனுமவிரைந்து
போனன்.

(இ-ன்.) கண்களாலே இவ்வளவுதூரம்இந்தமலைபோலிருக்கிறதென்று அறியகூடாதபிரகாசமான மலையைப்பார்த்து இரண்டுபேருந்தம்பத்தையுடையவராய் இந்தமலையினது அடியையாவது முடியையாவது அறிகிறவரே பெரியவரென்று ஒருவருக்கொருவர்சொல்லிக்கொண்டார்கள். அப்பொழுது சாப்பத்தை நிந்தனை செய்பவராகிய விஷ்ணு இந்தமலையினடியை நானறிந்து வருகிறேனென்று வராகவடிவானார் இந்த மலையின் சிகரத்தைக் காணுகிறேனென்று பிரமனும் அன்னபக்ஷியாகிய ஆகாயத்திற் பறந்தார். (௬௪)

மெத்துமரைக் கணத்தினுககா யிரகாதம்பறந்தயனார்விரைந்து
போனா, ருத்தியராவெடுத்தபவி கணத்தினுககா யிரகாதந்தெளை
த்துப்போனா ரத்தனையோர் செயலுரைக்கும்கனகபவரி மெய்பூட்டு
க்கருகிலேவாடு, நித்தலப்பொற் குண்டிகையு நீலமணிக்குண்டிகையு
நிகர்த்தமாதே.

(இ-ள்) சொல்லப்பட்ட அரைக்ஷணத்தில பிரமன் ஆயிரங்காதம் பறந்து மேலாகப்போனார் படத்தையுடைய ஆதிசேடனை கயா பூமியை அரைநொடியிலே ஆயிரங்காததூரம தெளைத்துக்கொண்டு விஷ்ணுகீழாகப்போனார் அது எப்படியிருந்ததென்றால் அம்மலைதா கும்பமாகிய இரட்டணைப் பூட்டைபோலவும் அதில் இறைக்கிறதற்கு கட்டிவிட்டிருக்கின்ற நீலரத்தினத்தோண்டிபோலவுமுத்துகளிலே த்திருக்கிற அழகிய தோண்டிபோலவுமிருந்தது-எ-று. (௬௫)

பூவுலகையகியகன்றகீழுலகின் முறைமுறையேபுகுந்துபோந்து
[illegible]

தேவர்தொழு மரஞ்சுடர் வாழாடகேசுரமகரத்தின் சிறந்துமபோய்
மூவுலகைமுதலாதோனேமுலக மளந்துமதனைமுடிவுகாணுன. (௪௬)

(இ-ள்) வராகவடிவமெடுத்த விஷ்ணு பூலோகத்தைக்கடந்து அதின் கீழிருக்கிறஏழுலகத்தையும் முறையே தொளைத்துக் கடந்துபோய் மாவலிச்சக்கரவர்த்தி காவலிலேயிருக்கிற போகவதி பட்டணத்தைத்தாண்டி அப்புறம் தேவர்கள் வணங்கும் பிரமசொரூபம்விளங்குகின்ற ஆடகேசுரத்தைச்கண்டு கைகளினாலும் சிரத்தினாலும் வணங்கி முன்னே மூவுலகத்தையு மளந்தவர் இப்போதேழுலகங்களை அளந்தும் அந்த மலையினடியைக் காணாமற்போனார்.

வளர்ப்புடைய பிறைபோல வளர்மருப்புந் தேய்பிறைபோல மழுங்கிப்போக, குளப்படியு முகநுனியும் பிளந்தேடு மாசையைப்போற் குறைந்துபோக, கொப்பரிய சூரியமவிழ்ந் தொருதாற்றண்டொழிந்த தகர்வினத்தனைவாழ்ந்து, இளைப்பதுவுஞ் சலிப்பதுமுற்றெழுதலாமிடாக்கடலுமேறினனே.

(இ-ள்) அப்படி மகாவிஷ்ணு வராகவடிவங்கொண்டுதேடுகிறபோது வளர்பிறைபோல நாளுக்குநாள் வளர்ந்திருக்கிற இரண்டுகொம்புகளும் தேய்பிறைபோலக் குறைந்து மழுங்கிப் போகவும், குளம்புகளும் முகத்தினுனியும் தேடுமாசையைப்போலக் குறைந்துபோயிற்று அப்படித் தேய்ந்து குறைய எண்ணக்கூடாத துக்கசமுத்திரத்தில் விழுந்து நாலுவருஷகாலஞ் செய்யுமகாசமுகலப்பும் பரிவுவந்து பின்னுடைய செயலென்றறிந்து அகங்காரத்தியானஞ்செய்து இளைப்புஞ்சலிப்பும் நீங்கித் தன்னுடைய துக்கசமுத்திரத்தையும் பூமியைத்தையும் தாண்டிவந்தார்-எ-று. (௪௭)

தமபோரை முகந்தெடுக்க சமுத்திரம் பயோதிபுரிந்தவக்கத் தலத்தைச்சார்ந்தா, ரம்போக விதமுடியினையாகா னென மனத்திலை யந்தீர்ந்தா, ரம்பாருகரியானைச் செயானைத் தனதுவிழிநயனத்தோடே, பைம்போதைப் புனலானைப் பலகாலுமடலரித்துருகப்பரவினாரே.

(இ-ள்.) தனக்கும் பிரமனுக்கும் வசச்கலகத்தை நீக்கவுயர்ந்த அக்கினிசொரூபமாக எழுந்த தலத்தைச்சேர்ந்து அழகியதாமரைப் பூவிலிருக்கிற பிரமன் இந்த மலையின்முடியை அறியமாட்டானென்று நிச்சயஞ் செய்துகொண்டு சமாதானப்படாதவர்களுக்கு அரியவராயப்படியப்பட்டவர்களுக்கும் ஆதாரமாயிருக்கிறவரைத் தம்முடைய மனத்திலுண்டாகிற புட்பத்தோடு அழகியபுட்பங்களைத் தரிக்கின்றவரைப் பரவசமாய் வந்தனஞ்செய்து உள்ளுருகிப் பரவினார்.

கலிவிருத்தம்,

இன்னதாயிவன்செய லிருக்கவிங்கிதன்
முன்னமேயழற்கிரி முடியைத்தேடவே
அன்னமாய்பறந்தவ னரைக்கணத்திலே
மன்னுமோராயிரக காதமவாவினான்.

(இ-ள்.) இந்தப்பிரகாரம இந்த விஷ்ணுவிருக்க இதற்குமுன்னே அக்கினிகிரியின்-முடியைத்தேட அன்னப்பட்சியாகி பறந்தபிரமன் அரைக்ஷணத்திலே ஆயிரங்காதவழியாகத் தாண்டினார்.

கீறியேயண்டகோ ளகையுங்கீழுற
வேறிநூறாயிர மாண்டுமேவினு
னூறுநூறாயிரங் காதமநோக்கினு
மீறிலாகி ருநததவ் வெரியின்றாணமே.

(இ-ள்.) அண்டகோளகையுங் கிழ்படக்கிழித்துப் பறந்து நூறாயிர ம்வருடந்தேடினார் அப்படி அநேக நூறாயிரங்காதம் தாண்டிப்போய் ப்பார்த்தாலும முதல்பார்த்ததுபோலவேயிருந்தது அக்கினித்தூண்.

சிறையெலாமுதிர்ந்தன விசையுந்தீர்ந்தன
நிறைவதாமிக்கனுமுயிர்ப்புகீண்டன
குறையெலாப்வளர்ந்திடத் தனிமைகூர்தலான்
மறையினனிவைவினை மனத்திலெண்ணினன்.

(இ-ள்) அப்படி பிரமன் அன்னமாய்ப் பறந்துபோமபோது சிற கெல்லாமுதிர்ந்து போயின விசையும அடங்கிற்றுகுறைவிலலாததுக க்ஷும் பெருமூச்சும அதிகப்பட்டன மனக்குறைவளர ஒருவருமில் லாமல் தான ஒருவனானபடியினாலே பிரமன் சிலவற்றை மனத்திலெ ண்ணினார்-எ-று. (௩௧)

அரியபாலிதனடி யறிந்துமீளுமோ
தெரிவுறாதிடையிலே திருமபுமோவென
வுரியதாகிய துயருசலாடினு
னெரியுறமெழுகுபோ லிளஞ்சிந்தையான்.

(இ-ள்) அரியவிஷ்ணு இநத அககினி மலையினுடைய அடியையறி ந்து திருமபுவானோ கொஞ்சதூரந்தேடி இனிமேல் தேடக்கூடாதெ ன்று திருமபிவருவானோ என்கிற துக்கமாகிய ஊசலிலிருந்தாடினார் நெருப்பிலே யிட்ட மெழுகுபோல் இளகிய மனமுடையவனாகிய பிர மன்-எ-று. (௩௨)

மற்றினுசிலவெண்ண மனத்திலெண்ணிலே
னுற்றிதன்னையுமுறவுகொண்டிலே

னிற்றைநாள்வரைக்குமிவ் விடர்க்குண்மூழ்கினேன்
சிற்றறிவுடைமையோ செய்ததீமையே.

(இ-ள்.) இந்தமலையைச் சிவனென்று அறியாமற்போனேன் பகைத்துக கொள்ளப்பட்ட விஷ்ணுவையாவது உறவு கொள்ளாமற்போனேனென்றுமுத லின்றுவரையிலுமவெகுகாலமாய்த் துக்கச்சமுத்திரத்தில் மூழ்கினேன் எனனுடைய சிறியபுத்தியினாலேயோ பூர்வகாலத்திலே நான்செயத பாவத்தினாலேயோவென்று விசனத்தையடைந்தான் பிரமன்-எ-று. (௫௩)

எய்தினேன்முடியடித் தேகிலேனெனும்
பொய்களையுரைககினும் பொருந்தவேயுரை
செய்துணைபிறிதிலை யென்றதேமபினான்
கைதையின்மடல்வரப் பினபுகண்டனன

(இ-ள்) இவ்வளவுதூரம் தேடிவந்தும் முடியையறியாமற்போனேன். ஆனாலு இனிமேற் போயவிஷ்ணுவினிடத்திற் பார்த்தேனென்றுபோய்சொன்னாலும ஒத்தாசையாகப்பார்த்தேனென்று பொய்சாட்சி சொலவதறகு ஒரு துணையு மிலலையே யென்று விசனப்பட்டான் அந்தச் சமயத்தில தாழமபூமடலொன்று மேலேயிருந்து இறங்கப்பார்த்தான் பிரமன்-எ-று. (௫௪)

இமமடலெஙகுற்று வருவதென்னுமுன
மைமடலணைததவ கதலையேற்றனன்
செமமரன்முடியிலவீழ் கைதைசசெமமலர்
மெய்மைசேருயிர்ப்பதாய் விடுமினென்றதே.

(இ-ள்.) இந்ததாழைமடல்எஙகேயிருந்துவருகிறதென்று ஆலோசிக்குமுன்னேதாழமபூ பிரமனுக்குச சமீபததிலவர அதைககையினாலே பிடித்தான அது பரமசிவனுடைய சிரத்திலிருந்து தவறிவிழுந்த தாழமபூவாகையால மெயயையான பெறுபூச்சேடு என்னைசிகரத்திலே விட்டுவிடுவாயென்று சொலலிற்று-எ-று. (௫௫)

ஏரணிகைதையை யிங்குநீவருங
காரணமேதெனக கமலன கூறினன
ஆரணனுரண னளவிடாமுத
லாரணிமுடியினுக் தவறிவீழ்ந்தனன்,

(இ-ள்) அந்தத்தாழம்பூ சொல்லியதைக்கேட்டு அழகானதாழம்பூவே எஙகேயிருந்து இங்குவந்தாயென்று பிரமன் கேட்கப் பிரமனு

னும் விஷ்ணுவினாலும் அறியக்கூடாத பரமசிவத்தினுடையசிரத்தி லேயிருந்து தவறிவிழுந்தேனென்று சொல்லிற்று-எ-று. (௫௬)

தாரப்பொலி முடியினின்று தவறிவீழ்ந்தபின
நாற்பதினாயிரம வருடமாகவணிமேனி
னேறபது விதிசெவண றிஞசப்பவெக்கைதனைப்
பாரப்பதுவிடுகதயன பகாவசாயினனே.

(இ-ள்) கொன்றைமாலை பிரகாசிக்கின்றசுவாமியின திருவடிமேல நின்று விழுந்து நாற்பதினாயிரம வருஷங்களாக வந்தேன இன்னும் கான பூமியிற் போகவில்லை வருத்தத்தோடு வருகிறேனென்னைப்பிடிக்கவேண்டாம விட்டுவிடென்று தாழம்பூசொலலப்பிரமனசுவாமியைத்தேடுவதைவெறுத்துச சிலவார்த்தை சொலலததொடங்கினன.

துணியவசகைதயே துணையுமாயநமக்
கினமுமேவுற திருக்கணீக்கினு
யுன்னினுமூபா துணை யுறவுவேறில்லை
யன்னியனலலறு ஈட்பனமுமலலவே.

(இ-ள்) சமீபத்திலுடைசாக தாழம்பூவே நீ எனக்குத் துணையாயிருக்து நானின்னமுமதேடிடவேபாயல என வருத்தப்படாக நீங்கிருடஉன்னைப் பாரக்கிலும உயிர்போனற துணையும உறவும வேறிலலைநானும அன்னியனலல அன்னப்பட்சியு மலலவென்று சொன்னுனபிரமன எ-று. (௫௭)

காமமோநானமுக ஞானமானுமா
யேமமாமிவர்கள விசைகவெணணினேம
பூமிகிழிடந்தவன போயினபனத
தீமையெனறிருமுடி தேடிககாணகிலேன.

(இ-ள்) என்பெயரோபிரமனநானும விஷ்ணுவுங கூடி அக்கினிசொருபமாகிய இக்கமலையின அளவைத தெரிந்துகொளள வெண்ணினேம பூமியின் கீழிடத்தைப்பிளந்துக்கொணடு அடியை அவனதேடப போனன் பாவியாகிய நான முடியைககாண வெகுநாள தேடியுங்காணகிலேன்-எ-று. (௫௮)

அடிதலைவரயினி வதுகெண்டென்பய
னெடியவினவரவினு னினைத்ததெயதினும்
படியளந்தவனுடன் பறவையாமிவன்
முடியுறித்தானென்ன மொழிதல்வேணடுமே.

இ-ள். ஆதியந்தமாக நடந்த செய்தியை அதைக்குறித்துப்பேசு
கூவதனுற் பயனென்ன பெருமைபொருந்திய உமையுடைய நல்வர
த்திலே நினைத்தகாரிய முடிக்தால்தான பயன் பூமியையளந்த விஷ்
ணுவினுடன் பகைக்கொண்டு பறைவை யாயுருவெடுத்த இப்பிரம
ன்சிவனுடைய முடியையறிந்தானென்று நீ சொல்லவேண்டுமென்
று பின்னுஞ்சொன்னுன் பிரமன்-எ-று. (கூ0)

வஞ்சமென்நிகழ்ந்திடேல் வருந்தினூர்க்குயிர்த்
தஞ்சமாமெனிற் பெரும் பொய்யுஞ்சாற்றலா
நெஞ்சிலேசொல்லத்தா மொழியுமன்றது
ரஞ்சமுண்டுமைவரே நண்புவேண்டினூர்.

இ-ள். தழம்பூவே கேள் இதுவஞ்சனைத் தொழிலென்று த
ள்ளாதே யாதோ ஒரு துன்பத்தையடைந்தவற்கு உயிர்சேதம் வ
ருமானுல் அதைத்தடுப்பதற்கு பெரிதாகிய பொய்யையும் சொல்ல
லாம் இதுபயப்பட்டுச் சொல்லக்கூடாத வார்த்தையுமல்ல அன்ப
ன் சொன்னுல் சினேகதத்தை விரும்பினவர்விஷத்தையுந்தின்ன இ
சைவார். உண்ண என்னும் செய்வெனச்சம் உண்டு எனச்செய்த
னெச்சமாகத் திரிந்து இழிவு சிறப்பும்மை தொக்கின்றது எகார
ம் தேற்றத்திற்கண் வந்தது-எ-று. (கூக)

கண்ணுதன்முடியில்வாழ் கைதையேசுறி
தெண்ணுவதொழிசென வியந்துபோந்தது
விண்ணினூமிருந்துதிழ் விரைந்துதிரியன்
மண்ணுலகளந்தமான் மருங்கில்நண்ணினுன்.

இ-ள். பரமசிவனுடைய முடியில் வாழ்கின்ற தாழம்பூவேவே
றொரு ஆலோசனையுஞ் செய்யவேண்டாம் அதற்குடன்படென்று
சொல்லத் தாழம்பூ அதற்கிசைந்தவர்ந்து ஆகாயத்தில நின்றுசீக்
கிரத்தில்பிரமன் பூமியையளந்த விஷ்ணு விடத்தில் வந்துசேர்ந்தா
ன், எ-று.

சிதராகோட்டியென் வரவின்செய்கையைக்
காதநாழுபிரகை கணத்திலேகூட
தாதியான்முடியறிக் கனுமிலேனெனா
வோதினுன்கைதையு முள்ளதென்றதே.

இ-ள். விஷ்ணுவே என்னுடைய நல்லவரவைக்கேள்ளுருகோடி
யிலே நாறுயிரதகாதம்பறந்து எல்லாருக்கும்ஆதியாகியசிவனுடை

டி சிரசைப்பார்த்தேனென்று சொன்னான். தாழம்பூவும் இருந்தான் பிரமன் பார்த்தானென்று சொல்லிற்று-எ-று.

எழுசீர்க்கழிநெடிலாசிரியச் சந்தவிருத்தம்.

அக்கண மழற்கிரி வெடிக்கது வெடித்தவர தத்தினி லரக்கரி ணைமேயோ, ருக்கமர நிலைகக்களிறு கக்கின வரககரையுருக்கிய தென க்குருதி நீர், செக்கரொளி மட்கிட முருக்கிதழ் கறுக்குமெய சிவப் பொளிவெளுத்த வடிவாய், முக்கணனதறகிடை முளைத்தனன் முகத்திலவன் முப்புரமெரித்த நகையே.

இ-ள். இப்படி பிரமன் சொன்னவுடனே அக்கினிமலையுமொரு பொன்று வெடித்தது வெடித்த சத்தத்தில் இராட்சதர்கள் தேவர்கள் திடுக்கிட்டு உயிர் சோர்ந்தார்கள் திக்கில் உள்ள யானைகள் சூரியர்களை உருக்கிச் சாய்த்ததெப்படியோ அப்படியே இந்த ஜலத்தைக் கக்கின செக்கர்வானத்துப் பிரகாசம் மழுங்கிப்போகும்படியாகவும் முருக்கம்பூவிதழ் கறுக்கும்படியாகவும் சிவந்த தமது திருவுருவின் ஒருருவுபொருந்திய விரம விபூதியினால் வெளுத்தவடிவாய்த் தோன்ற அந்தவெடிப்பில் நின்றும் பரமசிவன் எழுந்தருளினார். முப்புரத்தை யெரித்த நகைப்பு அவர் முகத்திலே வந்தது-எ-று. (௧௪)

முண்டக வன்னைதனின் மொழிந்தவுரை நன்றென மொழிந்து நகை கொண்டவளவே, அண்டபகிரண்டமும நடுங்கின வொடுங்கின வடங்கின விரிந்தகடலெலாம், கொண்டலு மறைந்தன சிறந்தன விறைந்தன குறைந்தன நிறைந்தனவுவா, லெண்டிசை திரிந்தன கரிந்தன பொரிந்தன வெரிந்தன விரிந்ததருவே.

இ-ள். பிரமனே உன்னுடைய அகங்காரத்தினால் சொன்னசொல் நன்றாயிருந்ததென்று சொல்லி நகைத்தபோது அண்டபகிரண்டங்களெலாம் நடுங்கிவிட்டன்று ஒடுங்கிப்போயின சூரியர் சந்திரருடைய பிரகாசமடங்கிப்போயின மேகங்கள்மறைந்தனசிறந்து நிலையாயிருக்கிறதுகளெல்லாம் இறந்தன நிறைந்தவைகளெல்லாம் குறைந்துபோயின குறைந்தவைகளெல்லாம் நிறைந்தன கூட்டமாகியதிக்குகள் அலைந்தன மரங்களெல்லாம் கரிந்தும் பொரிந்தும் எரிந்தும் போயின-எ-று. (௧௫)

கலிவிருத்தம்.

அழிந்தனவயனென வடராஞ்சினர்
குழிந்ததுநிலமெனக் கொள்ளையாய்மலர்

பொழிந்தனர்வடிமலர்க் குவளைபூத்தது
கழிந்ததுமலரலர் கிடப்பைக்கண்டிலே.

இ-ள். தேவர்களெல்லாரும் பிரமன் இல்லே ஆழ்ந்துபோனு னென்று பயப்பட்டார்கள் பூமி பள்ளமாகும்படி கொள்ளை கொள்ளையாகப் புட்பமாரி பொழிந்தார்கள். விஷ்ணுவுக்குச் சந்தோஷம்வந்துபிரமனுக்குமுன்னை அஞ்ஞானமென்கிற இருள் நீங்கிப்போயிற்று. (கஎ)

பாடினன்பரவினன் பரவசத்தினு
லாடினனோடின னளவிடாமுதல்
கூடினனெவ்வரங் கொள்வனேனெனாந்
தேடினன்சிவனைத் தெளிந்தசெங்கண்மால்.

இ-ள். அப்போது தெளிவையடைந்த விஷ்ணு அக்கினியலே யினிடத்திலிருந்து எழுந்தருளிய பரமசிவனைப் பாடினர் வந்தனஞ் செய்தர் பரவசமுகொண்டு ஆனந்தக்கூத்தாடினர் நாலுதிக்கிலும ஓடினர் யாவராலு மளவிடக்கூடாத இந்தச்சுவாமியைத் தரிசித்துக்கூடினேன் இனி நானென்னவரங் கேட்பேனென்று ஆலோசனை செய்தார்-எ-று.

ஆசையாலுருகுமால் வரிதனன்புகன்
மசனும்பலவர மினிதுரக்கின்
வாசமாமலரவ னுக்குமண்ணின்மேற்
பூசையுங்கோயிலும போகவென்றனன்.

இ-ள். இப்படி மிகுந்த பத்தியினுலே தேகம்உருகாநின்றவிஷ்ணுவினுடைய அடிமைத்திறத்தைப் பார்த்துக்கேட்ட வரங்களெல்லாஞ்சிவன் அருளிச்செய்து பிரமனைப்பார்த்து உனக்குப் பூமியிலே கோயிலும் பூசையுமில்லாமற் போகக்கடவ தென்று திருவுளம பற்றினர்சுவாமி-எ-று. (கஅ)

கைதையேயிவனொடு கரவுமீயுரை
செய்தாலநீண்டிலே மென்றுதீர்த்தன
னெய்திய முனிவுகண் டேங்கிமால்முகன்
மெய்கறைபுறப்பதம் வீழ்ந்துபோற்றினன்,

இ-ள். தாழம்பூவே இப்பிரமனேடுசேர்ந்த பொய்சாட்சிசொன்னபடியினுலே உன்னை இதுமுதற்கொண்டு நீக்கினேனென்றுதள்ளினர் அதன்பின்புசுவாமிக்கு இப்படிப்பட்ட கோபம வந்ததைப்பார்த்து ஏக்கமெடுத்துப் பிரமன் தன்னுடைய தேகம் பூமியிலேபடும்படிய விழுந்து வந்தனஞ்செய்தார். (ககூ

பொடியணிமுடிதயமுகிலேவிகர் பலியாணவமலமாந்
செடிமூடிகையரலேயுமல் சிறியேனொருபொருளோ
வடிவேபெருவெளியேசதுர் மறையேசதுர்மறையின்
முடிவேதனிமுதலேயெனை முனியேலெனை முனியேல

இ-ள். நீறுமூடிய நெருப்பைப்பொத்தகவாரியேசண்டாளத்துவமாகிய ஆணவமல. மென்கிற செடி மூடிக்கொண்டிருப்பதினாலே அவிவேகியாய்த் திரியாநின்ற சிறியேனொரு பொருளோ உருவமானவரே அகண்டவெளியானவரே நான்கு வேதமானவரே நான்கு வேதத்திலுமுடைய அந்தத்தி லிருக்கின்றவரே ஒப்பற்ற முதலாகியவரே கோபித்துக்கொள்ளவேண்டாம்-எ-று. (௭௰)

எந்நீர்களுமொன்றாகிய வெழுவாரியுமறநீ
வெந்நீரதுவாகவுடன் விளைவிப்புனலுண்டோ
இன்னீர்மையிதென்றாலுல குயிரெப்படிசமும
மன்னீர்விடமுண்டோயெனை முனியேலெனை முனியேல்

இ-ள். எல்லாநதிகளினீரும் விருந்துறன்றாகிய வெழு சமுத்திர முங்காய்ந்து வெந்நீராய்ச் சுட்டால அந்த ஆறுவதற்கு வேறே சலமுண்டோ உமக்கே இப்படிப்பட்ட கோபம்வந்தால் உலகத்தி லிருக்கிறசீவராசிகள் எப்படிப்பிழைக்கும் முன்னே சமுத்திரத்திலே பிறந்த ஆலகாலவிஷத்தையுண்ட மூர்த்தி கோபஞ்செய்யவேண்டா ம கோபஞ்செய்யவேண்டாம்-எ-று. (௭௧)

பிறையேமுழுமதியேயறை பொன்மேனியுடையோ
கறையேகமலமேயென நாறுமிந்திரனவ
பொறையேதிருவருளேயொளி யுடலேயியம்பசயே
முறையேபலமுறையேயெனை முனியேலெனை முனியேல்

இ-ள்- மூன்றாம்பிறையாகியும் பூரணசந்திரனுமாகிய பொன்னா கியும் ஆறுநியுமதேவதையுமாகியும் புருஷனாகியும் மங்களமாகியும் இருஷ்டத்தைப் பொழிகின்ற மேகமாகியும் சோமனாகியும் நாதமாகி யும் மற்றும நானாவித ரூபமாகிய பிரகாசிக்கின்ற மூர்த்தியே உமக்குமுறையோ முறை என்னைக் கோபிக்கவேண்டாம் அடியேனை ரக்ஷிக்கவேண்டியது இம்முறையே-எ-று. (௭௨)

வெண்மைச்சமலமாகிய கீழ்வேள் தனுவென்றே
கொம்மைத்தலைமலநெறமு கோபக்களிறன்றே
செம்மைக்கலைனானேகொலை செயுமந்தனன்றே
மும்மைப்புரமன்றேயொரு பொருளாயெனைமுனியேல்.

இ-ள். மிகுந்தவெப்பத்தைக் கொடுக்கின்ற புஷ்பபாணங்களையுடைய மன்மதன் தேகமல்லவே தாருகாவனத்து ரிஷிகள்விட்ட எழுமபினை தலையும் ஆறுபோன்றமதத்தையுமுடைய கோபமாகிய யானையல்லவே அந்தரிஷிகள் ஏனைப்புவிட்ட சிவப்பாகிய அக்கினியல்லவே கொலைசெய்யுந் தொழிலுடைய எமனல்லவே திரிபுரமல்லவே நான் எவ்வளவு உமக்கு என்னை ஒருபொருளாகக் கோபஞ்செயயவேண்டாம்-எ-று. (௭௩)

இரிதற்கரிதா முன்முடி யறிவேனெனுமளவே
பறவைப்படிவானேனினி மேலோவிடர்படுவேன்
சிறுமைப்படுமென்பாலருள் செய்யென்றுரைசெய்தா
மறுகிகருளிரனலபோலிறை மகிழ்வாய்மைமொழிவான்.

இ-ள். யாவராலுமறியக்கூடாதவுமமுடைய முடியையறிந்தேனென்ற மாத்திரத்திலே பறவையுருவமானேன் இனிமேலோ துக்கத்தை யடைவேன் சிறுமையையடைந்த என்னிடத்திலகிருபைசெய்யுமென்று சொல்லி விசனப்பட்டபோது மறுகக்காய்ந்து குளிர்ந்த ஜலம்போலச் சிவபிரான் சந்தோஷமாய்த் திருவாய்மலர்ந்து சில திருமொழிகளைச் செய்வார்-எ-று. (௭௪)

அமபொருகவஞ்சேலினி யவனித்தலமறையோர்
தமபூசனையுன்பூசனை யாகித்தனியமாஞ்
சமபூவரவுலகேழையும் விதியென்றருட்செய்தான்
கப்பூரகடல்விடமுண்டருள் கருணைக்கடலானுன்.

இ-ள். பிரமனே இனிமேல் நீ பயப்படாதே பூமியில் பிராமணர்களுக்குச் செய்கிற பூசை உன் பூசையாகக் கொண்டுபொன்னுருவையுடையதாகி மகாமேருமலைதானுமம ஏழுலுகத்தையும் எப்போதும்போல படையென்று அருளிச்செய்தார் சலுகளைதவழ்கின்ற சமுத்திரத்தின விஷத்தையுண்ட கிருபைக்கடலாகிய சிவபெருமான்-எ-று. (௭௫)

அறுசீரடி ஆசிரியவிருத்தம்

இத்தலத்தை யுமக்குவரங் கொடுத்தலினல்போசனைசூழன்றெலையிற் றூரம், சுந்தரமிகத் திரளானத் தலமாகப் பொலிகவிக்கசசோதிதானுஞ், சிற்றுருவமலையாகிவர முதவக்கடவதின்பஞ் சிறந்ததாள, முத்திதனைத் தனையாம லுதவுமிதற் கருணைபுரிமொழியுமாமம்

இ-ள். பிரம விஷ்ணுக்களே உங்களுக்கு இத்தலத்திலே அனுக்கிரகஞ்செய்துவரங்கொடுத்தபடியினாலே இத்தலத்தைச்சுற்றிமூன்று

யோசனை தூரம்வரைக்கும் சுத்த பவித்திரமாக விருக்க வேண்டி யிது இந்தச் செந்தீ மலையானது சிறிய உருவத்தோடுங்கூடியமலையா கக்கடவது பேரின்பஞ்சிறந்த மோட்சத்தைத் தடையில்லாமற்கொ டுக்கும் இந்தத்தலத்துக்கு அருணைபுரியென்று பெயராம்-எ-று.

வரதைபடிந்திரனு மிமையவரும் வினைக்கவலை வருத்தந்தீர் த்தோம், ஆதலினி வித்தலத்தை நினைப்பவர்க்குப் பிறப்பிடும்பை யகற்றுவோமிப், பூதலமு மித்தலமும் பிரளயத்து மழியாத பொற்ப தாகி, மோதியகாற் றடைந்ததிசைச் சராசரங்க ளவையுமுயர்மு த்தி சேர்க்கும்.

இ-ள். துன்பத்தையடைந்த தேவேந்திரனும் தேவர்களும் நம மைநினைக்க அவர்களுடைய துன்பத்தைத் தீர்த்தோம் ஆனபடியா லித்தத் தலத்தை நினைக்கின்றவர்களுக்குப் பிறவித்துக்கத்தை நீக்கு வோம் இந்தப்பர்வதமும் இந்தத்தலமும் பிரளயகாலத்திலும் நாச மடையாத லக்ஷணத்தை யுடையதாகி மோதுகின்றவாயுசஞ்சரிக்கி ன்ற திக்குகளிலுள்ள சராசரங்க ளெல்லாவற்றையும் முத்தியிலே சேர்க்கும்-எ-று.

வையகத்தி லரியதவம் புரிந்தவருக் கினியமுத்தி வழங்க வே ண்டிச், செய்யவித்த் திருநகரி லவதரிக்க வரந்தருவோனு செய்த தான மெய்ப்பெறுமொன் றாயிரமாய் வளர்ந்திடுங் கொடும்பாவம் வி ளையாதிதுதையுடையமென வுணர்வார்க்குப் பரகதிகிட்டாது நமதா ணை தானே,

இ-ள். பூமியிலரிதாகிய தவத்தைச் செய்தவர்களும் இனிமை யான மோட்சத்தைக் கொடுக்க விரும்பி சோதிசொரூபமாகிய இந் தத் தலத்தி லவதரிக்க வரத்தைக் கொடுப்போம் இதில் ஒரு தான ஞ்செய்தால் ஒன்று ஆயிரமாயவிருத்தியாகும் இந்தத்தலத்தில் பா வமே யுண்டாகாது இதைச் சந்தேகமாக நினைப்பவர்களுக்கு மோ ட்சங் கிடைக்கமாட்டாது, நம்முடைய ஆஞ்ஞைப்படிக்கு என்று பர மசிவன்-எ-று.

அண்ணலிவை மொழிந்தருளி யெழுந்தருளா மதுகுறுகி யசலமா கி, வண்ணமெய்ஞ் சுடர்விரிந்து விளங்குதலக் கண்டயன் றிருமாலு வணங்கிச்சொல்வார், விண்ணவர்க்கு மெய்யருக்கு மிதனைச் சோதிய ந்தியிக்குறுகி விழிக்கப்போகா, தெண்ணரிய சுடர்க்கொல்லா முடங் கந்த மலையாக விருக்கவென்றார்.

இ-ள். இந்தப்படி சுவாமி சொன்ன அளவில் அக்கினிமலைகுறு கி ஒரு சிறியமலையாய் நிறம்பொருந்திய மிகுந்த பிரகாசம் விரிந்து பிரகாசிப்பது பார்த்த பிரமனும் விஷ்ணுவும் சுவாமியை வணங்கிச

சொல்லுவார்கள் தேவர்களுக்கும் எங்களுக்கும் மிகுந்தமலையின் சோதிகெதிராகப்போய் கண்விழிக்க கூடவில்லை ஆனபடியினால் என்னுதற்கரிய பிரகாசங்களெல்லாமறைந்து ஒருமலையாயிருக்கவே ண்டும் என்றார்கள் எ-று. (எக)

அன்னமிசை வருவானுங் கருடன்மிசை வருவானும் மலமூர் த்திவன்னியெனும் மறைத்தமற்றை மலையாகவிருத்தியென மலையா ய்ச செய்தார், சென்னியிலே யொருசோதி யனுதினமுமாதெரியவரு ள் செய்வாயென்று ரென்னுமர்தவடியவர்க்கா விறையவனு மிரங்கி யினை யியம்பலுற்றார்

இ-ள். அன்னவாகனத்தி லேறுகின்ற பிரமனும் கருடவாகன த்தில் ஏறுகின்ற விஷ்ணுவும், மலரகிதராகிய சுவாமி அக்கினிப்பிர காசத்தை மறைந்து மற்றமலைகள்போ லிருக்கவேண்டுமென்றுகே ட்க அப்படியே மலையுருவாகச் செய்தார் இந்தமலையினுச் சியிலேஒ ரு பிரகாசம் எந்நாளுந் தெரியும்படியாகக் கிருபை செய்யவேண்டு மென்றார் அப்படிச்சொன்ன தொண்டர்களுக்காக இறைவனிச்சுவாமி யுந் திருவாய்மலர்ந்தார்-எ-று- (அ0)

கார்த்திகைக்குக் கார்த்திகைநா ளொருசோதி மலைநுனியிற் கா ட்டிநிற்போம், வாய்த்தவர்தச் சுடர்காணிற் பசியினியில் லாதுல கில் மன்னிவாழ்வார். பார்த்திவற்கு மருந்தவர்க்கு மிடையூறு சவறு மிது பணிந்தோர் கண்டோர், கோத்திரத்தி லிருபத்தோ ரதலைமு றைக்குமுத்திவரங் கொடுப்போமென்றார்

இ-ள் பிரமவிஷ்ணுக்களே கார்த்திகைமாதத்தில் கிருத்திகை நட்சத்திரத்தில் மலையினுச்சியில் ஒருபிரகாசங் காண்பிப்போம் அ ப்படி பொருந்தியசுடரைக் கண்டால் தரித்திரமும் வியாதியுமில் லமல் உலகத்தில் நிலைபெற்று வாழ்வார்கள் இந்தச் சோதியைக்கண் ட அரசர்களுக்கும் அரிய தவசிகளுக்கும் இடையூறுநீங்கும் இதை ப்பணிந்தவர்கள் தரிசித்தவர்கள் கோத்திரத்தில் இருபத்தொரு த லைமுறைக்கும் முத்திவரங் கொடுப்போமென்றார் அருணாசலேசர்

* மரணபவ மறுக்கஞ்சல மறந்தாரு மதர்மலை மரிதென்றே பேர், அருணைவடி வாதலினாலருணகிரியெனு மொருபேரதனையா ர்காஸ், தாணியிலே யறைத்தவர்க்கு மறக்கோடி. யம்செய்புத்தாச்சி த்ததாமென், றிருணிலவுமிடற்றிறைவ னிசைக்கமிழ்ந் திலைரஞ்சி யவ ரிசைப்பதானார்.

இ-ள் இறப்பினையும் பிறப்பினையும் நீக்குதற்கு மருந்தானப டியினாலே இந்தமலைக்கு மருந்தென்றுபெயர், இந்தமலை சிவப்பாகி மானபடியினாலே அருணகிரியென்றொருபெயர் அதை ஒருதரம்பூமி யிலே சொன்னவர்களுக்குப் பஞ்சாட்சரத்தை மூன்றுகோடிதரம் உச்சரித்ததற்குச் சமானமாகுமென்று நீலகண்டத்தையு சிவனரு ளிச்செய்ய பிரமவிஷ்ணுக்கள் சந்தோஷத்தை யடைந்துசுவாமி யை வணங்கிச் சொல்லுவார்-எ-று. (௨௮)

அடுத்தருணகிரியானைப் புனக்குவிண்ணின் றலறுபுனலாட்டுவாரார்
தொடுத்தநவுடுக்கிரளைதுதிருமுடிக்கு மணிமாலை சூட்டுவாரார்
கடுத்தகதிமிடற்றுமேனைகதிர்களன்றிமணித்தீபங்காட்டுவாரார் [றுரர்.
எடுத்திறைஞ்சிப்பூசைசெய்ய விதங்கீழோரிலிங்கவடிவெடுப்பாயென்

இ-ள் ஸ்ரீ அருணாசலேசுரரே மலையாகிய உமக்கு ஆகாயத்தில் நின்று பெய்கின்ற மழைபோலல்லாமல் ஜலங்கொண்டுவந்து அபி ஷேகஞ்செய்கிறவர்களார் நட்சத்திரக்கூட்டங்களேமுத்துமாலையா வதல்லது வேறே முத்துமாலை சூட்டுகிறவர்களார் சூரியகிரணமே தீபமாவதல்லாமல் தீபங்கொண்டுவந்து வேறே காட்டுகிறவர்களார் ஆனபடியினாலே நாங்கள் அபிஷேகமுதலானவைகள்செய்துபூசை செய்வதற்கிசைந்த மலையின்கீழ் ஒரு இலிங்கவடிவமாய் எழுந்தரு ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள்-எ-று. ௮௧

அன்னதனாலிருகருந்தீர் காரியத்தி லருள்கவென் றசலம் புக்கார், எதிர்வரும் புகழுடையகோர் சிவலிங்கவடிவத்தைக்கண் டி றைஞ்சியேத்தி, மன்னியபூமழைபொழிந்து பரவசமாய் மகிழ்ந்தா டி மனக்களித், தன்னிகரில் கோபுரமு மண்டபமுமணிமதிலுஞ் சமைப்பித்தார்கள்.

இ-ள். அப்படியே இலிங்கமாகிறேனென்று பக்தியுடன் பூசியுங்க ளென்றந்த மலையிலுள்ளே மறைவுகோலஞ் செய்தார் எந்தத் தேச மும் புகழும்படி அவ்விடத்தில் ஒரு இலிங்கந்தோன்றிற்று அதை க்கண்டு வணங்கித் தோத்திரஞ்செய்து புஷ்பமாரியும் பொழிந்து பரவசமாய்ச் சந்தோஷமடைந்து ஆனந்தக்கூத்தாடி மனனின்ற தேவதச்சனைக்கூப்பிட்டு ஒப்பில்லாத கோபுரங்களும் மண்டபங்க ளும் அழகுள்ள மதிலுஞ் செய்வித்தார்கள்-எ-று. (௮௪)

அழியாத வளாகமுந் தீர்த்தமுந்தூற்றுபதங்கண்டமுத செ ய்தார், வழியாகீர்ச் சுரநதியுஞ் சுரதருவுங் கேணிகளு மாவுமான, மொழியாம விமையவரு மிரவினிரு மனிதரென வுருவங்கொண்டா ர், விழியால விடமனைய கணிகையராய் அரம்பையரு மேவினரே

இ-ள். எப்பொழுது மழியாத வளப்பமுள்ள நகரமும் மூன்று
ற்றறுபது வகையாகிய தீர்த்தமும் உண்டானது கண்டழகு செய்
தார் வழியாத சலத்தையுடைய ஆகாயகங்கையும்கற்பகவிருட்சமு
ங் கிணறுகளும் மரங்களாயின நீங்காமல தேவர்களும் ரிஷிகளும்
மனிதவடிவமகொண்டு பிறந்தார்கள். விஷம் போன்ற கண்களையு
டைய தாசிகளாக அரமபாஸ்திரீகள் பிறந்தார்கள-எ-று. (௮௫)

காலையிலேமுழுகிமரவுரியுடுத்துச் சிவந்தசடைகட்டிநீறு, மே
லணிந்து கண்டிகைபூண் டனமுதலாயஞ்சனத்தான் மிகுத்தசார்த
ன். மாலையினுற் சிவபூசை புரிந்தண்ணு மலைவதனைவலங்கொண்டே
த்தி, ஏலவொரு பதினுலா யிரவாண்டு கழிந்ததற்பின் னிறைவரா
ஞர்.

இ-ள். பிரமவிஷ்ணுக்கள் இருவரும் காலையில்முழுகி மரவுரிதரி
த்துக்கொண்டு சிவந்தசடைகட்டி விபூதியைதேகமெல்லாந்தரித்து
ருத்திராட்சமாலை பூண்டுகொண்டு அன்னமுதலாகியதிருமஞ்சனத்
தினுலும் மாலையினுலும் சிவபூசைசெய்து திருவண்ணுமலையைப்பி
ரதக்ஷணஞ்செய்து வணங்கிப் பின்பு பதினுலாயிரம் வருஷமானு
பின்பு சுவாமியினிடத்தில் விடைபெற்றுககொண்டு தங்கள் பதிக்
குப்போய் தங்களதிகாரத்தைப் பெற்றுக் கொண்டார்கள்-எ-று.

ஆசைதருந்திருவருணை சமைத்ததற்பின் கயிலைமலை யாசை
போயிற், றீசனுக்குய கனகமலைபொதுவாயின் வெள்ளிமலை யினிமே
லென்றாங், காசிமுதலெனித் துறைக்குஞ் சிறப்புடைய தலமேழுங்
கனகாடு, மாசகன்ற கதிர்தோன்றவொளியிழந்த வுடுக்கணமே போ
ல் வளமைதேய்ந்த.

இ-ள். சுவாமிக்கு ஆசைகொள்ளும்படி திருவருணை சலத்தல
ம் அமைந்தபிறகு கயிலைமலையிலிருக்கும் ஆசைவெறுத்தது இந்த
மலையே பொன்னுருவங் கொள்ளுமாயின் வெள்ளியலையின் மேலா
சையுண்டாகுமா காசிமுதலாகச சொல்லப்பட்ட எழுதலங்களும்
தேவலோகமும் குற்றம்நீங்கிய சூரியனுதயமாகப் பிரகாசமழிந்த
நட்சத்திரங்கள்போல ஒளிமழுங்கிப்போயின-எ-று- (௮௭)

அரியயனுமைளவிநிதற் கரியமலை நிலையுரைக்க வரிதென்றாலுந்
தெரியவுரைக்கறிந்தபடி சிறிதுரைத்தேனினியுரைக்குந்திறமே தென்

ளான், வரிசைபெறு மார்க்கண்ட முனிமகிழ்ந்து பணிந்துமையாள் மலரிற்றோன்றி, உறியசிவனிடங்கலந்த கதையுமுரைத்தருளுகென உரைப்பதானான்.

இ-ள். நந்திதேவர் மார்க்கண்டேயரிஷியைப்பார்த்து விஷ்ணுவும் பிரமனும் அதற்கரிதாகிய திருமலையின் சிறப்பைஎன்னாற்சொல்லுதற்கரிதென்றாலும் எனக்குத்தெரிந்த அளவில் சிறிது உமக்குத்தெரியும்படிச் சொன்னேன். இனிச் சொல்லவேண்டியதென்னவென்றார் வரிசைபெற்ற மார்க்கண்டேயரிஷிசர்தோஷித்து வணங்கிச் சுவாமி பார்வதியார் இமோற்பருவதத்தில்அவதாரஞ் செய்ததும் சுவாமியைநோக்கித் தவஞ்செய்து அவரிடப்பாகம் பெற்றதுவுஞ் சொல்ல வேண்டுமென்று கேட்கச் சொல்லத் தொடங்கினார்.

இரண்டாவது

திருமலைச்சருக்கம்-முற்றிற்று.

ஆக திருவிருத்தம் கூச.





உ

சிவமயம்.

## மூன்றாவது பார்வதியார்

# திருவவதாரச்சருக்கம்.

அறுசீரடி ஆசிரியவிருத்தம்.

பன்னிருவர் பதினொருவரெழுவரெண்யர் திசைக்கிறைவர் பணி நாட்டுள்ளோர், கிம்புருடர் சித்தரியக்கர் இமையவர் முனிவர் கிளை யிலுள்ளோர், மன்னுமல ரயன் திருமாலகலமடைந்த மலர் மடந்தை மகிழ்ந்துசூழ, முன்னவனை யிகழ்ந்து தக்கன் முடியாத பெரு வேள்வி முடிக்கலுற்றான்.

பூருவகதை.

மார்க்கண்டேயரே முன்னாளிலே பிரமனிடத்திற் பிறந்த தக்கனென்பவன் அரியதவஞ் செய்து உயர்ந்த வரங்களைப் பெற்றுக்கொண்டு மிகவும் பிரசித்தனாக வாழுகிற காலத்தில் பார்வதியார் தன்னிடத்திற் பிறக்க அந்த அம்மையைச் சுவாமிக்குத் திருக்கலியாணஞ் செய்துக்கொடுத்து மாமனாகும்படி வரம்பெற்று அந்தப்படி செய்தபின்பு ஒருநாள் இவன் சுவாமியினுடைய சபைக்குப் போயினான். அவ்விடத்தில் சுவாமி தனக்குளெழுந்து மரியாதைசெய்யவில்லை என்கிறகோபங்கொண்டு தன்னுடைய வீட்டுக்குவந்து சுவாமியைப்பார்க்கிலும் உயர்வையடைய வேண்டுமென்று.

இ-ள். பன்னிரண்டு சூரியர்கள் பதினொரு ருத்திரர்கள் சத்தரிஷிகள் அஷ்டதிக்குப் பாலகர் நாகலோகத்தார் கின்னரர் கிம்புருடர் சித்தர் யட்சர் தேவர்கள் முனிவர்கள் நிலைபெற்றபிரமன் விஷ்ணு சரஸ்பதி இலட்சுமி மிகவுஞ் சந்தோஷம் அடைந்து சுற்றிக் கொள்ள எல்லோருக்கும் முதல்வராகிய பரமசிவனைநிந்தித்துமுடியக்கூடாத பெரியயாகஞ்செய்யத் தொடங்கினான்-எ-று. (க)

எந்தைசெயு மகப்பார்க்க விடையருளென் றிறைக் கிறைவியி
யசைத்தா வித்தைப், புத்தியிலா திசைந்தனனென் றுரைத்தனனீ
தனைவேண்டிப் பொறுப்பாயென்று, வந்தனைஞ்செய் தனளவனை
நகைபுரிந்து கடிதுசென்று வருவாயென்றான், கந்தமலர்க்குழலாளுந்
தந்தைமகந்தொடங்குவன தலத்தைச்சார்ந்தாள்.

இ-ள். பார்வதிதேவி தகப்பனாகிய தக்கன் யாகம் பண்ணுவதைக்கேட்டு சுவாமி என்னுடைய தகப்பன்செய்கிற வேள்வியைப் பார்த்து வருவதற்கு உத்தரவுகொடுமென்று கேட்க அதற்குசுவாமி உன் தகப்பன் புத்தியில்லாமல் என்னை மிகவும் நிந்தித்திருக்கின்றமையால் நீபோகலாகாதென்று சொல்லஅதைக்கேட்டு சுவாமியென் தகப்பன் செய்த இந்தக் குற்றத்தை என்னை வேண்டிப் பொருக்கவேண்டுமென்று நமஸ்காரஞ் செய்தபோது அந்த அம்மையைப் பார்த்து நகைத்து நல்லது நீபோய்ச் சீக்கிரத்தில்வந்து சேரென்று சொல்லப்பார்வதியும் தகப்பன் யாகஞ்செய்கிற இடத்துக்குப்போனாள்-எ-று. (உ)

தாயாரைக்கண்டடி தொழுதா ளவளழுதா திருந்தனள் தன்
றந்தையானை, தீயவனைப் பணிந்தனளங் கவனுமிகழ்ந் தானிசைந்த
செயலைநோக்கிப், பேயிருக்குஞ் சுடலையெனப் பிறைபிறந்து விடுக
வுயவன் பெருவாழ்வென்று, வாய்பிறக்குங் கொடுமைசொலி மறைந்
தனளச் செயலறிந்தான் மங்கைபாகன்.

இ-ள். பார்வதிதக்கன் யாகசாலைக்குப்போய் தன்னுடைய தாயாரைவணங்கினாள், அவள் இந்த அம்மையைதழுவி உபசாரஞ்சொல்லாமலிருந்தார்கள் அதன் பின்புதீமைபொருந்திய தகப்பனை நமஸ்காரஞ்செய்ய அவனும் நிந்தித்தான் அதைப்பார்த்துக்கோபங்கொண்டு உன்னுடைய யாகசாலை வாழ்வுபோயிருந்து விளையாடுஞ் சுடலையாய்ப் போகக்கடவதென்று சபித்து இப்பாவி வளர்த்ததேகம் இருக்கக்கூடாதென்று யோகத்தினாலே தன்னுடைய தேகத்தைவிட்டனள் அச்செய்கை யுணர்ந்தார் பரமசிவன்-எ-று. (ங)

கலிவிருத்தம்.

உண்ணிலாவுவந் திசொல்ல வொருவனாகியுய்யுமோ
தண்ணிலாமுடிக்குநின்ற தழலைதொண்டுறைக்கையா
வண்ணல்வெம்பிமுனிவுகொண்ட மாவினெற்றிவிழிதனில்
விண்ணடுங்கமண்ணடுங்க வீரன்வந்துதோன்றினன்.

இ-ள். எப்பொழுதுங் கூடவிருந்த பார்வதிதேகத்தைவிட்டவுடனே ஒன்றியாகியிருந்த பரமசிவனுடைய உயிர் சகுக்கியத்தை யடையுமோ எளிர்த்தசந்திரன் தம்முடைய சிரத்திலேதானேயிருந்து மெய்யைவாரிச் சொரிகின்றபடியினாலே அதிக தாபமடைந்து இந்தத்தக்கனாகிய பாவியினாலல்லவோ இவ்வருத்தம் உண்டாயிற்றென்று கோபித்துக் கொண்டபோது அவருடைய நெற்றிக்கண்ணிலிருந்து வீரபத்திரர் ஆகாயவுலகமும் பூமியுநடுங்கும்படி தோன்றினர்-எ-று. (௬)

மஞ்சுபற்றியுடல்கறுத்து மணிமயூரமுழையுடன்
சஞ்சரிக்குமேருவென்ன விடமுழுமுறைகுதழலின்வாய்
நஞ்சுகொப்புளிக்கநெற்றி நயனமுங்கொதிக்கவே
லஞ்சலிந்தகையொடுங்க ஊரயன்வந்துதோன்றினன்.

இ-ள். தேகத்தைப் பார்க்குமிடம் உடம்புகறுத்தமேகத்தின் நிறம்போன்ற மரகதரத்தினமிழைத்தகிரீடத்துடன் சஞ்சரிக்கின்றமேருவுக்கு ஒப்பாகி இடிபோல முழங்குகின்ற நெருப்பாகிய சொல்லையுடையவராய் நஞ்சைக் கொப்பளிக்க நெற்றிக்கண் கொதிக்கச் சிரத்தின்மேல்வைத்துக் கூப்பியகைகளோடு எமது ஐயராகிய வீரபத்திரர் வந்துதோன்றினர்-எ-று. (௭)

ஒழித்தசிங்கவுரிபுயத்தி னுதரீயமாகவே
கழித்தெரிந்தவல்லியத்தி னதளிடைத்தகச்சையாக
விழித்திமைக்குமுன்னம் விண்ணின் வெளியடைத்தவீரனா
யழைத்ததென்னவென்னவென் றுவையன்வந்துதோன்றினன்

இ-ள். இரணியனைக்கொன்ற நரசிங்கத்தினுடையதோல் உத்தரீயமாகவும் தாருகாவனத்துரிஷிகளால் விடப்பட்டுக் கவரியபவே மரணமடைந்த புலியின்தோல் இடுப்புக் கச்சையாகவும் விழித்து இமைப்பதற்கு முன்னே ஆகாயமெல்லாநிறைந்த தேகத்துடனே என்னையழைத்தது என்ன காரணம் என்னகாரணமென்று வீரபத்திரர்வந்தார்-எ-று. (௮)

முக்கணத்தனீர்கொடாது கனல்கொடுக்குமுக்கணைத்
தக்கன்வேள்வியைத்தகர்த்து மீளுகெனவுசாற்றினு
னக்கணத்தினுக்கைகொபாங்கி யடிவணங்கியேகினுன
பக்கநின்றபூதனுதர் பாரிடங்கள்சூழவே.

இ-ள். என்னையழைத்த காரியம் என்னவென்றுகேட்க வீரபத்திரரைப்பார்த்து மூன்றுகண்களையுடைய பரமசிவன்சலத்தைப் பொழியாமல் நெருப்புகளைக் கக்குமேகம் போறபோயத் தக்கனுடைய யாகத்தை யழித்துவாவென றருளிச்செய்ய அக்கணமே வீரபத்திரர் அதிக சந்தோஷமடைந்து சுவாமியினது திருவடியைத் தொழுது பக்கத்தில நின்ற பூத கூட்டங்களுமபேய்களுஞ் சூழப் போனுர்-எ-று.

கஞ்சகொப்புளிக்குநாக நாலிரண்டுமாலையா
யஞ்சிரட்டிபூதநீல வாலவட்டம்வீசவே
குஞ்சரங்களெட்டையுங் குதம்பையாகவிட்டவெண்
கஞ்சுகத்தர்நால்வர் தூய கவரிநின்றுவீசவே.

இ-ள். விஷம் கக்குகின்ற அஷ்டமாநாகங்களை மாலையாகத்தரித்துக்கொண்டு பத்துபூதங்கள் நீலவர்ணமான ஆலவட்டம் வீசிக்கொண்டுவரவும் திக்கிலிருக்கிற யானைகளெட்டையுங் காதிலேகுண்டலமாகத் தரித்துக்கொண்டு வெள்ளைச்சட்டையணிந்த நால்வர் பரிசுத்தமாகிய சாமரம் வீசவும் புறப்பட்டார் வீரபத்திரர்-எ-று.

திசையிருந்தவுகரவொர்மை விண்ணைபிரிந்துதீர்த்திடும
பேயிரண்டு நூறுபூத காகளம்பிடிக்கவே
வரயிரண்டுபோலுமாலை மதியிரண்டுபூதமோ
ராயிரங்கவிக்கமுத்தி னுமதிரங்களே.

இ-ள். வடவாமுகாக்கினி குடிகொண்டிருந்த வயிற்றினையுடைய பசியைப் போக்கக்களைப் பிழிந்துகுடித்து ஆற்றிக் கொள்ளுகின்ற இரண்டாயிரம் பேய்கள் எக்காளமபிடிக்கவும் சந்திரனை இரண்டாகப் பிளந்து இரண்டுவகையிலும் வைத்ததுபோலுமிருக்கும ஆயிரம பூதங்கள் முத்துக்குடைகள் பிடிக்கவும் புறப்பட்டார்-எ-று.

மாயமாயர்தந்துசங்கு கோடிகோடிமறுகவே
தீயிலைவாயனார்திதந்த சிங்கநாதமூதவே
சாயுமெண்ணில்காளமேதெழ தந்தகொம்பிசைக்கவே
யாயிரங்களிறமெருத் தனைந்ததேர்மேலேறினுன்.

இ-ள். இறந்திறந்துபிறக்கின்ற அநேககோடிவிஷ்ணுக்களுடையகையிலிருந்த சங்குகளை அநேகபூதங்கள் வாயிலவைத்து ஊதிவரவும் இறந்த அக்கினிபகவான்வாயுபகவானென்றுகின்றஆட்டுக்கடா

களிமா [illegible] பிடிகளையில்லைத்து அனேக
பூதங்களுக்கும் இர[illegible]மாரச்சகேறிய எருமைக்க
டாக்களுடைய கொம்புகளையும்பிடுங்குத்து அனேகபூதங்களு
க்கும் ஆயிரம் யானைகள்கட்டி யிழுக்கிற தேரிலேறினார் வீரப
த்திரர்-எ-று. கo

இலக்கணங்களாகியான சிலகணங்கடேரதா
யிலவுகின்றசிலகணங்க ளோடுகின்றவாசியாய்
பலவுகொண்டசிலகணங்கள் புனிதர்தேவராயின
வலகைதாமுமளவிலா தனந்தவேடமானதே.

இ-ள், அப்படிவீரபத்திரர் தேரி லேறினபோது சில பூதங்க ளியானைரூபங்கொண்ட[illegible]பூதங்கள் தேரினுருவங்கொண்ட ன, சிலபூதங்கள் குதிரை[illegible]ன, சிலபூதங்கள மனிதரும் தேவ ருமாயின அளவில்லாதபேய்க ளனேகரூபங்கொண்டு புறப்பட் டன-எ-று. கக

வீரையேழரங்கவுண்டும் விடாய்கொடாதபிணுமே
பூரவேழுபாருமுண்டு பசிகொடாதுபடருமே
கூர்வேலெறிந்துகால னுயிர்கொள்ளைகொள்ளுமே
பேரைமேவிருப்புமுன னடந்துசென்றதுகமே

இ-ள். வீரபத்திரர்புறப்பட்டவுடனே யுத்தஞ்செய்ய வருமு பி அவருக்கு முன்னேநடந்தபூதங்கள் ஏழுசமுத்திரத்து நீரட் ங்கலும் குடித்தாலும் விடாய்தீராமல் இரும்புப்பாரமாகிய எ ழுலக்கத்தையுஞ்சாப்பிட்டும் பசிபோகாமல் அலைந்துகொண்டி ருக்கும் கூர்மைபொருந்திய வேலாயுதத்தை எறிந்து எமனு டைய நாட்டைக் கொள்ளைகொள்ளும் இப்படிப்பட்டவலிமை யுள்ளன.எ-று. கஉ

கொண்டவேலையுஞ்சிவந்த குருசிமீதுசுற்றுமே
பண்டரீகாண்டமும புகைகொளுத்துமீளுமே
பெண்டிசாமுகத்தைநாடி யாகசாலைதேடுமே
சண்டவாயுவென்னவங்கை தட்டியோடுபூதமே.

இ-ள். ஏழுமேகங்களையும்பிடித்துச் சிவந்த தலைமயிரிலே சு ற்றுக்கட்டிக்கொள்ளும், அநேகபிரமாண்டங்களையும் புகை யு ண்டாகநெருப்பினாலேகொளுத்தும் எட்டுதிக்குங்கடி யாக சாலையெங்கேயென்றுதேடும், பிரசண்டவாயுபோலக் கைகளை க்கொண்டுவீரபத்திரருக்குமுன்னேயோடுகின்ற பூதங்கள்.எ-று.கங

வெள்ளவாழிமத்துடுக்கர்ந்து வீறுகின்றசிலகணஞ்
சுள்ளவீதிபுவனமுற்றுஞ் சுறவுகின்றசிலகணஞ்

தன்னுமின்றபேர்களென்று சாய்க்கின்றனகைசெய்யும்
டன்னிகொள்ளுமுடனெழுந்து பரிவுகொண்டுபோமே.

இ-ள். சிலபூதங்கள் வெள்ளமாகியசமுத்திரம்போன்றுதிருத் தமனைவைப்பானஞ்செய்து அதன்விருப்பு மேலிட்டுச்சண்டைக்குளெழுந்தன சிலபூதங்கள் நம்முடைய சுவாமியைத் தன்னுகிறவர்கள்யாரென்றுகேட்க அவர்களைக் கொள்ளுதற்காக கினறுவிரகைகொள்ளும், சில்பூதங்கள்நித்திரைசெய்யும். சிலபூதங்கள் உடனேயெழுந்து அன்புகொண்டு சிவனைக்குறித்துப்பாடும்-என-று. ௧௪

வெதிர்சிலம்புமுரசுசங்கம் விருதுபம்பையதிரவே
புதியகண்டைமணிதவண்டை புரிமதங்கமறுகின்
கதிகடந்துயாகசாலை கண்டுபூதகணமெலா
மதிதிமைந்தானபேர்களையும்வாரிவீசினர்

இ-ள், வீரபத்திரர் புறப்பட்டவுடனேபுள்ளாங்குழல் சிலம்பு முரசுசங்கங்கள் விருதாகிய உடுக்கைமுதலான வாத்தியமுழங்கவும்பெரியமணி தவண்டைமிருதங்கஞ்சத்திக்கவும் வழிமுழுதும்போய்த் தக்கனுடைய யாகசாலையைக்கண்டு எல்லாபூதக்கூட்டங்களும் அதிதியினுடை பிள்ளைகளாகிய சகலதேவர்களையும், தூக்கிவாரிவீசின. ௧௫

காரிலேரிமையிலேறி கடாவிலேறியலகைமே
லேரிமேறிமகரமேறி யிரலையேறியலகையாம்
பாரிலேறிமானமேறி பசுவிலேறியெண்மருத்
தேரிலேறிவந்தவீரர் சேனைமாளமோதினர்.

இ-ள். மேகவாகனனாகிய தேவேந்திரனும் ஆட்டுக் கடாவிலேறுகின்ற அக்கினியும் எருமைக்கடா வாகனனாகிய யமனும் பேய்வாகனனாகிய நிருதியும் மகரவாகனனாகிய வருணனும்மான் வாகனனாகியவாயுபகவானும அளகாபுரியையாண்டு விமானத்திலேறுகின்ற குபேரனும் எருதுவாகனனாகிய ஈசானியனுமாகிய எட்டுப்பேர்களுந்தேரிலேறி எதிர்த்துக்கொண்டுவந்த வீரபத்திருடைய பூதகணங்களையெதிர்த்தார்கள்-எ-று. ௧௬

வாளிசூலம்வேலுலக்கை வச்சிரங்கணிச்சிவாள்
மீளிசேனைகாவலாளர் விழுமாறுவீசினர்
கூளிநாலிரண்டுசென்று கொடியவெண்மர்பரியெலா
மாளியோடெடுத்தெறிந்த * அம்பனைக்குநிகரவே.

---

* அம்மனைமகளிராடுமோர்விளையாட்டு.

இ-ள். திக்குப்பாலகர் எட்டுப்பேரும் பாசாங்குசாயுதம்வே ல்உலக்கை வச்சிராயுதம் மழு சத்தி இவைகளை வீரபத்திரரு டையசேனைத்தலைவர்கள்மேற் பிரயோகஞ்செய்தார்கள் அ ப்போது எட்டுப்பூதங்கள் புறப்பட்டுத் திக்குப்பாலகர் எட்டுப் பேரையும் அவர்களுடைய வாகனங்க ளெட்டையும் அம்மனைக் குச்சமானமாக எடுத்தெறிந்தன. ௧௭

அலகைகாலிரண்டுவீழ வமர்செய்பூதமோடவே
மலைவுகண்டுதிக்குபாலர் வாகையாலைசூடினார்
கலிதலகணபிரான்வாளி வாளிரண்டையேவினா
னுலகபாலருடல்புகுந் துளமுழன்றுலாயவே,

இ-ள். முன்னே எட்டுப்பூதங்களாய் எறிபட்டுவிழுந்த திக் குப்பாலகரெட்டுப்பேரும் அந்தஎட்டுப்பூதங்களுங்கீழேவிழவு ம்மற்றைய பூதங்களெல்லாம் ஓடிப்போகவும் யுத்தஞ்செய்து வெற்றிமாலைசூடிக்கொண்டார்கள் அதுகண்டுவீரபத்திரர் எட் டுப்பாணத்தைவிட்டார் அவைகளபோய் எட்டுப்பேருடலைத் தொளைத்து அவ்வுடல்களுள் இருக்கிற அமிர்தத்தைப்புசித்து சஞ்சரித்தன. எ-று. ௧௮

மருங்கழிந்துகுயிலதாகி வச்சிரத்தோனேகினா
னொருங்கியீசனளகையாளி நிருதிவாயுவருணனுஞ்
சுருங்கினார்கடாவிலேறி துஞ்சினைமுற்பிரான்
பெருங்கைபேழுமீசனன்பர் பிறவிபோலறுத்தனன்

இ-ள். தேவேந்திரன் தன்வாகனத்தைவிட்டுக் குயில்வடிவ ங்கொண்டு ஓடினான், ஈசானன் குபேரன் நிருதிவாயு வருணன் இவர்கள்தோற்றுவெட்கத்தை யடைந்தார்கள், எமன் இறந் தான், அக்கினிபகவானுடைய ஏழுகைகளையுஞ்சுவாமி அன்பரு டையபாவங்களை அறுப்பதுபோல அறுத்துத்தள்ளினார் வீரப த்திரர். எ-று. ௧௯

கச்சமற்றவச்சமோடு கலையதானவெச்சனு
ரெச்சனாகவுயிரைவாரி யுடலுரிதெரிந்தனன்
பச்சைவல்லியன்னையர்ன் பன்னிநாதிரண்டையு
வச்சுரத்திலவிந்துமாமன்முன்புசென்றனன்.

இ-ள். பயங்கொண்டயாககர்த்தாவாகிய கலைக்கோட்டுமகாரி ஷிபிராமணனுந்தேகமும்வேறாகக்கொண்டு உடலைஉரித்து எறிந் தார் பார்வதியின்தாயாகியதக்கனுடைய பெண்சாதியின் இரண் டுதோளையும் அறுத்துத்தன்மாமனாகியதக்கனிடத்திற்குப்போ னார் வீரபத்திரர். ௨௰

மிக்கருந்துசோமபானம வீரபானமாகவே
யொக்கநின்றயாகதண்ட மென்னகொண்டுகுன்றுபோற்
றக்கனுரெரித்தபோது தலையரிந்துதள்ளினு
னக்கணத்திலொன்றுசென் றரைக்கணத்தயின்றதே

இ-ள் தேவர்கள்கூடிச்சோமபானம் செய்வதை நீக்கித் தனக்குவீரமேபானமாகும்படி யாகசாலையிற்புகுந்து யாகத்தம்பத்தைப்பிடுங்கிக்கொண்டு எதிர்த்த தக்கனுடையதலையை மலைபோல்கீழேவிழ அறுத்துத்தள்ளினார், அப்போது அந்தப்பூதகணங்களிலொன்று அரைநொடியிலேதானே அந்த தக்கன்தலையைத் தின்றுவிட்டது, ௨௧

பசுக்களேறுருத்திரப் பசுக்களாவிதன்னையும்
வசுக்களாவிதன்னையு மறுத்ததேவராவியும்
முசுக்கள்போலொளித்திருந்த முனிவராவிதன்னையு
மசிக்கவீரன்விட்டசூல மளவியளவியுண்டதே

இ-ள். மாடுகளிலேறுகின்றபசுப்பேர்பெற்ற உருத்திரகூட்டங்களின்பிராணனையும் அஷ்டவசுக்களுயிரையும் மற்றுமுள்ள தேவர்களுயிரையும் குரங்குகள்போலொளித்துப்பதுங்கியிருந்த முனிவருடையபிராணனையும் பரியாசஞ்செய்ய வீரபத்திரர்விட்டசூலாயுதம் எடுத்து எடுத்துத்தின்றுவிட்டது-எ-று. ௨௨

விழியினோடருக்கர்பல்லை வேரற்றுவிழத்தள்ளினு
னெழில்படைத்ததுண்டரு மிரண்டுதுண்டமாக்கினான்
கழலமைத்தவன்குதிக்க வயிர்தழுண்டகலைநிலா
வழலவிக்குமாறுதாளி லமபுவெண்ணெயொத்ததே.

இ-ள் *சூரியன்பற்களுங்கண்ணும்தெரித்துக்கீழேவிழ அடித்துச்சரசுவதியைப்பிடித்து இரண்டாகநாக்கரிந்தார், இலக்குமியைமூக்கரிந்தார், வீரகண்டாமணியைத்தரித்த காலினாலே சந்திரனைமிதிக்க அவன் நசுங்கித்தக்கனுடைய யாகசாலைநெருப்பை மிதித்ததனால் அந்தவெப்பத்தீர அப்பிய வெண்ணெய்போலானான்.எ-று, ௨௩

காயமண்ணில்விட்டதேவர் கரியமேனியலகையாய்
மாயமாகிமுன்னையாகம் வந்துதோன்றியமர்செயத்
தூயசேனையாயபேர் தொடர்ந்துசாகவமர்செய்தார்
பேயதாயிருக்கவும் பிணக்ககன்றதில்லையே.

---

* தின்றுவிட்ட தென்றது, இங்ஙனம் பிளந்து கொன்றது, என்று கூட்டுக.

இ-ள். பூதகணங்களாலே இறந்துபோனதேவர்கள் கரியதேகத்தையுடையபசாசாகி மறுபடியும் முன்யாகத்திலே மாயமாகத்தோன்றி எழுந்து சண்டைசெய்ய அவர்களை வீரபத்திரதேவனை அடித்துக்கொன்றார்கள் ஆகையால்பேயாய்ப்போயுந் துக்கநீங்கவில்லை. உச

விதிபுனைந்தவோமகுண்டம் வேறுபட்டதென்னினும்
புதியசோறுமெனாளினுஞ்சி பொரியும்வாய்புகட்டிமுன்
குதிகொணைக்கடைவெடுத்து தொழுகுபூதர்கூளிதன
னுதரகுண்டமனலெழுந்த வோமகுண்டமானதே.

இ-ள் பிரமனாலே விதிக்கப்பட்ட யாகசாலை நாசத்தைப்படைந்தாலும் அதற்குயோகமாகவைத்திருந்தசோறும்நெல்லும்பொரியும் ஒருபூதம் வாயிறகொட்டிக்கொண்டு தெய்க்குண்டலையெடுத்துப்படமடவென்று விட்டுக்கொள்ளும்போது அதனுடைய ஓமகுண்டமாகவும் உதராக்கினியே நெருப்பாகவு மிருந்தது எ-று. உரு

அட்டதிக்குப்பாலரும் வசுக்களுங்குருக்களும்
முட்டரானமுப்பதிற்று மூன்றுகோடிதேவரும்
பட்டபோதுவவர்தம்மெய்கள் பழுதுறாதுதன்னுளே
இட்டபூதவுதரமுன்னை யாகசாலையொத்ததே.

இ-ள். அஷ்டதிக்குப்பாலகரும் அஷ்டவசுக்களும் தலைவராகவுந்தகுருக்களும் முட்டுப்பட்டவராகிய முப்பத்துமுக்கோடிதேவர்களும் இறந்தபோது அவர்கள்தேகம் வீணாய்ப்போகாமல வீரபத்திரருக்குமுன்னே அவருடையசேனைகள் சாப்பிட்டபடியினாலே அந்தப்பூதகணங்களுடைய வயிறுயாகசாலையையொத்தது எ-று. உசு

கற்பகாலமுங்கெடாத கணமிதித்தலமார்ந்த
மற்பமாமுடம்பிரத்த யாய்விகாரமொத்ததால்
பற்பலவியக்கர்சித்தர் பண்டிசிறுகுடல்களாற்றி
சர்ப்பயாகமொத்ததென்று தக்கனசெய்தயாகமே

இ-ள். கற்பகாலத்திலும் அழிவில்லாத பூதகணங்கள் மிதித்தபடியினாலே தேவர்களை அற்புதமாகிய உடம்பினின்றும் பீறிட்ட உதிரம்யாகத்துக்கு நெய்யெடுத்துச்சொரிந்து போலிருந்தது பலபலயட்சா சித்தர்களுடைய வயிறுபிதுங்கப்பட்டு அவர்களுடைய குடல்கொடிகொடியாகச் சிதறிக்கிடந்து சர்ப்பயாகஞ்செய்தலையொத்தது அன்று தக்கன்செய்தவேள்வி. உஎ

சிறந்ததிக்குப்பாலராதி தேவர்சித்தர்முதலினோ
ரிறந்திறந்துபோகவேதனிரையிலேயெபுறநின்

பிறந்துவந்துவந்துபோர் பெருக்கினாற்பிறந்தபேர்
மறந்துவிழவீரன்போல் மலரினானைமண்டினான்.

இ-ள். சிறப்புபொருந்திய திக்குப்பாலகர் முதலாகியதேவர்கள்சித்தர்கள் இறக்கப் பிரமன்கொடிப்பொழுதிலேயவரைப்படைத்துக் கொண்டேவந்தார் அவர்கள்மறுபடியும யுத்தஞ்செய்தார்கள் அவர்களினையும் பிறக்காமலிருக்கும்படி பிரமனையடுத்து யுத்தஞ்செய்யத்தொடங்கினார் வீரபத்திரர்-எ-று, உஅ

செத்ததேவர்மீளவுஞ் செயப்படப்படைத்திடும்
கைத்தலங்கள்வீழவாறு கமலனானைமோதினான்
முத்தலைக்கொளப்படையெடுத்து* முண்டகத்தர்சிந்தைசேர்
பத்துமைந்தர்சென்னியும் படுக்களேபரப்பினான்,

இ-ள், இறந்துபோனதேவர்கள் மறுபடியுஞ்சண்டைசெய்யப்படைக்கும் பிரமனுடையகைகளை அறுத்துத்தள்ளினார் மூன்று தலையையுடைய ஆயுதத்தினாலே அவர்மனதிலஉண்டாகிய பத்துப்பிரமருடையதலைகளையுமறுத்திப் பூமியில் விழத்தள்ளினார் வீரபத்திரர்-எ-று, உகூ

அண்டகூடமுண்டுமிழ்ந்த வாதிமாயனமர்செயத்
துண்டமேருவேவிளங்கு கருடன்மீது தோன்றியே
விண்டவாளிவருடசாக வீரன்மார்பிலவீசினான்
கண்டதுண்டமாகவீரன் கையிலவாளியேவினான்

இ-ள், அண்டங்களைவிழுங்கி உமிழ்ந்த முதல்வராகிய விஷ்ணுசண்டைசெய்யமூக்கையுடைய மேருகிரிகாகவிளங்கிய கருடன்மேல்ஏறிக்கொண்டு அனேகம்பாணவருஷைகள் வீரபத்திரர்மார்பில்படும்படியாகப்பொழிந்தார் அப்படிப்பட்ட பாணங்களையெல்லாம் துண்டமாகத்தனகைப்பாணத்திலே அறுத்தெறிந்தார் வீரபத்திரர், உஎ

வையமுண்டமாலவெகுண்டு வாளிதீர்ந்துவிசிலை
யெனுங்கோர்வாளியால லறுத்தெறிந்தோரம்பினால
பையராவருந்தியாவி டருகினனைமெய்நருகினான்
கையிலாழியேவினான் கனிந்ததண்ணல்காலிலே,

இ-ள், விஷ்ணு வில்யுத்தம்பண்ணுகிறதற்குச் சக்தியில்லாமல்கோபங்கொண்டு ஒருசக்கிரத்தை எடுத்துச்சுழற்றிவீசினார், வீரபத்திரர் அச்சக்கரத்தை ஒருபாணத்தைவிட்டறுத்து ஒருபாணத்தி

---

* முத்தலைக்கொள் படை சூலாயுதம்,

ணாலே பாம்பைக்கொல்லுகின்ற கருடனைக் கொன்றுவிட்டார் அதுகண்டு துக்கத்தினாலே உடம்புகறுப்பாய்க் கையிலிருக்கிற சக்கரத்தை வீரபத்திரர்மேல பிரயோகஞ்செய்தார் அதுஞ்சுவந்து சுவாமி காலின்மேல்விழுந்து பணிந்தது-எ-று ௩௧

எங்கைமுன்னளித்தவாளி யெங்கணததாளிவீழ்ந்தெ
யர்ந்தமெய்யொழிந்துபன்றி யரியின்வேடமாகியே
வந்துவந்துபோர்தொடங்கு வாளின்வேலின்மல்கிறு
னுந்திவேறோர்சேவதாகி வாரிமீதொளித்தனன,

இ-ள், முற்காலத்திலே விஷ்ணு ஆயிரம் தாமரை மலரைக் கொண்டு பரமசிவனைப்பூசித்து வருகிறபோது இவர்பத்தியைப் பரிசோதிக்கவேண்டி ஆயிரம்பூவிலே ஒருபூவைச் சுவாமி மறைத்துவைத்தார் விஷ்ணு பூசைசெய்து அருச்சனைபண்ணிக் கொண்டு வரும்போது ஒருபுட்பங்குறைய அதற்குப்பதிலாகத் தன்னுடைய தாமரைப்பூவொத்த கண்ணைப்பிடுங்கி அருச்சிக்கச் சுவாமிக்கு மனதில்சந்தோஷம்வந்து சக்ராயுதங்கொடுத்தார் அந்தச்சக்கிரத்தைத் தானே சுவாமிமேலேவிட அதுபயந்துகாலில்விழவே இனிமேல் இந்தரூபத்தோடேநின்றால் பிழைக்கமாட்டோமென்று அந்தஉருவத்தையொழித்துப் பன்றியாகவும் சிங்கமாகவும் ரூபமெடுத்துவந்து யுத்தஞ்செய்ய அந்தஉருவங்களை வாளாயுதத்தாலும் வேலாயுதத்தாலும்வீரபத்திரர் வென்றார் அதன்பின்புமிகவும்பயந்து மீனுருவமெடுத்துச் சமுத்திரத்திலே விழுந்து ஒளித்தார்-எ-று, ௩௨

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்,

புவியுண்டநெடுமாலும் பண்டையபடி புவியுண்டுபோனானோ தன், தவியுண்டுதலைநாலுந் தனையுண்டாரிறையவர்தந்தடியூனுண்டனர், கவியுண்ட கணங்குண்டம் பேயினிறைசசி யருந்துதனகலமேயான் தவியுண்டுமனமகிழ்ந்தங் கெய்துமுனிவரெல்லாம் மவியுண்டாரோ,

இ-ள், மண்ணையுண்ட விஷ்ணுந்தோற்று மண்ணைவாயிற்போட்டுக்கொண்டு ஒளித்துக்கொண்டார், பிரமன்தவித்து நான்கலையும் அறுபட்டிறந்தார், தேவர்களுந்தண்டத்தாலடிபட்டு இறந்தார்கள், பூதகணங்கள் இதைச்சாப்பிடுகிறதற்கு ஓமகுண்டபாத்திரத்திலே அவிர்ப்பாகஞ்சாப்பிட்டுவந்த முனிசிரேஷ்டர்கள் எல்லாரும்வீரபத்திர சுவாமியினாலிறந்தார்கள், ௩௩

இங்கிதுவாய்முடிந்ததற்பின் வீரனறைபதம்பாவி யிசைத்தானெல்லா,மங்கணனு ருனிவாறி யருள்சுரந்துமகத்திறந்தா

க்கவிபிந்து, யஞ்ஞியபதங்களெல்லாம் பயமுயப்படியுதவுந்து ம் வணங்கிப்போனார், சங்கரியை முன்பெற்றனென் பெற்றான் றனக்காட்டுத்தலைப்பெறருமனெ,

இ-ள், இவ்விடத்தில இவ்வாறு யாகசாலையோடு யாவருநாசமடைந்தபிற்பாடு வீரபத்திரர் கைலாயத்திறகுப்போய்ச் சுவாமியினுடையபாதத்திலே வணங்கி அங்கேநடந்த சமாச்சாரமெல்லாஞ்சொன்னார் அதுகேட்டருளிய பரமசிவனும் கோபமாறி இருபெபிறந்து யாகத்திலிறந்தவர்கள் அனைவரையும் பிழைப்பித்துக்கேடில்லாத அவரிடங்களையவரவர்களுக்குப்பழயபடியே அருளிச்செய்ததும் அவர்கள் சுவாமீ நாயகன் விவேகமில்லாமையினாலே செய்தகுற்றத்தைப்பார்வதியைப்பெற்ற தகப்பனுக்கு நிந்தைசெய்ததாகு அபராதமவுடையாளாமாக ஆட்டுத்தலையை அவனுடலில்வைத்துப் பொருத்தி எழுந்திருக்கும் படிசெய்தார்-எ-று, ௩௪

என்றுதனதனையிகழ்ந்தோன் புகலவியென வுலகுரைக்குமிடுகக்கணடாத, தன்னாநதனமேயாக சாதனத்தால விந்தமயனறவத்தினாலுட, முனனுகைகாகன் றனைப்பயந்தமேனையதுமுயற்சியாலு, மினனுக வவதரிதது ளமாரொலாங் கற்பகப்பூவீசினாரே.

இ-ள், எனக்குநாதராக இருக்கின்ற பரமசிவனைநிந்தித்த தக்கனுடையகுமரியென்றுபழிப்பாக உலகம்சொல்லுமே நம்மையென்றுபார்வதி அத்தக்கந்திர தன்னுடையதேசத்தை யோகாக்கினியினாலே நிவர்த்திசெய்து இமயோற்பருவதராசன் தபோமகிமையினாலும முன்னே மைநாகனென்கின்றபிள்ளையைப்பெற்ற மேனாதேவியினது தவமுயற்சியினாலும் அவர்களுக்குமாரியாக அவதாரஞ்செய்தாள தேவர்களகறபகபுட்பங்களை வருஷமாகப்பொழிந்தார்கள் எ-று, ௩௫

சித்தாந்தந்தோன்றுசத்தி சிவத்திரண்டாய் ஞானமிச்சைசெயலினமூன்று, கொததாகிக்குடிலைதரு நாதவிந்து விரண்டினுக்குநவகொழுகொம்பாகி,மூத்தாகிச் சிவனிடத்தே யுருத்திரன் மாலயன்முதலாமுனைததமூல, வித்தாகி நிறைவாளைப்பயந்தவறகுமுடிநததவமவிளமபலாமே,

இ-ள், சித்தாந்தமாகச் சொல்லப்பட்ட சிவனிடத்திலே ஒன்றுபட்டஅபின்னசத்தியாய்ப் பின்பு அச்சிவத்தில் நின்றும்பின்னசத்தியென்று வேறுபட்டுப் பின்பு ஞானசத்தி இச்சாசத்தி கிரியா சத்தியெனமூன்று வகையாகிக் குடிலையினுண்டாகிய நாதவிந்துகளுக்கு.

கொழுகொம்பாகியும் சுவாமிக்குழுத்தாகியும் பரமசிவனிடத்தில் உருத்திரன்விஷ்ணு பிரமன்முதலானவர்கள் உண்டாகிறதற்கு மூலமாகிபவித்தாகியும எங்குநிறைந்த பார்வதியைப் பெற்றவர்க்கு முடிந்த தவப்பெருமையைச் சொல்லக்கூடுமோ-எ-று. ௧௭

கலைவளரு மதிபோன்று சிவனைவெல்ல மதன்வளர்க்குங் கரும்பேபோன்றும், பகலையுந்தெளிந்துயர்ந்து பந்துகழங்கூசல் பயிலபயிறுநாளில், மலையரசனிடத்தின்மறை நாரதனொருநாளில மகிழ்வாலெய்தி, யுலகமெல்லாங்குடியிருக்குந் திருவயிறுழிலக்கணம்பார்த்துரைக்கலுற்றார்.

இ-ள். பார்வதி, இமாசல ராஜனுக்கும மேனாதேவிக்குங் குழந்தையாகி வளர்பிறைபோல நாளுக்குநாள வளர்ந்து பரமசிவனை வெல்லவிலைவேனாகிய அகங்குவளர்க்கக் கரும்பைப்போலவும் பகற்காலங்களிலேபுஷ்பம் பந்து, கழங்கு, ஊசல விளையாட்டு முதலானவைகளைச்செய்து கொண்டிருக்கிற காலத்திலே மலையரசனிடத்திலேயதுமணர்ந்த நாரதர்ஒருநாள்வந்து உலகங்களையெல்லாம் வயிற்றிலே வைத்திருந்த அம்மையுடைய இலட்சணங்களைப்பார்த்துச் சொல்லுவாராயிறு.

நெற்றியிலோர் புலத்திரயரை நேத்திரமுண்டாமொருகை நெடிய நலம், பற்றுமொரு தனமறையுமொருபாக மாகதப்போய்ப் பதனாமாகும், கற்றைநெடுங் குழாற்பசிசடையாகு மொருகைவளைகழன்றுபோகு, முற்றுவரா விவைகளென தலைபரசன் மனமுருகி யுவகையானான்.

இ-ள். பருவதராஜனே உம்முடைய குமாரத்திக்குச் சிலபொழுதிலே நெற்றியில ஒருபக்கத்தில் அரைக்கண்தோன்றும், ஒருகையிலே சூலமுண்டாகும் ஒருபக்கத்துத்தனம் மறைந்துபோகும் பாதிசடைகளாகும், ஒருகையிலே வளைகளில்லாமற்போகும், இவைகள்சம்பவிக்குமென்று நாரதர்சொல்லப் பருவதராஜன் உள்ளமுருகிச்சந்தோஷத்தையடைந்தான்-எ-று. ௧௮

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

வையநீர்க் கங்கைபாயும் பணிவரை மருங்கி லந்நாள்
துய்யநீர்ச் சடையான்வந்தங் கோதவந்தொடங்கக்கேட்டு
வையக மளித்தா டாதை வள்ளலைப் பணிந்து மானை
பையரவின் றவத்துக் கேவல் கோடியென் றளித்துபோனான்.

இ-ள் இப்படி நாரதர்சொன்னதைக் கேட்டுப் பார்வதியே நமக்குப்பெண்ணாக வந்தபடியினாலே பரமசிவன் மருமகனாகி வரவேண்டுமென்று பிரார்த்தித்துக்கொண்டிருக்கிற நாளையில் பூமியிலே கங்கையைச்செலுத்துக்கொண்டிருக்கிற இமயபர்வதத்தி லொருபக்கத்தில் பரமசிவன்யாதோவொரு நினைவினாலே யோகத்திலிருக்கிறாரென்றவார்த்தை கேள்விபாகித் தன்மகளாகிய பார்வதியையுஞ்சிலதோழிப்பெண்களையும அழைத்துக்கொண்டுபோய் நமஸ்காரஞ்செய்துஎன்னுடையபெண்ணை உம்முடையதவத்துக்காக ஏவல்செய்ய ஒப்புக்கொள்ளுமென்று அவரிடத்தில் அம்மையை விட்டுப்போனான் பருவதராஜன்-எ-று. ௫௯

ஓங்குமாலயன்மற்றுள்ளோ ரொழிவிலாத்தவம்புரிந்தால்
தாங்குபேறளிப்பானன்னோர் கருத்தினற்றவஞ்செய்போதிற்
பூங்குழல்கனியும்போது முஞ்சியும்புனலுங்கொண்டு
பாங்கியர்பலருஞ்சூழப் பணிவிடைபலவுஞ்செய்தாள்

இ-ள். எல்லாத்தேவரினு முயர்ந்த விட்டுணு பிரமாமற்றவர்கள் பெருமையா யொழிவில்லாத தவஞ்செய்தால் அவர்களுக்கு வேணடியவரத்தைக்கொடுக்கிறசுவாமி யாதோஒருகாரணத்தினாலே தவஞ்செய்கிறபோது பார்வதி பழம் புட்பம்தருப்பை திருமஞ்சன முதலானவைகளைக்கொடுத்துத் தன்னுடைய பாங்கிமார்களுடனேபலபணிவிடையுஞ் செய்துக்கொண்டிருந்தாள்-எ-று. ௬௰

இங்கிவையிருக்கத்தேவ ரியாவருமிமையோர்கோவும்
பங்கயத்தவனைச்செய்திப் பணிந்தனர்பதுமத்தோனு
மங்கவர்க்கிருக்கையேந்தா னவரவர்முகத்திற்சோர்வுங்
குங்குமக்குழம்புநீத்த புயங்களிற்குழைவுங்கண்டான்

இ-ள். இவ்விடத்தில் இப்படியிருக்க எல்லாத்தேவர்களும் தேவேந்திரனும் கூடிப்பிரமனைச்சேர்ந்து தொழுதார்கள் அந்தப்பிரமனும் அவர்களுக்கு இருக்க ஆசனங்கொடுத்து பிறபாடுஅவர்களுடைய முகஞ்சோர்ந்து இருப்பதையும் குங்குமம்பூசியிருந்த தோள்களிளைத்திருப்பதையும்பார்த்தான்-எ-று. ௬௧

வச்சிரமோடிந்நீசானன் கணிச்சிவாய்மடிந்துங்காலன்
முச்சிரம்வளைந்துமற்றோர் படையெலாமுறிந்துதேவர்
மெய்ச்சுரமகுடமீர்ந்து மெலிந்தனம்விளம்புமென்று
னச்சுரர்தமக்குமோமான் றாரகனழித்தானென்றான்.

இ-ள். வச்சிராயுதம் ஒடிந்துபோயும் ஈசானன் மழுவாயுதத்தின் வாய்மழுங்கியும்என்னுடைய சூலாயுதம்வளைந்தும், மற்றவர்கள் ஆயுதமுறிந்து தேவர்கள் சிரத்திலேயிருக்கிற மகுடம் பிடுங்கப்பட்டும வருத்தத்தையடைந்தீர்கள் அவ்வருத்தத்தை சொல்லுங்களென்று கேட்கத் தேவேந்திரன் தாருகாசுரன் இப்படி அவமானஞ்செய்தானென்று சொன்னான்-எ-று. ௭௨

காலைபம்புயத்தோன் சொல்வான் காலனுங்கனலாங்காற்றுன்
மாலினுலென்றனுன் னு லவன்வலிதொலைக்கலாமோ
வாலமாமிடற்றான்சேயா யசலமாதிடத்தேதோன்றும்
வேலனூர்வெல்வாருங்கள் சிறையெலாம்விடுப்பாரென்றான்.

இ-ள். அப்படிதேவேந்திரன் சொல்லைக் கேட்ட பிரமன்சொல்வான் எமன், அக்கினி, வாயுவிட்டுனு இவர்களாலும் என்னுலும்உன்னுலும் அந்ததாருகாசுரனைக் கொல்லக்கூடுமோ சிவனுடைய பிள்ளையாய் இமாசலபுத்திரியான பார்வதியினிடமாக சிவசுப்பிரமணியர் அவதரித்து அவனைக்கொன்று உங்கள்சிறையை மீட்பாரென்று சொன்னான்-எ-று. ௭௩

யோகத்திலிருக்குமீச னுமைக்குநானளிக்குமாறு
வேகத்தியற்றுமென்றே யவன்விடைகொடுத்தான்மீண்டன்
மாகத்திலணுகித்தேவர் மதனனைநினைத்தார்மாரன் (ன
சோகத்தையொழிக்குந்தென்றற் றேருடன்றோன்றிச்சொல்வா

இ-ள். யோகத்திலிருக்குஞ்சிவபிரான் பார்வதிக்குமங்கிலியதாரணம்செய்யும்படிச் சீக்கிரத்தில் முயற்சிசெய்யுங்களென்று பிரமன் சகலருக்கும் உத்தரவு கொடுக்கத் தேவர்களெல்லாம் அமராபதிக்கு வந்துமன்மதனை நினைத்தார்கள் அவன்விடாய் தீர்க்கத்தகுந்ததென்றலாகிய தேரிலேறிவந்து சொல்லுவான்-எ-று. ௭௪

எவன்றவமழிக்கமாத ரெவர்களைமயக்கநீவிர்
கவன்றதெத்துயராலெம்மை யழைத்ததென்கருமமென்றா
னவன்றனையிறுகப்புல்லி யமரர்கோனருளினோக்கிச்
சிவன்றவமழிக்கவேண்டி யழைத்தமைதெரியச்சொன்னான்.

இ-ள் மன்மதன் தேவர்களைப்பார்த்து எவனுடைய தவத்தை அழிக்கட்டும்எந்தப்பெணகளைமயக்கட்டும், நீங்களஎந்தத்துக்க நிமித்தமாக என்னையழைத்தீர்களென்றுகேட்கத் தேவேந்திரன் அந்த மன்மதனை இரண்டுகையினாலும் இறுகக்கட்டித்தழுவி உபசாரதத்

டனேபாதுகார்த்துச்சிவனுடைய தவத்தையழிக்கும்படி உன்னைவேண்டியழைத்ததென்று தெரியச்சொன்னான்-எ-று. ௪௯

விண்ணுளார்மகவான்சொல்ல வெகுண்டுவேள்மபர்ந்துகூறும்
பெண்ணலாரலியாணல்ல பிறப்பிலாரிறப்புமில்லார்
கணனினுலளவை நூலாற் கருத்தினுலளவாவந்தத்
தண்ணிலாமுடியாரசெய்யுந் தவத்தையார்தவிர்க்கவல்லார்.

இ-ள். தேவலோகத்திலிருக்கும் இந்திரன்சொல்லக் கோபித்து சுவாமிக்குப்பயப்பட்டுச் சொல்வான் தேவேந்திரனே சிவன பெண்ணுமல்லர் ஆணுமல்லர், அலியுமல்லர், பிறப்பும் இறப்பு மிலலாதவர்காட்சிப்பிரமாணத்தினுலும் ஆகமப்பிரமாணத்தினுலும் தவத்தினுலும் இப்படிப்பட்டவரென்று நிதானிக்கக்கூடாத குளிர்ச்சிபொருந்திய சந்திரனைத்தரிக்குமுடையையுடைய அந்தச்சுவாமி தவத்தையழிக்கின்றதற்கு யார்வலலவர்-எ-று. ௫௰

கன்னிகைகவுரிாசன் கதமிலாப்பிரமசாரி
சந்நிதிமகிமையாலேயுயி ரெலாந்தழையாநிற்கு
முன்னியவுயிர்கள்போல வொடுங்கிடும்மன்பாற்செல்லு
மன்னியபொருளும்தோன்றி மனதிலேயொடுங்குமாபோல்.

இ-ள். அம்மனே கன்னிகை சிவனேகுற்றமில்லாத பிரமசாரிஇவர்களிருவருடைய சந்நிதி மகிமையினுலே சகல உயிர்களு முண்டாகி விர்த்தியாகும்முன் எப்படிசுவாமியினிடத்திருந்து சீவன்கள்உண்டாயினவோ அப்படியே அவரிடத்தில் ஒடுங்கும்மனத்திலே தோன்றிய அனேக வஸ்துக்களிலே ஒடுங்கும்மனத்திலே தோன்றிய அனேக வஸ்துக்களிலே ஒடுங்குவதுபோல்-எ-று.

தாமதகுணத்தாரென்பர் சங்கையுத்திடலாலீசன்
சேமபாமுயிர்கட்கெல்லா மினபொழித்தருள்வதாகும்
மாமன்குணமொன்றில்லை வடிவமிககளலாமென்கைப்
பூமலர்சொறிந்தக்காலும் புகையெழப்பொரிந்துபோமே

இ-ள். உலகத்திலே சங்காரத்தொழில் செய்வதனுலே சிவன்தாமோகுணத்தையுடையவரென்று சொல்வார்கள் அப்படி அன்றுஉயிர்களுடைய இளப்பை யொழிப்பதாகும் மற்றத்தேவர்களுக்கு உண்டாயிருக்கின்ற மும்மலசமபந்தமில்லை இவருடையசொரூபம் மிகவும் நெருப்பாகும் அவர்மேல்நான்புஷ்பபர்ணத்தைவிட்டால அவைகள் புகையாய்க் கரிந்துபோகும். ௫௧

உருவெனத்தெரியாதானை யுருவினேடருவாவானை
யருவெனத்தெரியாதானை யமர்செயலரிதன்றருசி

வெருவரப்புகுந்தானந்த வேளையில்வேளைநோக்கித்
தழிவனத்திடையில்வாழுஞ் சதமகனுரைப்பதானான்.

இ-ள். உருவென்றுயாவராலும் தெரியக்கூடாதவரை யுருவமாகியும் அருவமாகியும் இருக்கின்றசிவனை அருவமென்றுந் தெரியாதவரைமிகவும் யுத்தஞ்செய்து செயிக்கப்படாதென்றும் மன்மதன் பயப்பட்டுத் தன்னுடைய தானத்திற்குப்போகப் புறப்பட்டான் அக்காலத்தில் மன்மதனைப்பார்த்து கற்பகத்தருவினிழலிலவாசஞ்செய்யாநின்றதேவேந்திரன் சொல்லத்தொடங்கினான்.

மரபவனிரத்தின்மீது மலரவனுவின்மீது
நாயகன்சிரத்தின்மீது பொறுத்ததுன்னலமேயன்றோ
காயுநற்கதிரின்மேனிக் கடைந்ததுமெனக்குயிந்த
வாயிரநயனந்தந்த செயலுமுன்னாண்மையன்றோ.

இ-ள். விட்டுனு தம்முடைய மார்பிலே இலட்சுமியை வைத்துக்கொண்டதும் உன்னுடையசாமார்த்தியமல்லவோசூரியனைச்சாணையில்கடையச்செய்ததும் எனக்கு ஆயிரங்கண்வந்தது உன்னுடைய ஆண்மையல்லவோவென்றான் தேவேந்திரன்-எ-று.

செல்வதின்றெமக்காயங்கே தருவதுதேவர்க்காவி
வெல்வதுசிவனைவென்று கொடுப்பதுகாமவேட்கைச்
சொல்வதுமறுக்கவேண்டா மெனச்சொல்லித்துணைக்கைப்பற்றி
நல்வரமிதுதாவென்ன மதனவேணயந்துகூறும்.

இ-ள். பின்னுந்தேவேந்திரன் சொல்வான் மன்மதனேஎனக்காக அங்கே சென்று சிவனை செயித்து அவருக்கும் புத்திரனுண்டாகும் அந்தப் புத்திரன் அசுரர்களைக்கொன்று தேவர்களை பிழைக்கும்படி செய்வார் அதற்கு நீயேகாரணமாயிருக்கிறாய் நான்சொன்னவார்த்தையை மறுக்கவேண்டாமென்று கையைப் பிடித்துக்கொண்டெனக்கு இந்தநல்வரத்தைக் கொடுவென்றுகேட்க மன்மதன் சந்தோஷித்துச்சொல்வான்-எ-று.

அரன்சிலைமலையென்றாலு மடுங்கணையரியென்றாலும்
வறம்பெறவிசைந்தநாணும் வரகதியரவென்றாலுங்
கரும்பெனுஞ்சிலையாலைந்து கணையெனுமலரால்நீலச்
சிரும்பெனுங்குணத்தால் வெல்வேனெனச்சொல்லித்தொழுதுபோ [னான்

இ-ள். தேவேந்திரனே சிவனுக்கு வில்மலையாகியிருந்தாலும் விட்டுணுவே பாணமாகி யிருந்தாலும் வாசுகியே நன்றாக எற்றுகின்ற நாணியானாலும் என்னுடையகரும்பாகிய வில்லினாலும் ஐந்துபுட்பங்களாகிய பாணங்களாலும் நீலநிறம்பொருந்திய வண்டென்கிற நாணாலும் அந்தச் சிவனைசெயித்துப்போவான் மன்மதன்.

சந்தனமணமுந்தெய்வத் தமிழ்ப்புதுமணமுங்கொண்டு
வந்ததுமலயத்தென்றல் வசந்தமந்திரியுஞ்சேர்ந்த
திந்துவுநிலவாம்வெள்ளை வலயினை யெறிந்தநெங்கும்
கொந்துவரிளமாவெல்லங் கோகிலமுழங்கிறதன்றே.

இ-ள். மன்மதன் சிவனை ஜெயிக்கும்படி புறப்படும்போது பொதியமலையிலிருந்து அவ்விடத்திலதங்கிய சந்தனவாசனையும் திவ்வியமான தமிழ்வாசனையுங்கொண்டு தென்றற்காற்றுவந்தது வசந்தமாகிய மந்திரியும்வந்துசேர்ந்தான் சந்திரனுங்கிரணமாகியவெள்ளை வலையினைநான்கு பக்கமும் வீசினான் புஷ்பக்கொத்துகளையுடைய இளமையுள்ளமாமரத்திலெல்லாங் குயிலுமுழங்கியது-எ-று.

மல்லிகைமுகைபாஞ்சங்க மதுகரமுமுக்கஞ்செப்ப
முல்லைசண்பகமேசோகு முளரிமேபமுதலாயுள்ள
வெள்ளையின்மலருந்தேனு மிசைநடந்தன்னிரும்பைச்செம்பைக்
கல்லினையுருக்குஞ்சொலலார் குறிஞ்சியாழ்கரத்திற்கொண்டார்

இ-ள். மல்லிகைமரும்போ சங்கமாகவும் அவ்வரும்பில்சப்திக்கின்றவண்டுகள் அச்சங்கத்தைவாயில்வைத்து ஊதுகிறவீரனாகவும்விளங்குமுல்லை சண்பகம் அசோகு தாமரை முதலாகிய கணக்கிலலாதபுஷ்பங்களையும் தேனையும் நான்குபக்கமு மிறைத்துக் கொண்டுகடினமாகியஇரும்புகள, பெண்கள் குறிஞ்சியாழென்னும் வாத்தியத்தைக்கையிலே கொணடார்கள-எ-று. ௫௪

பொங்கியவடுக்கபான புகாணிமுகத்துச்செக்கா
தங்குசிந்தூரமாகுந் தனியிருட்கரியுங்கிள்ளைப்
பைங்குரகதமுஞ்செல்லப் பனைமுலைப்பவளச்செவ்வாய்
மங்கையரெனும்போர் வீரர்வடிககணவாள்விதித்துச்சென்றார்.

இ-ள். மிகுந்தநட்சத்திரங்கள் முகத்திலிருக்கிறபுள்ளிகளாகவும் செவ்வானம் ஒருதிலதப்பொட்டாகவும் விளங்குகின்ற ஒப்பற்ற இரு

ட்டாகியயானையும் பசுமைபொருந்திய கிளியாகிய குதிரையும் நடக்கப்பருத்த முலையையும் பவளம்போன்ற வாயையுமுடைய சுத்தவீரர்கள தங்கள் தங்கள் கண்களாகிய சத்திகளை அழைத்துக்கொண்டு புறப்பட்டார்கள்-எ-று. ௫௫

கோணியகரும்புவைந்து குலமலர்க்கணைபுங்கொண்டு
வாணுதலிரதிசெல்ல மகரகேதனத்தினோடு
தாணுமாவனத்தைச்சேர்ந்தான் றவஞ்செய்வான்றனைக்கண்டஞ்சி
நாணினனாறுகால்வண்டு நாணினனடுங்கினானே.

இ-ள். வளைவாகிய கரும்புவில்லையும்புட்பங்களாகியஐந்துபாணங்களையும் எடுத்துக்கொண்டு ஒளிபொருந்தியநெற்றியையுடையஇரதிதேவிகூடவர மீனக்கொடியுடன் பரமசிவன் யோகத்திலிருக்கிறவனத்தைச்சேர்ந்து அவ்விடத்தில் தவஞ்செய்கிற அந்தச் சுவாமியைப்பார்த்து இவரைஎவ்வாறுசெயிப்போமென்றுபயந்து வெட்கத்தையடைந்து நடுங்கினான் வண்டைநாணாகவுடைய மன்மதன்.

வெளித்தலர்த்தெதிர்த்தாலென்று வினையுமோதனக்கென்றெண்ணி
யொளித்தனன்முன்னேபின்னே யுமையவள்வரவுகண்டு
களித்தனன்னயக்கமாமோ கனத்துகளிறைத்துவில்லை
வளைத்தனனரிநாண்பூட்டி வடிக்கணைதொடுத்தான்மாரன்

இ-ள். நேரேவெளியாகவந்து யுத்தஞ்செய்தால் என்னகேடு நமக்குண்டாகுமோவென்று நினைத்து சுவாமிபின்பின் தெரியாமல் ஒளித்திருந்து சமயம்பார்த்துக்கொண்டு இருந்தபோது பார்வதிஅக்கடவுள் முன்னேபணிவிடைசெய்யவருதலைக்கண்டு பெண்துணை நமக்கிருக்கிற படியினாலேவெல்லக்கூடுமென்று சந்தோஷித்து மோகத்தை உண்டாக்கும் புட்பபாணத்தைஇறைத்துவில்லைவளைத்துநாணேற்றிப்பாணங்களைத் தொடுத்தான் மதன்-எ-று. ௫௭

ஒருகரும்புருவச்சாப மொடியினுமுலகமீன்ற
விருகரும்புருவச்சாப முளவெனுமெழுச்சியாலே
பொருகணைதொடுத்தாற்சென்று புரஞ்சுடுகணையினாலு
மொருகணைகவித்தான்மாரனுடலெலாங்கொளுத்திற்றன்றே.

இ-ள். மன்மதன் தானதிகசண்டைசெய்தால் ஒருகரும்பு உருவுமாகிய வில்லானது ஒடிந்தாலும், உலகத்தைப்பெற்ற பார்வதியிதன்ரண்டுகரும்புருவமாகிய வில்உண்டாயிருக்கின்றன நமக்குபயமெனுகுறைவுமில்லையென்கின்ற செருக்கினாலேபோய் அனேகபாணங்களைவிட்டபோது மூன்றுபுரத்தையும் எரித்தகணையாகியஅம்பையுடைய

சிவன் அம்மன்மதன்மேல்நெற்றிக்கண்ணைச்செலுத்தினர் அக்கண்மன்மதனுடைய உடம்பை யெல்லாங் கொளுத்திவிட்டது-எ-று.

ஒருகண்ணை யென்றமையால் நெற்றியென்று வருவிக்கப்பட்டது, கண்ணையென்றசொல் மெய்கெட்டு கணையென்று சொல்லணியேற்றது.

அருக்கவெண்பஞ்சுபோல வமற்கண்ணுலனங்கனை
திருக்குளங்கலைக்கண்டு தேவருந்திசையினோரும்
வெருக்கொளவொளித்தார்பூத கணத்துடன்விசையினலும்
பொருக்கெனமறைந்துவெள்ளிப் பொருப்பிடைபுகுந்தானன்றே.

இ-ள். நெருப்புப்பட்ட எருக்கம்பஞ்சுபோல்மன்மதனாகியமாறுபாடுபொருந்திய மனத்தையுடையவன் எரிந்துபோகக்கண்டு தேவர்களும் அஷ்டதிக்குப்பாலகரும்பயப்பட்டு ஒளித்துக்கொண்டார்கள் அதன்பின்புசுவாமிபூதகணங்களுடன் சீக்கிரமாக அந்தவிடம் விட்டுக்கைலாயத்துக்கு எழுந்தருளினார்-எ-று.

சங்கரன்மனத்தைவேண்டி யுமைபுரிற்றவமேசெய்தா
ளங்கதுபுணருமாறேழ் முனிவருக்கமலனசொன்னான்
மங்கலவேள்விசெய்த முனிவருமகிழ்வாயெய்தித்
துங்கவெற்பிறையார்க்கிதனைச் சோபனஞ்சொல்லினார்கள்.

இ-ள். பரமசிவன் தன்னைக்கலியாணஞ்செய்துகொள்ளப்பர்வதராஜனிடத்திற்போய் சுவாமிக்கு உன்பெண்ணைக் கலியாணஞ் செய்துகொடுவென்று கேளுங்களென்று அனுப்பினர் அந்தப்படியே அந்தஏழுபேரும் பருவதராஜ னிடத்திற்குப்போய் இந்தசோபனசங்கதி சொன்னார்கள்-எ-று.

மலையிறைமகிழ்ந்தானந்த மலையிலறபுதல்வன்வள்ளல்
குலமதுயுங்கோத்ரநாமங் குடிப்பெயரேதுவாழூந்
தலமதுபுகலுமென்றான் றவத்தவர்நகைத்துச்சொல்வா
ரலகிலான்பிறப்பகலல னிலையெனவறிவித்தார்கள்.

இ-ள். ரிஷிகள்போய்ச்சொன்னவுடனே பருவதராஜன்சந்தோஷித்தான். அவன்பிள்ளையாகிய மைநாகரிஷிகளைப்பார்த்துசிவன் என்னசாதி ஊரேதுசொல்லுங்களென்று கேட்டான் அதைமுனிவர் கேட்டு நகைத்துச் சிவனே அளவிடக்கூடாதவர் அவர்பிறந்தவிடம் மூங்கில் அவர்நல்லசாதியென்று தெரிவித்தார்கள். ௯௧

பொருத்ததோருவகையாகிப் பிறைமுடியன்பேர்நாளிற்
பொருத்தமுநாளுந்தேர்ந்து புனிதரைப்புகழ்ந்துபோற்றி

விருத்தியார்வரவுநாளுங் குறித்திறைவிடுத்தானன்னோர்
பருத்தகங்கையினார்க்கிந்தப் படியெலாம்பணிந்துசொன்னார்

இ-ள், அப்படிசத்தரிஷிகள் சொன்னபிறகுபருவதராசன் முதலானவர்களெல்லாம் மகாசந்தோஷத்தை யடைந்து சந்திரனைத் தரித்தமுடியையுடைய சிவன்பிறந்த நட்சத்திரத்திற்கும் அம்மைபிறந்த நட்சத்திரத்திற்குந் தகுந்தபொருத்தமுங் கலியாணஞ் செய்கிறகாலமுமறிந்து நிச்சயஞ்செய்துரிஷிகளினுடைய பாதத்தைபுகழ்ந்து வணங்கி விருத்திபொருந்திய திருக்கலியாணமுகூர்த்தவோலையும் எழுதிக் கொடுத் தனுப்பிவித்தான் அந்தவேழுரிஷிகளும் கங்கையைத்தரித்த சுவாமிக்குநடந்த சங்கதிகளெள்ளாம் வணங்கிச் சொன்னார்கள்-எ-று

இமையவெற்பிறைவனோலை முகத்திலேழ்கிரிக்குமேருச்
சிமையமால்வரைக்குஞ்செம்பொற் றிகிரிமாவரைக்குமேழு
தமரவாகடற்குஞ்சித்த சாரணாமுனிவோருக்கும
அமரரானவர்க்கும்வஞ்சி மனத்தினையறிவித்தார்கள்.

இ-ள். இமயபருவதராசன் பார்வதியம்மை திருக்கலியாண முகூர்த்தவோலையை அநேகதூதர்கள்கையிற் கொடுத்தனுப்பிவிக்க அவர்கள் சததகுல பருவதங்களுக்குங்கொடிமுடிபொருந்தியமேருவுக்கும் சக்கிரவாளகிரிக்கும், ஒலியையுடையசத்தசமுத்திரத்திற்கும, சித்தர் சாரணர் முனிவர்தேவர் முதலானவர்களுக்கும், அம்மன் கலியாணத்தைத்தெரிவித்தார்கள்-எ-று. கூரு

ஓலைகண்டளவேசேர்ந்த வத்திகளேழும்பூமி
மாலையாச்செல்லுகின்ற மகிமைசேர்நதிகளேழும்
நீலமேமுதலாயுள்ள கிரியெல்லாநெருங்கிச்சென்ற
கோலமாமுனிவர்சித்த ரிமையவர்குழாங்கொண்டார்கள்.

இ-ள். ஓலையைக்கண்டவுடனே ஏழுசமுத்திரத்திற்கும் பூமிதேவிக்கும் மாலைபோன்றுபிரகாசிக்கின்ற மகிமைபொருந்தியஏழு நதிகளுக்கும், நீலகிரி முதலாகிய சப்தகுலபர்வதங்களுக்கும் அதிஷ்டானமாகிற தேவதைகள்நெருங்கிச் சேர்ந்தார்கள்முனிவர்களும், சித்தர்களுந்தேவர்களும் கூட்டங்கூட்டமாகச் சேர்ந்தார்கள்-எ-று. கூசு

அஷ்டதிக்கனைத்துந்தோரா கொடிகளாலடைத் தார்விண்ணை
மட்டறுவிமானந்தன்னான் மாலையான்மறைத்தார்வீதி
கெட்டிலையாம்பைபூக நிரைகளால்நிறைந்தார்வெற்பிற்
றட்டியபுழுகினாலே மெழுகினார்தரைகளெல்லாம்

இ-ள். எட்டுதிக்குந்தேரினாலுங் கொடிகளாலும் இடமில்லாமல் நிறைத்துவிட்டார்கள், ஆகாசத்தையிடமில்லாமல் விமானத்தினாலும் மாலைகளிலும் மறைத்துவிட்டார்கள் வீதிகளில் நீண்ட இலைகளையுடைய வாழைமரங்களையும், கமுகுகளையும் நிரைநிரையாக நட்டு அலங்காரஞ்செய்தார்கள் மலையிலிருக்கிற புழுகைக்கரைத்து தரைகளெல்லாமெழுகினார்கள்-எ-று. ௯௫

தோரணஞ் சமைத்தார்முத்தின் றொடையெலாந்தொடுத்தார்விண்ணிற், பூரணகும்பம்வைத்தார் புதுமணிவிளக்குமிட்டார், ஆரணவுலகுமற்றை யளகையுமமரநாடு, நாரணனுலகும்வந்து காணவேவேணுமாறே.

இ-ள். தோரணங்கட்டினார்கள் அதில்முத்துமாலைகளைத் தொங்கவிட்டார்கள், ஆகாசகங்கையை கொண்டுவந்து பூரணகும்பம் வைத்தார்கள், நூதனமாகிய ரத்தினவிளக்கு ஏற்றினார்கள் பிரமலோகமும் அளகாபுரியும் தேவலோகமும், வைகுண்டமும் இதைப்பார்த்து நாணும்படி சிங்காரித்தார்கள்-எ-று. ௯௬

மணிவிளக்கனையமின்னை மலையரமகளிர்கூட்டி
கணிமலர்க்கங்கையாட்டிக் கலையிறைமருங்கைவாட்டிப்
பணிமணியாரம்பூட்டிப் பரிமளந்தாமஞ்சூட்டி
யணிநுதற்றிலகந்தீட்டி யருமறைச்சடங்குசெய்தார்.

இ-ள். இரத்தினதீபம்போன்ற பார்வதியைமலையிலிருக்கின்ற பெண்கள் கூடிக்கற்பகமலர்வாசனைசேர்ந்தகங்காசலத்தினாலே ஸ்நானஞ்செய்வித்து இடுப்புத்துவளும்படி சேலைகட்டி ஆபரணங்களும் முத்துமாலையும் பூட்டிப்பரிமளம் பொருந்தியமாலைகளைச்சூட்டி அழகியநெற்றியிலே திலதப்பொட்டுவைத்து வேதவிதிப்படி சடங்குசெய்தார்கள்.

பூரணக்கோலஞ்செய்த பொடியணிபுனிதனாரைத்
தாமணக்கோலஞ்செய்யச் சதுர்முகன்முதலோரீண்டித்
தூமணித்துகில்கள்சாத்திச் சுரதருமாலைசாத்தி
மாமணிப்பணியைநீக்கி மாமணிப்பணிகள்நீட்டி

இ-ள். வாசனைபொருந்திய புட்பபாணங்களை எய்த மன்மதனை, நெற்றிக்கண்ணாலேயெரித்து அந்தப் புட்பத்தைப்பூசிய சுத்தராகிய பரமசிவனை மணக்கோலஞ் செய்யும்படியாய்ப் பிர்மா முதலானவர்கள்கூடிப்பரிசுத்தமாகிய ரத்தினமயமாகிய வஸ்திரஞ்சாத்திக்கர்ப்பூகப்

பூமாலைதரித்து முன்னேயிருந்த சர்ப்பாபரணத்தைக் கழற்றிப்போட்டுமாணிக்க ரத்தினங்களாகிய ஆபரணங்களைத்தரித்தார்கள்-எ-று.

சடைமிளம்பிறையைத்தங்க ளிறையெனத்தகைந்துசூழ்ந்த
உடுகுலமென்னமுத்தா லொளிவிடுமகுடஞ்சூட்டி
அடைவுடன்விழியாந்திங்க ளாதபர்காதின்மீது
குடியிருந்தனபோற்செய்ய குண்டலமிரண்டுஞ்சாற்றி

இ-ள். சுவாமியினது சடையிலேதரித்த பிறையைப்பார்த்து தம்முடைய புருஷனென்று கருதிக்கொண்ட நட்சத்திரக் கூட்டங்கள் போலமுத்துகள் பிரகாசியாநின்ற கிரீடஞ்சூட்டிப்பொருந்திய கண்களாயிருக்கிற சந்திரசூரியரிருவருங்காதினிடத்திற் குடியிருந்தாற்போல அழகாகிய இரண்டு குண்டலங்களைச் சாற்றினார்கள்-எ-று.

வரம்பெறற்றிருமால்சற்று மலர்விழிக்கரியசோதி
பரம்பிறங்கினையநீலப் பருமணிசிலம்புசாத்தி
விரும்பியகோலஞ்செய்தா ரிறையுமால்விடைமேற்கொண்டா
ரம்பையர்நெருங்கிமண்ணி ராஞ்சனங்காட்டினார்கள்

இ-ள், விட்டுணுவானவர்வரம் பெற்றுக்கொள்வதற்காகத் தம்முடைய கண்ணிலொன்றை பாதத்திற்சாத்தினாரே அந்தக்கண்ணினது கறுப்புச்சோதி காலைச்சுற்றியாயினதுபோல் நீலமணிகளாலிழைத்த சிலம்பைத்தரித்துச்சாலங்கிருதரூபா விருபாக்ஷருக்கு அலங்காரஞ்செய்தார்கள் பரமசிவன் விட்டுணுவேருருவாகி ரிஷபத்திலேறினார் அப்பொழுது ரம்பாஸ்திரீகள் மங்களாலாத்தி எடுத்தார்கள்.

நலவுமாலணுகப்போற்றக் குமுதவாய்மலர்ந்தான்கஞ்ச
மலரினான்வணங்கச்சற்றே மணிமுடியசைத்தான்விண்ணோர்
தலைவனெதிர்நின்றேத்தத் தனிநகைபுரிந்தானேனையவர்
பலருமவணிறைந்துசேவித்த வவர்க்கெலாம்பார்வையீந்தான்.

இ-ள். விட்டுணுவானவர் சுவாமியின் முன்னேவந்து வணங்கச் செவ்வாம்பற் பூப்போலுந்திருவாய்மலர்ந்துவாருமென்றார் தாமரைப்பூவிலிருக்கிற பிர்மாவந்து நமஸ்கரிக்கச்சம்மேற ரத்தினகிரீட மிழைத்த திருமுடியை யசைத்தார் தேவேந்திரன் வந்தனஞ்செய்யப் புன்சிரிப்புகொண்டார் மற்றத்தேவர்களெல்லாரும்வந்து வணங்கக்கிருபைக்கண்ணினாலே பார்த்தருளினா-எ-று.

கலிவிருத்தம்.

முடித்தகங்கையாற்பிறை கொழுந்தெழுந்துமென்முளைத்து
வெடித்ததாமெனத் தவளவாய்கவிகைமேல்விளங்க

வடித்தகங்கையினருவியுமம்புலிக்கொழுந்துந்
தொடுத்ததுவீழுமாறனையபுரிகவரிகளொடுங்க.

இ-ள். சடையின்மேலேவைத்தகங்காசலத்தினாலே பிறையானதுகொழுந்துவிட்டு அரும்பாகியதுபுஷ்பித்ததென்று சொல்லும்படி யாக வெள்ளை வட்டக்குடைபிடிக்கவும் அலையடிக்கின்ற கங்கையினருவியும், சந்திரனுஞ்சேர்ந்து விழுந்ததுபோலும் இரண்டுசாமரம் வீசவும்

திருவினாயகனடப்பை கொண்டொருபுறமுஞ்சேரத்
தருவினாயகன்களாஞ்சி கொண்டொருபுறமுஞ்சார
விரவினான்முகனால வட்டங்கொடுவீசப்
பரவினாரதர்தும்புருவிருபுறம்பாட.

இ-ள். இலட்சுமிகாந்தராகிய விஷ்ணு பாக்குவெற்றிலை முதலானவை வைத்திருக்கிற அடப்பையெடுத்துக்கொண்டு ஒருபக்கம் வரவும் கற்பகத்தருவுக்கு நாதனாகிய தேவேந்திரன் படிக்கம் எடுத்துக்கொண்டுவரவும், பிரமாசமீபத்திலநின்று ஆலவட்டம்வீசவும் தும்புருநாரதரிரண்டுபேரும் வந்தனஞ்செய்து இருபுறத்திலும் நின்று சங்கீதம்பாடவும்-எ-று. எஅ

கூற்றனையவன் கனகபாதுகைகொடுகுறுகக்
காற்றுவேந்தனுந் திசையெலாநறும்புகைகாட்ட
வேறுருவாகனக்கடவுளுஞ் சிறியவாளெடுப்பத்
தோற்றுமாதவர் கலைமதிவிளக்கெடுக்குழ

இ-ள். யமராசனானவன் தங்கத்தினாலேசெய்திருக்கிற பாதக்குறடுகளைக்கையாலெடுத்துக்கொண்டு வரவும்வாயுபகவான்திக்குகளெட்டிலும் அகிற்புகை சாம்பிராணிப்புகை காண்பிக்கவும் ரிஷிபத்தினியனேகரும் சந்திரனேகருமவிளக்கெடுத்துக் கொணடுவரவும்-எ-று

காமடந்தையர்துயிலின் மஞ்சிகைபலசுமப்ப
வரமங்கையர்நவமணிப் பணிசுமந்தணுகப்
பரவுகின்னரர்முதலினோர் வீணையார்ப்பரிக்கப்
பொருவினான்மறைநடந்திறைதலைமையைப்புகழ.

இ-ள். தேவகன்னியர் அநேகர் வஸ்திரம்வைத்திருக்கிற பெட்டிகளைத் தூக்கிக்கொண்டு வரவும் நாகலோகப்பெண்கள் நவமணிகளிழைத்திருக்கிற ஆபரணங்களைச் சுமந்துகொண்டு வரவும் கின்னரர்கிம்புருடர் வீணைவாத்தியஞ்செய்யவும் நான்குவேதங்களுஞ் சமீபித்துச்சுவாமி யெல்லாருக்கும் பெரியவரென்று புகழ்ந்துமுறையிடவும்.

கிரகமேறுவெண்வசுக்களு முனிவருங்கிளர
வுரகர்விஞ்சையரிமையவர் மகிழ்ந்துகண்டுணர
விருகரங்களாலுருத்திரர் மலர்மழைபிழைப்பத்
திருவுவெண்கலை மடந்தையுமிமாசலந்தெளிப்ப

இ-ள். சந்திரசூரியரிருவருந் தவிர மற்றையேழுகிரகங்களும் அஷ்டவசுக்களும், முனீசுவரர்களும் களிகூர்ந்துவர நாகலோகத்தார் வித்தியாதரர்கள் தேவர்கள்பார்த்துச் சந்தோஷத்தையடைந்து உருக ஏகாதசி உருத்திரர்களும் இரண்டுகைகளாலும் புஷ்பங்களை வருஷமாக இறைப்ப இலட்சுமியும் சரஸ்வதியும் பனிநீர்தெளிக்கவும் -எ-று

திக்குப்பாலகர்தெரிவையர் திசைதொழுந்திகழ
மிக்கமாதர்களெழுவருஞ் சோபனம்விளம்ப
விக்குநேர்மொழி நீரமகளிர்வாழ்த்தெடுப்பத்
தக்கவிஞ்சையர்மகளிர்பல் லாண்டிசைவழங்க.

இ-ள். திக்குப்பாலகருடையதேவிகள் அவரவர்திசைகளினின்றுசேவிக்கவும், சத்தமாதர்கள்சோபனம்பாடவும், கருப்பஞ்சாறுபோல்மாதுரியமபொருந்தியவார்த்தைகளையுடைய நீரரமகளிர் வாழ்த்துசொல்லவும், தகுந்தவித்தியாதரமாதர்கள் பல்லாண்டுகூறவும்-எ-று.

சண்டபேரிகை குடமுழாமுழவுகாகளந்
தவுண்டைமல்லரிசல்லரி வலம்புரியொலிப்ப
யண்டகோளகைமடந்தையர் சிலம்பொலியதிரப்
வெண்டிசாமுகந்தனிலுமென் பிரம்பொலியிசைப்ப.

இ-ள். பெரியபணிபேரிகையும், பேரிகை குடவாத்தியம் மத்தளவாத்தியம். காகளம், சப்திக்கின்றமல்லரி, சல்லரி-சங்கங்கள்கோஷிடிக்கவும் தேவப்பெண்கள் காலினசிலம்பு கலீலென்று சப்திக்க எட்டுத்திக்கிலும் நந்திகேசரானவர் வருகிறகூட்டங்களைவிலக்க அடிக்கிறபிறம்பினது சத்தம் பிரகாசிக்கவும்-எ-று. ௪௮

எண்ணும்வென்னிய மாய்வரையடியிறங்கியிடப்
பண்ணல்சேனையின் தொழுந்திமகிரித்தலமடைந்த
விண்ணுமண்ணுமெள் ளிடமுறநெருங்கியவிமானம்
மண்ணுமால்விழை நெறிகடந்தடைந்ததுபரியே.

இ-ள். யாவராலுந் தோத்திரஞ் செய்யப்பட்ட கைலாசகிரியடிவாரத்தில் ரிஷபவாகன மிறங்கியது சுவாமியினுடைய சேனையின்முன்னணி இமையபர்வதத்தையடைந்தது ஆகாசமும்பூமியும் எள்ளிரு

க்கஇடமில்லாமல் விமானங்கள்நெருங்கியதுகள் அலங்கரித் திருந்த ன் றவிஷ்ணுவாகியரிஷபம் சுவாமியைத் தாக்கிக்கொண்டு வழிபுழுது நடந்து இமையபர்வதராசன் பட்டணத்தில் வந்துசேர்ந்தது.

இமயகிரிப்பதியடைந்து மிமகிரிமடவார்
நிமலனூர்திருவழகெலாம் விழிகளாலிரைத்தா
ருமைதவத்தினுக்கழிவிலை யெனப்புகழ்ந்துரைத்தா
ரமர்செய்காமனை யழித்தகண்ணெனுமெனவுரைத்தார்

இ-ள். அப்படியே சிவன் இமயபருவதத்திலே எழுந்தருளின போது அந்தமலையிலிருக்கின்ற பெண்கள் சுவாமியின் அழகைப்பார்த்துப் பார்வதிசெய்த தவத்துக்கு ஒருகுறைவுமில்லாமல் பலன்சித்தியாயின என்றார்கள் அவர்களில், யுத்தத்துக்கு வந்த மன்மதனை எரித்தகண் எதுவோ அந்தக்குரூரமான கண்ணைப்பார்ப்போமென் பார்கள்.

ஆகமாரணிந்திருக்கவு முலகெலாமயர்ந்த
யோகமீதிவரிருக்கையாகு மதனுடலொழிந்துப்
போகமீதிவர்விருப்புற வுயிர்க்கனைபுணர்ந்த
மோகமாக்கிமுதலவரெனச்சிலர் மொழிந்தார்.

இ-ள். மன்மதனை தேகத்தையுடைய வனாயிருந்தபோது இவர் யோகத்திலேயிருந்ததனாலே உலகத்திலுள்ள சனங்களெல்லாம் விகாரமில்லாமல் அசந்துகிடந்தன மன்மதன்தேகம்போயும் இவர்போகத்திலே விருப்பம் உண்டானபடியினாலே சகலருக்கும் போகத்திலாசையுண்டாகுது ஆனபடியினாலே மோகத்தை யுண்டாக்குகிறவர் இந்தச்சிவனேயன்றி வேறொருவருமில்லையென்று சதிரீசனங்கள் சிலசொன்னார்கள்-எ-று. ௮௧

மாயவிறகைவேளழகிய வெழின்மிகுவடிவி
லாயிரத்திலொன விலையெனத்தனைமதிக்கவனைத்
தீயிடத்துடல்கொளுத்திற தவத்தினைப்பிறமே
யாமுத்தமராழிப்பரோ வெனச்சிலருரைத்தார்.

இ-ள். மாயஞ்செய்கின்றகருப்பு வில்லைக்கையிற்றரித் திருக்கின்ற மன்மதன் அழகு இந்தச் சுவாமியினுடைய வடிவமாகிய அழகில் ஆயிரத்திலொருபங்கு காணாது அதனாலே அவனை இகழ்ந்து தன்னை மதிக்காத தீயினாலே அவனைகொளுத்திப்போட்டது தபோமகிமையினாலேயே ஆராய்ந்தெடுக்கத்தகுந்த உத்தமர்கள் ஆனால் அப்படிச் செய்வார்களோவென்று சிலமாதர்கள் சொன்னார்கள்-எ-று. ௮௨

மாதுலன் பெருங்கிளையொருங் மருகனார் திரளும்
காதறனயிருபெலதிரெதிர் தழுவினாகலந்தா
ராதியந்தமுமதனிலை யளவிடாவரியோன்
வேதியன்காம்பிடித்தினி திழிந்தனனவிடைமுன்.

இ-ள். மாமனாகிய பர்வதராசன சுற்றத்தார்முதலிய சேனைகளும் மருமகனாகிய பரமசிவத்தினுடைய சேனைகளுமிருந்த ஆசையோடுங் கூடினவர்களாய் எதிரெதிராகவந்து ஒருவருக்கொருவராகத் தழுவிக்கொண்டார்கள் முதலுமீறுமில்லாத அளவிடப்படாத சிவபிரான் பிரமனுடைய கையைப்பிடித்துக்கொண்டு ரிஷபவாகனத்திலே நின்று இறங்கினார்-எ-று. ௮௭

இலகுபங்கயப்பாவைகள் நீராஞ்சனமேந்த
வலத்பாலசரி நமருங்கு நடாவெதிர் தாங்கத்
திலகமாவணி திருநகைமேலொருகர ஞ்சேர்த்திட்
டலகிலாமணியிழைத்தகோமண்டபத்தணைந்தார்.

இ-ள். இப்படி சுவாமி ரிஷபவாகனம்விட்டு இறங்கின வுடனே அழகுள்ள அனேகபெண்களாலே ஆலாத்தி எடுக்கவும் அஷ்டதிக்குப் பாலகரெட்டுபேரும் சுவாமியினிருபுறத்திலும் நெருங்கிவரவும் எல்லாருக்குந்திலகமாகிய விட்டுணுவினுடைய இரண்டு கைமேலும் தம்முடைய ஒருகையைச் சேர்த்துக்கணக்கில்லாத ரத்தினங்களா லிழைக்கப்பட்டிருக்கின்ற மண்டபத்திலவந்து சேர்ந்தார்கள்-எ-று.

அரியமண்டபத்தமைந்தகட்டி நகையின்மீதமைந்தார்
வரையிடப்பிறந்தனை வளர்பூவையோடவிருவா
குருமலர்க்கரையிலைத்தேவர்கள் குடிபுகுந்தம
திருமுகத்திடையிறைவனை வலப்புரஞ்சேர்ந்தார்.

இ-ள். சுவாமி அருமையாகிய அந்தமண்டபத்தில் இருக்கிற ஆசனத்திலெழுந்தருளினார் கனகசபைபோலே யிருப்பதனால அசுரர்களே இவர்கள் பலிபேலேபிறந்தார்களென்று காண்பிக்கும் பீடியாகவுருக்கிறமாகர்களுடைய நிறம்படப்போலும் கைகளிலேந்திக்கொண்டு கிருபையே குடியாகவிருக்கின்ற அழகிய முகத்தையுடைய பார்வதியைச்சிவனுடைய வலப்புறத்திலே உட்கார வைத்தார்கள்-எ-று. ௮௯

முன்னையாரணன் வதுவையின்சடங்கெலாமுடித்து
வன்னிமேற்பொரியினைத்தெய சொரிந்துமந்திரத்தா
லன்னையாளுடைய யிறைவனுமேழுலகினற
கன்னிசெங்கரம்பிடித்து வலஞ்செய்தான்கனலை

இ-ள். இந்தப்பிரகாரம் சுவாமியும் அம்மனும் கலியாண மண்டபத்தி லெழுந்தருளியிருக்க அந்தவேளையில் பிரமன் கலியாணச்சடங்கைவிதிப்படி முடிக்க என்னையாட்கொண்ட பரமசிவன் அக்கினியிற்பொரியிறைத்து செய்யாகுகிசெய்து முன்னேழுலகத்தையும் பெற்றஅம்மை கையைப்பிடித்து அக்கினியை மூன்றுதரம்வலமாகச் சுற்றிவந்தார்கள்-எ-று. ௮௬

ஒற்றைவால்வளை யொலித்ததுசுருதியுமொலித்த
சுற்றும்வானவரிருடியார் மலர்மழைசொரிந்தார்
பற்றியாசனத்திருந்தன னனைவருமபணிந்தார்
பெற்றதாதையோடன்னையைப் பணிந்தனள்பெதும்பை

இ-ள். வெண்மைபொருந்தியஒப்பற்ற சங்கமுழங்கவும் நான்குவேதங்களும் சப்திக்கவும் நானகுபுறமும் சுற்றிக்கொண்டு தேவர்களும்ரிஷிகளும புட்பமாரியைப் பொழியவும் சுவாமி ஒருஆசனத்தில் எழுந்தருளினர் அப்போது சர்வத்திரபேரும் வந்தனஞ்செய்தார்கள் பார்வதியானவள் அவள்தாயையுந் தகப்பனையும் வணங்கினள்-எ-று.

எரித்தகாமனைத்தருகிவென் றிமையவரயன்மா
லொருத்தரின்றியே யிறையவன்மகிழ்ச்சிகண்டுரைத்தார்
மரித்தகாமனையழைத்தருட் புரிந்தனன்வள்ளல்
பெருத்தவன்பினாலனைவரும் விடைகொடுபெயர்ந்தார்

இ-ள். தேவர்களும்பிரமனும் விட்டுணுவும் மற்றயாவரும் சுவாமி எல்லாரிடத்திலும் வைத்த பிரியத்தைப் பார்த்துச் சுவாமீமுன்னே எரித்தமன்மதனை எழுப்பித்தரவேண்டுமென்று கேட்டார்கள் அப்படியே இறந்துபோனமன்மதனை வரவழைத்துக் கொடுத்துகிருபைசெய்தார் பரமசிவன் பின்புயாவரும்விடை பெற்றுக்கொண்டுபோனார்கள். ௮௮

அதற்பினண்ணலுங் கவுரியுமுறுகியொன்றுகி
மதத்தவானையைக் குமரனைப்பயந்தனர்மகிழ்வாய்
விதித்தவேளையிற்குமரனுக் களித்திறைவிடுத்தான்
கொதித்ததாருக னுயிர்குடித்துவந்தனன்குமரன்.

இ-ள். அப்படியே திருக்கலியாணமும் நடந்தபின்பு சுவாமியும் அம்மையும் மிகுந்தஅன்புகொண்டு ஒருருவமாகிச்சேர்ந்து வலிமைபொருந்திய யானைமுகத்தையுடைய விக்கினேசுரரையும் சிவசுப்ரமண்யரையும் பெற்றார்கள். அதன்பின்பு சுவாமி சிவசுப்ரமணி

பரந்த ஒருவேலாயுதத்தை அருளிச்செய்தனுப்புவிக்க அவர்போய் அந்தத் தாருகாசுரனை வேலாயுதத்தால் விட்டெறிந்துகொன்று சந் தோஷமுடையவரானார்குமாரசுவாமி எ-று. ௮௯

மயிலெனத்திகழ்மலைமகள் பொருகரிவதன
னயிலெடுத்தசெங் கரனுடனிமையவெற்பகன்று
கயிலைவெற்பில்வந் திமையவர்முனிவர்கண்களிக்க
வெயிலுடைப்புரமெரித்தவ னிருந்தனனப்பால்.

இ-ள், மயில்போல்விளங்குகின்ற பருவதராசன் மகளாகிய ஸ்ரீ பார்வதியார்முகத்தையுடையபிள்ளையார் வேலாயுதத்தைத்தரித்த சிவ சுப்பிரமணியருடன் இமையகிரியை விட்டுநீங்கித் தேவர்கள் முனிவர் களுடைய கண்களிகூரக் கைலாயத்தில் எழுந்தருளியிருந்தார்முப்புர த்தை யெரித்தவராகிய பரமசிவன் அதன்பின்பு எ-று, ௯௰

(மூன்றாவது.)

திருவவதாரச் சருக்கம்.
முற்றிற்று.

---

ஆக திருவிருத்தம் ௨௫௪ .

சிவமயம்.

(நான்காவது)

# திருக்கண்புதைத்த சருக்கம்.

———❊❊(❊)❊❊———


அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்

மின்னனையமுகிறவழு மிமகிரியின் றவோபலத்தான்மேனையான, வன்னையிடத் தென்னன்னை யவதரித்த கதைசிறிதே யுரைத்தே மிப்பால், பொன்னனையசடையிறைவன் றிருநயனமிருகரத்தாற் புதைத்த வாறுந், தென்னருணை மாநகரி லன்னைவினைதீர்த்ததுவுஞ் செப்பலுற்றேன்.

இ-ள், மின்னல்பொருந்திய மேகங்கள் தவழ்ந்துபோகின்ற இமவற்பருவதத்தின் தவோபலத்தால் மேனாதேவியிடமாக என்தாயாகிய பார்வதிஅவதரித்த கதையிலே கொஞ்சந்தான் சொன்னேன் அப்பார்வதி பொன்போலும் சடையுடைய சிவன தழகியகண்களை இரண்டு கைகளினாற் பொத்தியதும் அதனால் வரும் வினையைத் தெற்கின்கண்ணிருக்கிற அருணாசலத்தில் அம்மை பூசைசெய்துதீர்த்ததும சொல்லத்தொடங்கினேன். எ-று.

வேறு.

ஊடுவார்புலவிதீர்ப்ப ரொருவருக்கொருவர்மாலை
சூடுவார்மறைநூல்கேட்பர் சொல்லுவர்வீணைநாதம்
பாடுவார்பலவிஞ்ஞைதம் பயிற்றுவர்பகைகாற்சூழ
மாடுவார்வெல்வர்தோற்ப ரணிமலர்புனைவாரைம்பல்



இ-ள். சிவபிரானும் பார்வதியும் பிணக்கிக்கொள்வார்கள் அதை
முறையாயும் தீர்த்துக்கொள்வார்கள் ஒருவருக்கொருவர் பாடுகளைச்
சூடிக்கொண்டு வேதசாஸ்திரங்களைத் தேவர்கள் முனிவர்கள் சொல்லக்
கேட்டு அதன்பொருள் சிலருக்குச் சொல்லியும் வீணைமுதலிய வாத்
தியவாசித்தும் மற்றும் பலவிளையாட்டுகள் செய்தும் பலதரம் ருதாதி
யாக அதனால் வெற்றியையும் தோற்மையையுமடைந்து அழகிய ஆபரண
ங்களாற் சிங்காரித்துக்கொண்டிருந்தார்கள்-எ-று. ௨

### இதுவுமது.

அர்தவேளை யிலென்னம்மை யையனையிறைஞ்சி யையா
விந்துவிரவி யாருமையா வரென வினாத்தாளெந்தை
சுந்தரக்கனிவாய்ப்பிணை நோக்கியிருவருங்கண்ணென்றார்
கந்தனைப்பயந்தாளீசன் விழிகளைப் புதைத்தாள்கையால்.

இ-ள். அந்தச்சமயத்தில் என்தாயாகியபார்வதிசுவாமியைவணங்
கி ஐயா சந்திரசூரியர்கள் யாவரென்று கேட்கஅதற்குச்சுவாமிஅழகிய
கனிபோலும் வாயையுடைய பெண்ணே அந்த இருவருநம்முடை
யகண்களென்று சொன்னார் சுப்பிரமணியரைப் பெற்றதாயானவள்
கேட்டுவேடிக்கையாகச் சுவாமியினுடைய கண்களை இரண்டுகைகளா
லுமூடினாள்-எ-று.

### கலித்துறை.

ஈசனார்விழிபுதைத்தலும் மிருட்பிழம்பிருக்கிப்
பூசிறுவெனவிருண்டன திசைகளும்புவியு
மாசுவீசிமால்வரையெனக்கருகியமலைகள்
காசுலாவியநதியெலாம் யமுனைபோற்கறுத்தது.

இ-ள். பரமசிவத்தின் கண்களைப்பார்வதிபுதைத்தலும் இருட்கூ
ட்டத்தை யுருகச்செய்து பூசினதுபோல் திக்குகளும் பூமியுமிருண்ட
துமலைகளெல்லாம் குற்றமற்ற நீலகிரியைப்போல்கறுத்தது மணிகள்
பொருந்திய நதிகளெல்லாம் யமுனாநதிபோல்கறுத்தது-எ-று. ௩

### அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

மறையவனுநாரணனு முனிவர்களும் வசுக்களுநான் மறையும் வச
னே, நிறையவனும் விழியொளிபோ யிரவிகெடும் குருடரெனவிருந்
தார்மற்றைக், குறைவிலா நுகல்விலங்கு பறவைகளு மொளியிழ
ந்த கண்ணதான. துறவறமுந் பிரவறமுந் தொலைந்தனமற் றுளதேச
மூனும் தொலைந்ததன்றே.

இ-ள். பிரமனும் விஷ்ணுவும் முனிவர்களும் அஷ்டவசுக்களும் கார்த்திகைகளும் தேவர்களும் இந்திரனும் கண்கள் பிரகாசமற்றுப் பிறவிக்குருடர் போலிருந்தார்கள் பசாசா முதலியபிருகங்களும் பக்ஷிகளும் கண்ணொளியற்றன தாரகைகளில்லாமைபோன்மை ஒழிந்தனமற்று எல்லாத்தொழில்களும் கெட்டது-எ-று. ௬

கலித்துறை.

தேவர்மானிடரிராக்கதர் சிறுமைமாற்றிருந்தார்
கோவிலிந்திரன் வெண்கரிக நிறக்கொண்ட
காவியம்புயக்கொம்பொடு மானதவவளவின்
மூவர்தேவனுக்களவறு முறைசொலிப்புகன்றார்

இ-ள். தேவர்களும் மனிதர்களும் இராக்ஷதர் சிறுமைபோலக்கறுத்தார், ஆகாயத்தில் இந்திரன்வாகனமாகியவெள்ளையானைகள் போலக்கறுத்தது நெற்றியில்லாதபிரமன் கொடியாகிய அன்னங்கள் காகம்போலக்கறுத்தன அப்படி எல்லாப்பொருளுங்கறுத்து மயங்குகின்றகாலத்தில் மும்மூர்த்திகட்கு முதல்வனாகியசிவனிடத்தில்எல்லோரும்போய்முறையிட்டுத்தங்கள் குறையைச் சொல்லிக்கொண்டார்கள்-எ-று.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

அஞ்சலென வமைந்தகரத் திறைவனுதல் விழிதிறக்கா வெளி
யேழுந், துஞ்சவிருளகன்றுநான் முதிருசோதி சூரியர்கள்தோற்றப்போ
ல, வஞ்சியுமையிறைவன்விழி புதைத்ததிருக்கரமலரை வாங்கினின்றா
ள், விஞ்சுமறை யவர்தனக்குங் கனல்போல்விழிமூன்றும் விளங்கிற்
றன்றே,

இ-ள். சிவபிரான்பயம்வேண்டாமென்று கையமைத்துப்பன்னிரண்டுகோடி சூரியருதயம்போலத்தன்னுடைய நெற்றிக்கண்ணைத்திறக்க ஏழுலகும் அந்தகாரத்தை நீங்கியது பார்வதிபொத்தியகைகளைவாங்கினாள். பிராமணர்கள் வளர்க்கும் யாகாக்கினிபோல் மூன்றுகண்களும்விளங்கின. ௭

பார்புதைத்த திருவயிற்றன் பணிந்துரைப்பா னெடுஞ்சூலப் ப
டையாய்காலன், மார்புதைத்த மலர்ப்பதத்தை யார்புதைத்த சடாட
வியாய்வையமேழும், கார்புதைத்தவிருளாகவிழிபுதைத்தகொடியாவ
துகழுமாலு. தீர்புதைத்தா யுடத்திறவம்புரிதற்கான விடநிகழ்த்து
மென்றாள். ௮

இ-ள். எல்லாச்சீவராசிகளையும் கருவாகவைத்துக்கொண்டவயிற்றையுடைய பார்வதிசுவாமியைப்பார்த்து நெடியசூலத்தை யுடைய

வரே என்னைமார்பிலேயுதைத்தமலரைப்போன்ற பாதங்களை யுடையவரே ஆத்திமாலையையணிந்த சடைக்காட்டினையுடையவரே! ஏழுலகமுமே சிறந்திருக்கும்படி அந்தச் சிறப்பான திருநாண்டாகமத்துக்கும் கண்களை மூடியகொடியபாவமெல்லாமடைச் சமுத்திரமாகும்படி பூமியெல்லாந்தினைவருஞ்செய ராதற்கு நலைப்படுஞ்சொல்லுவென்று கேட்டாள். எ-று. எ

ஈசனும்மங் குறைதீர்த்தருள்வா ரிலையினைவந்தணுகாதேயெனினும் யார்க்கும் மாசகலும்படிக்கரிய தவம்புரிய விரும்பினேயென் மங்கை மானை, காசியவந்திதுவாரையயோத்தி மதுரைமாயை காஞ்சிமேவிப், பூசைபுரிந்தரியதவம்புரியென்றுன விடைகொண்டாள் புகழ்ந்து போற்றி.

இ-ள். அப்படி பார்வதிதேவி கேட்கப் பரமசிவன் பெண்ணே நீ பாவமுடன் வந்து சேராதாயினும் மற்றவர்களுக்குப் பாவம்நீங்கும் பொருட்டுத் தவஞ்செய்ய நேசித்தாயானால் மதுராபுரி, மாயாபுரி, காசி, அவந்தி, துவாரகாபுரி, அயோத்தி அவைகளோடு பிறந்தகாஞ்சிபுரத்திற் போய்ப் பூசையுடன் அரியதவஞ்செய்யென்று சொல்லச் சுவாமியை வணங்கி விடைபெற்றுக்கொண்டாள்-எ-று. அ

விசையன்மகள்குடையெடுப்பச்செயமகள்பொன்னடப்பைகொ ண்டிரைந்துமேவ, வசையுமணிக் கவரிபிருணையடர்ந்தநிமிர்காவினியு மருகில்வீசத், திசையிலிளநிலவெறிக்குந்தரளமணிச்சிவிகையின் மேற்சென்றுபோந்து, நசைபெருகுமாய பெருசயபுனல்பெருகும் புகழ் கங்காநதியைச்சேர்ந்தாள்.

இ-ள் பார்வதியம்மைவிசயலட்சுமிகுடைபிடிக்கசெயலட்சுமி பொன்னடப்பந்தாங்கிச் சீக்கிரத்திலவர இரதிநாச்சியிறைச்சாமரைக ளால் அருந்ததியும் இலட்சுமியும் இரண்டுபக்கங்களிலுமின்று சாமரை வீச நாலுதிக்குஞ் சந்திரனைபோலப் பிரகாசமயிலாபடி முத்துப்பல் லக்கிலேறி யாவரும் வீசுகின்ற தருமம்பொருந்த சலமபெருகுகின்ற சோதியினையுடைய கங்காதீர்த்தத்தில் வந்துசேர்ந்தாள்-எ-று.

இறந்தவுயி ரினிமீளப் பிறவாம லிறவாம லிறைவனூர்தன், சிறந் ததிருவுருவாகுந் திருக்காசித் தலமடைந்து சிவன்றன்போற்றி, வற ந்தமழைக் குருகுமுந்தத் தலத்தவாகள் பிழைக்கவரம் வளர்ந்தப் பன்னூள், நறுந்தொடையி னரசன்விடைகொண்டு நிற்பத் தொண்டை வளநாடுசேர்ந்தாள்.

இ-ள். இறந்துபோன உயிர் இனிதிரும்பிப் பிறக்காமலுமிறக்க மலும் பரமசிவத்தினுடைய திவ்வியசொரூபமான காசிபதியைச்சேர்

ச்த்து விசவேசருடைய பாதம்போற்றி மறையில்லாமனுவரு ந்துகின்ற சிவாசிகள்பிறைக்கும்பொருட்டு அர்த்தந்தலத்திக்தருவத்தைப்பலநா ளாயார்த்துந் தேன்தங்கிய மலர்மாலையைத்தரித்த அநதேசத்தரசன் விடைபெற்று ஈறகத் தொண்டமண்டலத்தைரசேர்ந்தாள் பார்வதி.

மழைதவழுந் தலைப்பலவின் பழமதுவைரவாய் விரிந்தாலுமகரவாளைப், பழமதுவாய் விரிந்தாலும் புதுமதுவாய் விரிகதொழுகும்பழனநீங்கிக், குழைபளவு நடமாடும் விழிமாதர் நடமாடுங் குறிப்புநோக்கிப், பொழிலதனின் வடமயில்க ளாடமாடுந் திருக்காஞ்சிப் புரத்தைச் சேர்ந்தாள்.

இ-ள். மேகங்கள் தவழ்கின்ற தலையையுடைய பலாவின துபழங்கள் வாய்விண்டாலும் மகரவாளைப் பழங்கள் அளிந்தாலும்புதியதேன்பெருகவெடுத்து வாய்க்கால் வழியாக ஓடி விழுகின்றகழனிகளைக் கடந்து குண்டலம்வரைக்குந் தாவுகின்ற கண்களையுடைய பெண்கள் நாட்டியஞ்செய்கின்ற குறிப்பைப்பார்த்துச் சோலைகளிலிளமையாகிய மயில்கள்நடனஞ்செய்கின்ற காஞ்சிபுரத்தைச்சேர்ந்தாள் பார்வதி.

தாவரத்தை யழிவாக்கிமனிதரையுள்ளநிலைழிக்குந் தடங்கண்மாதர, நூபுரத்தம் புயசரணஞ் சிவபேற லிழைமருங்கு நுடங்கவேறுமாபுரத்தின் மணிமேடை யரம்பையற்கு விளையாடமலைகளாகுங்கோபுரதநெடுகொடிகளா காமவல்லியெனுங்கொடிக்குக்கொழுகொம்பாகும்.

இ-ள், கல்லுகளையும்!மரங்களையும் உருகச்செய்து மனிதர்களுடையஉள்ளநிலைக்கெடுக்கிற விசாலமாகிய கண்களையுடையபெண்கள் சிலம்பணிந்த தாமரைமலர்போலும் பாதஞ்சிவக்கநூல்போலும் இடைவளையவாறுகின்ற அப்பட்டணத்திலிருக்கும் இரத்தினமிழைத்தஉப்பரிகையும அரம்பைமுதலாகியபெண்கள்விளையாடுதற்குமலைகளாகவிருக்கும சிவாலயத்தின கோபுறத்திற்கட்டியிருக்கிற கொடிகள் கற்பகவிருசததிற்படர்ந்த காமவல்லி என்னும் கொடிக்குப் படருகிறதற்கு கொழுகொம்பாயிருக்கும் எ-று.

பரதநாடகமாடு மயில்போலுங்கபிற்றுவழிப்பாவைபோலும், சுரதநாடகமாடுந துடியிடையார் கண்வருடன் றுவளுமபோது, மரகதாதிகளுறுத்த விழித்துமணி மேடையினும் வாரிவீச, வாதனு கரமான தன்றுமுத லின்றளவுமாழிதானே.

இ-ள். பரதநாட்டிய மாடுகின்ற மயிலுக்குச்சமானமாகவும்கயிறுவழியாய் ஆடுகிற சிங்காரம்பொருந்திய பிரதமைபோலவும் சுரதவி

யாட்டைச்செய்கிற உடுக்கைபோன்ற இடையினையுடையபெண்கள் புருடர்களைப்பிரித்துப்புதனுடனே மகரந்தநீர் தங்கிய இரத்தினதுபாணையானது பூத்துக்கொத்து அவ்வப்பரிணையில்நின்று எடுத்துவிசியெறிய அவ்வாபரணங்கள் சமுத்திரத்திலே விழுந்ததனாலேதான் அதனுடைய தீர்த்தநாமமெனப் பெயர்பெற்றது-எ-று. ௰௪

அனையமாநக்ககன்றுவஞ்சி யொருமானின்மிழிருந்த மானைப்போற்றிக், கனைகழலையினைகளையுடைய குழகர்கடந்தநக்கம்மையைமேவிப். பனையமணம்நுவித்தலிங்கவடிவாக்கிப்பூசைபுரிந்தாளப்போ, தெய்வமுடையவனவடத்தி னுநதிப்பினைக்கங்கையைகோயிலினோ.

இ-ள். அத்தன்மையுடைய வீதியைக்கடந்து ஒப்பற்ற மாவிருட்சத்தின்கீழ் எழுந்தருளியிருக்கும் ஏகாம்பரநாதரை வணங்கி நெடுப்பொத்தபாவங்கள்நடுங்கியோடிப்போகவருகின்ற கம்பாநதியருகேபோய் அலங்காரமாய் மணலைக்குவித்து இலிங்கருபமாகிப் பார்வதிபூசைசெய்யும்போது எமமுடைய சுவாமிஅவள் தவத்தின் உறுதியையறியக் கங்கையைப் பிரவாகமாக வரச்செய்தார்-எ-று. ௰௫

பூதலமேற் குறுமுனிவன் குண்டிகைநீற் கவிழ்ந்தருவரும்பொன்னிதானோ, ஆதியிலேயக்குமுனியாசமித்தோடிபிடிந்தவலை யாழிதானோ ஏதமறத் தவம்புரியும் பகீரதற்காச்சன்னுமுனி யிரக்கத்தாலே, காதின்வழியொழுகவிடப் பரவியகங்காநதியோ கம்பையாறு.

இ-ள். பூமியில் அகத்தியமுனிவர்கமண்டலம் கவிழ்த்ததிலேவருகிறகாவேரியோ அந்தமுனியானவர் ஆதிகாலயில் ஆசமனஞ்செய்து உமிழ்ந்த சமுத்திரத்தின்பெருக்கோ குற்றமற்றதவஞ்செய்யும் பகீரதனுக்காகச் சன்னுமுனியானவர் இரக்கத்தினாலே காதின்வழியாகவிடப்பெருக்கெடுத்துவந்த கங்காநதியோவென்று சந்தேகப்படவிருந்தது கம்பைநதி-எ-று.

வேறு.

மங்காநதியின் மணலிங்க மழியாதிருக்கும் வகையுமையாள்
வெங்காதலின லிங்கவள்போல் வெற்பாரிமையவெற்பாடன்
சங்காற்கரத்தா லிருதனத்தா லிருகர்சேர்த்துத்தழுவுதடங்
கொங்கார்களபத் திருமார்பு முருகியுருகிக் குழைந்தாளே.

இ-ள். பார்வதிகெடாத கம்பையாறு பெருக்கெடுக்கும்போதும் மணலாலேசெய்த இலிங்கத்திற்கு அபாயமுண்டாகுமென்று பயந்து

காமங்கொண்ட ஆசையினாலே அணைபவள்போல் பர்வதராசகுமாரி வளையலையணிந்தகைகளாலும் இரண்டுகொங்கைகளாலும் இறுகவிறுகத்தழுவுதலும்வாசனை பொருந்தியசந்தனத்தையணிந்ததிருமார்பு உருகிக்குழைந்தாள்-எ-று. ௰௭

மனத்தால்நினைந்தபெருந்துயரு மனைச்சாப்பிரிவுமுடன்றீரத்
தனத்தாநெருக்கிமுகமழுத்தித் தலைநாட்போலத்தழுவுதலு
மனத்தால்விளங்குங்கம்பைநதி யருணாசலத்தையொருபொழுது
நினைத்தார்வினைகளிரண்டுபோ லிரண்டாய்ப்பகுத்தாங்கியதே.

இ-ள். தன்னுடையதவத்துக்குப்பின்னம்வாராமல் நினைத்திருந்ததுன்பமும்சுவாமிகூடாமற்பிரிந்ததுன்பமும்தீரும்படித் தனங்களிலே நெருக்கி முகமழுத்தி முன்னாள்போல அணைத்தவுடனே அன்னங்கள் சூழ்ந்த கம்பைநதியானது அருணாசலத்தை ஒருவேளைநினைத்தவர்களுடைய நல்வினை தீவினைபோலிரண்டாகப்பிரிந்து இலிங்கத்தைச்சுற்றிப் போனது-எ-று. ௰௮

வேறு.

விடுத்தனன்கரத்தைப்பாங்கர் விளங்கிழையவர்கள்சூழத்
தொடுத்தபூந்தொடையுஞ்சாந்து மணிந்தவள்தொழுதாளந்த
வடுக்கிளைத்தனதுசெவ்வன் மார்பினைதொடாதுநாணித்
தடுத்திடுங்குறிகள்போல விளம்பியதழும்பாயம்மா

இ-ள். பார்வதிசுவாமியைத்தழுவிய கைகளைவிட்டாள் அருகில்பிரகாசிக்கின்றஆபரணத்தையுடைய அனேகம்பெண்கள்சூழப்புட்பமாலையுஞ்சந்தனமுந்தரித்துவந்தனஞ் செய்தாள்வடுப்போன்றகண்களையுடைய அந்த அம்மை தன்னுடைய சுவாமிமார்பை மற்றப்பெண்கள் வெட்கத்தையடைந்து தேடாமலிருக்கும்படி தடுக்கவைத்த குறிகள் போல் தழும்புகள் விளங்கியதுகள்-எ-று. ௰௯

அப்பொழுதானுமாற னடித்தழும்பிருக்குந்தோளு
முப்பொழுதிறைஞ்சுந்தேவர்முடித்தழும்பிருக்குந்தாளு
மைப்பொலிகுழலாள்கொங்கை வளைத்தழும்பிருக்குமார்பு
மெய்ப்பொலிவீறுமாகத் தோன்றினார்விடையின்மீது.

இ-ள், அக்காலத்தில்பரமசிவன் பாண்டியராஜன் அடித்தழும்புதிருந்தோள்களும் மூன்றுகாலத்திலும்வணங்குகின்ற தேவர்களுடைய கிரீடங்களில்தழும்பிருந்ததிருவடிகளும் மேகம்போல்விளங்குங்கூந்தலையுடைய பார்வதி முலைத்தழும்பும் வளைத்தழும்பு மிருக்கின்ற மார்

பும்தேகத்திற்பொலிந்த திருநீறுமாய் ரிஷபவாகனத்தில் எழுந்தருளி
னார்-எ-று. ௨௧

அந்தரத்தமரரெல்லா மலர்மழைசொரியவானிற்
றுந்துமிமுழக்கத்தோடே சுருதிகண்முழங்காநின்ற
விந்திரன்றிருமாறேவ ரிறவியைத்தொழுதுநின்றார்
சுந்தரக்கனிவாய்பின்னுமீசனைத்தொழுதுநின்றாள்.

இ-ள். ஆகாயத்தில்தேவர்களியாவரும் புட்பவருஷம் பொழியத் தேவதுந்துமி முழக்கத்தோடுவேதங்கள்முழங்கின தேவேந்திரனும் விட்டுணுவும்தேவர்களும் பார்வதியைத்தொழுதார்கள் அழகியகனி போலும்வாயையுடைய அம்மையும்பரமசிவனைவணங்கினின்றாள்-எ-று.

ஒண்ணுதல்விடைமுன்சென்று பணிந்துளமுருகிப்பூசை
பண்ணுதல்புகழ்தலாகிப் பணிந்தனளவளைநோக்கிக்
கண்ணுதலுனக்குவேண்டும் வரமெதுகழறுகென்றா
னொண்ணுதல்பிறிதொன்றில்லை யிடப்புறந்தருதியென்றாள்.

இ-ள், விளங்குகின்றநெற்றியையுடையஅம்மை ரிஷபவாகனத்தின்முன்பாகச்சென் நமஸ்கரித்துமனமுருகிப் பூசைசெய்துபுகழ்ந்து வணங்கினாள் சுவாமி பார்வதியைப்பார்த்து உனக்கு வேண்டிய வரம் யாதுசொல்லென்றார் அதற்கு அம்மையும்யாதும் வேண்டிலேன் உடலிடப்பாகத்தை அருளுமென்றுகேட்டாள்-எ-று. ௨௨

அத்தனுமொழிவானென்கண் புதைத்தாலடைந்ததீமை
இத்தலத்தினியபூசை யியற்றலாலகன்றதிந்த
மெய்த்தலந்தனக்குத்தென்பா லொருநகர்விளங்கித்தோன்று
முத்திமாநகரந்தன்னை நினைத்தபேர்க்களிக்குமதூர்.

இ-ள், அதற்குபரமசிவன் அருளிச்செய்வார் கண்களைமூடியதினாலே அடைந்தபாவம் இந்ததலத்தில் இனிமையானபூசைசெய்தலினால்நீங்கியது இந்தமேன்மையான தலத்துக்குத்தென்பாரிசத்தில் ஒருநகரம் பிரகாசிக்கும் அதைநினைத்தால் முத்தியுண்டாம்-எ-று. ௨௩

ஆரணன்றிருமாறேட வடிமுடியொளித்துஞானப்
பூரணவொளியாய்மேல்கீ முலகெலாம்பொருந்திநிற்போந்
தாரணியவர்க்குமற்றைச் சயிலமாயிருப்போமங்கே
வாரணிமுலையாய்பாகந் தருதுமேவாம்வருதியென்றார்.

இ-ள், பிரமனும் விஷ்ணுவும்தேடப் பாதமும் சிரசும் அவர்களுக்குத்தெரியாமலொளித்துப் பூரணமாகிய ஞானவெளியாய் மேல்

சோதிச்சுடர்களெல்லாம் ஒன்றாய்நிற்போம் பூமிகளிலிருப்போர்க்கு மலையுருவமாயிருப்போம் அவ்விடத்தில் வந்தால் கர்ச்சனிக்க தனத்தையுடைய பெண்ணை இடப்பாகத்தை தருவோம் வாருமென்றார் பரமசிவன்-எ-று. உச

என்னலு மிறைவிசொல்வா ளினிமைசேர்கயிலைகாசி
தன்னினு மினிதுகாஞ்சித் தலமெனவுரைத்தீரிந்த
நன்னிலந்தனக்குச்சோணை நகரமேபதிகமென்றீர்
பின்னையுமுளதோவந்தத் தலத்தினுக்கிணையாம்பேறு.

இ-ள். பரமசிவன் அப்படி திருவாய்மலர்ந்தருளலும் பார்வதி சொல்லுவாள் இனிமைசேர்ந்த கைலாசம்காசி இவ்விரண்டிற்குமதிகமும் இக்காஞ்சிபுரம் அதிகமென்று அருள்செய்தீர் அத்தலத்துக்குச்சமானமான பெருமைபொருந்தியதலம் வேறொன்றுண்டோவென்றாள் பார்வதி-எ-று. உ௫

அவ்வுரைமறுத்தெங்கோ னருணைவானமக்கொப்பான
தெய்வமைந்தெழுத்தின்மாசத் திருத்துமந்திரமுமில்லை
சைவமேயன்றிஞான சமயமுமதனைப்போல
வெவ்வினைதவிர்க்குமூரு மில்லையென்றியம்பிப்போனார்.

இ-ள். அப்படிபார்வதிசொன்னவார்த்தையைச்சுவாமி மறுத்து சைவத்திற்குச்சரியான சமயமும் பொல்லாதபாவங்களைத்தீர்க்கும் அருணாசலத்தலத்திற்குச்சரியான தலமும் உலகத்திலில்லையென்று திருவாய்மலர்ந்து கைலாயத்திற்கெழுந்தருளினார்-எ-று. உ௬

கொம்பனாள்பொருப்பரையன் றிறைவனைக்குவித்துப்போற்றி
கம்பையாறகன்றுகாஞ்சித் தடத்தையுங்கடந்துவேலன
தும்பிமான்முகத்தோன்கன்னி வயிரவர்கணங்கள்சூழச்
செம்பொனாள் கவரிவீசச் சிவிகைமேற்சிறந்துசென்றாள்.

இ-ள். புட்பக்கொம்பையொத்தபார்வதிசுவாமிநான் தெரியாமற் சொன்னவார்த்தையைப் பொறுத்துக்கொள்ளுமென்று இரண்டுகைகளையுங்குவித்து வணங்கிக்கம்பையாற்றைவிட்டுக் காஞ்சிபுரத்தையுங் கடந்துசுப்பிரமணியர் கணபதிசத்தக்கன்னிகள் வயிரவர் சிவகணங்கள்சூழவும் இலட்சுமிகவரிவீசவும் பல்லக்கில் எழுந்தருளினாள்.எ-று.

மண்மகள்மகிழப்பட்ட மரங்களுந்தழைத்துவீறிக்
கண்மலர்சொரியுங்கல்லு மலைகளுங்கரைந்துசோர

வெண்மலர்மடவாள்வாழ்த்தக் கமலத்திரண்டுநீங்கி
விண்மதிபுரைத்தாள்மற்றோர் வெள்ளிடைமருங்கிற்சேர்ந்தாள்

இ-ள். பூமிதேவிக்குச் சந்தோஷமுண்டாகப் பட்டுப்போனமரங் களுந் தளிருண்டாகித் தழைத்துத்தேனோடும் புட்பங்களைச் சொரிய பாபரமகலனுகளும் பெரியமலைகளுங்கரைந்துருக வெள்ளைத் தாம ரைப்பூவில் வாசஞ்செய்யும் சரஸ்வதிதோத்திரஞ்செய்ய இரண்டுகாத மாயபோய்ச் சந்திரனையொத்த முகத்தையுடைய பார்வதிதேவி வெளி யிடைநிலிருந்தினள்-எ-று. ௨௮

மெய்பவனுமையாரென்று வினவியகாரணத்தானிலக்
கையவன்மரகதத்திற் கரியவள்சரமுப்காலுஞ்
செய்யவள்வாருத்தினுமொன் றுவிதத்துயர்சிதைப்பான்போலப்
பையமேற்கடலிற்போய்த்தான் குமரவேள்பந்தல்செய்தான்

இ-ள். சூரியன் தன்னை யாரென்று பரசிவனைக் கேட்டதனாலே நிலாப்போன்றநகையும், மரகதம்போன்றவடிவமும் தாமரைப்பூப்போ ன்ற உள்ளங்கையும் உள்ளங்காலும் பொருந்திய அம்மைசாபத்தினால் வருகிறதென்றறிந்து தன்றுயரை விட்டு விடுகிறவன்போல மெள் ள மெள்ள மேற்குச்சமுத்திரத்தில்விழுந்து அஸ்தமித்தான் சுப்பிரம ணியர் அம்மையிருக்கிறதற்காக ஒருபந்தலில் போட்டுவைத்தார்

அத்தலத்திற்கு வாழைப்பந்தலென்று இக்காலத்தில் வழங்கிவரு கின்றது.

அன்னையுங்குகனைநோக்கி யரம்பையாற் பந்தல்செய்து
புன்னிருகரமுஞ்சால வருந்தினையெனப்பாராட்டிப்
பின்னுமோர்கருமஞ்சந்தி முடிப்பதற்கினியநன்னீர்
நைந்நிறைவேலையேவி யழைத்திடுகணத்திலென்றாள்.

இ-ள். அதன்பின்பு பார்வதிசுப்பிரமணியரைப் பார்த்துவாழை மரத்திலே பந்தல்போட்டுப் பன்னிரண்டுகைகளும் சிவக்கவருத்தத் தையடைந்தாயென்று பிரியவசனஞ் சொல்லி இன்னும் ஓர்வேலையிரு க்கின்றது அதாவனயென்றால் சந்தியாவந்தனஞ் செய்கிறதற்கு நல் ல பரிசுத்தமான ஜலமவேண்டும் உன் கையிற் பிடித்திருக்கிற வேலாயு தத்தை யேவி யழைப்பியென்று சொன்னாள். எ-று. ௨௯

காதலாலினைந்திக்கந்த னோவினைக்கைவேலெவ்வேல்
போதவான்புத்திரண்டன்புகழ்புருகூதன்போதன்
வாதிபாண்டரங்கன்சோமன் வாமனன்பவரைவாட்டி
யீதிமேழ்கிரியைவீட்டிக் கொணர்கதவேலைநீத்தம்

இ-ள். அப்படிச்சொன்ன அளவில் அதிகபத்தியோடு சுப்பிரமணியர் வேலாயுதத்தையேவினர் அதுபோதவான் புத்திரனுடன் புருகூதன்போதன் பாண்டரங்கன் சோமன், வாமன், என்றுசொல்லப்பட்ட எழுபேரையும் அவர்களிருந்த ஏழுமலையையும் உருவி நல்லதண்ணீர் கடலுக்குப்போய்ச் சலங்கொண்டுவந்து அந்தநதிக்குச் சேயாறென்றுபெயர்-எ-று. ௩௧

கந்தனேவளழைத்தவாற்றிற் கடனெலாங்கருத்துவாழைப்
பந்தலிருந்தாளப்போ தமைபாதம்பணிந்தவாற்றிற்
சிந்துநீர்சிவப்பதேதென் றுரைத்தலுஞ்சிறப்பதாக
வந்ததாற்கனையாறு திருமுகற்குறைப்பாள்வஞ்சி.

இ-ள். சுப்பிரமணியர் வரவழைத்த ஆற்றிலே நீர்க்கடனெல்லாமுடித்துக்கொண்டு வாழைப்பந்தலிருந்தாள் அப்போது அம்மையைவணங்கி இந்த ஆற்றுநீர் சிவப்பாயிருக்கவேண்டிய தென்னவென்றுகேட்க அந்தவிவரத்தைச்சுப்பிர மணியருக்குச்சொல்லுகின்றாள் பார்வதி. ௩௨

அனந்தமாபுரத்திலேழு மறையவரறியாக்காலக்
தனந்தயாவினைகள்செய்தா ரதன்பினலறிவுதோன்றி
யனந்தமாமெனயேறு மயன்பதங்கருதிப்பன்று
ளனந்தமாலமதாயுட்கொண் டருந்தவம்புரிந்தாரந்நாள்.

இ-ள். அனந்தமாபுரமென்கிற பட்டணத்திலேழு பிராமணர்கள் அறியாதகாலத்தில் அனந்தவினைகளைச்செய்து அதன்பின்பு நல்லவிவேகந்தோன்றி அதம்மென்கிற அன்னத்தைத் தனக்குவாகனமாகக்கொண்ட பிரமனைக்குறித்து இலைகளையே உணவாகவுண்டு பலநாள் தவம்செய்தார்கள் அக்காலத்தில் எ-று. ௩௩

பதுமனுமவர்முன்சென்று பாவிகாளவரைகளேழில்
விதிமுறைதவஞ்செய்வீரேற் குமரவேள்விடுக்கும்வேலாற்
பொதிசடைமுடியுமுங்கள் வினைகளும்பொடியாமென்று
யதுமுகனுரைத்துப்போன னவருமத்தவமேசெய்தார்.

இ-ள். பிரமன்அவ்வேழுபேர் முன்னேபோய் பாவிகளே நீங்களேழுபேரும் ஏழுமலைகளிலே விதிமுறையாகத் தவம்செய்விர்களானால் அப்போது அம்மைக்குச் சலம்வேண்டிய நிமித்தியத்தால்சுப்பிரமணியர்வேல்விடுவார் அதனாலேஉங்கள் சடையோடுகூடியசிரங்களும்பாவங்களும்பொடியாகப்போமென்றுசொல்லிவிட்டுப்போனார்அவர்களும அப்பிரகாரம் தவம்செய்தார்கள்-எ-று. ௩௪

## வேறு.

எழுவரையு மதிலிருக்கு மெழுவரையும் பிளந்துநீ யெதிர்த்தசூர்
வே, லெழியுமல ருதிரமுடன் புனல்கலந்துசிவந்ததுகாணுகையாலே, ம
ழிவிலையுங் குறைந்தென்ன வடிபணிந்து மகிழ்ந் திருந்தான் மலைமேற்
பட்ட, செழுமுனிவர் குருதியினாற் சிவந்ததுபோற்சிவந்ததுவே செக்
கர்வானம்.

இ-ள். அவ்வெழுபேரையும் அவர்களிருக்குமலை யேழையும்பிளந்
த உனதுடைய கூர்மைபொருந்திய வேலாயுதம் அசுரனைவழிந்தொ
ழுகுகின்ற அவர்களுடைய இரத்தத்தோடுசலங்கலந்து சிவந்துபோய்
விட்டது உனக்கொருகுற்றமுமில்லை யென்றுசொல்ல அம்மை பாதத்
தில்சுப்பிரமணியர் வணங்கிச் சந்தோஷமா யிருந்த அளவில்மலையிலே
தவஞ்செய்துகொண்டிருந்த முனிவர்களுடைய இரத்தத்தினை சிவப்
புநிறத்தையடைந்தது போலச்சிவந்தது செவ்வானம் எ-று. ௩௫

வித்தகர்கண் புதைச்சமுனம் பரந்தவிருண் மறுமையிற்சூழ், வி
னையைப்போல, வத்தலத்தி லுமையவளை யின்பிடித்தா ளெனப்பரந்த
சந்தகார, முத்தமியோ சிறுகதலிய பந்தலின் கீழிருப்பளென்றும் பரிட்
ட, சித்திலப்பந் தரைங்கரால் விளங்கியதுதாரகையா னெருங்கும்வா
னம்.

இ-ள். சுவாமியினுடைய கண்களைமுன்னே மூடினதினாலே உலக
மெல்லாம்பரவியவிருள் ஒருவனுக்கு மறுமையில்வந்து பிடித்துக்கொ
ள்ளுகிற பாவத்தைபபோல் அந்தத்தலத்தில் பிறகுவந்து அம்மையை
ப்பிடித்ததுபோலிருந்தது, பார்வதியோ ஒருவரையும்பந்தலின் கீழிரு
ப்பாளென்று தேவர்கள்போட்டுவைத்த முத்துப்பந்தலையொத்திருந்
து நட்சத்திரங்களால் நெருக்கப்பட்ட ஆகாயம்-எ-று. ௩௬

மாலையெனுங்குமரியிருண்மகிட முகமகற்றியந்திவானச் சோரிக்
கோலமுடன் படிகலிங்கம் கொண்டதுபோன் மதியெழுந்து குடபா
ற்சென்று, தாலமணி மிடற்றிறைத்தன் விழிபுதைக்க விளைந்தவிரு ள
னைத்து நீங்கப், பாலமிசைவெடித்தெழுந்த விழியெனவேயெழுந்தது
செம்பரிதிதானே.

இ-ள். மாலைக்காலமென்னும், துர்க்கை இருட்டாகியமகிடாசுர
ன் தலையையறுத்து அதனால் செவ்வானமென்றுசொல்லப்பட்டஇரத்
தக்கோலத்தோடு படிகலிங்கத்தைக் கைக்கொண்டதுபோலச் சந்திர
னுதயமாகி மேற்குத்திக்கில் அஸ்தமித்ததுநீலகண்டராகியபரமசிவன்

இரண்டுநேத்திரங்களையும் அம்மைபுதைத்த அளவில் நான்குதிக்கும் பரவிய எல்லாவிருளும் போகும்படியாய் விழித்த அச்சுவாமியின் நெற்றிக்கண்போலச் செம்மைநிலம்பொருந்திய சூரியன் கிழக்குத்திக்கில் உதயமானான். எ-று. ௧௭

## வேறு.

கங்கைநிகராஞ் சேயாற்றிற் காலைசந்திக் கடன்கழித்து (டாள்
மங்கைகனகச் சுவிகையின்மேன் மறையோலவழிக்சொண்
பங்கமலர்நீர் வழியடியார் கொடியவினையாம் பஞ்சுமலைக்
கங்கிமலையால் விளங்கிய சீரண்ணாமலைகண் டடிதொழுதாள்.

இ-ள். பார்வதிகங்கைக்குச் சமானமாகிய சேயாறென்கிறநதியில் காலைக்கடனை முடித்துக்கொண்டு பொன்மயமாகிய பல்லக்கிலேறிவேதகோஷ்டமுழங்க நடந்துபங்கப்படுத்து மும்மலங்களை நீக்கிற அடியார்களுடைய பாவமாகியபஞ்சுமலைக்கு நெருப்புமலையாய்விளங்கிய திருவண்ணாமலையைப் பார்த்துச் சாஷ்டாங்கமாகச்சேவித்துக் கொண்டாள். எ-று. ௧௮

வென்றியினாற் வந்தபொருள் பகர்ந்திறவிபுலியாடும் வேனிற் பாலைக், குன்றமெல்லாம் வெறியாடன் முறைலயெலாம் பொதுவர்மின் னார்குறவையாடன், மன்றல்கழிந்திறற்கு விழாவெடுத்துக்கொண்டா டன்மருகவேலி, மூன்றிலெல்லாஞ் சினற்சுரவ முன்னுணச்சி யணங்காடு முந்நீர்கானல்.

இ-ள். வல்லமையினாலே பாலைநிலத்தார் வழிச்செல்வோரை அடித்துப்பறித்த பொருளைப் பங்கிட்டு அந்த நிலத்திலிருக்கிற துர்க்கைக்குப்பலியோடுவார்கள் மலைகளையுடைய குறிஞ்சிநிலத்தில் இருப்பவர்கள் ஆடுபலிகொடுக்கிற பூசைபோடுவார்கள், முல்லைநிலத்தில் இடைச்சிகள் குரவைக்கூத்தாடுவார்கள் கற்பகமாலையைத்தரித்ததேவேந்திரனுக்கு மருதநிலத்தார் உற்சவஞ்செய்வார்கள் முற்றங்களில் சுறுமீன்களை காயப்போடுகின்றகடலருகாகிய நெய்தநிலத்திலிருக்கின்றவர்கள் வருணனுக்குத் திருவிழாச்செய்வார்கள். எ-று. ௧௯

கோதிபெறு காளுக மறையவம்பு சொரிகையினாற் றாய்மையாக, மாதரையெலாங்கலந்த மகிழ்ச்சியினாற்பொன்கலந்து மருவுநீரால், போதவச சனங்களரையைப் பெருகுதலான் . மதுவுடைய பொருதலாலே, சீதரனைநிகராகத் திருந்திநாற் றிசைகளெல்லாஞ்சிறந்ததன்றே.

இ-ள். திருந்தி ஒளிபொருந்திய துதிக்கையையுடைய யானைகள் மறையச் சலத்தைப்பெருக்கி வருதலாலும், பரிசுத்தமாகிய பெரிய

பூமியெல்லாம் பரவிபச தோஷத்தினல் பொற்பொடிகளையுந் திரட்டிக்கொண்டுவருவதாலும் மஞ்சள் பொடிகரையைப் பெருக்கினபடியினலும், தேன் கூடுடைந்து மோதுதலினலும் என்று நதிக்குப் பொருள்கொண்டு சிலேடைவகையால் கானுடைய தேகமறையப்பாணங்களைச்சொரிதலாலும் தூய்மைபொருந்திய கோபிகைகளைச்சேர்ந்திருத்தலாலும் வைஷ்ணவர் உருகத் தயைசெய்தாலும் மதுவென்கிற அசுரன் சாக யுத்தஞ் செய்தலாலும் விட்டுணுவுக்குச் சமானமாக நாலுதிக்கிலுஞ் சிறந்தது-எ-று. கய

இது நதிக்கும் திருமாலுக்கும் செம்மொழிச்சிலேடையணிஎன்க

இதுமுதலாறுபாடல் வயற்சிறப்புக் கூறும்.

மேவுபுனல் பரந்தொழுகக் குளிர்ந்துமயிர் பொடித்தனபோல் விதத்திற் ேறென்றிக், காவிலுறை சுங்கிளியின் சிறகெனவே பசந்து தொண்டைக் கதிராய் முற்றிக், கூவுகின்ற வாரணத்தி னிதம்போல நிமிர்ந்தெழுந்து குறைவிலசாலி, பாவையுமைதவம் புரியுந்தவமிதெனப்பணிந்தனபோற் படிந்தமாதோ.

இ-ள் அந்நதியில்வந்து நீர்பரந்து ஒழுகுகிறபடியினலே குளிர்ந்த பூமிதேவியினுடைய தேகத்தின்மயிர்க்குச்செறிந்ததுபோல் குறைவில்லாத நெற்பயிர்களுண்டாகத் தோப்புகளில் வாசஞ்செய்கிற பச்சைக்கிளிகளின் சிறகுபோல் பச்சைநிறத்தை யடைந்து தொண்டைக் கதிராய் முற்றிக் கூவுகின்ற கோழிக்கழுத்துப்போலநிமிர்ந்து பார்வதிதவஞ்செய்கிற தலம் இது வென்று வணங்கினது போல வளைந்து கிடக்கின்றன-எ-று. சக

சந்ததமு மேருழவர் பத்மபதார்த்தங்கரிந்தரிந்தவரி தடுத்துவரி, இந்திர ஞருலகினெடு போர்செய்வா னெழுமலையாமென்னப் போர்செய், தந்தரமே சுற்றிரவி புரவிகள்போற் கடாவிடுத்தேயரறித் தூற்றி, மந்தரமா மெனக்குவித்து வழங்குகினுக் தொலையானென்மருதவேலி.

இ-ள் எப்பொழுதும் உழவர்கள் பதம்பார்த்து அறுத்து அரிகளைச் சுமையாகவாரித் தேவேந்திரனுலகத்தோடு சண்டைசெய்ய எழுந்தமலை யென்று சொல்லும்படியாகப்போர்போட்டு ஆகாயவழியாகவருகிறசூரியனுடைய குதிரைகள்போலும் கடாக்களைவிட்டு அடித்துவைக்கோலைத் தூற்றி மந்திரகிரிபோலக் குவியல்செய்து எல்லாமனிதர்களுக்குங் கொடுத்தாலும் நெல்குறையாது மருதநிலத்தில்-எ-று. சஉ

கழனியின்மென் றுழத்தியர்தங் கண்ணிழலைக் கண்டுகருங் கயல் வந்தேறும், அயலிலிவர் கொடும்புருவநிழலினைக்கண் டோகிலையொ ன்றஞ்சுமீளு, மயலுதவு மாவகனந் தாமரைப்போ தெனமருவி வ ண்டுசேரும், இயலுமவர் நாசிநிழல்சண்பகப்போ தெனவெரு யிரி யல்போகும்.

இ-ள். வயலிற் களையெடுக்கிற பள்ளத்திகளுடைய கண்ணிழலை க்கண்டு சேற்கெண்டைகள் நம்மினமென்று வந்துசேரும்? பின்பு அ ருகில் அவர்களுடைய புருவநிழலைப் பார்த்துவில்லென்று பயப்பட் டோடும் ஆசையைக் கொடுக்கிற அவர்களுடைய முகத்தைத்தாம ரைப்பூவென்று நினைத்து வண்டுகள்வந்துசேரும் அதன் பின்பு அ வர்களுடையநாசினிழலைப் பார்த்து சண்பகப்பூவென்று ஓடிப்போ கும்-எ-று.

பெரும்பயனத்துழத்தியர்தங் கணைக்காலை வராலெனப்போய்ப் த்பிடிதுப் பள்ளர், திரும்பவுமங்கவிர்புறங்கால் கமடமெனப்பிடி ம ருதத்திலுக்கும் விழியினுக்குங் குலைந்தோமென்று சுரும்பினுடன் கலுழ்வனபோற் றுமரையுங் குவளையுந்தேன் சொரியுமாமோ.

இ-ள். பெரிய வயல்களிற் களைபிடுங்குகிற பள்ளத்திகளுடைய கணைக்காலை வரால்மீனென்று பள்ளர் பிடித்து வெட்கத்தை யடை ந்து மறுபடியும் அப்பெண்களுடைய புறங்காலை ஆமையென்று பி டிக்கு மருதனிலத்தோறும் தென்னங் குரும்பைபோன்ற முலைகளை யுடையபெண்கள் முகத்திற்கும் கண்ணுக்குந் தோற்றுப் போனோ மென்று வண்டுடனே சொல்லியழுகிறதுபோல் தாமரைப்பூவும் நீ லோற்பலமும் தேனைச்சொரியும்-எ-று. ௪௪

வேறு.

நிலையுந்தளிக்குமோதி நெடும்புனல்குடையவன்ன
மழலைவண்டானத்தோறி மருதவண்டானத்தோடு
மழல்விரமணிப்பூணமள்ள ரரிகிணைக்கிசையபலூதுங்
குழலிசைபறுகாணபாதர் குழலிசைபறுகாற் கூட்டம்.

இ-ள. எருமைநீரிலேபோய் விழுந்துகலக்க அன்னம் இளமை யாகியநாரையுடனே மருதநிலத்தில் வளம்பொருந்திய தானத்தை யுடைய சோலையில் ஓடும் பிரகாசம் பொருந்திய இரத்தினாபரணங் களையுடைய பள்ளர்கள் அடிக்கிற அரிகிணை யென்னும் வாத்திய த்திற்கு இசையும்படியாக ஊதுகின்ற புள்ளாங்குழலிசை இல்லாத போது பெண்களுடைய கூந்தலிற் பொருந்திய வண்டுகள் இசையும் படியாகவூதும்-எ-று. ௪௫

மூசுவண்டினங்களெல்லா மூடிந்தசங்கிலிகளாகக்
காசுநெற்கதிர்களெல்லாங் கன்னசாமரைகள்காட்டத்
தேசுவாய்க்கவளம்பெற்றுந் தேறுகைப்பாகைச்சிந்தி
வாசவன்களிறுபோல மருதம்வீற்றிருந்தமாதோ.

இ-ள். ஒழுங்காய் மொய்த்துக் கொண்டிருக்கிற வண்டின் கூட்டங்கள் சங்கிலியாகவும் இரத்திநம்போலும் நெற்கதிர்கள் சாமரை போன்றதாகவும் பிரகாசம்பொருந்த வளப்பம்பெற்றதென்கிற பொருளைச் சிலேடையாகக்கொடுக்கும் அழகிய வாயினாலே கவளம் பெறுதலாலும பருவங்கொணடதேனாகிய அமிர்தத்தைச்சிந்தியென்னும் பொருளைக் கொடுக்கும் தேறித்தன்கணணிருக்கின்றபாகனைத் தளளி கொல்லுதலாலும் தேவேந்திரனேறுகிற அயிராவதமென்னும் யானைபோல மருதநிலம் வீற்றிருந்தது-எ-று.

தேசுவாய்க் கவளம்பெற்று என்பதைப் பிரகாசம்பொருந்தவ் வளப்பங்களைப் பெற்றுஎன்றும் யானைக்குப்பிரகாசத்தை யுடைய கவளம்பெறறு எனப்பொருள் கொள்க, தேறுகப்பாகைசிந்தி என்றதை சிறநததேனாகிய அமிர்தத்தை சிநதி என்றுகொணடு யானைக்கு தேறித் தன்கணணிருக்கின்ற பாகனைத் தள்ளியென்று கொளக.

நாலடித்தரவுக் கொச்சகக்கலிப்பா.

பண்ணார்கமலப் பழனப்பதிநீங்கி
மண்ணோடர்போற்றும் வடவீதியுற்றுறுகி
யண்ணாமலையா னடிக்கமலஞ்சென்றுதொழ
விண்ணார்கொடிநெடுந்தேர் வீதிகளின்மேவினான்

இ-ள். வண்டுகளிசை பாடுகின்ற தாமரைபுட்பங்களுடைய மருதநிலத்துறைவிட்டு நீங்கி பூலோகத்தார் வணங்கும் வடக்குவீதியிலெழுந்தருளி அருணசலேசருடைய பாதாரவிந்தத்தைப் போய் வணங்க ஆகாயத்தை யளாவிய கொடிகளையுடைய தேர்களிருக்குங் கிழக்குவீதியில் வந்தாளபார்வதி-எ-று.

கலி-விருத்தம்.

நச்சுகோபுரத் துச்சிமேவிலோ
வச்சிரத்தினன் மதியின்மாசுபோம்
வச்சுமாமணிச் செம்மையாலினன்
பச்சையாளெல்லாம் பவளமாருமே.

இ-ள். யாவரும் விரும்பப்பட்ட கோபுரத்தின் சிகரத்தினருகில் சந்திரன் வரும்போது அக்கோபுரத்திலிழைக்கப்பட்டிருக்கிறவெட்பற்றவச்சிரங்களினலே தனது களங்கத்தை நீங்குவான் இன்னும் அக்கோபுறத்தி லிழைத்திராநின்ற மாணிக்கங்களுடைய சிவந்தவொளியினல் அதனருகில் வரும்போது சூரியன் இரதத்திற்கட்டியபச்சைக்குதிரைகளேழும்பவளக்குதிரைகளாகத்தோன்றும்-எ-று.

வேற்றுமேருநேர் மேடைமீதினும்
போற்றுகார்மதிர் புரிசைமீதினும்
தோற்றுநீலமா மணியின்சோதியா
லேற்றவானதி யமுனையானதே.

இ-ள். வேறுவேறாகி மேருவையொத்த மேடைகள்மேலும் மேகங்கள் சஞ்சரிக்கின்ற மதில்கள்போலும் இழைத்திருக்கும் நீலரத்தினத்தின் பிரகாசத்தினுல் ஆகாயத்திலிருக்கும் கங்கையமுனைபோல் கறுப்புநிறமடைந்தது-எ-று. சஅ

பரவையாமெனப் பணைமுழங்கவே
யரிவைமாதரா ராடரங்கின்மேல்
விரவுபச்சையின் கதிரைவெய்யவன்
புரவிகொளவிடும் புல்லென்றுன்னியே.

இ-ள். சமுத்திரம் போல வாத்தியங்கள் முழங்கப்பெண்கள் நாட்டியஞ் செய்கின்ற மேலுப்பரிகையி லிழைத்திருக்கும் பச்சைரத்தினங்களுடைய கிரணங்களைப் புல்லென்று நினைத்து சூரியன்இரதத்திற்கட்டிய பச்சைக்குதிரைகளேழுங் கொளவும்-எ-று ருய

நாலடித்தரவு கொச்சகக்கலிப்பா.

அத்தகையவீதிகடந்துமணி யாலஞ்சேர்ந்
துத்தமனையென்னையா ளுடையானைச்சோணகிரி
வித்தகனைக்கண்டு பணிந்துருகிமீண்டுபல
சத்திகள்தம்மோடு தலைச்சுரத்தைமேவினுள்.

இ-ள். அப்படிப்பட்ட தன்மையையுடைய வீதியைத் தாண்டி அழகுள்ள கோயிலுக்குட்போய் உத்தமரை என்னையாட் கொண்டவரை அருணசலத்திலிருக்கின்ற ஞானசொரூபரைத்தரிசித்து நமஸ்கரித்து உருக்கத்தையடைந்து திரும்பிப் பலசத்திகளுடனே தலைச்சுரமென்கிற மலைச்சாரலை யடைந்தாள் அம்மை-எ-று, ருக

ஊசியிலோர்கால்விரலை யூன்றியொறுகான்மடித்து
நாசிமிசைவிழிகளையு நாட்டியன்முட்டித்

தேசினமுதுருகுதெள் ளமுதையுண்டுதவக்
கோசிகனைப்போல்முயல்வார் * கோடானகோடியே.

இ-ள். ஊசியிலே ஒருகாலின் விரலை யூன்றிக்கொண்டு ஒருகா லைமடித்து மூக்குநுனியிலே கண்களைச் சேர்த்துப்பஞ்சாக்கினியை வளர்த்து பிரகாசமான அமிர்ததாரணைசெய்து பிரமாந்திரத்தின் வழியாய்வருகிற அமிர்தத்தை சாப்பிட்டு விசுவாமித்திரன் போலத்தவஞ்செய்வார் அனேகங்கோடிபேர்-எ-று. ௫௨

நாடுமலமூன்றகற்றி நல்வினையுந் தீவினையுந்
சாடிமனமிழந்து தானிழந்துதன்மயமாம்
வீடுபெறவிரும்பி வேட்கைபிறிதில்லாமற்
கூடுசிவஞானியர்கள் கோடானகோடியே.

இ-ள். ஆணவம் காமியம் மாயையென்கின்ற மும்மலங்களையும் நீக்கி நல்வினை தீவினை யொப்புவந்து மனமென்பது இறந்துதற்போதங்கெட்டு உலகம்சிவசொரூபமாய் மோட்சம்பெறும்படியாக ஆசைகொண்டு மற்றோராசையுமின்றிச் சிவஞானம்பெற்ற ஞானிகள்கோடிபேர்கள் அம்மலைச்சாரலில் இருப்பார்கள்-எ-று. ௫௩

தொண்டருடனாகமங்கள் சொன்னவிதிமுறைமைத்
தண்டிமுடிவுசவுச ராதியாய்ப்பூசித்
தண்டர்பிரானஞ்செழுத்தை போதியகமகிழ்ந்து
கொண்டகிரியையினர் கோடானகோடியே.

இ-ள். அடியார்களோடு ஆகமங்கள் சொன்ன விதிமுறைப்படி நூரியன்முதல் சண்டேசுரர்அந்தரமாகப் பூசைசெய்து தேவருக்கெல்லாம் முதல்வனான சிவபிரானுடையபஞ்சாட்சர மந்திரத்தைபோதி மனமகிழ்ந்து கிரியைகளை நடத்துகிறவர்கள் கோடானகோடிபேர்

நேருமியமநியமா தனவகையும்
பேர்பிராணாயாம் பிரத்தியாகாரமொடு
தாரணையான சமாதிநிகைதன்னிலுமெய்
கூறுமுயலியோகியர்கள் கோடானகோடியே.

இ-ள். இயமம், நியமம் ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை தியானம், சமாதியென்று சொல்லப்பட்ட அஷ்டாங்கயோகங்களின்வகைகளை யறிந்து அவைகளைத் தேகசிரம்பட்டு முயல்கின்றயோகியர்கள் அனேகம்கோடிபேர்கள்-எ-று. ௫௪

---

* கோடானகோடியே யென்பது கிராமிய வழக்கச்சொல்.

மாதர்களின்னசெயல் செய்யும்வகைபார்த்துச்
சூதவனஞ்சூழ்ந்த சுனையுஞ்சுனைசூழ்ந்த
சீதவருவிகளும் பார்த்துச்சிறப்புற்றுக்
கோதமனாச்சிரமந் தன்னிற்குறுகினாள்.

இ-ள். மகத்தாகிய தவமுடையோர்கள் செய்யும் செய்கையை ப்பார்த்து மாந்தோப்புச் சூழ்ந்த சுனையுஞ்சுனைசூழ்ந்த சீதளமான அருவிகளையும் பார்த்துச் சுறப்பையடைந்து அவ்விடத்தில் இருக்கிற கௌதமருடைய ஆசிரமத்தில் அம்மன் சேர்ந்தாள்-எ-று, ௫௬

அந்தவிடத்துமையாள் செல்லவகலிகையு
மைந்தனும்வந்தேத்தினார் வாழ்த்திமறைக்கௌதமனார்
முந்திமுனிலெவ்விடத்தே யென்றாள்முனிபுதல்வன்
தந்தைமலர்தருப்பைக் கெய்திபதுஞ்சாற்றினான்.

இ-ள். அக்கௌதமருடைய இடத்திற்கு அம்மைபோனவுடனே அவரது பெண்சாதி அகலிகையும் புத்திரராகிய சதானந்தரும் வந்துபணிந்தார்கள், அம்மை ஆசிர்வதித்து வேதங்களையுணர்ந்த முதன்மையான கௌதமரிஷி எங்கேயிருக்கிறாரென்று கேட்கச் சதானந்தர் தருப்பை கொண்டுவருகிறதற்குப் போனாரென்று சொன்னார்-எ-று.

பின்னுமவனுரைப்பான் பேதைமையேன்புன்குடிலில்
கன்னலமுதே கணப்போதிருந்தருளி
லன்னவனைக்கொணர்வே னென்றேபடிதொழுது
தன்னையளித்தவன்பாற் சென்றான்சதானந்தன்.

இ-ள். மறுபடியும் பார்வதியைப் பார்த்துகருப்பஞ்சாறு போன்றபார்வதியம்மையே அறியாமையுடைய என்குடிசை வீட்டில் க்ஷணப்போது இருந்தால் என்தகப்பனாரைக்கொண்டுவந்து சேருகிறேனென்றுபாதங்களைத்தொழுது தன்னைப்பெற்ற கௌதமரிடத்திற்குப் போனார் சதானந்தர்-எ-று. ௫௭

இங்கிவன்செல்போதி லிளந்தருப்பைகொய்துமுனி
புங்கவர்கள்சூழ்ந்த வருமுனிவன்பூத்தலத்து
துங்கவனக்கற்பகம்போற் றோன்றுதலாலிந்தவனந்
தங்கள்வனமல்லவென்று சங்கையுற்றுநோக்கினான்.

இ-ள். இப்படிசதானந்தர் போகிறபோது இளமையாகிய தருப்பைக்கொய்து அனேகமுனிவர்கள் சூழக்கௌதமர் வருகிறதற்குமுன்னே இவ்விடத்தில் எல்லா விருக்ஷங்களும்புஷ்பித்துக் கற்பகவிரு

கூம்போலக்காணுகிறபடியால் நம்முடைய வனமல்லவே இதுபாரு டையதென்று சந்தேகப்பட்டுபோர்த்தார்-எ-று. கூக

இத்தலத்தில்வந்தவரா ரென்றுரைத்துமாதவற்குப்
பத்துருவந்தந்த முனியும்பராசரனு
மத்திரியுமப்புதுமை யாராயுமெல்லையிற்றன்
புத்திரனைக்கண்டுவரவென்னபுகலென்றான்

இ-ள். இவ்விடத்தில்வந்த பெரியோர்கள் யாரென்று விட்டுணு வுக்குப்பத்துதரம்பிறக்கச் சாபங்கொடுத்தபிருகு ரிஷியும்பராசரரு ம் அத்திரியும் அப்புதுமை விசாரிக்குமிடத்தில் தம்முடைய பிள்ளை சதானந்தரைக்கண்டு இவ்விடத்திலுண்டாகிய விசேஷம் என்னவெ ன்றுகேட்டார் கௌதமர்-எ-று கூ௰

கலிவிருத்தம்.

தாதையிவைகேளிறைவந் தங்களையளிக்குஞ்
சோதியிவணெய்தினளெனத்தொழுது
ஓதபறைதேடுமவ ணக்குடிசைமேவற்
கேதுதவமேதுதவ மேதுதவமென்றான்.

இ-ள். சதானந்தர் தன்தகப்பனாராகிய கௌதமரைப்பார்த்து ஐ யா பிரமன் முதலாகியஜீவரையுந்தன்னிடத்தி லுண்டாக்கியதேசோ மயமாகிய பராசத்தி இவ்விடத்தில் வந்திருக்கிறாளென்று வணங்கிச் சொல்லாதசொரூபமாகிய வேதங்கள் தேடுதற்கரிய அம்மை நம்மு டைய குடிசையில்வர என்ன தவம்செய்தோமென்றார்கௌதமர்.எ-று

ஓடினனணைத்துமக னுச்சிமைமுகந்தா
னாடினன்மகிழ்ச்சியெனு மாழ்கடல்புகுந்தான்
பாடினனெடுத்தருணை பார்மிசைபெறிந்தான்
வீடினதநந்தம்வினை வேரினுடனென்றான்

இ-ள். கௌதமர் இவ்வார்த்தையைச்சொன்ன சதானந்தரைக் கட்டிபணைத்து உச்சிமுகந்து ஓடினார், திருக்கூத்தாடினார் சாதோஷ மென்கிறசமுத்திரத்திலாழ்ந்தார், பாடினார், தருப்பையைப்பூடியிலே பெறிந்துவிட்டார், என்னுடையபாவம்வேருடனே கெட்டுப்போயிற் றென்றுசொன்னார்-எ-று. கூ௨

அத்திரிமுதற்றலைமை யந்தணாகளெல்லாம்
கைத்தலமெடுத்தனர்நடித்தனர்களிப்பால்
வித்தகியிருக்குமிட மேவியெதிர்கண்டார்
பத்திவலையிற்படு பாதங்களில்விழுந்தார்

இ-ள். அத்திரிஷிமுதலாகத் தலைமைபெற்ற ரிஷிகளெல்லாம் இரண்டு கைகளையுந் தலைமேல்வைத்துக் கூத்தாடினார்கள் சந்தோஷத்துடனேபார்வதியிருக்கிற இடத்தையடைந்து எதிரே கண்டுபக்தியாகியவலையிலே அகப்பட்டுக்கொள்ளுகிற பார்வதியினுடைய பாதத்தில் விழுந்து நமஸ்கரித்தார்கள்-எ-று. கூஙு

நின்னிலைமைகன்னியிறை நீள்பிரமசாரி
என்னுமறையன்றுமுதலின்றுவரையெல்லா
முன்னிடையுதித்துலகுயிர்த்தொகைகளெலலா
மன்னையெனுமுன்பெருமையாரறியவல்லார்.

இ-ள். தாயே நீயோ கன்னிகை, சுவாமியோ நித்திய பிரமசாரியென்றுசிருஷ்டிதொடங்கி இதுவரைக்கும் வேதங்களெல்லாஞ் சொல்லிக்கொண்டிருக்கின்றன. அப்படியிருக்க உன்னிடத்தில் உலகங்களிருக்கின்ற எல்லாவுயிர்களுந் தோன்றித்தாயென்றுசொல்லும் அப்படிப்பட்டஉன்பெருமையை யாரறியப்போகிறார்கள்-எ-று.

நித்தனைமுகற்றருமை நிந்தனதிடத்தே
சத்தியெனநீவருவை சத்திசிவமென்றே
இத்தகைமைகொண்டுயிர்கள் யாவையுமளிப்பா
யத்துவிதமாகுமுனை யாரறியவல்லார்

இ-ள். நித்தியமாக விருக்கிறசிவபிரானை முதலில் உண்டாக்குவாய்அச்சிவனிடத்திலே சத்தியாக வருவாய் சத்திசிவமென்கிற தன்மையைக்கொண்டு உயிர்களையெல்லாம் பெறுவாய் அத்துவிதசொரூபமாகிய உன்னையாரறியப் போகிறார்கள்-எ-று. கூரு

மெய்ப்பொருண் மகேசன்றன் வேதனரியானல்
மைப்பரும கேசியுமை வாணிதிரு வாவை
இப்படியுமன்றியவ னெப்படியெடுத்தா
னப்படியு மாவையுனை யாரறிய வலலார்

இ-ள். பரமசிவன், மகேசுவரர், உருத்திரர், பிரமன் விஷ்ணுஆனல் நீ மகேசுவரி, உருத்திரி, சரசுவதி இலட்சுமியாகிய சத்திகளாய்இப்படியுமல்லாமல் அச்சிவபிரான் எப்படிப்பட்டஉருவங் கொண்டனரோ அதற்குத்தகுந்த உருவங்கொள்ளுவாய் உன்பெருமையை ஆரறியவல்லவர்கள்-எ-று. கூசா

நெஞ்சுருகி மாதவர்களின்றிவைபுகழ்ந்தார்
வஞ்சியிடை கௌதமனும் வந்தனன் வரும்போ
தஞ்சலிபுரிந்தனனதற்கு முனமேமின்
கஞ்சமல ரென்னவிரு கால்களில் விழுந்தான்

இ-ள். மாதவத்தையுடைய ரிஷிகளெல்லாம் நெஞ்சுமுருகிநின்று இப்படிதோத்திரஞ்செய்தார்கள். அச்சமயத்தில் பார்வதிசமீபத்தில் கௌதமர் வரும்போதே இரண்டுகைகளையுஞ் சிரத்தில் வைத்துக்கூப்பித் தாமரைமலரையொத்த அம்மையினது இரண்டுபாதத்திலும் நமஸ்கரித்தான் எ-று கூஎ

அன்பிலுயர் கௌதமனு மன்னையைவணங்கி
பின்புர வுரைப்பமய னெண்டிசை புரப்போர்
தன்சிர மிதிக்கரிய தாளிணைக ளென்றன்
புன்குடில் மிதிக்கவென புண்ணியமுடைத்தேன்.

இ-ள். பத்தியினாலே உயர்ந்த கௌதமரிஷியும் பார்வதியம்மையை வணங்கிச்சொல்வான் பிரமன் அஷ்டதிக்குப்பாலகர் சிரத்திலே வைத்ததற்கு அருமையான பாதமிரண்டும் அடியேனுடைய புன்மை பொருந்திய சிறுவீட்டில்மிதிக்க என்னபுண்ணியம்செய்தேன். கூஅ

இந்தமொழி சொற்றலு மிளங்கொடியும் வேலன்
றந்தையிடை சென்றிடுவ னங்கதுதவிர்ந்தால்
சிந்தைமகி ழுன்னிடையில் வந்துகுறைதீர்வேன்
மைந்தனெனமோதினன் மறுத்துமிவை சொல்வான்.

இ-ள். இவ்வார்த்தையைச் சொன்னஅளவில் இளமையாகியகொடிபோன்ற அம்மையும் பிள்ளையாகிய கௌதமனே எனக்கோர் குறைவந்தால் சுப்பிரமணியனிடத்திலும் கணபதியிடத்திலுஞ் சென்று தீர்த்துக்கொள்வேன் அவ்விடம்விட்டால் என்மேல் அன்புவைத்த உன்னிடத்தில்வந்து தீர்த்துக்கொள்வேனென்றுசொல்லி மறுபடியுஞ்சொல்வான் எ-று. கூகூ

நாயகன்மொழிந்திட நடந்தபடி யெல்லாம்
பாயிரமெனும்படி பகர்ந்தன ளெவர்க்குந்
தாயிவை மொழிந்தளவி னிற்சதமகற்கன்
றாயிரம்விழித்திர ளளித்தமுனி சொல்வான்.

இ-ள். பரமசிவன் சொன்னபடி பூமியில்வந்து தர்மச்சமாசாரமெல்லாம் பாயிரத்தோடுகூடிய நூல்போல முறையாகவிரித்து எவருக்கும் தாயாகிய பார்வதி சொன்னபோது முற்காலத்தில் தேவேந்திரனுக்கு ஆயிரங்கண்ணுண்டாகச்செய்த கௌதமர் சொல்வார்.

இத்தல முதற்றல மிதன்பெயர் மிலேச்ச
முத்தம மிநிற்றரும மொன்றிபல வாகும்,

மெய்த்தவ மியற்றிடயில் வென்னிடையின் மேல்வக்
தத்தனு மிடற்புற மளித்தருளு மென்றார்.

இ-ள். இத்தலம் முதன்மையான தலம் இதனுடையபேர் தலேச்சுரம் இது மிகவுமுத்தமமானது இதில் ஒருபுண்ணியத்தைச் செய்தால் பலவாய் விருத்தியாகும இதிலிருந்துக்கொண்டு நீ மெய்மையாகிய தவம் செய்தால் மேன்மையுள்ள ரிஷபவாகனத்தின்மேலெழுந்தருளிய பரமசிவன் உனக்கு இடப்பாகம் கொடுப்பாரென்றார் கௌதமர் எ-று. எக

மாலயன் வசுக்கண்மக வான்முனிக ளைந்தோர்
சாலைகள் சமைத்ததில் தனித்தவ முடித்தார்
காலமிட மன்றுசெயல் கைப்பலமி தென்றான்
மூலமுதல் வலலியு முடிப்பனிது வென்றாள்.

இ-ள். அம்மையை விட்டுணு பிரமன் அஷ்டவசுக்கள் தேவேந்திரன் அநேகமுனிவர்கள் அவரவர்கள் இடஞ்செய்துக்கொண்டு ஒப்பற தவஞ்செய்து நினைத்தகாரிய முடித்துக்கொண்டார். நீவந்தகாலமு மிடமுநன்மையாகும் இவ்விடத்தில் நீதவஞ்செய்தால் கைப்பலமாகி முடியுமென்று கௌதமர்சொலல எல்லாப்பொருள்களுக்கு மூலமாகிய அம்மையும தவஞ்செய்து என்கருத்தை முடித்துக்கொளளுகிறே னென்றாள் எ-று. எஉ

எண்சீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம.

கௌதமனே முதலாய் முனிவர்க்கெலலாங் குளிர்ந்தமொழி பகர்ந்துவிடை கொடுத்துச்சோணை, பூதரமா மதன்குணபாற் பன்னசாலை புதிதமைப்பித் தகமகிழ்ந்து புறம்புகாக்க, மாதரெழுவரைப மைழக்கு நாலுபாலின் வாயிலையெண வயிரவர்கள் மகிழ்ந்துகாக்க, வாதரவினிருந்திமைநதர் மருங்குகாக்க வரிதரிபுட்புறங்காக்க வமைத்தாள் மன்னோ.

இ-ள். கௌதமர்முதலான முனிவர்க்கெல்லாம் பிரியவசனஞ்சொல்லி உத்திரவுகொடுத்து அருணாசலத்துக்கு கிழக்குப்பக்கத்தில் பர்ணசாலை புதிதாகச் செய்வித்து சத்த மாதாக்களைப் புறக்காவலாக வைத்து நாலுவாசல்களையும் எட்டுவயிரவர்கள காக்கவும் துர்க்கை உட்பக்கங் காக்கவுஞ் செய்தாள் பார்வதி-எ-று. எங

கொந்தளகஞ் சடைபிடித்து விரித்துப்பொற்றோட் குழைகழுத்திற் கண்டிகையின் குப்பைபூட்டி, பூந்துகிரவுரிசிகர்ப் பட்டாடைநீக்

ருத்திரமாபுரிசாத்தி யுத்தூளத்தாள், வித்தைதிருநீறணிந்து கனற்குட் காய்ந்து விளங்குமூசியிலொருகால் விரலையூன்றி, அந்திபகலி றைபதத்தின் மனத்தை யூன்றி யரியபெருந் தவம்புரிந்தா ளகிலமீன்றாள்.

இ-ள், புட்பங்களைத் தரிக்கின்ற கூந்தலைச் சடைசெய்து விரித்துத் தோள் கழுந்து காதுகளில் உருத்திராட்ச மாலைகளைத்தரித்து ஆடுகின்ற பாம்புரிபோலிருக்கிற பட்டாடையுடுப்பதைவிட்டு மரவுரிதரித்து நெருப்பில் காய்ந்து பளபளவென்று பிரகாசிக்கும் ஊசியில் ஒருகாற் பெருவிரலையூன்றி இராப்பகலாக மனத்திலே பரமசிவத்தைத் தியானமாக நிறுத்தி அரிதாகிய பெரியதவத்தைச் செய்தாள் உலகத்தைப்பெற்ற பார்வதி எ-று. எச


இளைத்தகொடி மருங்குலாள் தெரிபிளைப்ப வினியதவமியற்றுதல்கண் டிளைத்துவாடிக், களைந்துமனந் துடித்துவிழி புதைத்துவாணிக் கண்ணீரின் மூழ்கினாள் கமலத்தாளு, முளைத்துமனந் தளர்ந்தழுது விழுந்தாள் மற்றை யுயிர்களெலாங் கரைந்துகரைந்துருகாநின்ற, வளைத்துவளைத் துரைப்பதென்றாய் வருந்துமாறால் வயிற்றிலுள்ள கருப்பமெல்லாம் வருந்திடாதோ.

இ-ள். மிகவுஞ் சிறிதாகிய கொடிபோன்ற இடைவளைந்த அக்கினிமத்தியிலே இனிமையான தவத்தைச்செய்வதைப் பார்த்துப் பார்த்து இளைத்து வாட்டமடைந்து களைத்து மனம் துடித்து இரண்டு கண்களையும் மூடிக்கொண்டு சரஸ்வதி கண்ணீரால் மூழ்கினாள், இலக்குமி மனம் வருந்திச் சஞ்சலப்பட்டு அழுதுவிழுந்தாள் மற்ற சீவராசிகளெல்லாம் மனங்கரைந்து உருகின தானிதைப்பிரித்துச் சொல்வதனால் என்னபயன் தாயானவள் வருந்துவாளாயின் வயிற்றிலுள்ள கருவாகிய சீவனெல்லாம் வருத்தத்தை யடையாதோ எ-று. எரு

முன்பனியிற் கருதபடாக் கமலம்போல முகந்தோன்றப் பனிகயத்துண் முழுகிநிற்கும், பின்பனிபி லதிசீதவிடத்திற்சேரும் பெருமழைக்குண் மீனென்னப்பேணிநிற்கும், அன்பனிடம் பெறுமனவுமி ஆம்போல்வேண்டு மரியதவம் புரிந்தனளவ் விடத்துவேந்தன், வன்பாணிரிற் றுயிலெனுமால் முதலாந்தேவர் மறைபுகுந்த தவச்சாலை மருங்கிற் சார்ந்தார்.

இ-ள். முன் பனிக்காலத்திலே கருகிப்போகாத தாமரைப்பூப்போல முகமாத்திரந்தெரியக் குளிர்ச்சிபொருந்திய தடாகங்களிலே நின்றும் பின்பனிக்காலத்திலே அதிக சீதளம்பொருந்திய இடத்திலேயிருந்து மழைபெய்கிறபோது அதில்ஒருமீன்போலச் சஞ்சலப்





உ

சிவமயம்.

ஐந்தாவது

பார்வதியார்

# இடப்பாகம்பெற்ற சருக்கம்.

அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

அஞ்சன கிரியில் வாழு மசுரன்று ளார்க்குந்தீர
னஞ்சமே யனையா னந்த நமனுக்கு நமனாய் வந்தோன்
செஞ்சிகை யெரியைத் தீக்குந் திறமையா னளகைநாட்டின்
விஞ்சையான் வருந்தவுள்ள வளமெலாங் கவர்ந்த வீரன்.

இ-ள். நீலகிரியில் வாசஞ்செய்துக்கொண்டிருக்கிற அசுரன் எல்லாரிலும் அதிக பராக்கிரமத்தை யுடையவன் விஷத்திநுக்குச் சமானமானவன அந்த எமனுக்கும் எமனானவன் சிவப்பாகி மேலே யெழுகின்ற கொழுந்தையுடைய நெருப்பைச் சுடத்தகுந்த திறமையையுடையவன் அளகாபுரியில் குபேரன் தரித்திரத்தையுடைய அங்கேயிருக்கிற வளங்களெல்லாங் கொள்ளையிட்டவன் எ-று.

தாமரைக் கண்ணன்றாங்கு மரவினைத் தலைவால்கூட்டி
மாமணிக் கவண்போற் கொள்வன் வன்னிவா கனத்தைவாங்கி
வேமழற் குஞ்சிமைநதர்க் குதவுவன் விமானத் தோடே
சோமனைப் பிடித்துக் கையாற் பிழிந்தமு தருந்துஞ் சூரன்.

இ-ள், விட்டுணு நித்திரை செய்கின்ற ஆதிசேடனைத் தலையையும் வாலையும் ஒருகையினாலே சேர்த்துப் பிடித்து அதன் சிரமணியைக் கவண்கல்லாக எறிந்து விளையாடுவான் அக்கினியைத் தள்ளிவிட்டு அவனேறுகிற ஆட்டை நெருப்பைப்போலச் சிவப்பு மயிரையுடைய தன்பிள்ளைகளுக்கு ஏறக்கொடுப்பான் சந்திரனை அவனேறுகின்ற விமானத்தோடே கையினாலே பிடித்துப் பிழிந்து இவனுடம்பினின்று வருகிற தேவாமிர்தத்தைப் பானம்பண்ணுகிற சூரன் எ-று.

கருதியா மகவான் வெள்ளைக் களிற்றின்மேற் றிரிவன்பின்னைப்
பரிதிதே ரதனிற் பச்சைப் பரிசெலப் பவனிபோவா
னிருதியைச் சுமக்குமாளி யேறுவ னிணத்தின் மூழ்கிக்
குருதிகொப் புளிக்கு வாளென் றெடுத்துயி ரனைத்துங்கொல்வான்.

இ-ள். உயர்வாக நினைக்கப்பட்ட தேவேந்திரனுடைய வெள்ளை யானைமேல் திருவோலக்கம் வருவான் சூரியனுடைய தேரிலேறிக் கொண்டு பச்சைக்குதிரைகளேழும் நடக்கப் பவனியாகப்போவான் நிருதியைச்சுமக்கின்ற ஆளியின்மே லேறிக்கொள்வான் நிணங்களாலே மூழ்கப்பட்டு இரத்தங்களை கொப்புளிக்கும் ஒருவாளாயுதமெடுத்து சருவசிவன்களையுங் கொல்வான் எ-று. ௬

அன்னவன் மகிடமான வாற்றினா லஞ்சிக்காலத்
தென்னவன் மகுட மேறுங் காலினாற் றிரிந்தா னென்றா
லென்னவன் கொடுமை தம்மா லியம்பலா மிலங்குஞ்சோதி
மன்னவன் கிரியைச் சாய்ந்தான் மீனுக்கா வாரிதூர்த்தான்.

இ-ள். அப்படிப்பட்ட அசுரன் எருமைமாட்டு முகத்தையுடைய வனானபடியினாலே தெற்குத்திக்கி லிருக்கின்றஎமன் எருமைக்கடாவின் மேலுமற் காலினால் நடந்து திரிந்தானென்றால் அந்த மகிடாசுரனுடைய கொடுமை நம்மா லெப்படிச் சொல்லக்கூடும் சோதிசொரூபமாகிய சிவபிரானிருக்கிற கைலாயத்தையுஞ் சாயச்செய்தான் மீன் வேண்டியதற்காகச் சமுத்திரத்தையுந் தூர்த்தான் எ-று. ௭

மயனெனுந் தச்சன்செய்த மகிடமா புரத்திலன்னா
னயனறு கரிசி கல்க விருக்குநா ளவனுக்காய
பயனறு நுகர்ச்சி வேண்டி யாயிரம் படைக்கையாளர்
கயமுதல் விலங்கை நாடி வேட்டையாக் கானிடைசென்றார்.

இ-ள். மயனென்கிற தேவதச்சனால் இரத்தின கசிதமாகச் செய்யப்பட்ட மகிடபுரத்தில் அந்த அசுரன் பிரமன் நித்தியம் அறுகும் அட்சதையும் கொடுக்க வாழ்ந்துக்கொண் டிருக்கிறநாளில் அந்த

மும்புசிக்கிற மாமிசத்துக்காக ஆயுதபாணிகளாகிய ஆயிரம்பேர்கள் யானைமுதலாகிய மிருகங்களைத்தேடி வேட்டைமார்க்கமாகக் காட்டுக்குப்போனார்கள் எ-று. ரு

தானவர்சென்றுவஞ்சி தவஞ்செய்தானகத்தைச்சூழ
வானவர்பணியுமட்ட வயிரவர்தொலைத்தாராவி
போனவரழிந்தவாறும் புரிகுழறவமுந்தூத
ரானவரவுணர்கோவுக் கடிபணிந்தறிவித்தார்கள்.

இ-ள். அப்படிவேட்டையாட வெளிப்பட்ட ஆயிரமசுரர்களும் வந்து பார்வதி தவஞ்செய்துகொண்டிருக்கிற வனத்தைச் சுற்றிக்கொள்ள அதைக்கண்டு தேவர்கள்பணிகின்ற காவலாகவிருந்த அஷ்டவயிரவர்களும் அந்த ஆயிரம்பேரையுங்கொன்றார்கள் அவர்கள் இறந்துபோனதும், அம்மைதவம்பண்ணுகிறதும் தூதர்கள் மகிடாசுரன்பாதத்தை வணங்கித்தெரிவித்தார்கள் எ-று. சு

போற்றியங்கவர்கள்சொல்லப் புகைநகைபிறந்ததங்கி
தூற்றியவிருகண்ணா கோளமுஞ்சுழன்றதங்கே
நாற்றிசையுள்ளவேழ நடுங்கியதமையோர்கூட்டங்
கூற்றமுங்காலனுங்கால் காலமுங்குளிர்ந்ததன்றே.

இ-ள். தூதர்கள் வணங்கித்தெரிவித்த அளவில் புகையும்சிரிப்புமுண்டாயின இரண்டுகண்களும் நெருப்புகள்பறக்க வீசின அண்டகோளமும் கிறுகிறென்று சுழன்றது. அஷ்டதிக்கிலிருக்கிற யானைகளும் தலையைத்தொங்கப்பட்டன தேவர்கூட்டம் நடுக்கத்தையடைந்தது எமனும் ஒளித்துக்கொண்டான். ஆலகாலவிஷமும் குளிர்ந்தது எ-று. எ

அப்படிமகிடன்சீறு மளவினிகும்பனென்போன்
செப்பிடுமுனதுகோபம் பொறுப்பரோசிறியரென்றே
முப்புடையிளநீரென்னு முலைச்சிவாழ்வனத்துளாரைக்
கைப்படையதனாற்கொல்வே னெனச்சொலிக்கடிதுபோனான்

இ-ள். அப்படி மகிடாசுரன் கோபிக்குமளவில் நிகும்பாசுரனென்கிறபடைத்தலைவன் அரசனேஉம்முடையகோபத்தை அற்பமானவர்கள் ஆர்பொறுப்பார்கள் என்றுசொல்லி இளநீர் ஒத்ததனமுடையபார்வதி தவஞ்செய்கிற வனத்தி லிருப்போரைக் கையிலிருக்கின்ற வாளால் கொன்றுவருகிறேனென்று சீக்கிரத்திற் புறப்பட்டுப்போனான் எ-று. அ

குடதிசைக்கடலைச்சீறிக் குணதிசைக்கடல்சென்றென்ற
கொடியந்தேர்கரிமாசேனை யெழுந்தனனிகும்பனென்போன்
வடகிரிதனக்குங்கும்ப மாமுனிமலைக்குநேரே
இடைபொருகரியமேரு வெழுந்ததாமென்னச்சென்றான்.

இ-ள். மேற்குச்சமுத்திரத்தின்மேற் கோபித்துக் கிழக்குக்கடல் சண்டைசெய்யப் புறப்பட்டதுபோல் பெரியதேர்களும் யானைகளுங் குதிரைகளும் காலாள்களும் புறம்பட்டதுகள். நிகும்பாசுரன் மகா மேருவுக்கும் அகத்தியரிருக்கின்ற பொதியமலைக்கு மத்தியிலே நிறைந்தஒருபெரிய மேருஎழுந்ததென்றுசொல்லும்படியாய்போனான் எ-று.

வேறு.

எழுந்தவனுமரகதநேர் துரகதமாயிரம்பூண்ட விரதமேறி, வழிந்தகரி மதக்கடலை யெழுந்ததுகளடக்கவுமை வனத்திறசென்றார், கொழுந்துவிடுங்கனலனையார் வரவுகண்டு பலகோடி குன்றம் வீசித் தழைந்தபடைத் தாக்கணங்கு நோக்கணங்கும் பொருதெதிரே தடுத்தாரன்றே.

இ-ள். இப்படிநிகும்பாசுரன் பச்சைக்குதிரை ஆயிரங்கட்டிய தேரிலேறிக்கொண்டு அப்பொழுது எழுப்பியசிறு அணுக்கள்முன் போகின்ற யானைகளின் மதஜலம் சமுத்திரமாகத்தேங்கியிருப்பதை வற்றச்செய்ய பார்வதி தவஞ்செய்யும் வனத்திறகுப்போனான். கொழுந்துவிட்டெரியும் நெருப்பொத்த அசுரப்படைகள் அநேக மலைகள்விட்டெறிய இவர்கள் வருவது கண்டு அம்மையிடத்தி லிருக்கிற தாக்கணங்கு நோக்கணங்கு என்னுமிருவரும் ஆயுதபாணிகளாகப் போய் எதிரேதடுத்தார்கள்-எ-று. ம

சண்டனுருத்திரன்சோமன் கபாலினிகா சங்கரன் கோதண்டனீத, னொண்டெரிய சித்திராங் கதனென்னும் வயிரவர்க ளிருநால்வோரு, மண்டமுக டுகைபகத் தானைகளைத் தொலைத்திட்ட வரிகளைபோலக், கண்டகனுஞ்சாரதியுந் தேருமன்றிச் சேனையெல்லாங் கணத்திற சாய்த்தார்.

இ-ள். ருத்திரன் சோமன் கபாலி தனக்குத்தானேஒத்த சங்கரன் கோதண்டன், வீதன், சித்திராங்கதன் இவ்வெட்டு வயிரவர்களும் அண்டகோட முடைபட யானைகளைக்கொல்லுகிற சிங்கங்கள் போலக் கர்சித்து நிகும்பாசுரனும்-அவன் சாரதியுந்தேருந் தவிரமற்ற சேனைகளையெல்லாம்நொடிப்பொழுதிலேகொன்றார்கள்-எ-று. மக

அட்டவயிரவர்படைய வணங்குகளாற் றனதுபடை யழிதனோ ங்கிவட்டநெடுந்தேர்முடுக்கித்தாக்கணங்கின்முகத்திலெண்ணில் வாளிகோத்தான், விட்டகணைகளைவிலக்கித் தேரோட்டுஞ் சாரதியை வீழ்த்திவாளி, தொட்டகரங்களைப்பிடுங்கி யவனுயிரைக் குடித்தந்த சூரமாது.

இ-ள். எட்டுவயிரவர்களுடைய ஆயுதங்களினாலும் இரண்டுபெண்களாலுந் தன்னுடையபடைமுழுவதும் இறந்துபோனதைப்பார்த்து நிகும்பாசுரன் வட்டமாகியநெடிய தேரை விட்டுக்கொண்டு தாக்கணங் கென்பவளுடைய முகத்திலே கணக்கில்லாத பாணங்களை விட்டான் அப்பாணங்களைவிலக்கித் தேர்நடத்துகிற சாரதியைக் கொன்று அம்புதொடுத்த கைகளை பறுத்துஅவனுடைய தலையையும் அறுத்துக்கொன்றாள் தாக்கணங்கு-எ-று. ௧௨

ஓடினசெங்குருநதி யுடலிழந்து விழுமவுணருயிர்கள்போல, வாடினவெங்குறைத்தலைகளனுதினமு மருந்துகின்றவலகைபோலச், சூடினர்கள்வயிரவரும் தாக்கணங்கு நோக்கணங்குந் தும்பைவாகை, வீடினர்களவுணரென மகிடமுகற் குரைத்தனர் போய் விரைந்துதூதர்.

இ-ள். வயிரவர்களாலும் இந்தயிரண்டுபெண்களாலும் தேகமறுபட்டுச் சீக்கிரத்தில்போகுமசுரருயிர்போல் இரத்தநதி ஓடியது நித்தியம் மாமிசத்தைத்தின்று கூத்தாடுகிறபேய்போல கவந்தங்கள்கூத்தாடினவயிரவர் முதலானவர்கள் தும்பை வாகைமாலை சூடிக்கொண்டார்கள், அசுரர்களிறந்து போனார்களென்று மகிடாசுரனுக்குத் தூதர்கள் சீக்கிரத்தில்போய்ச்சொன்னார்கள்-எ-று. ௧௩

கேட்டளவின் மகிடமுகன் கயிடவன்றன முகநோக்கிக்கிளத்துவானோர், காட்டிலுறைசிறுபேயுங் கணங்களுநம்பெரும் படையைக்கடிந்துவென்றால், நாட்டனுதலவனயன் மாலெனக்கினிமேற்றிறைகொடுக்க நாணுவாரேன், றீட்டிகை புரிந்தெழுந்தானேறினனு யிரங்கரிசூ ழிரதமீதில்.

இ-ள். மகிடாசுரன் இவ்வார்த்தையைக்கேட்ட அளவில்தன்னருகிலிருக்குங் கயிடவன்முகத்தைப்பார்த்துச் சொல்லுவான் ஒருகாட்டிற்சஞ்சரிக்கிற சிறியபேய்களும்கணங்களும் நம்முடைய பெரிய சேனைகளைக்கொன்றனதென்றால் சிவன் பிரமன்விஷ்ணுமுதலானவர்கள்சொன்னபடி கேட்பார்களோவென்று அதிகமாகிய நகைகொண்டெழுந்திருந்து ஆயிரம்யானைகள்கட்டிய தேரிலேறிக் கொண்டான்-எ-று. ௧௪

பதினொருகோடியானைப் பலத்தராய்க்காந்தனீலன்
முதுகரன்குருதியண்டனீசன் சண்டன்முண்டன்
மதுகயிடவன்றீக்கண்ணன் புகைக்கண்ணன்மாலியென்றும்
துதிகொளாறிரண்டுபேரும் தேர்களைத் தூண்டிச்சென்றார்.

இ-ள். மகிடாசுரன்தேரிலேறினவுடனே பதினொருகோடியானை ப்பலத்தையுடையவராகிய காந்தன் நீலன்முதுகரன்குருதி அண்ட ன்ஈசகன் சண்டன்-முண்டன்-மதுகயிடன்-றீக்கணணன் - பகைக்க ண்ணன் மாலியென்று துதிக்கப்பட்ட பன்னிருவரும்தங்கள் இரதங் களை நடத்திக்கொண்டுபோனார்கள்-எ-று. கரு

கரிமுகத்தவர்கிவாத கவசர்கள்காலகேயர்
பரிமுகத்தவுணர்மேதிப்பனை முகத்தவர்கள்பற்றி
எரிமுகத்தவுணர்சீறி யெழும்புலிமுகத்துங்களவ
ரரிமுகத்தவுணர்வெள்ள மாயிரஞ்சென்றவன்றே.

இ-ள். யானைமுகத்தையுடையவர்கள் எருமைமுகத்தையுடைய வர்கள் நெருப்பெரிந்துகொண்டிருக்கிற முகத்தையுடையவர்கள்புலி முகத்தையுடையவர்கள் சிங்கமுகத்தை யுடையவர்களாகிய அசுரர் கூடிய ஆயிரம்வெள்ளம் நடந்தது-எ-று. கசு

பாய்பரியதனிற்பாதி பரிகளிற்கரிகள்பாதி
காய்கரியதனிற்பாதி கடும்பரிக்கொடுஞ்தேர்செல்லப்
பேய்கருங்கொடிகளாடப் புணங்கவெண்கொடிகளாட
வேய்களப்பறைகளார்ப்பக் குறுகினன்விந்தைகானில்.

இ-ள். இப்படிஆயிரம்வெள்ளங் காலாட்கள் புறப்பட்டவுடனே ஐந்நூறுவெள்ளங் குதிரையும் இருநூற்றைம்பது வெள்ளம்யானையு ம்நூற்றிருபத்தைந்து வெள்ளம்தேரும் நடக்கப் பேய்களும் காக்கை க்கூட்டமும் விருந் தகப்படுமென்று களித்துக் கூத்தாடவெள்ளைக் கொடிகளாடப் புள்ளாங்குழல்பேரிகை இவைமுதலான வாத்தியமு ழக்க மகிடாசுரன் அம்மையிருக்கிறகாட்டில்வந்து சேர்ந்தான்எ-று.

அடலவன்வரக்கண்டஞ்சி யடங்குமைக்கபயமென்று
படருறுமுனிவர்கூற வுமையவள்பயங்கடீர்த்து
விடலுடனருகுநின்ற விந்தையைவிரும்பிநோக்கிக் [ன்னி
கடகங்கொண்டெரிவாயென்றாள் விடைகொடுபெயர்ந்தாளக

இ-ள. வல்லமைபொருந்திய மகிடாசுரன் வருவதைப்பார்த்துப யப்பட்டு ஓடிவந்து பார்வதிக்கு அபயமென்று முனிவர்கள்முறைபி

ட்டுச்சொல்ல அம்மை அவர்களுடைய பயங்களைத்தீர்த்துத் தன்சமீ பத்தில்நின்ற பெருமைபொருந்திய துர்க்கையைப்பார்த்து உன்னு டைய கத்தினாலே அவ்வசுரனைக்கொன்று விடென்றுசொல்ல உத்தி ரவுபெற்றுப்புறப்பட்டாள் துர்க்கை-எ-று. கஅ

ஆளிமேற்கன்னிசெல்வ வருணநாயகிமுன்செல்ல
காளிதுந்துமியின்செல்லச் சுந்தரிகணங்கள்செல்ல
ஞாளிமேற்வடுகர்செல்ல நான்மிகிமுறலமாதர்
தூளிமேற்சொல்லத்தங்கள் விடையனமேற்றாறுசென்றார்.

இ-ள். துர்க்கை ஆளிவாகனத்தி லேறிக்கொண்டுபோக அருண நாயகியென்பவள் முன்னேபோகவும் காளிந்துமி என்கிற இருவம்பி ன்னேபோகவும் பார்வதியின் கணங்களும், சுவானவாகனத்தின் வயி ரவர்போகவும் அபிராமிமுதலாகிய மாதரொழுவரும் தங்கள் தங்கள் வாகனங்களிலேறிக்கொண்டு தூசிப்படைபாகத்துகளெழும்பப்போ னார்கள்-எ-று. கக

சென்றுதோமரத்திற்குன்றிற் சிலைகளிற்படையிற்கையிற்
கன்றிடமகிடன்சேனைப்பாதிடைக் கணத்திற்சாய்த்நார்
வன்றிறன்மகிடன்சேனைத் தலைவரும்பகிடன்றானுங்
குன்றெனவெதிர்ந்துகன்னி படையெலாந்துரத்திக்கொன்றார்.

இ-ள். இப்படிதுர்க்கைசேனைகள் போனவுடனே உலக்கையினா லும்மலைகளாலும் வில்முதலாகிய ஆயுதங்களாலும் கைகளினாலும் கோபத்துடனேபோர்செய்கிறமகிடாசுரனுடைய பாதிசேனையை ஒ ருநொடிப்பொழுதிலேகொன்றுவிட்டாள் மகிடாசுரனும் அவனுடை ய சேனைத்தலைவர்களும மலைபோல் எதிர்த்து துர்க்கையின் சேனைக ளையெல்லாந் துரத்திக்கொன்று வென்றார்கள்-எ-று. உ0

துந்துமிமுதலாநால்வ ருடைந்தனர்சூலியான
கந்தரிவராகியாறு முத்தவடிகிரிக்கையா
ளிந்தரைமறையாளென்னு மெழுவருமறைந்தனானி
யுந்தினருடைந்தார்கன்னி மனந்தளர்ந்துமையேயென்றாள்.

இ-ள். அசுரனது படைகள்எதிர்த்துயுத்தஞ்செய்த அவ்வில்து ந்துமிகாளிமதங்கிசண்டிஎன்கிற நான்குசத்திகளும் தோற்றார்கள் சூ லநீல கண்டிவராகி சண்முகிநிகிரிகையாள் இந்திரைமறையா ளென் கிறஎழுமாதரும்யுத்தஞ்செய்யமாட்டாமல் காட்டிலொளித்தார்கள்சு வானவாகனத்தை யுடைய வயிரவர்களும் தோற்றார்கள் துர்க்கைம னந்தளர்ந்து உமாதேவியேயென்றுதியானித்து நின்றாள்-எ-று. உக

உறுதுணையுமைபேயென்றும் பொருதில்யோகினிகள்வானி
லறுபத்துநாலுகோடி யதிர்த்தெழுந்தழலின் மாரி
இறுதியாயுருளச்சேனை யிடிமழைசொரிகைபாலே
குறுகியமகிடன்சேனைத் தலைவருங்கோதித்துச்சென்றார்

இ-ள். துர்க்கை அம்மைபேதுணை யென்றபோது அறுபத்துநா ன்குகோடியோகினிகள ஆகாசத்திலார்ப்பரித்தெழுந்து நெருப்புமழையும் இடிமழையும், சொரிந்தபடியினாலே மகிடாசுரனுடைய சேனைகளெரிந்துபோயின. அப்பொழுது சேனைத்தலைவர்கள் கோபித்துச் சண்டைசெய்வார்கள்-எ-று. உஉ

கலிவிருத்தம்.

அருகிதன்றனைச் செற்றனளாரணி
மருவுகாந்தனை மாய்த்தனைவாரணி
சுரனைவெஃறளள் வேலுடைக்காரணி
நரகனுயிருருண்டனளாரணி.

இ-ள். அப்படிமகிடாசுரனுடைய சேனைத்தலைவர்கள் எதிர்த்தவுடனே அபிராமியென்பவள் அருகிகனென்பவனைக்கொன்றாள், வாரணியென்பவள் காந்தனென்பவனைக்கொன்றாள், சண்முகியென்பவள் நரகனென்னும் அசுரனைக்கொன்றாள்-எ-று. உ௩

சூலபாணி தொலைத்தனள்மிண்டனைக்
கோலமாமுகி கண்டனைக்கொன்றனள்
ளாலவூணி மதுவையழித்தன
ளீலனுருயிரிந்திரைநீககினாள்.

இ-ள். சூலக்கையாளென்பவள் மிண்டனென்பவனையும், வராகிசண்டனென்பவனையும், நீலகண்டிமதுவென்னுமசுரனையும், இந்திரைநீல னென்பவனையுங் கொன்றார்கள்-எ-று. உச

துந்துமிக்கொடி சோணிகவூணனைக்
கந்துமிக்கும் படிக்கதைகாட்டினாள்
நந்துமிக்க கைத்தருணாசலை
தந்துமிக்கெரிக் கணணனைவாட்டினாள்.

இ-ள். துந்துமிக்கொடியையுடையவள் சோணிதவூணனென்பவனைத்தலையறும்படி தண்டாயுதத்தாளடித்தாள், சக்கரத்தைகையிலேதரித்த அருணாசலையென்கிறவள் அக்கினிகண்ணனைக்கொன்றாள்

கயிடவன்புகைக் கண்ணனிருவருஞ்
செயிரின்மாளுறச் சிந்தினள்சுந்தரி
நெயிடுமிக்க நிணமிடுவேலினன்
மயிடவன்முகங் கண்டெதிர்வந்தனள்.

இ-ள். சுந்தரியென்கிற சத்திகயிடவனையும், புகைக்கண்ணனையுங்கொன்றுள, நெய்யைப்பொழிகின்ற நிணம்பொருந்தியவேலாயுதத்தையேந்திய துர்க்கை மகிடாசுரனைக்கண்டு எதிர்த்துவந்தாள் எ-று.

வெங்கடாமுகன் மேவலுமாதர்க
டங்களாயுதங்கொண்டுதடுத்தனர்
சிங்கவூர்தி யவனெதிர்சென்றுகைச்
சங்கையூதினண் மேருசெலிக்கவே

இ-ள். வெப்பம் பொருந்திய எருமைக்கடா முகத்தையுடைய அசுரன் யுத்தத்துக்கு நேரிட்ட அளவில் சத்தமாதர்களும் தங்களாயுதங்களினாலே அவன் விட்ட ஆயுதங்களை விலக்கினார்கள் அவ்வேளையில்சிங்கவாகனத்திலேறிவந்து துர்க்கை யவனுக்கெதிரேபோய்த் தங்கையிலிருக்கிற சங்கத்தை மகாமேரு அசையும்படி வாயில்வைத்து ஊதினாள்-எ-று. ௨௮

செருவிலங்கவன் சங்கொலிசெய்திட
ஒருவரின்றி யவுணருறங்கினர்
செருவரங்களிற் பெற்றசரங்களை
இருவருஞ்சொரிந்தார் மழையென்னவே.

இ-ள். வல்லமைபொருந்திய சிங்கவாகனத்தையுடைய துர்க்கைசங்கத்தொனிசெய்ய அசுரர்களொருவரும் இல்லாமல் மயக்கத்தையடைந்தார்கள் அருமையாகிய வரத்தினாலே பெற்றுக்கொண்ட பாணங்களை இருவரும் மழைபோலச் சொரிந்தார்கள்-எ-று.

எந்தவெந்தக் கணையிவளேவினும்
அந்தவந்தக் கணையாலறுத்தனன்
விந்தைமீண்டிரு வெம்பிறவாய்க்கணை
சிந்தினலவன் சென்னியழுந்தவே.

இ-ள் எந்தெந்தப்பாணங்களைத்துர்க்கைவிட்டாலும் அவைகளை அந்தப்பாணங்களினாலே மகிடாசுரன் அறுத்துத்தள்ளினான் அதன்பிறகு இரண்டு அர்த்தசந்திரபாணங்களை அவனுடையசிரத்தில் அழுந்தும்படியாக விட்டாள்-எ-று. ௨௯

வெம்புசெம்புனல் வெள்ளமுறுக்கிய
செம்புபோலச்சிதறவிடுங்கணை
யம்புபோல விருக்கினுமாங்கவன்
கொம்புபோல விளங்கினதோன்றியே.

இ-ள். இரத்தவெள்ளம் உருகினசெம்புபோல் சிதறவிழவிட்ட அர்த்தசந்திரபாணங்கள் அம்பாகவிருந்தாலும் அசுரன் தலையிலே முளைத்திருந்தகொம்பிரண்டுபோல் தலையின்மேல்வைத்து அழுந்தி வளைந்து தோன்றின-எ-று. ௩௰

வெற்றிகொண்டவள் வில்லைமுறித்தன
னுற்றவம்பிற் சிலையுதன்மோதினாள்
கொற்றவன்பின் சூலங்கள்விடுத்தவ
நெற்றியுற்கண் ணழலினிமிர்த்ததே.

இ-ள். செயங்கொண்டவளாகிய துர்க்கை கையிலிருந்தவில்லையிரண்டாகமுறித்தான், அந்தவில்லினாலே அசுரனுடையநெற்றியிலேஅடித்தாள் மிகப்பலம் பொருந்திய அம்புகளைவிட்டவனாகிய அந்த மகிடாசுரன் நெற்றியிலே சுவாமியினுடைய கண்ணெருப்புப்போலச் சுருக்கென்று தாக்கியது-எ-று. ௩௧

சாபவெஞ்சிலை போகத்தரிப்பளோ
கோபமிஞ்சிக் கொதித்தெழுகூறைத்தி
றீபமென்னத் திகிரியோன்றேவிமே
பாபகாரி தலைவிழப்பண்ணினாள.

இ-ள். துர்க்கைவில்லொடிந்தும் பொறுக்காமல் அதிக கோபங்கொண்டுகொதித்தெழும்பும் எமன்போற் பிரகாசிக்கின்ற ஒருசக்ராயுதம் விட்டுப்பாவியாகிய மகிடாசுரன்தலைபறும்படிசெய்தாள்-எ-று.

கன்னியாழி பெரியக்கடாமுகன்
சின்னபின்னங்க ளாயுஞ்சிதைந்திலன்
முன்னைமாதவத் துணைமையின்மும்மதத்
துன்னுமாலகரியா யெதிர்தோன்றினான்.

இ-ள். துர்க்கைசக்ராயுதத்தை விட்டெறிய மகிடாசுரன் தேகச்சின்னபின்னமாயுஞ் சகாதேவனாகிப் பூர்வகாலத்திலே செய்தத போலத்தினால் மும்மதங்களைப் பொழிகின்ற பெரியயானை யுருவங்கொண்டு எதிராக வந்த தெதிர்த்தான்-எ-று. ௩௨

ஆளியேறுசென் றங்கவனுச்சியின்
மூளைவாரி நுகர்ந்ததுமொய்ம்பினான்

மீளவுங்கதை கொண்டெதிர் வீசினான்
கூளிநாயகி கூர்மைமேவேலைவிடுத்தாள்.

இ-ள். அப்படியானையுருவங்கொண்டெதிர்க்க அளவில் துர்க்கை பேறுகின்ற ஆளிமேல்பாய் அந்தயானையுச்சியிலிருக்கின்ற மூளையைக்கையினாலே அறைந்துதோண்டியெடுத்துத்தின்றது அதனாலேயுந்தசாகரமறைகையினாலே திரும்பியுந்தண்டாயுதங்கொண்டெறிந்தான் பேய்க்கதிகாரியாயிருக்கிற துர்க்கை கூர்மைபொருந்திய வேலாயுதத்தை விட்டாள்-எ-று. ௧௪

விடந்ததும்பிய வேல்படவெஞ்சமர்க்
கிடந்ததும்பி முகனுமிறந்தனன்
படர்ந்ததும்பிக ளாயிரமாயிரந்
தொடர்ந்ததும்பி மரமெனக்குன்றியே.

இ-ள். விஷத்தைக் கக்கிக்கொண்டிருக்கிறவேலாயுதம் பாய்ந்தவுடனே யுத்தத்திலெதிர்த்தயானைமுகன் அதைச்சகிக்கமாட்டாமல் மாண்டுவிட்டான் அநேகமாயிரம்வண்டுகள் தொடர்ந்த உள்ளேபொந்தில்லாமற்றேனையோடுகூடிய அந்தமரம்போல்-எ-று. ௧௫

வீழ்ந்தபின்பரி வேடமதாயெதிர்
பேர்ந்துவெங்கதை கொண்டுபுடைத்தனன்
சேர்ந்தவன்கதை யும்மவன்சென்னியு
மேந்தகைக்கொண் டறுத்தனளாரணி.

இ-ள். அப்படி வீழ்ந்து இறந்துபோனவுடனே குதிரைமுகமுள்ள அசுரனாகியபெருவீரன் வந்து தண்டாயுதத்தினாலே அடித்தான் அந்த தண்டாயுதத்தையும் தலையையும் கத்தியினாலே அறுத்துத்தள்ளினாள் துர்க்கையும்-எ-று. ௧௬

அந்தநன்பி னழலுருவாயினான்
கங்கையாயினன் காரிருளாயினன்
பங்கயாசன னாயினன்பங்கய
மங்கைநாயக னாயினன்மாயையால்.

இ-ள். அதன்பின்பு அசுரன்நெருப்புருவங்கொண்டுவந்தான் அதன்பின்பு சகலப்பிரளயகாலத்திலுமே அந்தகாரமாயும், தாமரைப்பீடத்திருக்கின்றபிரமனாகியும் இலட்சுமிநாயகனாகியவிட்டுணுவாகியும்எதிர்த்தான் மாயையினாலே-எ-று. ௧௭

ஏதுகண்டத னென்செய்வன்பாவியாய்
வான்செய்தன னென்றுதளர்ந்துமை
பாலகெஞ்சுளாற் பற்றினள்பற்றிப்
போதிலோர்மொழி விண்ணிறபுகன்றதே.

இ-ள். இப்படி அசுரன் பலபலவடிவங்கொண்டஉடனேபார்த்து மாயையினாலே துன்பப்படுகின்றான்என்ன உபாயஞ்செய்தாலுஞ்சாகிறதில்லை இதற்கென்னசெய்வேனென்று துர்க்கைபார்வதிதேவியினுடைய இரண்டுபாதங்களையும்மனத்திலேதியானித்தாள் அப்படித்தியானித்தவுடனே ஆகாயத்திலின்றும்அசரீரிஒருவாக்கியஞ்சொல்லிற்று

மாயவேடங்க ளன்றிமகிடமே
யாயபோதி லவன்றலைதன்னிலே
தூயதாளின் மிதிக்கத்தொலைந்திடுந்
தீயமாயை யெனச்சொல்லத்தேறினாள்.

இ-ள். அநேகவிதமாக மாயவேஷங்களல்லாமல்சுபாவமானஎருமைமுகரூபங்கொண்டபோது அவன்தலையைப்பார்த்துநீமேதன்னுடைய பரிசுத்தமாகிய காலினாலேமிதித்தால் தீமைபொருந்திய மாயை தொலைந்துபோமென்றுசொல்லத் துர்க்கைதேறினாள்-எ-று.

மட்டின்மாயை வடிவின்மலைந்துபின்
றொட்டிலைத்தலைச் சூலத்தினீக்கினான்
துட்டனாமேதிய தாய்ப்படைதொட்டனன்
வெட்டிவீழத்தி யடியின்மிதித்தினாள்.

இ-ள். அளவில்லாத மாயரூபங்கொண்டுவர நெடுமையான கவருடைய சூலத்தினாற்குத்திக்கொன்றாள் பின்பு அத்துஷ்டன்பழைய எருமைக்கடாமுகத்தையுடையவனாகி ஆயுதங்களைப் பிரயோகஞ்செய்த அளவில் அவைகளை விலக்கிவாளாயுதத்தால் தலையைவெட்டித் தள்ளிக்காலினாலே மிதித்துக்கொன்றாள் துர்க்கை-எ-று. சய

ஒப்பில்லாப்பத மூன்றுமிதித்திடில்
தப்பியாவை தவிர்ப்பதுபாரமோ
வப்பதத்தை நினைக்கினுமாணவஞ்
செப்புகாமிய மாயையுநீர்க்குமே.

இ-ள். துர்க்கைபாதத்தைநினைத்தாலும் அதைநினைத்தவருடைய ஆணவம்மாயைகாமியம்என்கிற மும்மலங்களையும் நீக்கிவிடும்அப்

டிப்பட்டவொப்பில்லாதபாதம் பரிசமாகும்படி ஊன்றிமிதித்தால்பொ
ய்யாகியமாயைமாத்திரந் தவிர்ப்பது பெரிதோ-எ-று. ௪௧

போதவானவர் பூமழைபெய்தனர்
மேதிமாமுகன் மெய்க்கதிபுற்றனன்
நீதிலாதவன் செங்களநதன்னிலேசர்
சோதிலிங்க மிருந்ததுதோன்றவே.

இ-ள். தேவர்கள்மிகவும்புட்பவருஷம்பொழிந்தார்கள் மகிடாசு
ரனும் அம்மைகையினாலிறந்தநாலேமெய்மையான மோட்சத்தைச்
சேர்ந்தான் யாதொரு குற்றமிலலாத அவன் சிவப்பாகிய கண்டத்தி
லேயொருபடிகலிங்க மிருநதது-எ-று. ௪௨

கண்டமட்டிலக் காக்கொளாக்காவ
கண்டமட்டிற புரநதகடாமுகன்
கண்டமட்டி லிருந்தகடவுளைக்
கண்டமட்டி லெடுத்தனளகன்னியே

இ-ள். நவகண்டமட்டும் ஆண்டமகிடாசுரனுடைய கழுத்தெனு இ
லக்காகவைத்துத் தூக்கைஅறுக்க அக்கழுத்திலிருநத படிகலிங்கத்
தைக்கண்டபோதே கையினாலெடுத்தாள்-எ-று. ௪௩

கொண்டிசெற்றுமை கோரகாகட்பதங்
கணடுபோற்றிக கடவுளையீநதாள்
வணடுவார்குழல வாங்கினளசெங்கைபி
லணடர்நாயகன் விணடிலகுதைகபால

இ-ள். அப்படிப்பட்ட படிகலிங்கத்தை எடுத்துக்கொண்டுபோ
ய்உமாதேவி பாதங்களைத்தெரிழுது நடநத காரியமெல்லாம் சொலலி
ச் சுவாமியைக்கொடுத்தாளவணடுகள்சூழநதிருக்கின்ற கூநதலையுடை
யபார்வதிகையினாலே வாங்கினாள்தேவாகட்கெலலாம் நாதராகவிருக்
கின்றசுவாமியும் அம்மை கைமேல்வைத்திருக்கிற ஆசையினாலேகை
யை விடாமற கெட்டியாகவிருநதார்-எ-று. ௪௪

தாயுமங்கது கண்டுமகிழநதிரு
சூபலிலங்கரம் பறறியமீதெனா
வாயைபாலகை பொருந்துமெசபதிக்
காயிரங்க ரணரித்தவா றுவான்,

இ-ள். பார்வதி அந்தஆச்சரியத்தைப்பார்த்து மகிழ்ச்சியடைந்து ஸ்வாமிஎன்கையைவிடாமலிருந்ததுஎதனாலேஎன்றுகேட்கத்தேவேந்திரனுக்கு ஆயிரங்கண்கொடுத்தகௌதமர் வாயைக்கையினாலேபொத்திக்கொண்டு அம்மைக்குச் சொல்லத்தொடங்கினான்-எ-று. சடு

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

முன்னமகத்தியன் முதலாமுனிவர்களைப் பதின்மர்வர முனிபாற்செல்ல, வன்னவன்றன் றவமதிப்பாலவமதிப்பாயிருந்திடவும்லவனை நோக்கிப், பொன்னனையதவமுனிவர் வெகுண்டுரைப்பா ரெமையிகழ்ந்தபுன்மையாலே, உன்னரியகருவேரு யினிப்பிறக்கக்கடவா யென்றுளையச்சொன்னார்.

இ-ள். முற்காலத்திலே அகத்தியர்முதலான ஐம்பதுரிஷிகள் கூடிவரமுனிபன்பவருடையஆசிரமத்திற்குப்போனார்கள் அந்தவரமுனிகம்முடைய தபோபலத்தினாலே மரியாதையாகஉபசாரம்செய்யாமலிருந்தார் அப்போது அவரைப்பார்த்துபொன்போலும்அரியதவத்தையுடைய எல்லாமுனிவர்களும்கோபித்து எங்களை அவமரியாதை செய்தபடியினாலேபாவ ராகிலும்குறைவுசொலப்பட்டகரிய எருமைக்கடாவாகப்பிறப்பாயென்று அவர்கள வருந்தச்சபித்தார்கள்-எ-று.

அருந்தவரைபநின்முருகன் றுணைத்தமொழிக்கொடுமையைக்கடாரமாகி, யிருந்தவனுமெழுந்துபணிந்தெனதுபிழைபொறுத்தருளநீரெனருளந்தப், பெருந்தவான்புடவுரைப்பார்மகிடமுகந்தவுனனைப்பிறந்துபின்னர் திருந்தவரனிடம்வேணடித் தவமபுரியுமுமைகணைத்திறற்றீர்ப்பாளென்றார்.

இ-ள். அரியதவத்தினையுடைய ஐம்பது முனிவர்களுமன்றுசொலியசாபத்தின குரூரமதைக்கேட்டுபயப்பட்டுபெருமைபொருந்திய தவஞ்செய்த வரமுனியும்எழுந்துவந்தனஞ்செய்துமுனிவர்களைத் தெரியாமல நான்செய்த பிழையை பொறுத்துக்கொள்ளுங்களென்றார் அதற்குமுனிவர்கள்நீர்எருமைமுகம்பொருந்திய அசுரனாகி அரசாளுங்காலத்தில் சுவாமிஆடபாகமபெறும்படி தவஞ்செய்துகொண்டிருக்கிறஅம்மையுடைய சாபத்தைநொடிப்பொழுதில் தீர்ப்பாளென்று சொன்னார்கள்-எ-று. சஎ

ஆங்கவர்சொற்படியிலெவனாகரர்பெருங்குலத்திலுதித்தாசனாகி, போகபோ மகிடனெனக்கொடுங்கோன்மைபுரிந்துழுமொருநாள் வேட்டைத், தங்குசெய்யவனத்தினை கமறபரியாலினைத்தேடித் திரிந்தாறுங்க, நங்கரிபவருசசனைசெய மனையவொன்றுருமுனிவனேர்ப்பட்டானே.

இ-ள். அந்தமுனிவர்கள்சொன்னபிரகாரம் வரமுனி அசுரகுல
த்திற்பிறந்து அரசனுல்மகிடாசுரனென்கிற பெயரையடைந்துகொ
ண்டுகோலரசுசெய்துகொண்டுவருகையில ஒருநாள் வேட்டையாடும்பொ
டி வனத்தில்வந்துமிருந்தபசியினுலே இரையொன்றும் அகப்படாமல
ஓடித்திரிந்துகொண்டிருந்தார். அவ்விடத்தில நின்று நற்காரியதவம்செ
ய்கின்ற மன்னவரிஷி என்பவன் எதிர்ப்பட்டான்-எ-று. சஅ

மன்னவருமவனையிவன் கரந்தயிருக்கு டன்விழுங்கிமகிழ்ந்து
போனான், பின்னதனலவன்பிடிற்றிய சிவலிங்கவடிவிருந்தப் பெரு
மையாலே, புன்னதமாயிவன்சிவனுமுருத்தரித்தவுடனுமிறையுருவ
ன்றேவன்னதனல்வினையடர்ந்தது நவிபிருநவதீர்த்தமாடிலென்றான்

இ-ள். எதிர்ப்பட்ட அம்மன்னவனென்கிறரிஷியைக்கையிலிருக்
கும்லிங்கத்தோடே இம்மகிடாசுரன் எடுத்துவிழுங்கிவிட்டபோது
ன்பின்பு அவன்கண்டத்திற்சிக்கிக்கொண்டபடிகலிங்கமிருந்ததனுல்மி
குந்தபெருமையடைந்தான் அந்தஇலிங்கமிருந்த கண்டத்தையுடைய
வனும் சிவசொரூபமன்றே அவனைக்கொன்றபடியினலேபாவம் சம்
பவிந்தது நவதீர்த்தங்களாடினுல் அப்பாவம் போமென்றார் கௌ
தமர்-எ-று. சகூ

அன்புமுனி யுரைத்தளவி லொருமொழிபாகரத்தெழுந்தரிய
தீர்த்த, மொன்பதுமவ்விடத்தில்வரும் வைவருமாறிபறுமெய
மையுமவிந்தை, தன்பதுமமுகநோக்கியுனதுகைவாளெடுந் துங்கைத
ருவாமயான்றோ, வன்பணியுநெடுந்தாளுந் தொழுதுகைவாகிலத்தெறி
ந்துவாங்கும்போதில.

இ-ள். மிகவும்பத்தியையுடைய கௌதமர் இப்படிச்சொன்ன அ
ளவில்பாவந்தீர ஆடுதற்குஒன்பதுதீர்த்தமும் அவ்விடத்தில்வரும்ப
டிச்செய்யென்று ஆகாயத்திலிருந்து ஒருவார்த்தைபிறந்தது அதைக்
கேட்டபார்வதியும் தூர்க்கைமலர்போன்ற முகத்தைப்பார்த்து உன்
னுடைய கையிலிருக்கின்றவாளினலே பூமியைபிளந்து கங்கைவரும்
படிசெய்யென்றுசொல்ல அப்படிகங்கைகையிற்றரித்த தூர்க்கையும்வண
ங்கிவாளாயுதத்தால் பூமியிலேவீசியெடுத்தபோது-எ-று.

நவநதியும்பிரவாகன் னதிகளுமச்சோகந்தீர்நல்லதான
நகை பதிகமுகவுபலதடங்களுமங் கெருநதனவச்சுனையினூடே
பவமகல்வொருமாதமுமூழ்கியிருந தாளகரத்தைப்பற்றிநீங்காச்
சிவன்வடிவமகன்றதுன்னுள மகிழ்ந்துகரையில்வந்தாடேவர்போற்

இ-ள். ஒன்பது தீர்த்தங்களும் மற்றுமுள்ள நதிகளும் விடாயாறு ம்படி உதவிசெய்யும் நல்லருசியைக்கொடுக்கின்ற அநேகம்தடாகங்க ளும்வுண்டாயின அந்நதிகளில் ஒருமாதம்வரைக்கும் அம்மைகுற்றம் நீங்கும்படிஸ்நானஞ்செய்துகொண்டிருந்தாள் கையைப்பற்றிக்கொண் டுவிடாமலிருந்த இலிங்கமும் நீங்கிற்று அப்போது தேவர்கள்போற்று ம்படிமனம்சந்தோஷித்து அம்மை கரையில்வந்து சேர்ந்தாள்-எ-று.

அருவுருவாமொருசிவனை யதன்கரைமேற்புறத்திருத்தியருச்சித் தாணம், விருவினையுந்தவிர்ப்பானுத் தென்பாவந்தீர்த்தானென்றியற் பேரிட்டாள், திருமருவும்பெருஞ்சுனைக்கு அமினியகட்க தீர்த்தமெனத் திருபேரிட்டாள், குருமணியையருணகிரிப்பெருமானைத் தொழக்கை க்கோயில்சார்ந்தாள்.

இ-ள். அருவமாயும் உருவமாயும்விளங்கும்ஒப்பற்றசிவனை அக்க ரையிலேயெழுந்தருளச்செய்து அர்ச்சனைசெய்தால்நம்முடைய நல் வினை தீவினை இரண்டையும் நீங்குகின்றசுவாமிக்கு என்பாவந்தீர்த்தா ரென்றுபேரைத்தரித்து அழகியஅச்சுனைக்குக் கட்கதீர்த்தமென்று பெயரிட்டாள் கிறமபொருந்தியமணியொத்தவரை அருணாசலத்தில எழுந்தருளியிருக்கிறபரமசிவனை வணங்கும்படியாகப்பொன்மயமாகி யகோவிலுக்குப்போனாள்-எ-று. ௫௨

முருகுமலரயன்றடத்திற் கடிந்துவெண்ணீறணிந்துசெங்கை மு டியிற்கூப்பி,யருகுவருங்கௌதமன்சொற்படிதொழுதுட்புகுந்துகண ணாரமுதைக்கண்ணுற், பருகிநிலமுறவிழுந்து பணிந்தெழுந்துபரவச மாய்ப்பாடியாடியுருகியுவந்தழுதுயிர்த்துவலம்புரிந்துகுறையுரைத்து வணங்கிப்போற்றி.

இ-ள். வாசனையுள்ளதாமரைமலரிருக்கிறபிரமதீர்த்தத்தில்முழு கி விபூதிதரித்துச்சிவந்தகைகளைச்சிரமேல் வைத்துத்தண்டனிட்டுத் தன்னருகே வருகிறகௌதமர்சொன்னபடி உள்ளேபோய்க்குளிர்ச்சி பொருந்திய அமிர்தம்போன்றசுவாமியைக்கண்ணாலேதரிசித்துப்பூமி யிலேதேகம்பொருந்தநமஸ்காரஞ்செய்து எழுந்திருந்து பரவசமாகி ப்பாடிஉருக்கமடைந்துகளித்துஆனந்தக்கண்ணீர்பெருகிப் பெருமூச் செறிந்து வலமாகவந்து தன்னுடையகுறையைச்சொல்லிவணங்கினாள்

கார்த்திகைதிங்களிற்றிருநாளாகமத்தின்படி நடத்திக்கணற்கண் ணனை, தோத்திரம்பண்ணுதலுமொரு சுடர்மலைமேலெழுந்ததர்சு டரினூடே, ஏத்தரியபலகோடியிரவியெனவொருசோதியெழுந்துபி ன்னே, வாய்த்தவலமாகநடத்தியெனவுரைத்துடனே மறைந்ததன் றே.

இ-ள். கார்த்திகைமாதத்தில் ஆகமத்தின்படி திருநாள்செய்து நெருப்புக்கண்ணையுடைய சிவபிரானைப்பணிந்த அளவில் மலைமேல்ஒரு பிரகாசமுண்டாகி அதிறசொல்லுதற்கரிய பலகோடி பாலசூரியப்பிரகாசமாய்சுவாமி யெழுந்துபெண்ணே இம்மலையைவலமாகநடந்துவாவென்றுசொல்லி மறைந்துவிட்டார்-எ-று. எத்தரியபலகோடி யிரவி என்றது இளஞ்சூரியர் கோடிஎனக்கு.

ருஉ

காரிதனைச்சிலையாக்கு முனிவனுமப்படிவலமாநடத்தியென்றுன்
வாரியெனமழைபுகழக் காரிகையுநடந்தனடன்மலர்க்கைகூப்பி
பேரிகையுங்காளகமுஞ் சல்லரியும்முழங்கவேபெரியவானிற்
றூரியமுந்துந்துபியுமத்தளமுங் குடமுழவுந்துவைத்தவன்றே.

இ-ள். அகலிகையாகிய பெண்ணைக்கல்லாக்கிய கௌதமரிஷியும் அமமா அப்படியேவலமாகப்போவென்றுசொல்லச் சமுத்திரம்போல்வேதகோஷ்டமுழங்கவும் ஆகாயத்தில் பேரிகை-காகளம்-சல்லரி மலலரி-முரசு-துந்துமிமத்தளம்குடமுழா இவைமுதலானவாத்தியங்கள்முழங்கவும் பார்வதி இரண்டுகையும் கூப்பிக்கொண்டுநடந்தாள்

அரம்பையுருப்பசிமுதலா மகபதிநாட் டரிவையர்களாடல்காட்டக், குரும்பையெனநெருங்குமுலை வரையாமங்கையர்மலரின்குப்பைகொட்டக், கரும்புகனி தனையமொழிப் புனலரமங்கையரிரட்டுங்கவரியாட்ட, விழும்புருகநகைபுரியு மவுரவமினூர் மணிவிளக்கமெடுத்துநீட்ட.

இ-ள். இப்படிபார்வதி வலம்வரும்போது அரம்பைஊர்வசிமுதலானதெய்வலோகத்துப்பெண்கள்நாட்டியமாட தென்னங்குரும்பையொத்த தனத்தையுடையமலையரமகளிர் அம்மைநடந்துவரும்போது பாதம்பூமியிலேபட்டுஉறுத்தாமலிருக்கப் புட்பங்களைக்குப்பையாகக் கொட்டக்கறுப்பஞ்சாறுபோலும் வார்த்தையையுடைய நீரரமங்கையர் சாமரமெடுத்துவீச இரும்புமுருகும்படிநகைசெய்கின்றநாகலோகத்துப்பெணகள இரத்தினதீபங்கையிலெடுத்துக்கொண்டுவர-எ-று.

இதுமுதலிரண்டுபாடல் குளகம்.

முண்டகமண்டபமயிலும் புலோமிசையுமுறுந்தவளமுளரிமனுங்
கணடகமும்வழித்தாலுமொழித்துவர நிலமகடன்கைகணீட்ட
அணடர்குலமடநதையரு முனிவர்குலவனிதையருமருவிப்பூந்தோண்
மணடயிடுஞ்சேறகறறி மலரின்றுவிகள்சொரிந்துவழிகளாக்க.

இ-ள் தாமரைப்புட்பமாகியமண்டபத்திலிருக்கிற இலட்சுமியும் இந்திராணியும் வெண்டாமரைப்பூவிலிருக்கிற சரஸ்வதியும் போகிற வழியிலிருக்கும் முளைத்தநெல்லையுங் கல்லுகளையும் தள்ளிக்கொண்டுவர பூமிதேவி கைகளைநீட்டிச சாக்கிரதையாகத்தாங்க தேவஸ்திரீகளு ம்முனிவர்களுடைய ஸ்திரீகளும்புட்பத்திலிருக்கிறதேனருவியினாலே வழிச்சேற்றைநீக்கிப்புட்பத்துகளிலிருக்கிறபராகப்பொடிகளைக்கொட்டிநல்லவழியாகச்செய்ய-எ-று ௧௭

குன்றினதுன் விருசரணம்பொருத்தருள்வா யெனகங்கைசெங் கைகூப்ப, யன்றனலத் திசைமனுகியழறகிரியையெதிர்முகமாவணங் கிப்போற்றி, தென்றிசைபு கிருதிபெருந் திசையினையுங்கடந்துகுடதி சைக்குச்சென்றாள்.

இ-ள். கங்கை அம்மாபார்வதி உன்பாகமிரண்டும்பூமியிலே பட் டுக் கன்றிப்போய்விட்டால் பொறுக்கவேண்டுமென்று இரண்டுகைக ளையுங்கூப்பி,அழகிய அக்கினியிலையை எதிர்முகமாகத் தொழுது தெ ற்குத்திசையும் நிருதிமூலையும் தாண்டிமேற்குத்திசையிற்போனாள் கு றைவில்லாதகீர்த்தியையுடைய சுவாமியும்இளமையானரிஷபவாகன த்தில எழுந்தருளிவந்து தரிசனங்கொடுத்துநடந்தார்-எ-று.

மாறதிசையும்போற்றிசெட்டும் புகழுணிபணநுமலையானடித்தா ன்போற்றி பேறதிசையுங்காற்றிசையுங் கடந்துவடதிசையடைந்தி ருமியேத்தி, யேறதிசையுமிறைதிசையு மகிழுந்து தணதிசையடைந்தா ளிமயமெட்டிற, மேற்றிசையு மன்வழலைவலம்புரிந்து செயலபோலச் செறிந்ததன்றே.

இ-ள். நாலுதிக்கும் வணங்கும்கீர்த்தியையுடைய அருணாசலேச ரதுடைனதுபாதத்தைவணங்கி மேற்குத்திசையும்வாயுதிசையுந்தாண் டிவடதிசையிலமறுபடியுந்தொழுதுஎருத்தேறுகின்றஈசானனுடைய திசையைக்கடந்துகிழக்குத்திசைக்குவந்தாள அப்படிவந்தது இமோம பர்வதத்திலசுவாமி கலியாணஞ்செய்தபோது ஓமாக்கினியைவலம்வந் ததுபோலிருந்தது-எ-று. ௧௮

கலித்திலைத்துறை.

பானுகம்பன்னைகைச் சங்கொலிநெடியமாலபணியத்
தானுகம்பலைநாரதா வீணையின்சார்வ
வானதுந்துமிகம்பலை திசையெலாமறைக்க
தேனிறைந்திடுமலர்மழையிமையவர்சிதற.

இ-ள். பாணுகம்பனென்பவன் தன்னுடைய ஆயிரங்கைகளிலு ஞ்சங்கத்தை வைத்து ஊதுகிற ஒலியும் விட்டுணு தமது சங்கத் தை வாயிலவைத்து ஊதுகிறசத்தமும் நாரதர்வீணையை வாசிக் கிறசத்தமும் ஆகாயதுந்துபியினுடைய சத்தமும் திசைகளெல லாஞ் செவிடுபடச் செய்தன. தேனிறைந்த புட்பவிருஷ்டி யைத் தேவர்கள் சொரிய எ-று. ௬௰

இதுமுதன் மூன்றுபாடல்களுங்குளகம்,

கறைறைவார்சடை யிளம்பிறைநெடுநிலாக்கமழ்
பிற்றராமணியிளவெயில விரிததிடப்புவியைப்
பெற்றமாதிகனுக் கொருபுறமளிததிடப்பிடித்த
வெற்றநூலெனப்பலரினூன் மார்பகத்திலங்க

இ-ள். கறையாகிய நீண்டசடையில் தரிக்கப்பட்ட இள மையாகியபிறையின் நெடுமையான சந்திரன்பிறகாசிக்கவும் ஆ பரணமாகிய புற்றிலிருக்கின்ற சாப்பத்தின் தலையிலிருக்கிற ம ணிகாந்தியை விரிக்கவும் உலகமாதாவாகிய பார்வதிக்குப் பா திசரீரத்தைக் கொடுப்பதற்காகப்படிதத ஏற்ற நூல்போல் புரி யாகிய பூணூல் மார்பிற் பிரகாசிக்கவும் எ-று. ௬௧

பிறப்பிலாவரன்மறையெலா மளவிடாப்பெரியோ
னிறப்பிலாவிடைவிடையின்மே லினிதெழுந்தருளு
வறததினுயகியடிபணிந் திரைஞ்சினளவைத்துந
துறக்குவண்ணலுமவளுட னிவையிவைசொல்லும்

இ-ள். பிறப்பிலலாதமூர்த்தி அநேகவேதங்களாலும் அறிய ப்படாதவர் இறப்பிலலாத பரமசிவன் ரிஷபவாகனததி லெழு ந்தருளத் தருமம்வளர்க்கின்ற பார்வதி அச்சுவாமிபாதத்தைத தொழுதுவணங்கினள் எல்லாவறறையும் நீக்கிய கடவுள் அ வ்வமமையோடு சொல்லுவார் எ-று. ௬௨

பெண்ணுமாணுமா யுலகிலாப்பொருளெலாம்பிரித்தோ
மண்ணிதாகியபீடமுமிலங்கமுமானோ
மெண்ணுநீயெனா நானெனவிரண்டிலைமாமு
முன்னிலாவியவயிரமு நிகர்த்துடனுறைவோம்

இ-ள் உமையே நீயும் நானும் பெண்ணும் ஆணுமாகி உலகத் திலஅநேக சீவராசிகளை வேறுவேறுண்டாக்கினோம். சமீபமா ய் ஆவுடையாரும் இலிங்கமு மானோம். நீயென்றும் வேறல்ல

தமிலே பாரமும் அதற்குள்ளேயிருக்கிற வயிரமும்போல் ஒன்றுய்ச்சேர்கதிருபோம்-எ-று. சாரு

அங்கய்யாவுநம் பொருட்டுவிட்டிமயவெற்படைந்தா
யிங்குநாமுனக்கொருபுற மளிப்பதேயியற்கை
மங்கையோர்பாதிடப்புறத தூறையெனமகிழ்வுற்
றங்கையாலணைத்தருளினனருகியொன்றானார்.

இ-ள். தேகத்தைவிட்டு நம்பொருட்டாகஇமயபர்வதத்திலே வந்துபிறந்தாய் அவ்விடத்தில நாம் உனக்கு ஒருபாகங்கொடுப்பது சுபாவமேபெண்ணே நம்முடைய இடப்பாகத்திற்சேர்ந்திருவென்று சந்தோஷமடைந்து கையினலே அணைத்துக்கொண்டார் இரண்டு தேசமும் உருக ஒருதேகமானுர்கள் அம்மையும் சுவாமியும்.எ-று. சாச

அடித்தசெஞ்சடை யொருபுறமளகந்
தொடுத்தகொன்றையோர் புறமொருபுறமலர்குவளை
வடித்தசூலமோர் புறமொருபுறமலர்க்குவளை
திடத்திலார்கழ லொருபுறமொருபுறஞ்சிலம்பு

இ-ள. அப்படியிருவரும் உருகிச் சுவாமியினுடைய பாதியும் அம்மையினுடைய பாதியும் ஒருதேகமானபோது ஒருபக்கத்திற்சிவந்தசடையும் ஒருபக்கம் கூந்தலும் ஒருபக்கம் கொன்றையும்மாலையும் ஒருபக்கம் புட்பமாலையும் ஒருபக்கம் சூலமும் ஒருபக்கம் நீலோற்பல புஷ்பமும் வீரகண்டாமணியும் ஒருபக்கம் சிலம்பும் தோன்றின-எ-று. சாரு

பச்சைவன்னமற்றொருபுறம் பவளஞ்
சச்சுலாமுலையொருபுறங் கவினமார்மார்பும்
பச்சசீக்கியவாமுமொன் றபயமொன்றங்கை
இச்சையாமிவருறுதலக் குழைஞ்சிறைமையோர்,

இ-ள். ஒருபுறம் பச்சைநிறமும் ஒருபுறம பவளநிறமும் ஒருபுறம்கச்சணி தனமும் ஒருபுறம் அழகான மார்பும் ஒருபுறம் அபயமும்ஒருபுறம் வரமுமாகிய கைகளாக ஆசையோடு இருவரும் பொருந்துதலைப்பார்த்துத் தேவரும் வணங்கினார்கள்-எ-று, கூசா

இவ்வாறு இருவாநின்றகோலத்தைச் சேரமான் பெருமானும்வலந்தான் கழலிடயபாடகம் வலமிடமே. கலநதான்வலதிடஞ்சாந்தெரிவலப்லந்கிடமெண, பலந்தார்வலமிடமாடகம் வேல்வலமாழியிடஞ்சலந்தாழ்சடைவலந் தண்ணங்குழுவலஞ்சங்காக்கமேளனப் பொன்வண்ணத் தந்தாதியில் அருளிச்செய்தவாறு மறிக.

இந்தமாக்கதை படித்தவர்செவிகளிற்கேட்டோர்
சந்தனுசலமுனியிற் றமிழ்க்கடல்கடப்பார
மைந்தரோமுதற்றிளையுட னுலகினில் வாழ்வார்
பந்தபாசமற்றழிவிலாப் பரகதிபெறுவார்,

இ-ள். இக்கதையைப் படித்தவர்களும், செவியிற்கேட்டவர்களுஞ்சந்தனவிருட்சங்கள் சூழ்ந்த பொதியமலையி லிருக்கின்ற அகத்தியர்போல் தமிழ்க் கடல்கடப்பார்கள் சந்தானபாக்கியத்தோடுஞ் சுற்றத்தாரோடும் உலகத்தில்வாழ்வார்கள். தங்களைப் பந்தமாகச்சூழ்ந்துகொண்டிருக்கின்ற தீவினையைத்தள்ளி மோக்ஷம்பெறுவார்கள். எ-று. சுள

முனிவனேயெனைப் பயந்தவனுரைத்ததிம்முறையென்
றனையமாமுனிக்குரைத்தலு மவனெழுந்திறைஞ்சிக்
கனகவச்சிராங்கத னுயிர்கதிபெருங்கதையை
வினவினான்முனிவனவனு மகிழ்ந்திவை விளம்பும்

இ-ள். நந்திதேவர் மார்க்கண்டேயரைப் பார்த்து என்னைப் பெற்றபரமசிவன் சொன்ன சரித்திரத்தின்முறை யிதுவென்று அவருக்குசொல்ல அம்மார்க்கண்டேயரிஷிஎழுந்துதண்டம்செய்துபின்புசுவாமீவச்சிராங்கதபாண்டியன் உயர்வாகியமோட்சம் அடைந்த கதையைச்சொல்லுங்களென்றுகேட்க நந்திதேவர் சந்தோஷமடைந்துசொல்லத்தொடங்கினார்-எ-று. சுஅ


ஐந்தாவது

இடப்பாகம்பெற்றசருக்கம்.

முற்றிற்று.

---

ஆக திருவிருத்தம்-சஅ.



உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# வச்சிராங்கதபாண்டியன் சருக்கம்.

——:0:——


## கலி விருத்தம்.

தேமகிழ்சந்தன வனத்திடைதிரிந்தே
நீடுதமிழின்சுவை யளைந்துநெடுநாளா
யாடும்மயிலன்னவர்க ளன்னநடைபோல
வாடையினைத் தென்றல்புகும் வையைவளநாடு,

இ-ள் பூவிதழ்மணம் பொருந்தும் சந்தன வனத்தின் மத்தியிலே சஞ்சரித்து எளிமையுள தமிழின் மதுரம் அளைந்துநெடுநாள் ஆடுகின்றமயில் போன்ற பெண்கள் நடைபோல வாடைக்காற்றோடு சம்பந்தமாகத் தென்றற்காற்றுவருகின்ற வையையாறுபொருந்திய பாண்டியநாடு. எ-று. க

வெவ்விருகணேரிடையை மின்னெனமருண்டே
செவ்விபெருந்தாழைகள் செரிந்தலருநாடு
நவ்வியினையார்களக நள்ளிருளதென்றே
மவ்வலருகேயலரும் வையைவளநாடு.

இ-ள். விருப்பம்செய்யுங்கண்களிரண்டையுமுடைய பெண்களிடையைப்பார்த்து மின்னலென்று மயங்கி அழகு பொருந்திய தாழைகள்புஷ்பிக்கும் நாடு மான் போன்றமாதர்கள்கூந்தலைப்பார்த்து இருளென்றுநினைத்து முல்லைச்செடிகள் கரையிலே புஷ்பிக்கும் வையை ஆற்றினால் வலம்பொருந்திய நாடு எ-று. உ



அந்தவளநாடர்பெரு மானனகர்கோமா
னிந்திரன்முடிக்கிடை யெறிந்தவளைவீர
னிந்தையறுதென்கயிலை நெற்றிவிழிபோல
முந்தியதிசைக்கரி முகத்தெழுதிவைத்தோன்.

இ-ள். அத்தன்மையாகிய பாண்டிய நாட்டாருக்கு இராசன் அரசர்க்கரசனானவன் தேவேந்திரன் முடிசிதறும்படியாக வளையென்னும் ஆயுதத்தை தப்பிரயோகித்தவன் குறைபாடற்ற கைலாயத்துக்கு நெற்றிக்கண்போல் அஷ்டதிக்கிலுமிருக்கிற யானைகள்முகத்திலே தன்னுடைய மீனக்கொடியை யெழுதிவைத்தவன்-எ-று. ௩

ஆகமாதிமதனி னழகினு
ளாகமாதிதெளிந்த வறிவினான்
பாகநாரிய பத்தியினன்மொழிப்
பாகநாரியர் மற்றியதோளினான்

இ-ள். தேகத்தினதியந்தமாக மன்மதன்போலழகுள்ளவன் ஆகமமுழுவதுந்தெரிந்த விவேகத்தை யுடையவன் பககத்திலே பார்வதியையுடைய சிவன்மேல் பத்தியையுடையவன் பாகுபோல்மதுரமாகிய சொற்களையுடைய ஸ்திரீகள் விரும்புகின்ற தோளையுடையவன், ௪

வானகத்திலுமண்ணினு மெண்ணிம
வானகத்திலும்வைத்த புகழினான்
கானகத்தொளி யார்சடைக்கண்ணிதன்
கானகத்தொளி யார்மனைக்காப்பவன்

இ-ள். தெய்வலோகத்திலும் பூமியிலும் எண்ணத்தக்க இமயபருவதத்தினிடத்திலும் தன்கீர்த்தியைகாட்டினவன் சுவாமி தரிக்கின்றசடைக் காட்டினிடத்திலும் பிரகாசிக்கின்ற ஆத்திமாலையினது வாசனையைத் தன்மனதிலே நினைத்துக்கொண்டு பூமியைக் காக்கின்றவன்-எ-று. ௫

தங்களுய கனத்தலைகூடிய
வெங்களூ காடித்தலைபேதிலான்
பொங்குநன்றி யறிந்துபோற்றுவா
ரிங்கிவர்க்கிணையாவரு மில்லையே

இ-ள். தங்கள்குலத்துக்கு தலைவனாகிய சந்திரனைமுடியிற்றரித்த எங்களுநாதராயுபாதங்களைத தலையினால்வணங்குகிறவன் மிகுந்தநன்றியையறிந்து அதைப்பாதுகாக்கின்றவர்களில் இவனுக்கொப்பானவரொருவருமில்லை-எ-று. ௬

பத்துவர்த்திசை மீதும்படர்புகழ்
வித்துவாரியிறைக்கின்ற மேன்மைபோ
னத்துவாரியில வாரிரைநல்கிய
முத்துவாரியிறைத்திடு முன்றிலான்.

இ-ள். நீண்டபத்துத்திக்கிலும் பரவகீர்த்தியாகிய விரையை வாரியிறைக்கின்ற தன்மைபோல் சங்கங்கள்தவழு நின்றசமுத்திரத்தில் குளித்து வாரிவந்தவர்கள்கொடுத்த முத்துகள்இறைந்துகிடக்கின்ற முற்றத்தை யுடையவன்-எ-று. ௭

அடலந்தவா சன்புகளக்கடற்
கோடுகின்றகலங்கடு ரோட்டுந்தேர்
கூடுசெக்காபவளக் கொடிகளே
நீடுதிக்கினர் நீரின்மனிதரே

இ-ள, வெறறிபொருந்திய அரசனது கீர்த்தியாகிய கடலுக்குள் ஓடுகின்றதுகப்பலானது சூரியனோட்டுகிற தேர்கூடியசெக்கர்வானமே அக்கடலிற்படாநத பவளக்கொடிகள் நீண்ட எட்டுதிக்கிலுமுள்ள மனிதர்களே அக்கடலிற்சஞ்சரிக்கும் நீர்மனிதர்-எ-று. ௮

வச்சராசராமுங் களிப்பெய்தவே
நச்சராவுலகாளு நலத்தினான்
கச்சராவுகழறபொழி காலினான்
வசிராங்கத னென்றொருமன்னவன்,

இ-ள, அசையும்பொருள் அசையாப்பொருள்களாகிய எவையுமசந்தோஷத்தையடைய விஷத்தையுடைய ஆதிசேஷன்தாங்கிய வுலகத்தை ஆளுகின்ற நன்மையையுடையவன் கச்சு ஆகிய வீரகண்டாமணியைத்தரித்த காலையுடைய வச்சிராங்கதபாண்டிய னென்றொருவனிருந்தான்.எ-று. ௯

படையிறந்தோறறவாசரைப் பலசிறை
யிடையிறபோட்ட கதியென்னகையிப்பதோ
கொடையிறதோண்டிடுங் கொண்டலையுன்னறை
யிடையிறபோட்டன னென்பதிருக்கவே.

இ-ள, அவனயுத்தத்திலேதோற்ற ராசாக்களைச் சிறையிலே போட்டானென்கிறதென்ன ஆச்சரியம் தன்கொடைக்குத்தோற்றமேகத்தையுஞ் சிறையில் போட்டானென்பதிருக்கும்-எ-று.

நாட்டுமவ் வரசனொருநாளிலே
வேட்டையாட விரும்பினனாகியே
முட்டுசேனை கரிபரிமொய்த்திட
ஓடினான்பரி யுத்தரதிக்கிலே.

இ-ள், இப்படிச்சவத்தைநாட்டிய வச்சிராங்கதபாண்டியன் ஒரு நாள்வேட்டையாடும்படியாக மனதிலெண்ணி யானை குதிரை சேனைகள்சூழக்குதிரையைநடத்திக்கொண்டுஉத்தரதிக்கிற்கடந்தான். எ-று

துங்கவாம்பரி மீதிவன்றோன்றலு
மங்கைவேழ மகன்றகன்றோடின
திங்களின்குலச் செல்வனென்றஞ்சியே
எங்குமோடு மிருட்கணமென்னவே.

இ-ள், சந்திரவமிசத்திற் பிறந்தஅரசன் தாவுகின்ற சிறந்த குதிரையின்மீதேறின மாத்திரத்திலே சந்திரனைக்கண்ட இருட்கூட்டங்கள அஞ்சிபோடின எ-று. ௧௨

வீறுமம்புலி யின்குல மேன்மையான்
வீறுமம்புலி யின்குல வீட்டினா
னாறிலொன்று கடமைகொண்டாள்பவ
னாறிலொன்று கடமைகொன் றானரோ.

இ-ள், பெருமைபொருந்திய அம்புலியென்னும்பேருடையசந்திரகுலத்திற்பிறந்த மேன்மையினாலே இறுமாப்படைந்த அழகிய புலிகளைக்கொன்றான் ஆறிலொருகடமைவாங்கிக்கொண்டு ஆளாகிறவன் மார்க்கத்தில்நேரிட்ட கடமைமிருகங்களைக்கொன்றான். எ-று. ௧௩

சேரமானினந் தன்னைச்சிதைத்தனன்
சேரமானினந் தன்னைச்சிதைத்தனன்
வாரமாய்கலைச் சங்கம்வளர்த்தவன்
வாரமாய்கலைச் சங்கம்வளைத்திட்டான்.

இ-ள், சேரமானென்னும்பேரையுடைய சேரனதுசேனையைசயித்தவன் ஒருமிக்கமானினங்களைக்கொன்றான் அன்போடுஆராய்கின்ற வித்தியாசங்கத்தைவளர்த்தவன் அனேககலைமான் கூட்டங்களை வளைத்துக்கொண்டான் எ-று. ௧௪

சோனைபோன்மத மாரிசொரிந்திடும்
யானைதேர்பரி யாளுமாகிய

தானே பின்னிடத் தான்றனிவாசிமேற்
கடாவிப் பாவியைக் கண்டுதொடர்ந்தனன்.

இ-ள், சோனைவருஷம்போல் மதத்தைச்சொரிகின்ற யானைதேர் குதிரை ஆள் இவர்கள்பின்னிட்டுப்போகத் தானொருவனாகக்குதிரை மேற்கொண்டவனாகிய ஒருபுனுகுபூனையைத்தொடர்ந்தான் எ-று.

அந்தநாவி யகன்றருணாசலத்
துந்தியேவல மாய்விரைந்தோடலு
முந்திவாசிய தன்பின்முடுகினான்
சுந்தநாவி விழுந்ததுகண்முனே.

இ-ள், அப்படிராசாவாலே துரத்தப்பட்ட புனுகுபூனையானது சீக்கிரத்திலேஅருணாசலத்தைவலமாகச்சுற்றியோடினவளவில் வேகத்தோடுங் குதிரையைநடத்தினான் அந்தப்புனுகுபூனைவந்துகண்முன்னே விழுந்தது எ-று. கசு

பச்சைநாவி பருகினர்போல்விழுந்
தச்சநாவிதன் னாகவிடுத்தெழில
விச்சைவேந்தர் துதிக்கவிமானமே
லிச்சைமேனிகொண் டேகியெழுந்ததே.

இ-ள், நாவியாகிய விஷம்சாப்பிட்டவர்கள்போல்விழுந்து பயத்தையுடைய புனுகுபூனை தன்தேகத்தைவிட்டு வித்தியாதரர் முதலானவர்கள் துதிக்க விமானத்தில் திவ்வியதேகம்பெற்றுக்கொண்டெழுந்தது எ-று. கஎ

மேவுமந்த வரசன்விழுந்திட
மாவும்வீழ்ந்து வடிவுதனைத்துரந்
தோவியர்க்கெழு தாருருக்கொண்டரு
பூவிமானம தேறிப்பொலிந்ததே

இ-ள், தற்செயலாய்ஏறினவரசன்விழவே குதிரை இடறிவிழுந்தது தன்தேகம்விட்டுச் சித்திரக்காரரும்எழுதக்கூடாததிவ்வியரூபம்பெற்று ஒருபுட்பவிமானம் ஏறிப்பிரகாசித்தது எ-று. கஅ

கைவிலங்கனை யான்பரிக்காலின்வீழ்ந்
தவ்விலங்கை யரசனைப்போலவே
செவ்விலங்க வடியினிற்றேம்பினான்
வெவ்விலங்குடனோடிவிழார்களோ.

இ-ள், யானைபோல்பவனை வச்சிராங்கதபாண்டியன் குதிரைக் காலினருகில்விழுந்து அந்தஇலங்காபுரியையாண்ட இராவணன்போல் அருணாசலத்தினடியில வருந்தினான் மிருகத்தின்பின் ஓடினால யார்தான்விழார்கள் எ-று. கக

பாய்தநாவி பரிப்பெயர்போய்ப்பழங்
காந்திசாவி கலாதரர்பேர்படைத்
தாய்ந்தநண்டுபோ லருவிபங்கணணராய்
மோந்தணைந்து மகிழ்ச்சியின்மூழ்கினார்.

இ-ள், பாய்ந்துசெல்கின்ற குதிரை நாவியென்னும் பேர்போய் பழபகாந்திசாவி கலாதரனென்கிற பேர்படைத்தவராய் மிக்கநண்பராய் அருவிபோல் கண்ணிலிருந்து நீர்பெருக ஒருவர்க்கொருவர்கட்டியணைத்து உச்சிமோந்து சந்தோஷத்தினால் முழுகினார்கள் எ-று.

அன்னவீரர்க ளவ்விடைநின்றுழி
பொன்னலர்க்கு மூறுநதுயருற்றிடும்
மன்னர்மன்னவன் மற்றிதுவந்தவா
றென்னவென்னவென் றேங்கியிரங்கினான்.

இ-ள், அவ்வீரர்கள் அவ்விடத்தில்நின்றபோது தன் சத்துருக்களுந்துவந்த துக்கத்திலும் அதிகமாய்வருந்துகின்றபாண்டியன்இது வநதவகை யென்னவென்று இரங்கிவருத்தமுற்றான் எ-று. உக

விஞ்சைமன்னர் விமானத்தராகியே
தஞ்சமில்லவன் றன்புடைசூழ்நதுநீ
யஞ்சலஞ்சலென் றங்கையமைத்தனர்
பஞ்சலன்மகிழ் வோடும்பகருவான்.

இ-ள், வித்தியாதரர்களாகிற இருவரும் விமானத்திலேறிக்கொண்டு தஞ்சமில்லாத பாணடியனிடத்தில்வந்து நீபயப்படவேண்டாம் பயப்படவேண்டாமென்று கையமர்த்தினார்கள் அப்போது பாண்டியன் மிகவுஞ்சநதோஷத்தோடு சொல்வான் எ-று. உஉ

நீதியாய்வரு நீரெவரெத்துயர்க்
காதிகாரணம் யாதில்வருந்துபர்
யோதுமாறெது போதியுமென்றவ
னோதவோதக் கலாதரனோதுவான்.

இ-ள், நீதிபொருந்தியநீங்களிருவரும்யார் உங்களுக்குஇபபடிவந்ததுக்கத்திற்குக் காரணமென்ன அதுசென்றது எவ்விதத்தினாலே சொல்லுங்களென்றுகேட்கக் கலாதரனென்பவுன் சொல்லுவான்.

வாய்ந்தசாலி மதுரையின்மன்னனே
ஏய்ந்தவிஞ்சையர் யாங்கவ ளிவன்பெயர்
காந்திசாலி கலாதரனென்பெயர்
ஆய்ந்தநண்பின ராய்விளை யாடினோம்.

இ-ள், நெல்விளைகின்ற மதுரைக்குஅரசனே நாங்கள் ஒப்பற்ற வித்தியாதரர்கள் இவன்பேர்காந்திசாலி என்பெயர்கலாதரன் நாங்களிருவரும் மிகுந்தநேசராய் விளையாடிக்கொண்டிருந்தோம் எ-று.

மாரவேளும் வசந்தனும்போலவே
யாரவேபிரி யாதுறைநாளிலே
சேரவூழ்வினை சென்றுதொடர்ந்திட
மேருமால்வரைச் சாரலின்மேவினோம்.

இ-ள், மன்மதனும் அவன்சினேகனாகிய வசந்தனும்போல ஒருவர்க்கொருவர் பிரியாமல் வாசஞ்செய்யுநாளையிலே முன்செய்த ஊழ்வினை வந்தடைய மகாமேருவின்சாரலிலேபோய்ச்சேர்ந்தோம் எ-று.

வேறு.

மாச்சரிய மிக்கதுரு வாசமுனிவாழு
மாச்சிரம மேலருகி லந்தமுனிவோனே
நீர்ச்சொரிய நெஞ்சுருகி நின்றமரமெல்லாம்
பூச்சொரியு நந்தவன மதனிடைபுகுந்தோம்.

இ-ள், கோபமிக்க துருவாசரிஷி வாழுகின்ற ஆசிரமத்தினருகிலே அந்தரிஷிமனமுருகித் தண்ணீர்சொரியவளர்ந்த விருட்சங்களெல்லாம் புட்பங்களைசொரியும் நந்தவனத்தினிற்புகுந்தோம் எ-று.

புக்கவனிருஞ்சிறு புதற்களை மிதித்தான்
மிக்கவினை யேனுமதின் மென்மலர்பறித்தேன்
அக்கண மூணர்ந்துமுனி யங்கிவிழிபாலே
தக்கவொளி மிக்கசடை கட்டவிழவந்தான்.

இ-ள், அப்படிப்புகுந்தவனாகிய இக்காந்திசாலி அங்குள்ளசிறுபுதல்களை மிதித்தான் மிகுந்தவினையையுடைய நானும் அவைகளிலிருக்கும் மேன்மையாகிய புட்பங்களைப் பறித்தேன் அக்கணமே துருவாசரிஷி அறிந்து விழிகளாலே நெருப்பைக் கொட்டிக்கொண்டு சடையவிழ்ந்தவிழக் கோபித்துவந்தார் எ-று.

முத்துமணியாமென முகத்தினில்வியர்ப்ப
வித்துருமம்வைத்தனைய மெல்லிதழ்முடிப்ப
வுத்தரியம்வீழ்வதை யடிக்கடியுயர்த்திச்
சித்திரவழற்பொறி தெறிக்கவிவைசொன்னான்.

இ-ள், முத்துகள்போல்முகத்தில்வேர்வையுண்டாகவும், பவளம்போன்ற மேன்மையாகிய இதழ்துடிக்கவும், நழுவிப்போகின்றவஸ்திரத்தை யடிக்கடிஉயர்த்திக்கொண்டு சித்திரமாகிய அக்கினிப்பொறிதெறிக்க இவைகளைச்சொன்னார் எ-று. உஅ

செந்தபனர் தங்கதிர் வராதுசிறுகாலு
நந்துமறு காலுமொரு காலுமிதைநண்ணு
முந்திலையு திர்ந்துபுல ராதுமுடிவெய்தா
திந்தவன மீதொருவ ரெய்தவெளிதாமோ.

இ-ள், சிவப்பாகியசூரியகிரணமும் என்னுடைய பயத்தினாலே வரக்கூடாது,தென்றற்காற்றும் வண்டுகளும் ஒருபோது இவ்வனத்தில் அடையமாட்டா இலையுதிராது, வாடாதுநாசமடையாது இவ்வனத்தில் ஒருவர்வருவதற்கு எளிதோ எ-று. உகூ

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

சேவினார்க்கினியபூசைக் கனிமலர்செறுத்துங்காவில்
பாவிகாள்புகுந்தென்கோபக் கனலிடைபஞ்சதானீர்
மேவிபதுரங்கமாகென் றிவர்க்குரைவிடத்தையீந்தா
னுவியாய்ப்பிறப்பாயென்று னணமலர்பறித்தவென்னை.

இ-ள், ரிஷபவாகனராகிய சிவபிரானுக்கு இனிமையாகியபூசைக்காகச்சாத்தும் புட்பங்கள் இருக்கும்சோலையில் பாவிகளே நீங்கள்புகுந்து என்னுடைய கோபமாகிய நெருப்பினிடத்திலே அகப்பட்டபஞ்சானீர்கள். குதிரையாய்ப்போவென்றுவிஷம்போல்இக்காந்திசாவிக்குச்சாபங்கொடுத்தார் புட்பம்பறித்த என்னைப் புனுகுபூனையாய்ப்போமென்று சபித்தார் தூருவாசரிஷி எ-று. கூ0

கோபமேதவமதாகப் பலித்திடுங்கொடியோனிட்ட
சாபமேவரவேநாங்க ளிருவருந்தளர்ந்துஞான
தீபமேயருளேயன்பர் செல்வமேயெனச்சென்றேத்தி
பாவமேவிடுமிச்சாப மொழியுநாள்பகர்தியென்றோம்.

இ-ள், கோபமே தவமாகப்பலித்த பொல்லாதரிஷியிட்ட சாபம் எங்கள்மேல்வர நாங்களிருவரும் தளர்வடைந்து ஞானவிளக்கேகிரு

பையே,பத்தருடையசெல்வமேயென்று வணங்கிப் பாவம்உண்டான திஞலே எங்கள்மேல்வந்தசாபம் ஒழியும்நாள் என்றைக்குச்சொல்லு மென்றுகேட்டோம் எ-று. ௯௧

முனிவரு தளர்ந்துசாப முனிவனுமொழிவானிந்த
தனிவனுஞ்சாபஞ்சோணு சலத்தினைவலஞ்செய்தாற்போம்
மனிதருஞ்சுரரும்போற்று மலைவலம்புரிகைதானு
முனிமையாம்பாண்டிநாட்டி னிறைவனுனெய்துமென்றூர்.

இ-ள், தூருவாசரிஷிக்குக்கோபம்நீங்கி நானிட்ட இவ்வொப்பற்ற சாபம் திருவண்ணுமலையை வலமாகவந்தாற்போம் மனிதரும் தேவ ரும்வணங்கும் அந்தமலையைபிரதட்சணஞ்செய்தால் சிறந்தபாண்டிய தேசத்தரசனுலே கிடைக்குமென்றூர் எ-று. ௯௨

என்றொருகதையுஞ்சொல்வா னெரிபழற்கிரியதாக
நின்றவெம்மிறைவன்முன்ஞெனாடு * வணக்கடவுள்ந்த
மன்றல்சேர்கனியைபத்தன்சே யிருவரும்வருந்திக்கேட்க [ஞன்
வின்றுலகனைத்துஞ்சூழ்ந்தோர்க்களிப்பனென்றிறையுஞ்சொ

இ-ள், இப்படிச்சொல்லி ஒருகதையுஞ் சொல்வார் அக்கினிமலை யாய்நின்றசுவாமிமுன்னே வருணன்கொடுத்தவாசனைபொருந்தியமா ம்பழத்தைத் தமதுபிள்ளைகளாகிய விநாயகர்சுப்பிரமணியர் இருவ ரும் வருந்திக்கேட்க இன்றைக்குள் உலகமுழுதுஞ்சுற்றிவந்தவர்க்கு இப்பழங்கொடுக்கிறேனென்றுசொன்னூர் எ-று. ௯௩

கந்தனுமயிலிலேறிக் கடலுலகனைத்துஞ்சூழ
முந்தினன்கரியவானை முகத்தவனெழுந்தெல்லோர்க்கும்
தந்தையாந்தனதுதாதை தனைவலம்புரியத்தந்தை
மைந்தனைத்தழுவிவேண்டும் வரத்துடன்கனியுமீந்தான்.

இ-ள், சுப்பிரமணியர் மயில்வாகனமேறிக்கொண்டு சத்தசமுத்தி ரஞ்சூழ்ந்தபூமிமுழுதுஞ்சுற்றிவந்தார், யானைமுகமுடைய விநாயகர் எழுந்திருந்து சுவாமிதானேஉலகமாயிருக்கிறூர் அவரைச் சுற்றிவந் தால் உலகத்தைச்சுற்றிவருதலொக்குமென்று யார்க்குந் தகப்பனுகி ய தன்னுடையதகப்பனைப்பிரதட்சணஞ்செய்தார் சுவாமி மகனைத்த ழுவிக்கொண்டு வேண்டியவரங்களும்பழமுங்கொடுத்தார் எ-று. ௯௪

மேலைநாள்கடிதுமேவிக் கனிதரவினவத்தம்மைக்
காவிஞல்வலமாயிந்தக் கரிமுகன்வந்தானெழு

* வணக்கடவுளென்பது-வருணபகவான்.

ஞாலமேவலஞ்செய்தாலும் பலபலதவஞ்செய்தாலும்
பாலகாநமைச்சூழ்தெய்வப் பலத்தினுக்கிணையோபார்க்கில்.

இ-ள். முன்னாள்சுப்பிரமணியர் சீக்கிரத்தில்பூமியைச்சுற்றிவந்து பழங்கேட்கச் சுவாமி நம்மைவிக்கினேசுரன் காலால்நடந்து சுற்றிவ நதான் ஏழுலகத்தைவலஞ்செய்தாலும் பலபலவாகியதவத்தைச்செய்தாலும மகனேநம்மைச்சுற்றிவரும்பலனுக்குஒப்பாகுமோ பார்க்குமிடத்தில் எ-று. க௬

செம்மலையுருவநம்மைத் தினம்வலம்புரிந்தோர்வேதன்
தம்மிலுமதிகமாயோன் றனக்குமேலதிகம்பார்க்கி
லும்மிலுமதிகரித்த யுமையிலுமதிகர்மைந்தா
எம்மிலுமதிகமென்றா னெவாக்குமேலதிகமானோன்.

இ-ள், சிவப்பாகின மலைபுருவமாகிய நம்மை தினம் வலம்வந்தவர்கள் பிரமனிலும் அதிகராவர் விஷ்ணுவிலும் அதிகராவர், பார்க்கிலும் உம்மிலும்அதிகராவர் பார்வதியிலுமதிகராவர் மகனேஉம்மைப்பார்க்கிலும் அதிகராவர்என்றார் எல்லார்க்குமேலாகியசிவபிரான்.

மாசிலாநமதுமேனி தரைதனக்கமரர்தாமும்
பூசனைபுரியமாட்டா ரதைவலம்புரிநதபேருக்
காசையாயளிக்கும்பூசை நமக்கினிதளிக்கும்பூசை
கூசுமாரிவைத்ததிங்கு நமைச்செயுங்கொடுமையாகும்.

இ-ள், குற்றமில்லாத நம்முருவமாகிய இம்மலைக்குத் தேவர்களும் பூசைபணணமாட்டார்கள், அந்தமலையைவலமாகச்சுற்றிவந்தவருக்கு ஆசையுடனேசெய்கிறபூசை நமக்கு இனிதாகச்செய்கிறபூசையேயாம். அவர்களுக்குக்கூசும்படிசெய்ததிமை நமக்குச்செய்ததிமையேயாமென்று சுவாமி சுப்பிரமணியருக்கு அருளினார் எ-று. கஎ

என்பதுமொழிந்தாரைந்த னெனச்சொலிமுனிவன்போனான்
பின்பதன்படியேநாவி புரவியாய்ப்பிறந்தோமென்று
தென்புவியுடையாய்நின்றான் றிருமலைவலமும்பெற்றே
மின்பொலிபழயகோலம் படைத்தெழிலவிமானத்தானோம்.

இ-ள், இப்படிசுவாமிசொன்னாரென்று தூருவாசரிஷி சொல்லிப்போனார், பின்புஅப்படியேகுதிரையாகவும் நாவியாகவும்பிறந்தோம் இன்றைக்குப்பாண்டியதேசத்தையுடைய அரசனேஉன்னால்திருமலையைப்பிரதட்சணஞ்செய்தோம் மின்னலபோல்பிரகாசிக்கிற பழைய உருவம்பெற்று விமானத்தில் ஏறினவர்களானோம் எ-று. க௮

சகடமவரவிதுன்பா விடுக்கண்வந்தடைந்ததிந்த
வெங்கனல்வரையைமாவின் மிசைவலம்வருகையாலே
பொங்கியததுவும்பூசை புரிந்திடிற்போமென்றோதித்
தங்களூர்புகுந்தார்காந்தி சாலியுந்தானுமாக.

இ-ள், எங்களுடைய சரித்திரம் இது அக்கினிசொரூபமாகிய இம்மலையைக்காலினாலேவலஞ்செய்யாமல்குதிரையிலேறிவலஞ்செய்தபடியினாலுனக்குத் துன்பம்வந்து நேர்ந்தது அதுவுஞ் சுவாமியைப்பூசைசெய்தாற் போமென்றுசொல்லிக் காந்திசாலியுங்கலாதரனுந் தங்களூருக்குப்போனார்கள் எ-று. ௩௩

வேழமும்பரியுந்தேரும் வீரருஞ்சுவடுநாடி
சூழமந்திரிகளோடுஞ் சூழ்ந்தனர் துயரந்தீர்ந்தான்
தாழையின்கமுகினிக்காடுந் தவளவான்கதிரைத்தீண்டும்
வாழையுங்கரும்பின்சாற்றில் வளர்ந்திடும்வையைநாடன்.

இ-ள், அதன்பின்பு யானையும் குதிரையும்தேரும் காலாட்களும் அடிபற்றிக்கொண்டு மந்திரிகளுடனே அரசனை சுற்றிக்கொண்டார்கள் அப்பொழுது விசனம்நீங்கினான் தென்னமரங்களும் கமுகவளமும் சந்திரனைத்தழுவும்வாழைமரங்களும் கருமபின்சாற்றினாலே வளர்ந்திடும் பாண்டியதேசத்துக்கரசனாகிய வச்சிராங்கதபாண்டியன்

அரதனுங்கதனைமைந்தன் றனைக்கடித்தழைப்பித்தாதி
பரதனைமெனவிப்பாறைப் புரவெனப்பகர்ந்தான்சீல
விரதனுங்கதனைக்கேளா வதன்முனேவிடைபெற்றானே
யிரதனன்மருங்குஞ்சூழப் பதிபுகுந்திறமைசெய்தான்.

இ-ள், வச்சிராங்கதபாண்டியன் தன்பிள்ளையாகிய இரத்தினாங்கதபாண்டியனைச் சீக்கிரத்தில்வரவழைத்து முன்னால் நமதுவமிசத்திற் பிரபலனாயிருந்த பரதன்போல் இராச்சியத்தைக் காப்பாற்றென்று சொன்னான் அவ்வார்த்தைக் கேட்பதற்குமுன்னமே விடைபெற்றுக் கொண்டு மகன் ஆனை தேர் முதலாகிய சேனைகள்சூழ மதுரைக்குப் போய் இராச்சியபரிபாலனஞ்செய்தார் எ-று. ௩௪

முறையினாலிறையின்வந்த கனகமுமுத்துந்தேவர்
திறையினாலளந்தபொன்னுந் தினந்தோறுங்களிற்றின்மேலே
இறைவனுந்தனதுதாதைக் களித்திடவிறைவன்பேணிப்
பிறையினாற்றினியபூசை திருப்பணிபெரிதுஞ்செய்தான்.

இ-ள். நியாயமாக ஆறிலொருகடமைகொண்ட திரவியங்க டலிற்குளித்துவாரிவந்தமுத்துசளும், சத்துருக்களால் திறையிட்ட பொன்னும் தினந்தோறும் யானையின்மேலேற்றி அரசனுகியதன்த கப்பனுக்கு அனுப்புவிக்க வச்சிராங்கத பாண்டியன் சடையில் சந் திரனைத் தரித்தசுவாமிக்கு இனிமையாகிய பூசை திருப்பணிபெரி தாகச் செய்தான்.

செய்தபின்றவமதாகிக் கவுதமாச்சிரமத்தோர்பா
லெய்தியபன்னசாலை யியற்றிநம்பாவந்தீர்க்க
மைதவழ்மிடற்றற்கன்பாய் மலைவலஞ்செயுநாளந்தக்
கைதவற்கெதிரேவந்தான் கடவுளர்க்கெதிரேவாரான்.

இ-ள். அருச்சனைசெருத்துத் திருப்பணியும் பூசை முதலா னவைகளும் சிறப்பாக நடத்தியபின்பு தவஞ்செய்வதற்கு நினைந்து கௌதமருடைய ஆசிரமத்தில் லொருபக்கத்திற் சேர்ந்து பன்னச கசாலைகட்டி நம்முடைய பாவத்தைத்தீர்க்கின்ற நீலகண்டமுடைய சுவாமிக்கு அன்பாய்க்கிரிப்பிரதட்சணஞ்செய்கின்றநாளில் கைத வனுகியபாண்டியனுக்கெதிரேவாராத பரமசிவன் எ-று. ௪௩

அணிச்சிறப்பிறையுபபோத வருள்பொழிவிழியுநீல
மணிக்கறைமிடறுநாறு கரங்களும்மலர்க்கைமானுங்
கணிச்சியினிடையிலீரி லிருப்பதுங்கண்டெம்பாவப்
பிணிச்சிறைவிடுப்பதென்றோ வெனச்சொலிப்பணிந்தாழ்ந்தான்

இ-ள். அழகு அமைந்த சிறிய சந்திரனையும் மிகவும் கருணை பொழிகின்றகண்களையும் நீலமணியைப்போல பிரகாசிக்கின்ற கண்டத் தையும் நான்கு கைகளையும் மலர்போன்றகையில் மானு மழுவுமு டையவராய் இடபவாகனத்தின்மேலிருப்பது பார்த்து என்னுடை யபாவப்பிணிப்புஎன்னைவிடுவது எக்காலமோவென்று சொல்லி மிகவும்பாண்டியன் வணங்கினான் - எ-று. ௪௪

கலிவிருத்தம்.

அண்ணாமலையுடையாய்மழ விடையாயணிசடைசேர்
தண்ணாமலையுடையாபெண்மை யுடையாய்படர்தருமங்
கண்ணாமலையுடையாய்வினை கடவாதறிவரிவற்
கொண்ணாமலையுடையாயுமை யுண்ணாமுலைதலைவா.

இ-ள். அண்ணாமலையென்னும் பெயரை யுடையவரே இள மையாகிய ரிஷபவாகனத்தை யுடையவரே அழகுள்ள சடையில் குளிர்ந்தகங்கையை யுடையவரே எங்களை யாட்கொள்ளவுடைய வரே நெற்றியிற் கண்ணுடையவரே பாவிகளாறியப்படாத கைலா யத்திலிருக்கின்றவரே உண்ணாமுலையாகிய பார்வதியம்மைத் தலைவ ரே-எ-று. ௪௫

மையாகியபிழையேனையொருமாவினில்வலமாய்ச்
செய்யாததுசெய்தேனிது தீரென்றுரைசெய்தான்
பொய்யாதவன்மொழிகின்றது கண்டேயருள்பொழியுற்
றையானனமுடையான்மழ விடையானிவையருள்வான்.

இ-ள். தீவினையையுடையவனாகிய நான் உம்மையொருகுதிரை யிலேறி வலமாகவந்து நான் செய்யத்தகாத காரியம் செய்ததனை லே பொறுத்தருள வேண்டு மென்று பொய்யில்லாத பாண்டியன் சொல்ல அதைக்கேட்டுகிருபையுண்டாகி இளமைபொருந்தியரிஷ பவாகனராகிய ஐந்து திருமுகத்தையுடையபரமசிவன் அருளிச்செ ய்தார். எ-று. கசு

மன்னுமகபதிநீயெமை மதியாதொருகுசலி
மன்னுள்விடனுற்றுயத னேலேநரவடிவா
யின்னதனைபெற்றயினி யிமையோரதிபதியாப்
பொன்னுடனையென்றேவர மொழிநதேயிறைமறைந்தார்.

இ-ள். வச்சிராங்கதபாண்டியனே நீபூருவஜென்மத்தில் தே வேந்திரனாயிருந்தாய் அந்நாளில்நமமை அலட்சியஞ்செய்து வச்சி ராயுதத்தை நமமேற்பிரயோகமசெய்தாய் அதனாலேபூமியில் மனி தனாகப்பிறந்து துயரடைந்தாய். அதன்பின்பு நமமைப் பூசித்து வலம வநதபடியினாலே இனித் தேவர்களுக்கு அதிபதியாக தேவ லோகத்துக்குப் போவென்றுவரங்கொடுத்து சுவாமி மறைந்தார

அருணைப்பதிவளமிப்படி யருணுபுரிநினைவோர்
மரணத்துகளடையார்ச்சிவன் வடிவானவரென்றுன்
கருணைக்கொருகடலேபர கதிபெற்றனமென்றே
சரணத்திடைபணிந்தார்நமன் றனைவாட்டியதவத்தோன்.

இ-ள். அருணாசலததின் வளமிப்படி இத்தலத்தை நினைப்பட வர்கள் மரணத்துன்பம் பொருந்தாமல் சிவசாரூபம் பெறுவார்க ளென்று நந்திதேவர்சொல்ல எமன்வாடும்படிசெய்த தவமுடைய மார்க்கண்டேயர்கேட்டு கிருபாசமுத்திரமானவரே உமமாலேபர கதியடைந்தேனென்று அவர் பாததத்தில்வணங்கினார். எ-று. சஅ

இக்கதைபின்பொருளானதொ ரெழுத்தாகிலுந்தெளிந்தோர்
தக்காருடன்படித்தோர்சிவ சாயுச்சியம்பெறுவார்
முக்காலமுமிதுகற்றவர் வினவிப்பொருண்முடிப்பார்
புக்கார்சிவகதியென்பது புதுமைப்பொருளன்றே.

இ-ள். இக்கதையில் ஒருஎழுத்தினது பொருளாயினும் அறிந் தோர்களும் பெரியோர்களோடு படித்தவர்களும சிவசாயுச்சியம டைவார்கள் திரிகாலத்திலுமிதைக்கற்றவர்களும இதின் அருத்தத் தைக் கேட்டுமுடிப்பவர்கள் சிவகதியிற்சேர்வார்களென்பது ஆச் சிரியமாமோ.


ஆறாவது.

வச்சிராங்கத பாண்டியன் சருக்கம்.

முற்றிற்று.

—(○)—

ஆக-திருவிருத்தம் சசசு.





உ

சிவமயம்.

(ஏழாவது)

# வல்லாளமகாராஜன் சருக்கம்.

கலி நிலைத்துறை.

பாசமுற்றவச்சிராங்கத பாண்டியன் சீரை
வாசமாய்நவின்றேமினி * நாமவல்லாளனுக்கு
ஈசனேமகவாகவந் தெய்திப்புன்னுறுதி
சையாயருள்செய்ததை யுமக்குரைசெய்வாம்.

இ-ள். சந்திரசடாதர மூர்த்தியாகிய பரமசிவனுடைய பாதபதுமங்களில் மிகவும் அவாவினையுடைய வசிராங்கத பாண்டியன் சரிதையைச்சொன்னோம், இனிவல்லாளமகாராஜனுக்கு பரமசிவமேபுத்திரனாகித் தோன்றி மறைந்து பின்னர் அக்கடவுள்விசும்பின்கண்வெள்விடையின் மீதெழுந்து அவ்வரசனுக்கு அருள்சுரந்தையும் மார்க்கண்டேயமுனிவரே உமக்குச்சொல்லுகின்றோமென்று நந்திதேவர் திருவாய்மலர்ந்தருளுகின்றார்-எ-று. ௧

* ஆதியில் விஜயநகரத்தையரசாண்ட கிருஷ்ணதேவராயர் விஜயத்தாலும் பிரதாப உருத்திரீயத்தாலும் மேற்படி வல்லாளமகாராஜன் வமிசந்தெரிந்துக் கொள்ளலாம்.

# அருணாசல புராணம்.

மணிகொழுத்திடு மாடமாளிகைதவழ் சோலை
திணிகளம்பரத்தினையுறு சிறப்பினையார்ந்த
கணிகையாமலர் கற்பினையருந்ததிதனக்கே
பிணையெனச்சொல விசைக்குமாவருணையம்பதியாம்.

இ-ள். மாணிக்கம், மரகதம், வயிரம், வயிடூரியம், கோமேதகம், புட்பராகம், இந்திரநீலம், முத்து, பவளமென்னும் நவமணிகளால் அலங்கரிக்கப்பட்டமாடமாளிகைகளும் ஆகாயத்தையளாவி யுயர்ந்தீஞ்சுவைக் கனிகளை உதிர்க்குஞ் சோலைகளும மலர்ச்சோலைகளெங்கும் நிறைந்து பரிமளிக்கவும், அருந்ததிகொப்பான வடிவழகுங்கற்பும்வாய்ந்த கணிகையர்கள் வசிக்கும் அருணாசலமென்னுந் தலமாம். எ-று. உ

எழுசீர்க்கழிநெடி லாசிரிய விருத்தம்.

இத்தகைசிறப்பை வகிந்திடுநகருக் கிறைவன் வல்லாளனென்றிசைக்கும், சத்திய மொழியானற்குணமுடையான் தன்னுயிர் மன்னுயிராகப், பத்தியாய்நாளும்பாதுகாத்திடுவோன் பகருருஞ்சேரனற்குலத்தோன், அத்தனாரடியை நித்தமுந் துதித்தே யவர்திருப் பணிசெயவந்தோன்.

இ-ள். இத்தன்மை பொருந்திய புகழினையுடைய அவ்வருணாசலமென்னுந்தலத்துக்கு அரசனாகியவல்லாளமகாராஜனென்பவன்மிக்கும்சத்தியவாக்கியமுடையவன் நற்குணமுடையவன் சகல உயிர்களையுந்தன்னுயிர்போற்பாதுகாப்பவன் செப்புதற்கரிதாகிய சேரனுடைய ஆக்கினிவமிசத்திலுதித்தவன். ஜகதீசனாகிய பரமசிவனுடைய உபசரணம்புயங்களைத்தினந்தினம் திரிகாலமுந்துதிசெய்பவன் அக்கடவுளினதுதிருப்பணிசெய்யும் பொருட்டு ஓர்வடிவாயுதித்தவன்.

பிறர்பொருளாசை யற்றவன் றனது பெண்டிரை யன்றிமற்றோரை, முறையுடன் றமக்கை தங்கைய ரென்ன மொழிந்திடுநன்னடையுடையோன், நெரியுடனாறி லொருபங்குகுடிக ளிலையுடன் றரப்பெறும் நெறியோன், கறைமிடற் றண்ண லாலயப் பணிக்கே கருத்துகந்தியற்றுநல் லன்பன்.

இ-ள். ஒருவன்பொருளின்மீதுஇச்சையென்பதைமறந்தவன் தன் மனைவியரையன்றி மற்ற ஸ்திரீகளைத் தமக்கைமார்களைப் போலவும், தங்கைமார்களைப்போலவும் மனதிற் பரிவுகொண்டுபேசுபவன்குடிகளிடத்தில் ஆறிலொருபங்கு பகுதிபெறப்பட்டவன், ஆலாயமுண்டகண்டராகிய ஸ்ரீ அருணசலேசரதுஆலயத்திருப்பணியைமனக்களிப்போடும் நடத்தும் மேன்மை பொருந்தியபதியையுடையான். எ-று.

நீதியாய்ப்புலியும் பசுவுமோர் துறையி
னெருங்கியே புனலுண்டுவசிக்கும்
போதனை யருளும் வேதியர் மறையைப்
புகன்றிட யாவருங்கேட்பார்
ஆதியாங் கடவுளருள்பெற நகரை
யலங்கரித் தற்புதஞ்செய்வார்
வீதியிற் புனலைத் தெளித்துமின் னார்கள்
மேம்படு கோலமுமிடுவார்.

இ-ள் அரசன் ஆணையால புலியும் பசுவும் ஓர் துறையிற் சேர்ந்து தண்ணீரருந்திக் களித்துவிளையாடி வாசஞ்செய்து வரும், வேதாகமங்களையுணர்ந்து உபதேசிக்கும் அந்தணர்கள்செய்யும் வேத பாராயணம் யாவரும்பக்தியோடுங்கேட்பார்கள், ஆதியாகவும்ஒப் பற்றதாயும்விளங்குங் கடவுளாகிய ஸ்ரீ அருணாசலேசுரருடையதிரு வருளைப்பெறும்பொருட்டு அந்நகர் முழுதும வீதிகடோறும வரிசை வரிசையாய்மகரதோரணங்களும மாவிலைத் தோரணங்களும் விருக்ஷபத்திரங்களுந்தூக்கி எங்கும சுகந்தபரிமளம வீசும் புட்பங்களால அலங்காரஞ்செய்து வீதிகளில் மங்கையர்கள் வாசனை கமழுஞ் சந்தனந்தெளித்து விசித்திரங்களாகிய கோலங்களை யிடுவார்கள். எ-று. ௫

மாதமும்மாரி சொரிந்துவேளாண்மை
மாறிலாச் செழிப்புறவிளையும
சாதமென்போரை யக்கணமழைத்தே
தழைக்கவோ ரறுசுவை யளிப்பார்
மாதவர்க் கேவல் புரிந்தவர் கேட்கும்
வகையெலாந்தந்தருள் பெறுவார்
நீதனா லயத்தி னெய்விளக் கமைத்து
நிரந்தரம் பூசித்துவருவார்.

இ-ள் அவ்வருணையம்பதியென்னுந் தலத்தில் மாதமும்மாரி பொழிந்து வேளாண்மை எந்நாளுங் குறையாது செழித்தோங்கி விளைந்து வரும அல்லாமலும் அந்நகரில் யாவரேனும் பசிப்பிணியால் மெலிந்து வந்து புசிப்புவேண்டுமென்று வினவுவர்களை அக்கணமே அழைத்து சயிதயோபசாரஞ் செய்து கைத்தல், புளித்தல், கார்த்தல், உவர்த்தல், துவர்த்தல், தித்தித்தல் என்னும் அறுசுவையோடுங் கூடிய உணவை திருப்தியாகக் கொடுத்து உபசரிப்பார்கள், மேலும் தபோ மகிமையையுடைய குணமுடையவர்கள் சொல்லுங் குற்றேவல்களைப் புரிந்து இச்சித்துக் கேட்ட வரங்களையெல்லாங் குறைவில்லாமல தந்து அவர்கள் அருளைப் பெறுவார்கள், இஃதல்லாமலும நீதனாகிய ஸ்ரீ அருணாசலேசுராலயத்தில் எங்கும் பிரகாசம் பொருந்தத்தக்கதாய் திருவிளக்குகள் அமைத்து அக்கடவுளை என்றும் பத்தியோடும் பூசித்து பணிந்து வருவார்கள். எ-று.

கலிவிருத்தம்.

இந்த வண்ண மிறைவன் விதிப்படி
அந்த மாநக ரானதி ருந்தநாள்
எந்தச் சீரு மிருக்கம ன்பேர்சொல
சந்த நீசிறி தின்றென் றுதாழ்ந்தனர்.

இ-ள். இத்தன்மையாய்அரசன் செங்கோன் முறைப்படி யாதொருகுறைவில்லாமல் அந்நகரம் செழித்தோங்கியிருக்கையிலொருநாள்மன்னனாகிய வல்லாள மகாராஜன் தனக்கு ஆண்டவனால் எல்லாச்சிறப்பும் பொருந்தியிருக்க நாமெடுத்தணைத்துச் சீராட்டிமோந்துமுத்தமிடவும் அவைகூறும் இனியமழலைச்சொற்களாற் களிக்கவுமான முறையும் பின்னர் நமபெயரைச் சொல்லவும் பிள்ளையில்லாமற்போயிற்றே என்று மனம் வெதும்பி மிகவும் துன்பமுற்றான்.

ஐயன் பூசை யதிற்குறை யேதுளதோ
வைய நீதியின் மாறுள தோவன்றிக்
கொய்ம் மலர்களிற் கோதுறச் செய்தனோ
செய்யும் வண்ணமென் செப்புவி ரமைச்சரே.

இ-ள். சகதீசனுகியும் மாமயேசனாகியும் எம்மை யாட்கொள்ளும்பொருட்டு எழுந்தருளியிருக்கும் ஐயனாகிய ஸ்ரீ அருணாசலேசுவரருக்குப் பேதையேனாற் செய்யப்பட்ட பூசையில் ஏதேனுங் குறைவுளதோ அல்லது இவ்வுலகநீதி நடத்துவதில் மாறுபாடாகிய குறைகளுண்டோ இதுவல்லாமலும் நம் கடவுளை அர்ச்சிக்கப் புஷ்பங்களையும்பொருட்டு கொய்த மலர்களிலே தேனுங்குறையுண்டோ யான் செய்தேன் அறியேன் இனியான் செய்யும் விதியாது கூறுவீர்கள மந்திரிகளே என்றான் வல்லாளமகாராசன். எ-று.

அண்ணலே நமையாதரித் தாண்டிடுங்
கண்கண் மூன்றுடை யானைற் கருணையால்
நண்ணு மாதலர் யார்க்குநல் லன்புடன்
றிண்ண மாயறஞ் செய்யின் மகவுண்டாம்.

இ-ள். எங்களிறைவனே நம்மை யாட்கொள்ளும் பொருட்டெழுந்தருளிய சகல புவன கர்த்தாவாயுஞ் சர்வாந்தரியாமியாயும் திரிகேத்திர முடையவராயும் அடியார்களிடத்தில் விளங்கும் ஸ்ரீ அருணாசலேசுரது மேன்மை பொருந்திய கருணையினால் நம் பதியை நாடி வரும் ஆதுலர் முதலிய அந்தணர்களும் இன்னும் மற்ற எவர்களும் எதைக்கேட்ட போதிலும் அவைகளை இல்லையென்னாது அவர் மனங் களிப்பரும்

படி உள்ளன்போடும் நல்குவோமாயின் புத்திரனுண்டாமென்று சொன்னார்கள் மந்திரிகள். எ-று. (௯)

அறுசீர்க்கழிநெடி லாசிரிய விருத்தம்.

சுந்தரவருணைநகரந் தனைந்துதிரநகரினுள்ளே
வந்தவரெதுகேட்டாலும் வழங்குது மெனவிப்போது
அந்தரமளாவவோங்க வழகியதுவசநாட்டி
நந்தலிலென்போரோவக நன்முரசறையச்செய்மின்

இ-ள். சோமசுந்தரக்கடவுளாகிய ஸ்ரீ அருணாசலேசர் வாழு மிப்பதியின்கண் வந்தவர்கள் எந்தப்பொருளை விரும்பிக்கேட்டாலும் குறைவின்றித்தருகிறோம் வாருங்கள் நற்றவர்களே என்று கரங்களைநீட்டி யழைப்பதுபோலும் அவ்வெல்லையுட்புக்க மாந்தர்களைக் கிளியென்னும்பிணி யறுநாமறுத்த ஆகாயபரியந்த மளாவியுயர்ந்து படபடாகாரஞ் செய்யும்படியாய் அழகியஓர் துவசம் நாட்டி என்பெயர் எங்கணுஞ்சிறக்கும்பொருட்டு எழுகடலொலிகளையுங் கமலீகரித்தது இடிமுழக்கம்போற பேரொலிகாட்டும் முரசமார்ப்பச் செய்யுங்களென்றான் வல்லாளராசன்-எ-று. (௰)

தாத்திரிமுற்றுநறசீர் தழைக்குமெங்கோனேகேண்மோ
சாத்திரம் புகழுமீசர் தாடொழுநதொண்டர்மூப்பர்
தோத்திரவினவலோர்கள தோன்றியவண்ணமீனப்
பாத்திரரோராமென்று பகர்ந்தனரமைச்சரானோர்.

இ-ள். நெடியகடல்சூழ்ந்த உலகமெங்கும் மிகுந்தகீர்த்தியை விரியச்செய்த எங்களரசே இருக்குயசுர் சாமம் அதர்வணமென்னும்நான்குவேதங்களும் ஆறுசாத்திரங்களும் புகழத்தக்க உமாமகேசனாகிய ஸ்ரீ அருணாசலேசருடைய உபயசரணம்புயங்களைப் பணியுமெய்யன்பர்முதலியவர்களின் மனதிற்றோன்றியவண்ணம் அளித்து களிப்படையச் சேவிக்கும்படியாகிய பாத்திரரோ நாம் இறைவனேயென்று மொழிந்தார் மந்திரிமார்கள் எ-று. (௧௧)

பூவிலப்பொருளைக்கேட்கப் போகுமோகேட்கிலவ்வா
றியாவராயினுந்தானல்கா ராதலாற்புகன்றவண்ணந்
தீவிரமாகச்செய்வீ ரெனத்துவசத்தைநாட்டித்
தேவர்நாடளாவவோங்கச் செயமுரசறைவித்தாரால்.

இ-ள். இவ்வுலகிலில்லாத பொருளைக் கேட்கப் போமோ அவ்வாறுகேட்டபோதிலும்யாவரேனும் எத்தன்மைவாய்ந்தவரானுலுங்கொடார் ஆகையால் யான் உங்களுக்குரைத்த விதியின்படி கொப்பெனச்செய்வீர்களென்றந்த மொழியைக்கேட்டுமந்திரிகள் துவசத்தைநாட்டிவானுலகளவும் பேரொலி முழக்கம் எட்டும்படி ஜெயமுரசறைவித்தார்கள்-எ-று. (கஎ)

எழுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

நாதன்வாழருணை நகரினில்வேந்த னாட்டிய துவசத்தை யோர்ந்து, பீதளத்துள்ளவிருத்தர்காமடிகொள்பூரியருடன்மிகச்சிறந்த, மாதவர்மறையோ ராதுலரேனை மாந்தர்வந்தணுகின்மற் றன்னோர், ஏதமில்வேண்டும்பொருளடைந்தென்று முலகுவாழ்வுறுவமென்றிசைவார்.

இ-ள். நாதனாகிய ஜகதீசன் ஸ்ரீ அருணாசலேசர் வாழும் அருணையம்பதியின்கண் வல்லாளமகாராஜனால்தருமக்கொடிநாட்டியிருப்பதாய்கேள்வியுற்ற நெடியகடல்சூழ்ந்தவையகத்திலிருக்கும் விருத்தர்பிராமணர் தபோதனர் முனிவர் கழைக்கூத்தர் யாசகர் முதலிய யாவரும் பத்திபோடுங் கூட்டங் கூட்டமாய்க் கூடி வந்து தத்தம்வறுமைநீக்கும்படியாய் வேண்டியவைகளைப்பெற்று குறைவின்றி வாழ்வோமென்று அரசனிடம்வருவார்கள்-எ-று. (கஅ)

வதுவைசெயப்பொன்வேண்டி வந்தோருக்காயிரம்பொன்வழங்கிப்பின்னும், கொதுவைமனை நிலம்பணிகொற்றவனேயதை மீட்டுக்கொடுமென் றோர்க்கத், ததியிலீராயிரம்பொன் றந்தவரை மகிழச்செய்ததன் பின்னுங்கு, முதுமறையோருப நயன முடிக்க வென்றுலவர்க்குநிதிமுன்னூறீவார்.

இ-ள். விவாகஞ்செய்துக்கொள்ள வேண்டுமென்று ஆவலோடு அரசனைநாடிவந்து கேட்டவர்கள் மனம் திருப்தியடையும்படி ஆயிரமாயிரமாகப்பொன்கொடுத்தும் பின்னர் ஆபரணநிமுதலிய மண்மனையாவுங் கொதுவைவைத்து மீட்டுக்கொள்வதற்கு ஏதுவில்லாமல் மூழ்கிப் போகின்றது அரசர்க்கரசனாகிய எங்கள் கோவே தேவரீர்அவற்றை மீட்கும்பொருட்டுத்திருவருள் சுரப்பீராயின் மிக்க புண்ணியமாமென்று பணிந்துவினவியவர்களுக்கிரங்கி அக்கணமேஇரண்டாயிரம் பொன்கொடுத்து அன்னவர் மனமகிழச் செய்வித்தும்.அதன் பின்பு வேதாகமங்களை யுணர்ந்த பெரி

யோர்களாகிய அந்தணர் வந்து அருணனை ஆசீர்வதித்து மகாரா ஜனே உபயனம் நடத்தவேண்டியிருக்கிறதென்று அறிவிப்பார் களாயின் அவர்களுக்குமுந்நூறு பொன்கொடுத்து மகிழச்செய்வி ப்பார். எ-று. (யச)

ஆலயத்திலுள்ள மணிமண்டபமுஞ் சூழ்மதிலு மவமாமென் னிற், கோலமுறை வமைப்பதனுக் கிறையவனே திரவியங்கள் கொடுப்பாயென்னச், சீதமுட னிருபதினாயிரம் பொன்னுந்தந்து சீர்செயவென்றான் பின், ஞாலமதின்மடந்தருமஞ் செய்ய வைம்ப தாயிரம்பொன் னல்கினானால்.

இ-ள். ஸ்ரீஅருணாசலேசன் எழுந்தருளியிருக்குங்கோயிலுள் நவமணிகளினாலுஞ் சந்திரகாந்தக்கற்களினாலும் அமைத்துப் பிர காசம்பொருந்தியிருக்கும்படி ஆகாயத்தையளாவி மேகங்கள் தவ ழுஞ்சுற்று மதில்களுக் கிலப்பட்டிருக்கின்றமையால் அவைகளைத் திருத்திச்செய்யும்பொருட்டுப் பொருளுதவிசெய்யவேண்டும் மகா ராசனேயென்று கேட்குங்கால் அரசன் மிக்கபத்தியோடும் ஜகதீ சன் திருப்பணி நிறைவேறும் பொருட்டு இருபதினாயிரம் பொன் கொடுத்துச் சீர்திருத்தஞ் செய்தும் பின்பு உலகின் மடம்புதுக்க வேண்டுமென்றா லவைகளுக்கு ஐம்பதினாயிரம் பொன்னுங் கொடு த்தான். எ-று. (யரு)

அந்தகர்க்குஞ் சங்கவர்க்கு முடவருக்கு மேழைகட்கு மாய த்தென்று, வந்தவர்க்கு மாதுலர்க்கு மாறாத சஞ்சலமும் வறுமை நோயால், நொந்தவர்க்குஞ்சொலுமின்ன மற்றவர்க்குத்தினந் தின மும் நுவன்றவாறு, சந்தமொடு பரிசளித்தில் நாரதரு மோர்ந்தங் ஙன் சார்ந்திட்டாரால்.

இ-ள். கண்ணில்லாதவர்களுக்கும் சோகி சங்கமர்களுக்கும் சுரசரணாதிகளற்றவர்களுக்கும் வினைவழியடால் வெவ்விய ஆபத்து நேர்ந்து வந்தவர்களுக்கும் ஆதுலர்களுக்கும் கெடாததுன்பத்தை யடைந்து தரித்திரமென்னும் பிணியால் மெலிந்து மனம் நொந்த வர்களுக்கும் பின்னும் சொல்லும் சகல யாசகர்களுக்கும் சதாகா லமும் அவரவர்கள் விரும்பியவண்ணம் மனக்களிப்போடும் உதவி செய்வதை நாரதமுனிவர் கேள்விப்பட்டு வல்லாளமகாராசனிடத் திற்கு மிகுந்த கருணையோடும் எழுந்தருளிவந்தார். எ-று. (கசு)

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்

மாதவமுனிவராங்கு வந்தனைமன்னனோர்ந்து
காதல்கொண்டமைச்சர்சூழக் கடிதினிலாசைவிட்டுப்

பூதலமெனைத்திர்சென்றேத்திப் புதிதாயமைந்தாவந்து
ஏதமில்பீடநல்கி யெழுந்தபின்னியமபுவானால்.

இ-ள். மகாதபோதனராகிய நாரதமுனிவர் வரவைக்காவலாளிகளால் கேள்விப்பட்ட வல்லாளமகாராசன் மிகவும்அன்போடுமெ சிங்காசனத்தைவிட்டெழுந்து மந்திரிமுதலிய சேர்வைக்காரர்களுடைசூழ்ந்துவரும்படி அரசன் எதிரிசென்று பணிந்துதபோதனர்களை யாட்கொள்ளும்பொருட்டுத் திருவருள் கூர்ந்தெழுந்தருளிவந்த மாதவமே புண்ணியப்பொருளேயென்று துதித்து அப்போதனரை நந்தத்தோடும் அழைத்துவந்து குற்றமற்ற மணிகள் ... பெற்ற பொற்பீடமளித்து அதிலெழுந்தருளியபின்சொல்லுகிறான்.

அயன்றவத்தினிலுதித்தே யழகியகரத்தின்வீணை
வியமுறக்கொண்டுபாடும் மென்முனிவனே.யின்று
நயமுடன்கொடியனேன்பால் நாட்டமுற்றெழுந்தசெய்தி
தயையுடனருள்கவென்னத் தாபதர்க்கசைப்பதானார்.

இ-ள். சிருஷ்டிகர்த்தாவாகிய பிரமன் தபோமகிமையால் உதித்து சரோருகம்போன்ற அழகிய கரத்தில்வீணை இலக்காகக் கொண்டு தியானஞ்செய்யும் மேன்மைபொருந்திய முனியே தாங்கள் நாயினுங்கடையேனாகிய பேதையின்மேல் கருணைவைத்தெழுந்தருளிவந்த சங்கதியை அருள்செய்யவேண்டுமென்று பணிந்து நின்ற வல்லாளமகாராசனைப் பார்த்து நாரதமுனிவர் கூறுவார்.

தலத்தின்மேன்மகிமையுற்ற தாபதர்புகழுமாவைம்
புலத்தினைவென்றமோனர் புகலுமூவகையுள்வன்னி
குலத்தினில்வருமன்னநின் கோதிலாத்தருமங்கேட்டந்
நலத்தினையறியவந்தோம் நவின்றிடாயெனவுரைப்பான்

இ-ள். புவனத்தின்கண் மகிமை பொருந்திய முனிவர்களும் புகழத்தக்க ஐம்புலவுணர்ச்சிகளையும் வென்று மெய்யுணர்ச்சி பெற்றபுண்ணியர்களால் சொல்லப்பட்ட சோமசூரியாக்கினியென்னு முக்குலத்தரசர்கள் அக்னிகுலத்திலுதித்த அரசே நின் குற்றமற்ற மகாதானத்தின் பெருமையைக் கேள்வியுற்று அதையறியும் பொருட்டு வந்தோமாதலால் உன் கருத்தை வெளியிடுவாயென்று நாரதமுனிவர் கேட்க அரசன் சொல்லுவான். எ-று.

முக்குலவரசருண்டென்பதும் அவருள்அக்கினிகுலமுண்டென்பதும், நதிருடத்தேள்மூவர் தள்ளருமரபினின்றுந் தமிழ் வேந்தர் தலையுந்தாள் என்னுந்திருவிளையாடற் புராணங்கூறுமாற்றானுமுணர்க.

எழுசீர்க்கடி நெடிலாசிரிய விருத்தம்.

மறைமுறையறிந்த தாபதர்புகழு மாதவமுனிவரேகேண்மோ, தனியிலென்னரசைத் தாங்கவுமென்பேர் சாற்றவுமகவிலாததனாற், பனிமலர்க்குழலாள்பாகனார்தொழும்பர்பரிவுடன்கேட்டவைமண் மேற், கனிவுடனளிக்கத் தவசமதயர்த்தேன் கடவுளின்செயலறி யேனே.

இ-ள். வேதசாஸ்திரங்களையுணர்ந்த முனிவர்கள் புகழத்தக்க மகாதபோபலமுடைய நாரதமுனிவரே எளியேன் அரசைத் தாங்கிக் கொள்ளவும் பின்னர் எளியேன் பெயரைச் சொல்லவும் மைந்தனில்லாமையால் பனிபெயிந்த பூங்குழலையுடைய உமாதேவி பாகனாகிய ஸ்ரீ அருணாசலேசரடியார்கள் பிரசித்தத்துக்கேட்டவைக ளொழில்லையென்று கொடுக்கும் நியமங்கொண்டு தவசநாட்டிநட த்திவருகிறேன் நம்மையாட்கொள்ளுங் கடவுளின்றிருவுளம் யா தோ அறியேனென்றான் வல்லாளமகாராசன். எ-று.

திருவுயர் தரும நடத்துவர் மகிமேருசேகரனைப்பெறுவரென் றேநற், றருமநூல்களினுஞ் செப்புவதன்றித் தக்கவரும் புகலுவத னாற், பெருகுமாநதியு மதியமு ளசடையிற் பெட்புடனுறவெலாங் காக்குங், குருபானருளாற் குழவியுமுண்டாங் கொற்றவா செல வருள் கென்றான்.

இ-ள். அழகிலுயர்ந்த முப்பத்திரண்டறங்களையும் இரப்பவர் களுக்கில்லையென்னமல் நடத்துபவர்கள் மண்மேல் புத்திரபாக்கிய ங்களைப்பெறுவார்களென்று மேன்மை பொருந்திய ஆகமசாஸ்தி ரங்களிற் சொல்லியிருப்பதல்லாமலும் மறைவிதியுணர்ந்த பெரி யோர்களுஞ் சொல்லுவார்கள் ஆதலால் எங்கும்பரவி மகிமையுள் ளகங்கையையும பிறைச்சந்திரனையுஞ் சடையிற்றரித்து எண்பத்து நான்கு நூறாயிரம் ஜீவபேதங்களைப் படைத்தளிக்கும் பரமசிவத் தினருளால் மக்கட்பேறு பெறுவாய், எனக்கு விடைதருவாய் அரசனேயென்று நாரதமுனிவர் விடைபெற்றுச் சென்றார். எ-று.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

மன்னவன்றனீதிதனைக் கபிலைவளர் பரமனுக்கு வழங்க வே ண்டித், தன்னுமினி காதலுற்றுச் செல்லுகையிற் சிவகணங்கள் து தித்துநிற்க, முன்னிலங்குஞ் சங்கரனை நாரதனும்பணிந்து பின்னர் முனிவர் சூழச், சென்னிமதி யணிந்தபிரான்றிருக்கோலங் கண்டி றைஞ்சி செப்புவானல்.

இ-ள். வல்லாளமகாராசனுடைய நன்மார்க்கத்தையும் தருமபரிபாலனத்தையும் கயிலாயகிரியில் எழுந்தருளியிருக்கும்பார்வதிசமேதனாகிய பரமசிவனுக்குத் தெரிவிக்கும்படியெண்ணங்கொண்டு தவத்திற் சிறந்த முனிவன் ஆசையோடுஞ் செல்லுகையில் அங்ஙனம் அநேக சிவகணங்கள் அடிபணிந்து துதித்து நிற்க முன்னம் பிரகாசித்துக்கட்டளைகள் விதித்துக்கொண்டிருக்கும் இரண்டாஞ் சங்கரனாகிய நந்திதேவரைப் பணிந்து புன்புமகாதபோதனர்களுந் தேவர்களும் முனிவர்களும் புடைசூழும்படி உமையவள் இடபபாகத்தில் இலங்கைக் கொலுவிற் வீற்றிருந்திருக்குஞ் சிவபெருமானுடைய திருக்கோலத்தைக்கண்டு சாஷ்டாங்கமாய் பணிந்தெழுந்து போற்றிய முனிவர் கூறுவார்.

தோசின்மிகு கயிலைவாழ் தேவாதிதேவநின் றிருத்தாள் போற்றி, மாசின்றி விளங்கருணையம்பதியின் வல்லாள மன்னனென்போன், ஓசைபெறச் சுதன்வே பண்டிக்கொடி நாட்டியுலகி லுள்ளோருவந்து கேட்கும், பாசமுடனெதையேனுந் தருவனென்று பறைசாற்றும் பன்மைக் கேண்மோ.

இ-ள். பிரகாசம் பொருந்திய கயிலாயகிரியின் வீற்றிருக்குந் தேவதேவனே, உன் உபய சரணங்கள்போற்றி, பூலோகத்திற்குற்றமற்று விளங்கும் அருணையம்பதியென்னுந் தலத்தாக்கிறையவனாகிய வல்லாளமகாராச னென்பவன் தன்பெயரை விளங்கச் செய்ய ஓர் புதல்வனை வேண்டி, யாவர் எப்பொருளை விரும்பிக் கேட்டபோதிலும் அவர் திருப்தி யடையும்படி தருகிறேனென்று கொடிபோட்டு பறைசாற்றி நடத்திவரும் பெருமையைக்கேளும் எந்தையேயென்று பின்னுங்கூறுவார நாரதமுனிவர். எ-று

நீதியைவளர்ப்போ னுண்மையைக்காப்போ னெறிமுறைதனிற்பிறழாதோன், கோதினைக் களைந்த வொமெனு முருவாய்க்குவலயத்துதித்தநற்பூடன், பூதலத்துயிர்களியாவுந்தன்னுயிர்போற் புந்தியுட்கருதியே காப்போன், ஆதியே நினது பதமலர்த்துணையென்றனுதினந் தொழுதுவா ழன்பன்.

இ-ள். நன்மார்க்க நீடும்படிவளர்ப்பவன் சத்தியத்தைக்காப்பாற்றத்தக்கவன் செங்கோல் விதிப்படி தவறாதவன் பாவங்களென்னும் இருளைத்துரத்தியெழுந்த மதியோன்ற தருமமாகிய ஒளியை உருவங்கொண்டு உலகிற்பிறந்து மேன்மைபொருந்திய அரசன் அல்லாமலும் பூமியில்வாழுமன்னுயிர் யாவுந்தன்னுயிர்போல மனதிலெண்ணிக் காப்பவன் அடியவர்க்கெளியவன் ஆதிக்கடவுளாகிய நங்

கள் சரணகமலங்களில் மனம்பொருந்திச் சர்க்காரமும் பணிந்து துதிசெய்து வாழ்ந்துவரும் மெய்த்தொழும்பனென்று நாரதமுனிவர் பரவிககூறினர் எ-று.

அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

வந்தமா முனிவன்கூறும் வாய்மையை யீசனோர்ந்து
அந்தவல் லாளன்றன்மை யாமுங்கண் டறிவோ மென்றே
சிந்தைசெய் முனிக்கு மற்றத் தேவர்க்கு மிருடிகட்குந்
தந்தமா சிரம மெய்தச் சாற்றினன் தன்னே ரில்லான்.

இ-ள். அங்ஙனம்வநது வல்லாளமகாராசன் பெருமையைச் சொல்லும் நாரதமுனிவன் மொழியைப் பரமசிவன் கேட்டு அவ்வரசன் தன்மையைநாமுங் கண்டறியவேண்டுமென்று மனதில்நினைந்து துதிசெய்துக்கொண்டுநிற்கும்முனிவனுக்கும் மற்றத்தேவர்கள் இருடிகள்யாவர்களையுநததகம் இருபபிடம்போய் சேரும்படி திருவாய்மலர்ந்தருளினர் ஒபபொருவருமில்லாத உமாமகேசர்.

அக்கணங் கயிலைநாத னளகையோன் றனையழைக்கத்
திக்கெலா மதிக்க வன்னோன் றிரண்டபொற் குவியல் தாங்கி
அக்கர வணிந்தவீச னருட்பதம் வந்து போற்றச்
செக்கரமே னியனு மங்கு சின்மொழி யருள லுற்றான்.

இ ள். அக்கணமே கயிலாயபதியாகிய பரமசிவன் அளகாபுரிக்கிறைவனாகிய குபேரனை வரும்படி கட்டளையிட்டமாத்திரத்தில் எண்டிசையுமதிக்கும்படி அவ்வரசன் அளவிறந்த பொற்குவியல்களோடும்பிரயாணப்பட்டு அரக்குமணிகளாகிய உருத்திராட்சமாலைகளையும் சர்ப்பங்களையும் ஆபரணமாகவணிந்த சிவபெருமானிடம் வந்து அடிபணிந்துபோற்றி நிற்கச்செவ்வானம்போன்ற தேககாந்தியுடைய பரமசிவன் அங்ஙனம் சிலவசனங்களையருளுவார். எ-று.

அளகையா ளரசே கேளு மருணையம் பதிவாழ்வேந்தன்
உளமுறு திையச்சோ திக்க வுன்னிய படியா னீஇவ்
வளமுறுஞ் சீவனாகி மாநிதி கடனெம் மோடு
புளகமாய் வருக வென்று புகன்றனன் கயிலை நாதன்

இ-ள். அளகாபுரிக்கிறைவனே பூமியில் நாம் அருணையம்பதியில்வாழும் வல்லாள மகாராசன் மனவலிமையைச் சோதிக்கும்படி எண்ணங்கொண்டிருக்கின்றமையால், நீயும் சிறந்தசீடனாகி அளவிறந்த பொருளோடும் நம்முடன் மனமகிழ்ந்துவரக்கடவையென்று கூறினர்-எ-று.

மாலயனிருவர்கண்டு மனத்தினிலென்றுமில்லா
மால்கொரும்பராரு மலர்மழைசொரியவேத
நூல்களுந் துதிக்க யாரு நுமலிசற் கரிய மாதோர்
பாலொளிர் பரமன் யாரும் பரவுஞசங் கமராய் நின்றார்.

இ-ள். விஷ்ணுவும பிரமனுங்கண்டு மனதில் ஒருநாளுமில்லாதமகிழ்ச்சிகொண்டுபோற்றவுமதேவர்கள் மலர்மாரிபொழியவும் வேதாகமங்கள் துதிக்கவும் யாவராலுஞ்சொல்லுதற்கரிய உமாமகேஸ்வரியையோர் கூறாகக்கொண்ட பரமசிவன் சகலரும் பணியும் சங்கமராய் வேடங்கொண்டு நின்றார் எ-று

தேவுறை கயிலை வாழுந் திருவுயர் சிவக ணங்கள்
யாவுமெம் மையநற்சீ ரருணிற லாண்டி யானார்
பூவுல கினில்வல் லாளன் பொருநதூற் பதியை நாகக்
கோமுறையோர்கொண்டாடமாமவருவ ரானார்

இ-ள். தேவதேவனாகிய பரமசிவன் வாழுங் கயிலாயகிரியில் வாசஞ்செய்து கொண்டிருக்கும அழகிய சிவகணங்களெல்லாம எமதையன் கருணாசததிறால் ஆண்டிகளுருவங்கொண்டு உலகில இணையில்லாத கீர்த்தியைப்பெய்திய பிரகாசிதஞ்க் கொண்டிருக்கும் வல்லாளமகாராசன் வாழும்பதியைநேர்த்தி அரசநீதியோர் கொண்டாடிப் பணியத்தக்கதாகக் குருமூர்த்தமா யெழுந்தருளியிருக்குஞ் சிவபெருமானைச் சூழ்ந்து வந்தார்கள். எ-று.

எழுசீர்க்கடி லாசிரிய விருத்தம்.

கற்பினி லுயர்ந்துங்கணவனை பிறைபோற் கருதுதாயொருவருமிலையோ, பொற்புறமைந்த ரில்லையோபசிக்குப் போசனமளிப்பவரிலையோ, விற்பனமுடைய வாசர்களிலையோ வியப்புடனெங்களைக் கூவிக், கற்பனையோடுய மூதினைப்படைக்குங் கன்னியரிலையோவென்பரா.

இ-ள். கற்பில் அருந்ததியைப்போல் மிகுந்தும் தத்தம்கணவனையே தெய்வமாகப பாவித்து நடக்குந்தாய்மார்களொருவருமிலலையோ அழகிய பெருமைதங்கிய வாய்க்கமகள் வாய்ந்த மைந்தர்களில்லையோ, அடியார்கள் பசிவேளை யறிந்து அன்னங்கொடுப்பாரில்லையோ, மனுநீதியோடுங்கூடிய அரசர்களில்லையோ, சந்துருஷ்டியால் எங்களைத் தொழுது அழைத்துக்கொண்டுபோய்ப்பத்திரசத்தோடும் அன்னம்பாலிக்கும் கன்னியர்களுமில்லையோ வென்று கூறுவார்கள். எ-று. (௧௯)

பொன்னளித்தாலும் வேண்டுவதில்லோம், பூடணந்தரினும் யாம் வேண்டேம், துன்னுமாமணிக ளல்கினும்விரும்போந் தொங்குமுத் தாரமுங் கருதோம், மன்னர்கள் செங்கோலரசினை யெமக்குவழங்கி னுமனமதிவில்லை, அன்னமீந்தெம்மை யாதரிப்பாரே லன்புட னுண் ணுவோ மென்பார்.

இ-ள். செம்பொன் அளித்தாலும் விரும்போம்இரத்தினங்களை யழுத்திஇலங்கும் அழகியபணிகளையும் விரும்போம், பிரகாசம் பொருந்திய ரத்தினங்களை அளித்தாலும் விரும்போம், முத்துமாலைகளி லும் மனம்வையோம், அரசர்கள் செங்கோலின் விதியைத்தந்த போதினும் வேண்டோம், அறுசுவை பதார்த்தவகைகளோடும் அமுதளி ப்பார்களானால் மிகவும் இன்பமாய் உண்ணுவோமென்று அடியார் கள் கூறுவார்கள் எ-று. ௫௧

கவ்வியங்கரத்திலிருந்தனைநீத்த நாதர்சங்கமருமோற்சி
ரொவ்வியவருணைமாநகர்த்தெருவி லொளிசெழக்குமுதவாய்மலர்ந்து
வெவ்வியபசியான்மெலிந்தவரேற்க மேவுவபோலவுங்கூவிச்
செவ்வியகொவ்வைவாயராங்கணிகைத் தெருவினைச்சார்ந்தவருனர்.

இ-ள். அழகியகரத்தில் மானைத்தரித்தவராகிய சங்கமர் சிறப் போங்கி இலங்கும் அருணைபம்பதி வீதியில் ஓசைபெறத் தக்கதாகச் செங்குமுதம்போன்ற திருவாய்மலர்ந்து கொடிதாகியபசிப்பிணியால் துன்புற்று இரப்போரைப்போல வரற்றிச்சிவந்த கொவ்வைக்கனி போன்ற கணிகைமாதர்கள் வசிக்கும் வீதியில் வந்தார்பரமசிவனான சங்கமர் எ-று. ௫௨

கெண்டைபோல் விழியுங் கிளிநிகர்மொழியுங்கிளர்மதிவதனமு மென்பூச், செண்டைபார்குழலுங் கந்தமதுலவுந் தெங்கதின குரும் பைநேர்முலையா, ரண்டையி லிருந்து வல்விடியளவு மைமங்கனைமார னற்புறியுஞ், சண்டையையகற்றத் தருபொனைமின்கா ளாற்றுது மெனவவர் மொழியார்.

இ-ள். சேற்கெண்டை போன்ற அழகிய விழியையும் அஞ்சுகத் தையொத்த இனியவார்த்தைகளையும் ஆகாயத்திலிலங்கும் பூரணச் சந்திரோதயம் போன்ற திருமுகவொளிவும் சீதளநிறைந்தகளபமலர் களாற் கட்டப்பட்ட பந்தைநிகர்த்து ஊசலாடுங்குழலும் சுகந்தங்க ளைத்திமிர்ந்து தென்னங்குரும்பைகளைப்போற் பிரகாசிக்கும் இரண்டு புயங்களையுடைய வனிதையர்கள் பக்கலில் இன்றிரவு விடியுமளவு

பொருந்து முல்லை, அசோகு, நீலோற்பலம், மாம்பூ, தாமரை, இவ்வைந்து மலர்களை ஐந்துகணைகளாகவும் கரும்பை வில்லாகவும் வளைத்து போர்புரிய எழுந்திருக்கும் மன்மதன் கணைவலியைத் தடுத்தோட்டும் பொருட்டுப் பிரியமாகக் கொடுக்கும் பொன்னைப் பகருவீர்கள் பெண்களேயென்று சங்கமர் வினவியபோது அக்கணிகை மாதர்கள் கூறுவார்கள் எ-று. ௩௩

பையரவணிந்த பரமனைப்போன்ற பகரும் ஐயகேள் யாங்கள், பொய்யதுமுரைபோம் வஞ்சகமுணரோம் புணர்தலுக்கோரிருண்முற்றும், தையலரொருத்திக் காயிரங்கனகந் தருவதவாறளித் திடின்யாம், மெய்யுடன் மெய்யும் பொருந்திய கலவி விளைத்து மனமதன வினைதவிர்ப்போம்.

இ-ள். வெவ்விய விடங்களையுடைய சர்ப்பங்களை ஆபரணமாகவணிந்த ஸ்ரீகைலாயபதியாகிய பரமசிவனைப்போல் சொல்லுதற்கரிய சங்கமரே யாங்கள் பொய்வார்த்தைகளைப் பேசோம் வஞ்சகமாகிய துரோக சிந்தனைகளையுங் கருதோம் ஓரிரவு முழுமையுஞ் சுகலீலைகளையனுபவிப்பதற்கு ஒவ்வொருபெண்ணுக்கு ஆயிரம்பொன்கொடுக்கும நியமமாதலால் அதுபோற் றருவீராயின யாங்கள் எங்கள மனமுமமெய்யும் ஒன்றுபடத்தக்கதாக அஷ்டவித ஆலிங்கனமுஞ்செய்து அனங்கனையுங் கருந்தும் நாணுமபடி புணர்வோமென்றார்கள் எ-று.

அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

பரத்தையாக ளனைவருக்குந் தந்துடைவையொருத்திக்கோர் பண்டாரத்தைக், சரதத்தை [illegible] மிகக்கட்டுப்பாடா, யுரைத்துவிலைமாதர்களின் வீதியெலாஞ் சங்கமராயொளிரச்செய்து, வரதனைதுதிக்கத் தருமருணை நகரினிலென் காதமட்டுருவசசெய்தார.

இ-ள். அக்கணிகை மாதர்கள் சொல்லியவைபோல் அவர் மகிழும்படி கனகம்சொரிந்து வொவ்வொருத்திக்கோர் ஆண்டியை நியமித்து கற்குல விடியளவும்விட்டு நீங்காதிரகமென்று கண்சாடையினாற் றெரிவித்து மிகவும் கட்டுப்பாடாக அக்கணிகைமாதர்கள் வாழும வீதியெல்லாம் சிவனடியார்களாகவே பிரகாசிக்கும்படிசெய்து எண்ணிய எண்ணங்களையெல்லா முற்றச்செய்யும் அழகிய அருணையம்பதி எண்காதம்வரையிலும் சுரதலீலை புரியச்செய்தார் சங்கமராகிய பரமசிவன் எ-று. ௩௪

விலைமாதர் தனித்தொருவரில்லாம லரிதாகி வெய்ய காமன், க லைமார்க்கப் படிமருவச்செய்த சங்கமரும்நீங்கிக் கமழுமாநன், னிலை மார்க்கமாய்ந்திட்ட சிடனுடன் மேவவந்த நலத்தை யாளுஞ், சிலைமா ர்க்கமறிந்தமன்னன் கண்டெதிர்சென்றிறைஞ்சியழைத்திருத்திச்சொ ல்வான்.

இ-ள். விலைமாதர்கள் தனித்து எங்குங்கிடைக்காதஅரிதாகச்செ ய்து கொடியமன்மதன் சாஸ்திரவிதிபின்படி அஷ்டவித ஆலிங்கனமு ம் நகக்குறி தந்தக்குறிதாடனங்கள் அறுபத்துநான்குவிதலீலைகள் இ வைகளையுஞ் செய்யச்செய்த சங்கமராகிய செகதீசன் அவணின்றெழு ந்து பிரகாசமும், பெருமையும் பொருந்தியநன்மார்க்க நிலையைப்பரி சோதிக்கசிடனாகிய அளகேசனோடும அரசன் அரண்மனையைநோக்கி ச்செல்லுகையில அப்பதிக்கிறைவனாகியும் தறார்மீவதமார்க்கம்பாவும் பூரணமாபுணர்ந்த மன்னனுமாகிய வல்லாளமகாராஜன் சங்கமர்வரு தலைகண்டு எதிர்சென்றுபணிந்துபோற்றி யழைத்துக்கொண்டுபோய் நவமணிகளாலலங்கரிக்கப்பட்டு பிரகாசமபொருந்திய அழகியவோர்சிங் காதனத்தில் எழுந்தருளச்செய்து அஞ்சலியத்தனாய் நின்று கூறுவா ன். எ-று. ௫௬

வே று.

பண்ணியதவமோவன்றிப பாரினிலியானியற்றும்
நண்ணிபகருமம்பாதோ நயர்கியவ்வாறுநல்கப
புண்ணியவசமோதேவர் பொன்னடிவருந்தவிங்கு
கண்ணியமுறுவேன்றங்கள் கடைக்கணும்பெருவேனென்றான்.

இ-ள். தமியேன் செய்ததவப்பபனோ அல்லதுஸ்ரீ அருணாசலேச ர்வரமும் இவவநிலையம்பதியில் எளியேனாற்செய்யப்பட்ட கிரியைக ளின் புண்ணியமோ பரமசிவத்தைப்போலெழுந்த சங்கமதேவரின்பி ரகாசம்பொருந்திய தங்கமயமாகிய உபயசரண கமலங்கள்வருந்தவு மும்படி இங்ஙனம் அருள்சுரந்தவிதியாதோ அவற்றைத்திருவாய்மல ர்ந்தருளினால் அத்தன்மையா யடியேனிடத்திற் கண்ணியனாவதல்லா மலுந்தேவரீர் கருணைகடாட்சத்தினாலுந் தோய்வேனென்றான் வல்லா ளமகாராசன். எ-று. ௫௭

மன்னர்களரசநீதிமார்க்கமும்நீடுவாழி
உன்னையாங்கருதினந்த தோதுவமுறுவில்மாரன்
பன்னுமைமங்கையாலின்று படுத்திடுந்துயரைமாற்றக்
கன்னியையநல்கிற்கீர்த்தி கடலேழும்வயங்குமென்றார்.

இ-ள். இப்பூமண்டலத்திற் கீர்த்தி பொருந்திய வல்லாளமகாராஜனே உன் அரசும்செங்கோன் முறைமையும் நீடூழிகாலம்வாழி இப்போது உன்னையாம் வேண்டிவந்தகாரணம் யாதெனில், உருவிலியாகிய மன்மதனுலெய்யும் முல்லை அசோகு நீலோற்பலம்மாம்பூ தாமரை மலரென்று சொல்லப்பட்டஐந்துகணைகளினலும் இன்றுயாம்படுந்துன்பத்தைநீக்கும்பொருட்டு ஒருமாதை எனக்குக்கிட்டும்படிசெய்வையேயானல் உன்கீர்த்தி ஏழுகடல்சூழ்ந்த இவ்வையகத்திற் பிரகாசிக்குமென்றார் சங்கமராகிய பரமசிவம் எ-று. ௩௮

இதைவிடதேவரீருக் கெழின்மணமுடிப்பிப்பேனென்
றதையுணர்ந்தைபரானே ரரசேகேளதுமாதொல்லை
வகைசெயுங்காமநோயை மாற்றுதல்விலைமாதர்க்கே
புதையல்போற்றெரியுமென்று புகன்றனர்பெரியோராங்கு

இ-ள். இவ்வாறுபரமாதரை இச்சித்துத் திரிவதைப்பார்க்கிலும் எக்காலமும் தேவரீரைவிட்டகலாமலிருக்கும்படிசிறப்போங்கியமணஞ்செய்து வைக்கின்றேனென்று மிகுபத்தியும்பரிவுங்கொண்டுரைத்த வல்லாளமகாராசனது அன்புநிலையையறிந்தசங்கமராகியசிவபெருமான்சொல்லுகின்றார் அரசனேஇப்போது நீசொல்லியவார்த்தைகொடியதுன்பத்திற்கிடமாயும், சுடாமுன்மெழுகுபோல் மனம் ஒருங்குபடுத்தாமல்பலவிதகோலங்களை உண்டுபண்ணி அலையச்செய்யும்அதுவல்லாமல் பஞ்சேந்திரியங்களுந்தடுமாறி காமவெகுளி மயக்கத்தினலநாவறட்சிசெய்யும் சுகப்பிணியைப்போக்கும் அவுடதம் விலைமின்னர்களுக்குக் கைவல்லியப்பட்டதேயன்றி இதரமான மாதரறியார்கள் ஆதலால அவரால் என்பிணியைமாற்றுவிப்பாயென்று பெரியோராகிய சங்கமர் கூறினர். எ-று. ௩௯

நிட்டைசெய்வோர்க்கும்போக நிகழ்த்துசங்கமரேதங்க
ளிட்டத்தின்படியான்செய்வே னென்றிறைகாவலோரை
விட்டதிவிரைவிற்சீரார் வேசையாமொருமின்னளை
இட்டமாயழைமினென்ன வேகினர்வாயவின்மிக்கோர்.

இ-ள். இவ்வாழ்க்கையைக் கடந்துசதாநிஷ்டைசெய்யும் தபோதனர்களுக்கும் ஞானோபதேசஞ்செய்விக்கும மகிமைபொருந்தியசங்கமரே, உமதுகருத்தின்படியே நடத்துகிறேனென்று அங்குள்ளகாவற்காரரை அழைத்துநீங்கள் அதிசீக்கிரமாய் சிறப்போங்கிய கணிகைமாதர்கள் வாழும்வீதியிற்சென்று அதிரூபலாவண்யமுள்ள ஓர்தையலை அழைத்துவாருங்களென்று விடைதரக்காற்றினும் அதிவேகமாய் அக்காவலாளர்கள் சென்றார்கள். எ-று. ௪௰

சென்றுவேலையர்கள்வாழுந் தெருமனைதோறும்புக்கு
நின்றங்குநோக்குங்காலை லேயமாய்நடனக்கும்
கொன்றைசூடியவெம்மான்றன் குழுமனாடல்கண்டு
இன்றுதவாதென்றெண்ணி யிறைக்குவந்துரைப்பதானார்.

இ-ள். அரசன ஆனையைப் பெற்றுச்சென்ற தூதர்கள் அழகிய விலைமாதர்கள்வாழும்வீதிகளில் மனைகள்தோறும்புகுந்துபார்த்துவருகையில் ஒருவீடாகிலு நீங்காமல்சுரலயதாளததோடுசுகந்தபரதநாட்டியங்கள் வீணைகான சங்கீதமுழக்கத் தோடும் பொன்னிறம் போன்றகொன்றைமாலையைச்சூடிய சிவனடியார்கள்வீடுகள்தோறும் தனித்தனியாயிருந்து ஆனந்தித்துக்கொண்டிருக்குஞ்சமயிரமங்களைக் கண்டு இன்றுமுடியாதென்று கருதினவராய் தமதுஅரசனிடம்வந்து கூறினார்கள்-எ-று. ௪௧

எழுசீர்க்கழிநெடி லாசிரிய விருத்தம்.

அம்மொழிபோர்ந்தமன்னவன்வெகுண்டேயமைச்சரைநோக்கி யேபுகலவா, னம்மொழிபிறழ்வதரன்றிருச்செயலோநாம்செய்தபூசை யின்குறையோ, செம்மொழியார்நதசங்கமர்கேட்டதெரிவையர்கிடை ப்பதுமரிதென், றிம்மொழியவாமு னிசைப்பதுமுறையோவென்னவு மமைச்சர்க ளிசைப்பார்.

இ-ள். இவ்விதமாய்த்தூதர்கள் உரைத்தமொழியைக்கேட்ட அரசன்கோபித்துத்தன்மந்திரிமார்களைப் பார்த்துச்சொல்லுவான் நாம் பரமசிவத்தின்அடியவராகியசங்கமருக்குரைத்தமொழிபுரண்டுபோவதுஜகதீசனுகிய ஸ்ரீ அருணைசைலசன் திருவுளச்செயலோ அல்லதுநாம் ஆண்டவனுக்குச்செய்த பூசையின்குறையோ, என்செயலேனச்செவ்வியசொற்கள் பிரகாசிக்கின்ற சங்கமர்நம்மைநாடிக்கேட்டமாதர் கிடைப்பதுஅரிதென்று அவர்முன்நாமபுகலுவதுதருமமோவென்றுதுன்பப்படும்வல்லாள மகாராசனைபபார்த்து மந்திரிமார்கள்சொல்லுகின்றார்கள்-எ-று. ௪௨

சிந்தையிற்கவலையுற்றிடவேண்டாஞ்செல்வனேபேதையோம்சென்று,விந்தைகொள்வேசைமாதினைக்கொணர்வோம்வியாகுலம்விடுமெனவவர்வாழ், சந்தைகொல்வீதி யடர்ந்தவர்மனையிற் றங்கியகோலமுநோக்கிப், பந்துநேர்முலைமேற் கந்தமுமணிந்தபரத்தையர்க்கெடுத்துரைப்பாரால்.

இ-ள். மனத்திற்கவலைகொள்ளவேண்டாம்அரசே, கடையர்களாகியயாங்கள்சென்று அடியவரஎண்ணியவண்ணம்அதிரூபலாவண்யமு

ள்ளக்கணிகை மாதைக்கொண்டுவருவோம் தங்கள் துன்பமொழிபுமெ ன்றுசொல்லி அவர்வாழும்பேட்டையாகியவீதிகளிற்சென்றுமனைகளி ற்புகுந்துபார்க்கையில்எங்குஞ்சிவனடியார்களாய் விளங்கியிருப்பதை ப்பார்த்தும் பந்துபோன்ற அழகியதனங்களின்மீது சுகந்தபரிமளங்க ளையணிந்திருக்கும் விலைமாதர்களுக்குச் சிலவார்த்தைகளை எடுத்துச் சொல்லுவார்கள்-எ-று. ௬௩

மைப்புலாம் வழிநேர்மாதர்கணெருங்கி வாழுமிவ்வீதியிலொருத் தி, மெய்ப்புலாமரசை நாடியபெரியோர் விரகத்தைத்தணித்திடுவாரேல், கைப்புலாங்கடகப் பணிமணிவடமுங்கவித்திடு சதங்கையுமணிந்து, நெ ய்ப்புலாந்தயிர்பா லறுசுவையன்ன நிரந்தரமுண்டுவாழ்குவரே.

இ-ள். நீலோற்பலம்போன்றபிரகாசம்பொருந்தியகண்களையுடை யபெண்கள் கூட்டமாய்வாழ்ந்துகொண்டிருக்கும் வீதியில்யாராகிலு மொருமாது உண்மைவிளங்கும்எங்களிறையவனைநாடிவந்தசங்கமர்வெவ் வியகாமநோயைத் தணிப்பாரேயானால் அவர்கள் இருகரங்களும் கட கமும் நவமணிகளாலமைத்த ஆபரணங்களும் முத்துமாலைகளும் ஓசை யைக்கொடுக்கும்பாதச்சதங்கைமுதலிய நூபுரங்களாலணிவதல்லாமலு ம்நெய்பால்தயிர் அறுசுவைபதார்த்தங்களோடுமுண்டு சதாகா லமும் யாதும் குறைவின்றிவாழ்வார்கள்-எ-று. ௬௪

இன்னவாறமைச ருரைக்கவும் மின்னாரிறைஞ்சியேயாங்களெல் லோரும்,முன்னடியாரிடம்பொருவிலமுழமைபயிருந்திடப்பெ ற்றோம், துன்னுமிவ்விரவுகழிந்தபின்நீவிர் சாற்றது போலவா மமை ச்சர், தன்னகஞ்சலித்து மன்னனுக்கறைச் சாற்றவுமாங்கவன் மொ ழிவான்.

இ-ள். இவ்வண்ணமாய் மந்திரிகளுரைத்தமொழியைக்கேட்டபி ன்னலைப்போற்றுவளும்இடையினையுடைய அக்கணிகைமாதர்கள்எதி ர்வந்துநின்றுபணிந்துபலவாறுகத்துதித்துநாங்கள்யாவரும்இன்றுபக ற்போதேநம்மைபாட்கொள்ளும்ஸ்ரீஅருணாசலேசருடையமெய்த்தொ ழும்பாகிய இவ்வடியார்களிட மின்றிரவுவிடியுமளவும் சுகலீலைகளுக் கிணங்கிநடப்பதாய்ப்பொன்னைப்பற்றிக் கொண்டோமாதலால் இந்நா ள்செல்லுமானால் தேவரீர்சொல்லியபடி நடக்கலாமென்று மொழிந்த வைகேட்டஅமைச்சர்கள் தத்தம்மனஞ்சலித்துஅவணின்றுநீங்கிஅரச னிடம்வந்துரைக்க அங்ஙனங்கூறுவான் வல்லாளமகாராசன்-எ-று.

அற்பமிது நமக்கரிதாயிருப்பதென்கொ லந்தோவென்றயர்வுற்று ங்கு, பற்பலவசிந்தைதனி லேக்கமுற்றீ திறையருளும் பான்மைதா னோ, கற்பரனைப்போலெழுந்த சங்கமருக் குறைத்தவண்ணந் தருவே னென்று, விற்பொருதும் வேந்தனதி விரைவாகக் கணிகையர்பால் மேவினனால்.

இ-ள். அற்பமாகிய இச்செய்கை நமக்குக்கிடைப்பது துற்பலமாகவிருக்கும் காரணமயாது, ஐயோவென்று அரசன் துன்பமடைந்து பின்பலவிதமாய் மனத்தில் ஏக்கங்கொண்டு இதுவும் பரமசிவனுடைய திருவிளையாடல்தானோ ஜகதீசனைப்போல் வடிவுகொண்டு எழுந்தருளிவந்தசங்கமர் எண்ணியவண்ணந் தருவேனென்றெழுந்து வில்வேந்தியொளிரும வல்லாளமகாராசன் மிகவுமதிவிரமாய் விலைமாதர்கள் வாழும்வீதிக்குச்சென்றான். எ-று. சசு

அறுசீர்க்கழிநெடி லாசிரிய விருத்தம்.

வந்தவரெதுகேட்டாலும் வழங்குதுமெனப்பதாகை
அந்தரமளாவநாட்டி யளித்திடுநாளினின்று
சுந்தரசங்கமற்குச் சொன்மொழிப்பிழாதென்னைப்
பந்தமாய்க்காபபவட்கிப் பதியினைத்தருவேனென்றான்.

இ-ள். நம்பதியை நாடி வந்தவர்கள் எந்தப்பொருளை எண்ணிக் கேட்டபோதினும கொடுக்கிறோமென்று ஆகாயபரியந்தம்உயர்ந்துபறக்கும்படியாய்த்துவசமுயர்த்திக்கொடாததிலருபநாட்களில் இன்றுவிரதவேதனையால மெலிந்து எம்மைநாடிவந்த அழகியசங்கமருக்கு உமது சொல்லைபகுறுவோமெனறு கூறியவண்ணம்மாறாது ஆசையோடுங் காபபாற்றியகணிகைக்கு என்னரசுக்குரிய இப்பதியையளிப்பேனென்று உரைத்தான் வல்லாளமகாராசன் எ-று. சஎ

கரிபரியுடனும்வேண்டுங் கனகமுந்தருவேன்முத்துச்
சொரிதருசிவிகையீவேன் றொல்லுலகாள்வதற்கிங்
கரியசெங்கோனல்கி யவர்க்கியான்பணியுஞ்செய்வேன்
பெரியவர்விரதந்தீர்ந்தாற பெற்றதாமெனக்காமென்றான்.

இ-ள். யானைகுதிரை முதலியவைகளோடும் தாங்கள் வேண்டிய பொன்னுந்தருவேன் இதல்லாமலு முத்துகளினால் அலங்காரஞ் செய்த பல்லக்குங்கொடுப்பேன் இப்பூமண்டலமுழுமையும் யானினைத் தபோதிலும் என்செங்கோலைக்கொடுத்தாளும்படிசெய்து அவர்கட்கு யான்பணிவிடையுஞ்செய்வேன் இன்றுநாடிவந்த சங்கமருக்காமனோ

யைத்தனித்தாங் என்னைப்பயிந்த அன்னையுமாவர்கள்என்றுஅரசனாகி ய வல்லாளமகாராசன் புகன்றான். எ-று. சஅ

உலகினில் வருஞ்சுகத்தா ளுயர்சுக மிஃதே யென்று
கலையுணர் முனிவராருங் கழறுவ ராதலானங்
தலமதி லுற்றசெய்ய சங்கமர் விரகந் தீர்த்தால்
இலகுமென்னுயிர்கேட்டாலு மீகுவேன்வருவீர்மின்னகாள்

இ-ள். கடல்சூழ்ந்த இவ்வுலகில்வழங்கும் இன்பங்களுக்கெல்லா மேலாகியது மானார்விழியினையுடைய பெண்களின் கலவித்தொழிலில் வரும் இன்பமே யதிகமென்று வேத நூலினுணர்ந்த முனிவர்களுங்கூ றியிருக்கின்றார்கள் ஆதலால் நமதுபதியைநாடிவந்தமேன்மைபொரு ந்திய சங்கமரை வருத்தும் விரகவேதனையை இன்றுமாற்றினவர்களு க்கு பிரகாசம்பொருந்திய என்பிராணனைத்தானமாகக்கேட்டபோதி லும் அளிப்பேன் வருவீர்கணிகை மாதர்களேயென்றுகூறினான் வல் லாளமகாராஜன். எ-று. சகூ

ஆதரவாகத்தங்க ளாணையின்படியேயாங்கள
ஏகமிலடியார்தம்மோ டின்புறப்பொருளுபெற்றோம்
நாதாவென்செய்வோமென்று நங்கையர்பணிந்துரைக்கப்
பூதலமன்னன்வெட்கிப் புகழ்மனைவந்துசார்ந்தான்.

இ-ள். அரசன் சொன்னமொழியைக்கேட்ட விலைமாதர்கள்தேவ ரீர் ஆக்கினையின்படி நடத்துவரும்நாங்கள்இன்று குற்றமற்றபரமசிவ த்தின்அடியார்களிடத்திற் கலவித்தொழில புரியும்பொருட்டு பொரு ள்பெற்றுக்கொண்டோமாதலால் எங்களை ஆட்கொள்ளும்இறைவனே யாங்களென்னசெய்வோமென்று அடிபணிந்துரைத்த மொழியைக்கே ட்ட வல்லாளமகாராஜன் நாணமுற்றவனாய்கீர்த்திபொருந்தியதன் அர ண்மனையைச்சேர்ந்தான்-எ-று. ரு0

எண்சீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

இல்லறமுற்றமன்னன் மதிவதனமாகியிருப்பதனை மங்கையர்கலி சைந்துநோக்கி, மல்லமாதேவியருமினையாளாகும்வண்மைமிகுசல்லமா தேவியாரும், தொல்லுலகைபபுறங்கவல்ல எங்கள்கோவே துன்பமுற் றகாரணமென்னவற்றைநீவிர், சொல்லுமெனவடிபணிந்துவினவவாங் கு தூயநெறியோனவருக் கிதுசொல்வானால்.

இ-ள். அரண்மனைவந்து சேர்ந்த வேந்தனுடையபூரணச் சந்தி ரோதயம்போன்ற முகாரவிந்தம் சலத்தால் வேறுபட்டிருப்பதைக்

கண்ட அவன்றேவிமார்களில்மல்லாமாதேவியும் இருவண்மை பொருந்திய இளையவளாகிய சல்லமாதேவியும் நெருங்கிவாநு நெடியகடல்சூழ்ந்த உலகங்களையெல்லாம் ஒருகுடை நிழலினின்றுபரிபாலனஞ்செய்யும்எங்கள்காதலனை என்றுமில்லாது இன்றுமனதிற்றுன்பம்நேர்ந்தவாறென்ன, அதனைதேவரீர் அருளிச்செய்ய வேண்டுமென்றுபாதகமலங்களிற் பணிந்துகேட்க அங்ஙனம் பரிசுத்தமாகிய நிலையினையுடைய வல்லாளமகாராசன் மனைவியர்களுக்கு நடந்தசெய்தியைகூறுவான் எ-று. ௫௧

அருசீர்க்கழிநெடி லாசிரிய விருத்தம்,

இன்றொருமுதியோர் மாதரின்பத்திலிச்சை கொண்டு
வென்றிசேர் நம்மைநாடி வினவிய படிக்கிசைந்தும்
மனமறதில் விலையின்னார்கள் வாய்ப்பது மரிதாநொந்தே
னென்றவர் வாய்மைகேட்ட வெழினமனை யாருஞ்சொல்வார்

இ-ள் இன்று ஓர் பெரியவர்சேல்போன்ற விழியினையுடையமடந்தையர்கள மயக்கன்மேல் மனம்வைததுவெறறிபொருந்தியநம்பதியைச் சேர்ந்து நன்மைவினவிய வண்ணமிசைந்து இவ்வருணைமாநகர்முழுமையும் விலைமாதர்கள்வாழும் வீதியெங்கணுந் தேடியுங்கிடைப்பது அரிதாயிருப்பதால துன்பமுற்றேன் நான்கொண்டிருந்த வயிராக்கியத்தையும் துறந்துவிட்டேன், என்செய்வேன் அடியவருக்குரைத்தமொழி தப்பிப்போகின்றதேயென்றுகூறித் துன்பமுறறிருக்கும்வேந்தன் வாய்மையைக்கேட்ட மங்கையர்கள் சொல்லுவார்கள எ-று, ௫௨

எழுசீர்க்கழிநெடி லாசிரிய விருத்தம்,

விரகமுற்ற வடியவாக்கு வாக்களித்தவேந்தேநின்மனம்யாதோவழிகிலேமயாம், இருவர்களிற் சிறியவளாமென்னையன்னோர்க்கிசைத்திடவுங் கருத்துளதேலிசைவேனென்றுள், இருவளரு மன்னகமகிழ்ந்துநோக்கிச் சேயிழையேயடியவரோடணையிற்சேர்ந்து, உருவிழியாற்படுந்துயரமொழிப்பாயென்றவுத்தமனும் பெரியவருக் குரைத்திட்டானல்,

இ-ள், விரகவேதனையால் மெலிந்துவந்தசங்கமருக்கங்ஙனமையதணியச்செய்கிறேனென்று வாக்குதத்தஞ்செய்த எங்களரசே தங்களுடையகருத்து எத்தன்மையதோ அறியேங்களறியோம் ஆதலால்எங்களிருவர்களிற் சிறியவளாகிய என்னை அவ்வடியவர்க்கிசையச்செய்யும்படியாய் கருத்திருக்குமாகில் தே

வரீர் என்னைக் குறைவுபடாமலவ்விதமே நடக்கின்றேனென்று கூறியபோது இலக்குமி கடாக்ஷம்பொருந்திய வல்லாளமகாராசன்மனமகிழ்ந்து தன் மங்கையைப்பார்த்து பெண்களினாயகமே, என்னெண்ணத்தை நிறைவேற்றிவைத்த என்னிருகண்மணிகளே நம்மைகாடிவந்த சங்கமரோடு பள்ளியறையிற்சேர்ந்து மன்மதனாற்படுந்துன்பத்தை போக்குவாயென்றுசொல்லி விடைகொடுத்துப் பின்னர் உத்தமதனைத்தையுடையவளும்பு மன்னனை பெரியவரிடஞ்சென்று தேவரீர்கருத்தின்படியமைந்தேனன்று அங்கீகரித்துக்கொள்ளுமென்று மிகுபத்தியோடுமேகூறினான், ருங

அறுசீர்க்கழிநெடி லாசிரிய விருத்தம்,

அக்கண நன்னீராடி யழகுற வறைபுட்சேர்ந்து
மிக்கநல் லியாழைமீட்டி விநோதமாய்க் கீதம்பாடிப்
பக்கலினெருங்கி யந்தப் பாமனைப் பார்க்குங்காடி
லக்கணி மெய்யனாங்கே யரியயே கதறிலூற்றான்,

இ-ள். இராஜபதநிளியங்கியசல்லமாதேவிஉடனேமஞ்சனமாடிஆடையாபரணமணிந்து சுகந்தபரிமளங்களை யணிந்து பஞ்சகச்சாயவர்க்கங்களேந்தி வீணையெடுத்துப் பள்ளியறையுட்பிரவேசித்து இந்திரநீலமரகதங்களாலமைத்தொளிரு மஞ்சத்தில் அம்சதூளிகா சயனத்தின்மீதாரோகணித்துக் கொண்டிருக்கும்அடியவர்பக்கலினின்றுநாணியிறுகையைத்தரும்வீணியை மீட்டிக்கீதம்பாடிக்கொண்டுசிலநேரஞ்சென்றபின்பு பெரியவர் சித்திரப்பிரதமைபோ லசைவற்றிருப்பதை நோக்கையில் உருத்திராட்சமாலிகாபரண மணிந்துவிளங்கும் மெய்யினையபெரியவர்யோகநித்திரையிருப்பதைக்கண்டாள்சல்லாமதேவி. ருச

பின்னுமம் மங்கையந்தப் பெரியவர் மகிழ வெண்ணித்
துன்னுமங் கவர்மீ துற்ற சுகந்தநீ ரெடுத்துத் தூவி
நன்னயத் துடனே நிற்க நயனமூன் றிறவா தன்னோர்
தன்னையும் நோக்கா தாலுந் தயங்கியங் குரைப்ப தானாள்

இ-ள், பின்னையும் அருந்ததிக்கொப்பாகிய அவ்வரசி அங்ஙனம்யோகநித்திரையிலிருக்கும் சங்கமர் மனமகிழத்தக்கதாகவினைந்துபிரகாசம் பொருந்திய இவர்மீது சுகந்தமூலவும் பனிநீரை யெடுத்துத்தெளித்தும நன்னயத்தோடுநின்றும் கண்விழியாமலும் தன்னையுபநோக்காமலுமிருப்பதையுணர்ந்த தேவிசிந்தை மெலிந்து கூறுவாள் ஙூ-று, ருரு

வேந்த னுலுரைத்தவாய்மை விண்படமுரையோவந்தோ
வந்தலே யென்றிறைஞ்சி வெழிலுறு மடந்தை யாங்கு

சாந்தமாய்மேல்விழுந்து தழுவவப்பாமனுளேர்
ஏங்கவுங்குழந்தையாகி யின்புறவழுவதானுர்,

இ-ள், அரசர்க்கரசனுகிய வெங்கோமானுரைத்த வாய்மை விறுதாவாவது தருமமோ ஐயோகடவுளேயென்று தொழுது அழுகுலாவும்மாது அங்கு நித்திரையிலிருக்கும் பெரியவர்மே ல மெதுவாய்சாய்ந்து ஆலிங்கனஞ்செய்கையில ஸ்ரீகயிலாயபதி யாகிய சிவபிரான் எதுக்குழந்தைவடிவமாகி யவ்வணங்குக ளிப்பும்ஆச்சரியமுங்கொள்ளத்தக்கதாகசெங்குமுதம்போனற அழகியவாயைததிறந்து அழவாரம்பித்தார எ-று. ௫௯

அரனொருகுழவியாகி யலரியேயமும்போதங்கே
பாமனுர்செயலென்றெண்ணிப் பார்த்திபன்மனைவிவ்வங்ஙகாமதிலெடுததணைத்துக் களிப்புடனுச்சிமோந்து
விரகுடனிருக்கும்போதவ் விமலனுமறைந்திட்டானுல்.

இ-ள். ஸ்ரீகயிலாயபதியாகிய பரமசிவம குழந்தைவடிவாய்அலறியழுகின்றசெயலறிந்த அரசன் இது ஆண்டவன்திருவிளையாடலென்று உணர்ந்து மிகததீவிரமாயக்குசேர்ந்துதாமரைமலர் போன்றவிருகரங்களாலெடுத்தணைதெடுத்து உச்சிமோந்துமிக்க காதலோடுமேபராணந்தங்கொண்டிருக்கையில சகதீசனுகிய எம்பெருமான் மாயமாய் மறைந்தாா-எ-று. ௬௦

எழுசீர்க்கழிநெடி லாசிரிய விருத்தம்,

ஐயனேநினது திருவுளச்செயலே யறிவமோ வறிவிலோம்யாங்கள்-மெய்யனேகணங்கள் மூனறுடையானே வேதனேவேதநாயகனே,துய்யனேயெமமைச் சோதனை செய்வோ சுதனெனத தோன்றியேமறைந்தாய, செய்யனேயெஙகட் கெனவிதியென்றுதேவியோடரசனு மெலிந்தான்,

இ ள், ஐயனே, நின்கருந்தை யறிவிலலாதநாங்களறிய வல லோமோ மெய்மையயானவனே கணகளமூன்றுடையானே [illegible] தசொருபியே வேதநாயகனே பரிசுததனே எங்களைசசோ[illegible] செய்யவேண்டாம்குழந்தைவடிவங்கொண்டுமறைந்தாயே [illegible] நிலைமையானவனே, எங்களுக்கென்ன கட்டளையென்றுதே[illegible] யோடரசனும் உளளம்மெலிந்தான் எ-று. ௬௧

கொற்றவனிவ்வாறுளமெலிந்தாங்குசோவெனககதறுமக்கலை, நற்றவதயோாக டுசிசெயுமீசனுமயியுடன் விடையேறிச், சுற்றிலுங்காங்கள்சூழ்ந்திடவிதிமாலதொடரவுமருணையம்பதிவாழ, வெற்றிசெணைறைக்குத் தரிசனமுதவ விருகுடன் யணிநதவனஞ்பாய்.

இ-ள். அரசன் இவ்வுரைபாய்மனம்வெதும்பிக்கோவென்று வாய்விட்டலறி நிறைகையில மகிமைபொருந்திய தவத்தினையுடையவர்கள் போற்றிபணியத்தக்க பரமசிவம் பார்வதிதேவியோடும் வெள்விடையேறி அனேகசிவகணங்கள் சூழத் தக்கதாகவும் பிரமனும்விஷ்ணுவும் வாகனங்களிலேறிவரவும் அருணையம்பதியை ஆளும் வல்லாளமகாராசனுக்குதரிசனந் தக்கமாத்திரத்தில ஆவலோடும் பூமியிற பணிந்தெழுந்து சிரத்தில இருகரங்களையுங் கூப்பித்துதித்தான்-எ-று. ௫௯

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

ஆதியேசரணமண்மே லடியவரைக்காக்கவல்ல
சோதியேசரணங்கங்கைத் தூயசெஞ்சடையிற்றுன்னப்
பாதிமாமதியணிந்த பரமனே தமியேற்குற்ற
நீதியைத்தாங்கவோர்சேய் நின்மலாவருளுவாயே.

இ-ள். ஆதிநாயகராகிய தேவே சரணம் உலகில அடியார்களைச்சோதித்தாட்கொள்ளும் பூரணனேசரணம் அருட்பெருஞ்சுடரே சரணம் கங்கையையுஞ்சந்திரனையும் பரிசுத்தமாய்பொன்போற்பிரகாசிக்குஞ்சடையிற்றரித்த பரம்பரனே அடியேன் செங்கோலநீதியை ஏற்றுக்கொள்ளும்படி ஓர் புதல்வனை கடாக்ஷித்தருளவேண்டுமென்று தொழுதான்-எ-று, ௬௦

சுந்தரமன்னாகேண்மோ சுதனுமக்கியாமேயாமேனும்
அரகதிருமுனைக்கே யுறைவிதிமுடியபோமென்று
சந்திரசேகரனார்வாழ்த்திச் சார்ந்தனர்கயிலைபின்னர்
பந்தமாயுலகைவேந்தன பண்புடனாண்டுவாழ்ந்தான்.

இ-ள், அழகுலாவுங் கீர்த்திபொருந்தியஅரசேயாமே உனக்குப்பிள்ளையாய்த்தோன்றினபடியால், அந்தியகாலத்திலேவேந்தியிறக்கூறுஞ்சடங்குகளைச்செய்து வருவோமென்று சந்திரசடாதரமூர்த்தியாகிய சிவபெருமானவாழ்த்துதல கூறிந தேவகணங்களுடன கயிலாயகிரியைச்சேர்ந்தபின்புமிகுந்த ஆவலோடும் வல்லாளமகாராசன் அருணையம்பதியை ஆண்டுவாழ்ந்து வந்தான்-எ-று. ௬௧


ஏழாவது


வல்லாள மகாராஜன் சரித்திரம

முற்றிற்று.

---

ஆக-திருவிருத்தம்-௩௧௧.





௨

சிவமயம்.

# எட்டாவது

# தீர்த்தச்சருக்கம்.

———:0:———

எழுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

செருமலையுங்களிற்றுமுகப் பிள்ளையிருபதம்போற்றித் திசை
யான்முத்தர், தருமலையுமொருமலையுந் தொலைத்தமலைக் கிழவ
னிரு சரணம்போற்றிப், பொருமலையுமிங்கலையுமடியாருக் கொ
ழிக்கவழற் பொருப்பாய்நின்றிறன், கழுமலையுஞ் செம்மலையும் ப
ச்சைமலை மடந்தையையுங்கருத்துட்சேர்ப்பாம்,

இ-ள், யுத்தஞ்செய்யத்தக்க யானைமுகத்தையுடைய பிள்ளையார் இரண்டுபாதத்தையும் வணங்கி அலைகளாலேமுத்துக்களைக்கொழிக்குஞ்சமுத்திரத்தையும் கிரவுஞ்சமென்னுமலையையும் அடக்கியசுப்பிரமண்ணியர்பாதத்தை வணங்கித்துன்பத்தையும்சோர்வையும் அடியார்களுக்குஒழிக்க அக்கினியாயநின்று என்னுடைய பிறவியைக்கெடுக்குஞ் சிவபிரானையும் மரகதநிறம்பொருந்திய பார்வதியாரையும் மனதிற்சேர்ப்பாம்-எ-று.

கலி விருத்தம்.

தேங்குமன்பிற் சிவபுராணந்தனி
லோங்குருத்திர சங்கிதையோதினேன்
பாங்குலிங்க புராணப்பாப்பினு
மீங்குறித்த படியுமியம்புவேன்,

இ-ள், பெருகிய அன்பினாலே சிவபுராணத்தில் உயர்ந்திருக்கின்ற உத்திரசங்கிதையை முன்சொன்னேன் பெருமையாகிய இலிங்க புராணப்பரப்பிலே காணநின்றதன்மையுஞ் சொல்லுவேன்-எ-று, ௨

ஆதிவேத னருளச்சனகனும்
வேதம்வல்ல வியாசனுக்கீந்தனன்
சூதனுக்கவன் சொல்லினன்சூதனு
மேதமற்ற விருடியர்க்கீந்தனன்

இ-ள், ஆதியிலேபிரமன் சனகரிஷிக்குச்சொல்ல, சனகர்வேதவியாசருக்குச் சொல்ல, வேதவியாசர்சூதரிஷிக்குச் சொல்லினார், சூதருங்குற்றமற்ற நைமிசாரணியத்து ரிஷிகளுக்குச்சொல்லினார்-எ-று. ௩

வன்னிமாமலைத் தோற்றமும்வான்மலைக்
கன்னியாகங் கலந்ததுமுன்னமே
சொன்னகாதலி னங்கதொழிந்தனன்
பின்னருள்ள கதைசிலபேசுவாம்,

இ-ள். அக்கினிமலைதோன்றியதும், பெருமையமைந்தமலைப்பெண்ணானபார்வதி சுவாமியினது இடப்பாகம்பெற்றது முதலியதும் முன்னமேசொன்னபடியினாலே அதைநீக்கிப்பின்னுண்டாகிய சிலசரித்திரங்களையுஞ்சொல்லுவோம்-எ-று, ௪

தீர்த்தமும்மதிற் செய்கருமங்களும்
வாய்த்தவெற்பின் வலமுமிலிங்கமு
மேத்திடாதவ ரெய்துமிகழ்ச்சியும்
பார்த்தான்பொருள் கொண்டவர்பாவமும்

இ-ள். தீர்த்தங்கள் மகிமையும், அதிற்செய்யப்பட்ட தருமங்களும் கிரிப்பிரதட்சணத்தின் மகிமையும், இலிங்க மகத்துவமும் சுவாமியை வணங்காதவரையு மிகழ்ச்சியும் அவரடைந்த இகழ்ச்சியைப்பார்த்துச் சுவாமியின்பொருளை அபகரித்தவர்களுக்கு வருகின்ற பாவமும்-எ-று. ௫

பந்தமாயறியாதுசெய்பாவமுஞ்
சிந்தையா லறிந்துசெய்தீமையும்
முந்தையோர்க ளொழித்தமுறைமையு
மெந்தையான்மகிழ வுற்றியம்புகேன்,

இ-ள். பந்தவசமாயறியாமற் செய்தபாவமும் மனதறிந்துசெய்தபாவமும், முதற்காலத்திலுள்ளவர்கள் அப்படிவந்தபாவத

னைத் தீர்த்துக்கொண்ட முறைமையும் சுவாமியினால் மகிழ்ச்சியடைந்த புரகுபூணையின் செய்கையுஞ் சொல்லுகிறேன். எ-று. ௬

அறுசீர்க்கழிநெடி லாசிரிய விருத்தம்.

விருப்பில் கோதமனீசன் றிருமுனே வேள்வி நாட்டத்
திருப்பொலி சடையோன் றன்றைச் செனித்திரு மறையோனுங்கு
உருப்புலி கனலோ னென்ன வுற்றன னவனை நோக்கிப்
பொறுப்பிறை யவனைப்பூசை புரியெனப் புகழ்ந்து சொன்னான்

இ-ள். உலகத்து ஆசையில்லாத கௌதமரிஷிசுவாமி சந்நிதி முன்வேள்வியொன்றுசெய்வதற்கு எத்தனித்து அக்கினிவளர்க்கஅழகு பொருந்திய சடையையுடைய அந்தச்சுவாமிகிருபையாய் முன்னமே தோன்றியிருக்கிற சிவபிராமணனை அந்தயாகத்தில் * அக்கினி சொரூபம்போலப் பிறந்தான். அவனைப்பார்த்துக் கிருபமாகி விளங்கிய அருணாசலேசுவரரைப் பூசைசெய்யென்று புகழ்ச்சியாக உபசாரஞ்சொன்னார். எ-று. ௭

மற்றவேழ் தருப்பையை நீரி லிடுதலு மலாமா தென்னக
கற்றைப்புங் குழன்மின் னுரு முதித்தனர் கணிகை மாராம
நிற்றலு மறையவர் முன்னே நித்தமே புரியமென் று
னற்றடம் பலவும் கண்டு கரமுஞ் சிறப்புஞ் செய்தார்.

இ-ள். அதன்பின் கௌதமர் ஏழு தருப்பையை யெடுத்து குண்டத்தின் அக்கினியிலே போட்ட அளவில் இலட்சுமி போலக் கறுறையாயிருக்கின்ற கூந்தலையுடைய ஏழுபெண்கள் தேவதாசிகளாகப் பிறந்தார்கள், அவர்களைப்பார்த்து நீங்கள் சுவாமி சந்நிதியில் நாட்டியஞ்செய்து வாருங்களென்றார், அவர்கள் நன்மையாகிய தடாகங்கள் பலவுண்டாக்கி ஊரை சிறப்புச்செய்தார்கள். எ-று. ௮

மந்திரம் பரவும் வேதநெறி மலைதனுக் கிழக்கிற்பா
லிந்திர தடமுண் டாக்கி யிந்திரன் முதலோ கண்ட
சுந்தரத் தமரர் தாமு மதிற்றினை முழுகலாலே
சந்தனக் குழம்பு நாறு மணக்குமைந்த தருவின மாலை.

இ-ள். தேவர்கள் மந்திரங்களாலே தோத்திரஞ்செய்யப்பட்ட அக்கினிமலைக்கு அடுத்த கிழக்குத் திக்கில் இந்திரதடாகமென்றொன்றுண்டு, இது இந்திரன் முன்னுண்டாக்கினது, தேவலோகத்தி லுள்

* அக்கினி சொரூபம்போல்பிறந்தான் என்கிற மொழியை கௌதமபுராணத்தில் தெரிந்துக்கொள்ளவும்.

ளவர்கள் அதில்நித்தியமும் முழுகுதலால் சந்தனக்குழம்பின் வாசனை யும் கற்பகபுட்பத்தின் மாலையினுடையவாசனையும் மணக்கும். எ-று.

பரமமா மதிற்றைப் பூசம் படிந்திடிற் பருகிற் கோடி
பிரமபா தகம்போ மென்றா லதினலம் பேச லாமோ
சுரர்பதி மூழ்கின் முன்னே தொடர்ந்து தீவினைக ளேர்ந்தா
னிரவியுள் ளளவும் வாழ விமையவ ருலகம் பெற்றான்.

இ-ள். மேன்மைபொருந்திய இந்திரதீர்த்தத்தில் தைப்பூசத்தில் ஸ்நானஞ்செய்து ஒருகைசலம் ஆசமனஞ்செய்தால் கோடி பிரம்மஹத்திதோஷம் போமென்றால் அதன்பெருமையைப் பேசக்கூடுமோ இந்திரன்முன் அதில் மூழ்கித் தன்னைப்பற்றிய தீவினைகளை நீக்கிக்கொண்டுசூரியனுள்ளளவும்வாழத் தெய்வலோகத்தையும்பெற்றான் எ-று.

அங்கிதன் பெயராந் தீர்த்த மநணைமால் வரைதன் றென்பாற்
பொங்கிய ததனின் மீனந் திங்கட்பூரணையின் மூழ்கில்
செங்கயற் கருங்கட் செவ்வாய்த் திருந்திழை யவரால்வந்து
தங்கிய வினையுந் தீரு தருமமுந் தவமுஞ் சாரும்.

இ-ள். அருணாசலத்துக்குத் தென்கிழக்கில் அக்கினி தீர்த்தமென்றொன்றுண்டு, அதில்பங்குனிமாசம்பௌர்ணிமையில்முழுகினால்செம்மையான மீன்போன்ற கரியகண்களையும் சிவப்பாகியவாயையுமுடைய மலர்களால் வந்துபொருந்திய பாவமுந்தீரும், தருமமும் தவசும் சேரும். எ-று. கக

வன்னிமுன் னொருநா ளேழு மறைக்குல முனிவர் காதற்
றுன்னிய மடந்தை மாரை விரும்பத்தன் சுவாகை யந்தப்
பன்னியர் வடிவமாகப் புணர்ந்ததுமேற் படர்ந்தபாவந்
தன்னைத்தான் கண்டவந்தத் தடத்தினிற் படிந்து சாய்த்தான்.

இ-ள். அக்கினிதேவன் முன்னொருநாள் வேதமுணர்ந்த ஏழுமுனிவர்களுடைய பத்தினிமார்களை விரும்ப அதைக்கண்டதன் பெண்சாதியாகிய சுவாகாதேவி யறிந்து அந்தமாதர் வடிவத்தைத் தானெடுத்துப் புணர்ந்து மேலே நினைத்த பாவத்தைத் தீர்க்கத் தன்னால் உண்டாக்கப்பட்ட அத்தடாகத்தில ஸ்நானஞ்செய்து பாவத்தைப் போக்கிக் கொண்டான். எ-று. கஉ

தென்றிசை தருமதீர்த்த முனத்ததிற் செறிந்து மூழ்கிற்
பொன்றிகழ் வடிவ மாரு முடற்பிணி பொடிபட்டோடும்
வென்றியிற் காலன் முன்னாள் விதிபடை தொடாமேனி
குன்றிய சாபந்தீர்த்தா னதனிடைக் குளித்து மாதோ

இ-ள். பின்னும் அம்மலைக்குத் தென்பக்கத்தில் எமதீர்த்த மென்றொன்றுண்டு அதில் அடைந்து மூழ்கினால் உடல் பொன்வடிவமாகும் தேகத்திலுள்ள வியாதிபோம் வெற்றிபொருந்திய பிரமனது ஆயுதந்தொடர்ந்து தேகங்குன்றினதை எமன் அதில் முழுகித் தெண்டஞ் செய்துக்கொண்டான் எ-று. ௧௩

நீங்கிரு நிருதி தீர்த்த முளதுமோ னிருதி கோணத்
தாங்கதின் முழுகினோருக் கரும்பகை யனைத்துந் தீரும்
ஓங்குமத் தடத்தின்முன்னே யுருகியே நிருதி மூழ்கு
வீங்கியகனற்கட்டாழ்வா யலகையை வினையும்பெற்றான்.

இ-ள். நீங்குதற்கரிதாகிய நிருதி தீர்த்தமென்று நிருதிமூலையிலிருக்கின்றது, அதில் முழுகினவர்களுக்கு அரியபகைகளெல்லாம் தீரும் உயர்ந்த அத்தீர்த்தத்தில் முன்னே முழுகின பலத்தினாலே நிருதி நெருப்புநிறம்போன்ற கண்களையும் ஆழமாகிய வாயையுமுடைய பேயைத் தன்வசமாக்கிக் கொண்டான் எ-று. ௧௪

வரையறு மலைக்கு மேல்பால் வடம்பெறு வருண தீர்த்த
நரைபெற வதனின்மூழ்கிற் கிரகமொன் பானு நன்றாம்
இசைபெறக் காகமெல்லா முருகுமவ் விடத்தில் வாயு
திசையினற் பதனதீர்த்த முழுகிலைத் துயரந் தீரும்.

இ-ள். குற்றமற்ற அருணகிரிக்கு மேற்றிக்கில் வளப்பமுள்ள வருணதீர்த்தமென்றொன்றுண்டு. ஆசையுண்டாக அதில்முழுகினால் ஒன்பது கிரகங்களும் நன்மையைக்கொடுக்கும் முன் அந்த ஒன்பதுபேரும் அதில் தங்களிஷ்டத்தையடைய மூழ்குவார்கள். வாயு தீர்த்தமென்றொன்றுண்டு. அதில் மூழ்கினால் எல்லாத் துன்பமுந் தீரும எ-று. ௧௫

வடதிசைக் குபேரதீர்த்த முழுகினால் வறுமை போமத்
தடமதிர் குணபாலீசன் மருத்துவர் சமைத்த தீர்த்தம
புடைசெறிந் ததனின் மூழ்கிற் புலையரிற் மடையரேனு
மடைவுடன் வருணனுன்கி லதிகமா யரனைச் சேர்வார்.

இ-ள். வடக்குத்திக்கிலே குபேரதீர்த்தமென்றொன்றுண்டு. அதில் முழுகினவர்களுடைய தரித்திரம் நீங்கிப்போம் அதற்குக் கிழக்கு ஈசானியதிக்கிலே அசுவனி தேவர்களாலே உண்டாக்கப்பட்ட தீர்த்தம் இருக்கின்றது. அதில் முழுகினால் நீசரைப் பார்க்கிலும் இழிந்தவரா யிருந்தாலும் பெருமையோடு நான்குவருணத்திலு மதிகமாகிப் பரமசிவனைச் சேருவார்கள் எ-று. ௧௬

அந்தகத் தடத்திற் றென்பா லகத்தியத் தடமுண்டங்கே
முந்தியகன்னிமாதம் மூழ்கியுட் கொண்டபேர்கள்
சுந்தர வதனங் கண்டார் தமிழ்க்கவிக் கரசராவர்
செந்திரு மயிலுங்கல்விச் செல்வியுஞ் சேருமன்றே.

இ-ள். முன் தெற்காகச்சொன்ன யமதீர்த்தத்திற்குத் தெற்காக அகத்திய தீர்த்தமென்றொன்றுண்டு அதிற் புரட்டாசிமாதத்தில் மூழ்கி ஜலம் உட்கொண்டபேர்கள் சந்திரனைப்போல் பிரகாசித்து தமிழிற் சிறந்தவர்களாவார்கள். இலட்சுமியும் சரசுவதியும் அவரிடத்திற் சேர்ப்பார்கள் எ-று. ௧௭

தனபதி தடத்தைச் சேர வசிட்டனார் தடமுண்டந்த
முனிவரைப பசியில்மூழ்கி முனிவரிற் றலைமைபெற்று
ரனையதில் மூழ்கினோர்கட்கங்கமிச் செங்கை நெல்லிக்
கனியென விளங்கு பாவக் கடலதுங் கடப்பரன்றே.

இ-ள். முன்சொன்ன குபேரதீர்த்தத்துக்கருகே வசிட்டதீர்த்தமென்றொன்றுண்டு. அதில் வசிட்டர் ஐப்பசிமாதத்தில் முழுகி முனிவர்களுக்கெல்லாம் முதன்மையாயிருக்கப்பெற்றார். அப்படிப்பட்ட தீர்த்தத்தில் முழுகினவர்கட்குச் சாத்திரங்களெல்லா முள்ளங்கை நெல்லிக்கனிபோல விளங்கும் பாவமாகிய கடலையுங் கடப்பார்கள் எ-று. ௧௮

கங்கைவேற் குமரனோ முகத்தவன் கதிரோன் வெற்பின்
மங்கையோர வடுகன் கன்னி மதியமெண் வசுக்கள் வெள்ளைப
பங்கய மடந்தைதேவர் தடைதடம் பலவுண்டாற
வங்கதோர் வடத்தின்மேன்மை மறைகளு மறியாதே.

இ-ள். கங்கைவேலாயுதமேந்திய சுப்பிரமணியர், விக்கினேசர், பார்வதி, வயிரவர், சூரியன், சந்திரன், சத்தகன்னிகை, அஷ்டவசுக்கள், சரசுவதி, மற்றுமுள்ள தேவர்கள் மூழ்கிய தீர்த்தங்களும் அநேகமுண்டு. அவைகளில் ஒவ்வொரு தீர்த்தத்தின் பெருமையை வேதங்களும் சொல்ல அரிதாம் எ-று. ௧௯

ஒருநதி தானுமொவ்வாத் திருநதிவடபாலாக
வருநதியே மூழ்கிப் பூமான் மாயவனாகத்திற் சேர்ந்தா
ளருமதை பரவுஞ்சோணை நன்னதித்தென்பால் ...
சுராதியமூனை பொன்னி பணிந்துதந் துயரந் தீர்த்தார்.

இ-ள். ஒருநதியையும் ஒப்புசொல்லக்கூடாத திருநதியென்றுமொரு நதி அருணாசலத்திற்கு வடக்குப்பக்கத்தில் உண்டு அதிலேதான் பூ... மூழ்கி விஷ்ணுவினுடைய மார்பைச்சேர்ந்தாள் நர்மதாநதி வணங்கும்

சோணையென்று ஒருநதி அருணாசலத்துக்குத் தென்பாரிசத்திலிருக்கும், அதில் கங்கை, யமுனை காவேரி முதலிய நதிகளில்முழுகித் தங்களது பாபம் போக்கிக்கொண்டார்கள் எ-று. ௨0

புண்ணிய வாறுதெய்வ மலைக்குமேற திசையைப்பொங்கு
நண்ணிய புண்ணிய யாற்றா றென்றுபேர் நகரந்தானும்
எண்ணிய நதியின்மூழ்கி யீழனென் றரசன் றீங்காம்
பெண்ணியல் வடிவந்தீர்த்தான் வடிவமும்பேரும்பெற்றான்.

இ-ள். தேய்வீகம்பொருந்திய அம்மலையின் மேற்பக்கத்தில்புண்ணியநதி யென்று ஒன்றுண்டு அதனருகிலே புண்ணியாற்றார் என்று ஒருநகரமுமுண்டு, அதிலிருந்த ஈழனென்கிற அரசன் தனக்குத்தீங்காக வந்தடைந்தபெண்ணுருவை அந்நதியில்முழுகித்தீர்ந்து நல்லஉருவமும வேண்டியபேரும் பெற்றான் எ-று. ௨௧

திருக்குசேயாறு முன்சொற் றிருநதி வடபாற் றோன்றும்
பொருந்தவே லரிந்து செவ்வே ளழைத்திடப் புனிதநீரி
ல ருந்திகழ் மயிலோன்மூழ்கி யசுரரைத்தொலைக்குஞ்சீரு
மருந்தபிலமர சேனைபதியெனும் வரமும்பெற்றான்.

இ-ள். அழகியசேயாறு என்னும் நதிமுன்சொன்ன திருநதிக்குவடபக்கத்திலிருக்கும் அதுமுன்சுப்பிரமணியர் வேலெறிந்தழைத்த தீர்த்தம் அதில்மிகவும் பிரகாசிக்கின்ற வேலையுடையஅச்சுப்பிரமணியரே முழுகி அசுரர்களைக் கொல்லும் வரமும் அமிர்தபானம்செய்யும் தேவர்களுடைய சேனைபதியென்கிற பேறும்பெற்றார் எ-று. ௨௨

திருத்தரா லயத்தி னுள்ளே சிவதடாமுளதாமித்தங்
கருத்தினால் நினைத்தாய் தெய்வக் கங்கையிற் படிந்ததொக்கும்
உருத்திரர் பலருமாசி மகத்திலே யுகந்துமூழ்கி
எருத்தினி லிருந்துதேவ ரெவரினு மேற்றம்பெற்றார்.

இ-ள். சுவாமி ஆலயத்தில் சிவகங்கை யென்று ஒருதீர்த்தமுண்டு அதைத்தினந்தோறும் தன்மனதிலே நினைத்தால் கங்கையில்முழுகிய பலனுண்டாகும் அநேக ருத்திரர்கள் மாசிமாதத்திலேஸ்நானஞ்செய்து ரிஷபவாகனரூடராய் எல்லாத்தேவர்களிலும்மேன்மை பெற்றார்கள் எ-று. ௨௩.

சக்கர தீர்த்தமந்த தடத்தினிற் குணபாற்றோன்றும்
மைக்கட லனையமேனி வராகமேல்படிந்த தாகும்
அக்கரை வலமாய் வந்தோர் முழுகினோ ரருந்தினோர்கள்
துக்கசா கரம் விட்டீசன் றுணைப்பதம் பெறுவரன்றே.

இ-ள். சக்கரதீர்த்தமென்றொருதீர்த்தம்,முன்சொன்னதீர்க்தத்துக்குக் கிழக்கிலிருக்கின்றது அதுமுன்னமேசமுத்திரத்தினிறம்போன்றவிட்டுணு வராகஅவதாரத்தில் முழுகிப் பேறுபெற்றதாகும் அத்தீர்த்தத்தை வலமாக வந்தவர்களும் அதில்முழுகினவர்களும் அந்நீரை உட்கொண்டவர்களும் துக்கசமுத்திரத்தினின்று நீங்கிச்சிவபிரானது இரண்டுபாதங்களையும் இடமாகப்பெறுவார்கள் எ-று. உச

நாயகனமாறுங் கோயின் மருங்கினி னளிநக்கோயிற்
றாயவன் பெயராந்தீர்த்தந் தீயவன் றிசையிற்றேன்றுங்
காயமத் தடத்திற் றேய்ந்தார் பிறவியாங் கடலிற்றேபா
ராயிரஞ் சனனந்தோறு மடைந்ததீ வினையுந்தீர்ப்பார்.

இ-ள். அருணாசலேசரெழுந்த நளிபிருக்கின்ற கோயிலுக்குப்பக்கத்தில்அக்கினிதிசையில் பிரமதீர்த்தமென்று ஒருதீர்த்தம்உண்டுஅதில் முழுகினவர்கள் பிறவிக்கடலில் முழுகார்கள் ஆயிரம் பிறப்புகள்தோறுஞ்சேர்ந்த தீவினையுந்தீர்ப்பார்கள் எ-று. உரு

அத்தடன் முழுகிச் செம்பொன் னணுவள வளிப்பாராகிற்
சத்த சாகரஞ்சூழ்ந்தப் புவியெலாந் தனத்தினோடு
முத்தணிம ணியினோடு நிரைந்ததுமுழுதுமீசன்
பத்தர்பா லளிக்குமந்தப் பலத்தினுமதிகமாகும்.

இ-ள். அந்தீர்த்தக்தில் மூழ்கித் தங்கம்ஒருஅணுவளவுகொடுப்பாராஞல் சக்தசமுத்திரஞ்சூழ்ந்த இப்பூமியெல்லாம் சொர்னத்தினோடும, நவரத்தினங்களினோடும்நிறைந்து, அவைகளையெல்லாம்சுவாமியினுடையபத்தரிடத்திற் கொடுக்கும்பலனினு மதிகமாகும எ-று. உசு

தேனகு தடத்தின் மூழ்கிச் செய்யவா னீந்தோர்வெள்ளைத்
தானவர் ரணஞ்சூழ் செம்பொற் சயிலநேர் விமானத்தேறி
மேனகை யரம்பை தூய கவுரிகளிரட்டமேவி.
யானிலோர் மயிற்கோர்கற்ப மான்பதத் திருப்பரன்றே.

இ-ள். தேன்பொருந்தியபுட்பங்களையுடைய அத்தீர்த்தத்தில் முழுகிச் சிவப்புப்பசுவைத் தானஞ்செய்தவர்கள மதங்கொண்டவெள்ளானைகள்சூழ்ந்து தாங்கப்பட்ட மகாமேருபோலுஞ்சொர்னவிமானத்திலேறிக்கொண்டு மேனகைஅரம்பை இருவரும் பரிசுத்தமாகியகவரிவீசப்போய் அப்பசுவின் மயிர் ஒன்றுக்கு ஒரு கற்பககாலம்சிவபதத்தில் இருப்பார்கள் எ-று. உஎ

காலமே யதனின் மூழ்கி கரியவா னளித்தோர் கோல
நீலமால் வரைபோனீல நெருங்கிய விமானத் தேரி

சூலமே பிடித்துப் பூத கணத்தவர் தொடர்ந்து போற்றப்
பாலலோ சனர்வாழ்கின்ற பரமத் திருப்ப ரன்றே.

இ-ள். அத்தீர்த்தத்தில் காலமேமுழுகிக் கருப்புப்பசுவைத் தானஞ்செய்தவர்கள் அழகுபொருந்திய நீலமலைபோல்நீலரத்தினமிழைத்த விமானத்திலேறிச் சூலாயுதம் பிடித்துக்கொண்டு பூதகணங்கள் தொடாந்துவந்து வணங்க நெற்றிக் கண்ணையுடைய சிவனுடைய பரமப்பதத்தி லிருப்பார்கள் எ-று. உஅ

வெள்ளையா னளித்தோர் வெள்ளை விடைகளா யிரஞ்சூழ் முத்தின்
கொளளையாம விமானத்தேறி யிமையவர் குழாங்கொண் டேத்த
வள்ளலார் பதத்திற் சேர்வர் மழைக்குடை செருப்புத்தந்தோ
ரெள்ளரும் பரிமா வீந்தோ ரிந்திர பதத்திற் சேர்வார்.

இ-ள. அத்தீர்த்தத்தில் முழுகி வெள்ளைப் பசுவைத்தானங்கொடுத்தவர்கள் ஆயிரம்வெள்ளை ரிஷபங்கள்சூழ்ந்த முத்திநிலைஙகரிக்கப்பட்ட விமானத்தி லேரிக்கொண்டு தேவர்கள் கூட்டமாகச் சேர்ந்து வணங்கச் சுவாமி பதத்தில் சேர்வார்கள் மழைக்குக்குடையும் பாதரட்சையுங் கொடுத்தவர் இகழ்தலில்லாத குதிரைகொடுத்தவர்இந்திரபதவியிற் சோவாாகள் எ-று. உகூ

கன்னியைத் தான மாகக் கரைதனி லளித்தோர் தேவர்
பொன்னிய ருலகிற் போக பூமியி லளகை நாட்டின்
மின்னிகழ் மலரோனாட்டில் விரும்பின னுகர்ந்துதேவர்
சென்னியால் வணங்கப் போற்றச் சிவபதத் திருப்ப ரன்றே.

இ-ள். அத்தீர்த்தக் கரையிலே கன்னிகாதானஞ் செய்தவர்கள் தேவலோகத்திலும் சுவர்க்கலோகத்திலும் குபேரனுடைய அளகாபுரிபட்டணத்திலும் பிரகாசம்பொருந்திய பிரமலோகத்திலும் சிலசில நாளிருந்து விரும்பினவற்றையெல்லாம் அனுபவித்து தேவர்கள் தலையாலே வணங்க அதன்பின் சிவபதவியிற் சேர்வார்கள் எ-று. ௩௰

உத்தமத் தலத்திற் கோடி யருந்தவர்க்குதவு மன்னம்
நித்தமாங் காசிமீதோ ரனப்பலன் றனக்கு நேரா
தத்தலத் தனந்த கோடி யருந்தவர்க்குதவு மன்னஞ்
சத்திய வருணை நாட்டின் னப்பலன் றனக்கொவ் வாதே.

இ-ள். உத்தமமாகிய தலங்களில் கோடி அருமையாகிய தவசிகளுக்குப் படைத்த அன்னத்தின் பலன் நித்தியமாயிருக்கிற காசியிக்

பெரியோர்களுக்குப் படைத்த அன்னத்தில் ஒரு அன்னப் பலனுக்கும் ஒவ்வாது அப்படிப்பட்டகாசியி லநேககோடி தவசிகளுக்குப் படைத்த அன்னத்தின் பலன் உண்மையாகிய அருணாசலத்தில் படைத்த அன்னத்தில் ஒரு அனனப்பலனுக்கு ஒப்பாகாது எ-று. ௩௧

ஆவடி யளவு பூமி யந்தணர்க் களித்தோ ரீசன்
சேவடி நிழலிற் றங்கள் கிளையுடன் செறுக்கி வாழ்வார்
மாவிடை யாற்ற விட்டோர் மற்றொரு விடைமேலேறி
மேவிடுஞ் சிவலோ கத்திற் பவனிபோ யுவப்ப ரன்றே.

இ-ள். பசுவின் குளம்படியளவு பூமிபிராமணர்கட்குத் தானஞ்செய்தவர்கள் பரமசிவன் பாதநிழலிலே தங்களுடைய சுற்றத்தோடு களித்து வாழ்வார்கள் சுவாமிக்குப் பெருமை பொருந்திய ரிஷபங்களைத் தானஞ்செய்தவர்கள் வேறு ரிஷபவாகனத்தி லேறிக்கொண்டு சிவலோகத்தில் பவனியாகப்போய் சந்தோஷித்திருப்பார்கள் எ-று.

சாலைகள் சமைத்தோர் நந்த வனஞ்சமைப் பித்தோர் கேணி
கூலமார் தடங்கள் கண்டோர் குலிசனூர்பதத்திற் சேர்வார்
ஆலய மெழுகிற் தூர்த்து விளக்கிட்டோ ரலங்கரித்தோர்
வேலையி னடுவிற் பாந்தண் மெத்தையிற் றுயில்வ ரன்றே.

இ-ள். அருணாசலத்திலே சாலை வைத்தவர்களும், நந்தவனம வைத்தவர்களும, கிணறுகள், மணற்குன்று பொருந்திய குளங்களை வெட்டினவர்களும் இந்திரபதவியடைவார்கள ஆலயத்திலுள்ள பள்ளம் நிறைவுமெழுகி விளக்கேற்றி வைத்தவர்களும் அலங்காரஞ்செய்தவர்களும் விட்டுணுவாய்த் திருப்பாற்கடல் பத்தியில் சர்ப்பசயனத்தில் யோகநித்திரை செய்வார்கள் எ-று. ௩௨

மழைப்புன லரிதா நாளின் மருவுநீர்ப் பந்தல் வைத்தோர்
செழிக்குமேற் பதவி தன்னிற் றேவருந் துதிக்க வாழ்வார்
புழைக்கமா வுரிய ரன்பர்க் களிகலை புனைவித்தோரே
ரிழைக்கொரு கற்பகால மிறைபதத் திருப்ப ரன்றே.

இ-ள். நீரரிதாகிய கோடைகாலத்தில் தண்ணீர்ப்பந்தல்வைத்தவர்கள் செழிப்பான மேலாகிய பதவியில் தேவர்களும் புகழும்படி வாழ்வார்கள். யானையுரி போர்த்த சிவனுடைய அன்பருக்கு வஸ்திரங் கொடுத்தவர்களொரு இழைக்கு ஒருகற்பகாலம் சிவபதத்திலிருப்பார்கள் எ-று. ௩௩

மடஞ்சமைத்தவர்களந்த மடத்திலோர்துகட்கோர்சாற்ப
மிடம்பிடித்தழியாவீட்டி லிருப்பர்வேறிறந்தபேர்க்கும
விடங்குடித்திறந்தபேர்க்கும் விதியினூலுறுதிவேள்விக்
கடன்கழித்தினரேலந்தக் குலமெலாங்கதியிற்சேரும்.

இ-ள். இத்தலத்தில் ஒருமடங்கட்டினவர்கள் அம்மடத்திலிருக்கிற ஒருதுகளுக்கு ஒருகற்பகாலம் கெடுதலில்லாத மோட்சத்தில் நிலை பெற்றிருப்பார்கள். பின்னும் வேறுவிதமா யிறந்தவர்கட்கும் விஷங் குடித்திறந்தவர்கட்கும் விதியாக உறுதிபொருந்திய பிதிர்யாகம் அந்தலத்தில் செய்தால் அவர்கள் குலத்தாரெல்லாருங் கதியிற் சேருவார்கள் எ-று. ௩௫

காகமுன்பலிபீடத்திற் பலிதனைக்கவருமபோதி
லாகமார்சிறையைக்கீழே புடைத்ததாலயத்த யூடே
ஓகையானமதுகோயில் விளக்கியதெனவுட்கொண்டு
பாகசாதனனாவாழும் பதியினைப்பரமனீந்தான்.

இ-ள். ஒருகாக்கை அத்தலத்துக்கோயிற் பலிபீடத்தில்வைத்திருக்கிற பலியன்னத்தை வாயினாற் கிரகிக்கும்போது தன்னுடையசிறகுகளால் கீழேபடித்தது அதைச்சுவாமிபார்த்து ஆலயத்தில் பிரியத்தினால் நம்முடையகோயிலை விளக்கினதென்று நினைத்து இந்திரன்வாழ்கிற தேவலோகத்தை அரசாளத் தந்துக் கொடுத்தருளினார் எ-று.

மூடிகமொன்றுகோயின் முழையினைக்கிளறும்போது
தேடருமணியொன்றங்கே சிதறியோர்விளக்குறக்காட்ட
ஆடியபெருமான்றீப மளித்ததென்றகமுவந்தால்
வீடுயர்நெறியுங்காட்டி விரைந்துசாலோகமீந்தான்.

இ-ள். ஒருபெருச்சாளி கோயிலிலே வளைபுண்டாக்கும்போது தேடுதற்கரிய மாணிக்கமணியொன்று அங்கே சிதறிச் சந்நிதியிலே விளக்குபோலக் காண்பிக்க நடனஞ்செய்த சுவாமி நமக்குத் தீபங் கொடுத்ததென்று அதற்கு ஞானமார்க்கத்தைத் தெரிவித்துச் சாலோக பதவியைக் கொடுத்தார் எ-று. ௩௭

சிலந்தியொன்றொருநாளந்தத் திருமடைபடத்துநூலைக்
கலந்துடனிழைக்கவீது கவிநமக்களித்ததென்று
நலந்திகழ்ராசனாக்கி யதற்குநல்லறிவுநல்கி
புலந்தபின்னெடிடமாய ஆக்கினைப்பதவினோர்,

இ-ள். அம்மலையில் ஒருநாள் ஒருசிலந்தி வாயினூலாலே பின்னலிட இதுவஸ்திரஞ்செய்து கொடுத்ததென்று அச்சிலந்தியை அரசனாகப் பிறப்பித்து நல்லஞானத்தைக் கொடுத்துத் தேகவியோகமான பிறகு விட்டுணுலோகம் கொடுத்தார் எ-று. ௩அ

வேறு.

ஒருமணலைச்சிவனுருவ மெனநினைத்தவனிடத்திலவைத்தோனொருவன்பின்னைப், பரகதிபுக்கடைந்து சிவனென்ன வேறுமையகன்று பதவிசேர்ந்தான், பொருவரியவருணகிரி பதிவளமீ தெனவுரைத்துப புண்டரீகத், திருமுகமண்டலமலர்ந்தே யிருந்தனனன் மறைபுகன்ற செல்வன்றானே.

இ-ள். பின்னும் அத்தலத்தில் ஒருவன் மணலைச் சிவனுருவமென்று நினைத்துவைத்ததனாலவன்மேலாகிய கதியைச் சேர்ந்து சிவனென்றும் இவனென்றும பேதமில்லாமல் இருக்கின்ற சாரூபப பதவியைப் பெற்றான் ஒப்பிலலாத அருணாசலத்தின் வளம் இதுவென்று தாமரைமலர்போல் முகமலர்ந்து சொல்லியிருந்தான் நான்கு வேதங்களையுஞ் சொன்ன பிரமன எ-று. ௩௯


எட்டாவது.

தீர்த்தச் சருக்கம்.

முற்றிற்று

---

ஆக திருவிருத்தம் - ருகரு.





சிவமயம.

(ஒன்பதாவது.)

# திருமலை வலம்புரிச் சருக்கம்.

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம.

கனகமலைக்கனகமலர்த்தடங்களது பெருமைபிறைகளித்தேனந்த வனகமலை வலம்புரியுஞ் செயலினையுந் தெரியவுரைத் தருளாயென்று, சனகமுனியெழுந்துபணிந் துரைக்குதலு மனமகிழ்ந்து கிரணக் கோயிற், றினகரனார் சிறந்தடைக்குந் திருக்கோயிற் கடவுளிவைசெ ப்பலானான்.

இ-ள். மேலானபிரமனே,பொன்போன்ற நிறத்தையுடையதாமரைப் புட்பங்களா சூழ்ந்த தீர்த்தங்களின் பெருமையைச்சொல்லக்கேட்டுச் சந்தோஷித்தேன் பாவநாசிதமாகிய கிரியைவலஞ்செய்யும்பெருமையுந்தெரிய அருளிச்செய்யென்று சனகரிஷி யெழுந்து வணங்கிச் சொன்ன அளவில மனம் சந்தோஷித்துச் சூரியன் றன்கிரணமாகிய திறவுகோலாலே திறந்துமூடுந்தாமரைமலராகிய கோயிலில்வாசஞ்செய்கின்ற பிரமன் சொல்லத்தொடங்கினார். எ-று. க

கற்பமெலா மரியதவம் புரிந்தவரு மதின்பெருமை காணமாட்டார், அற்பதவம் புரிந்தவருக் கருணகிரி வலத்தினலை மறியலாமோ, சிற்பரன்றன் புகழ்கேட்கும்விருப்புடையா னெனவுனக்குச்செப்பாநின்றேன், னற்புதவிக்கதையமுதைச் செவிவழியே புகட்டின்ப மருந்துசென்றான்.

இ-ள். கற்பகாலம் அரிதாகிய தவஞ்செய்தவர்களும், அதன்பெருமையை யறியமாட்டார்கள். அற்பமான தவத்தைச் செய்தவர்களுக்கு அருணாசலத்தை வலஞ்செய்யும்பெருமையை அறியக்கூடுமோ பரமசிவனுடைய புகழைக் கேட்கும் ஆசையுள்ளவனென்றுனக்குச் சொல்லத்தொடங்கினேம் அற்புதமான இக்கதையாகிய அமிர்தத்தை உன்காதாகிய வாய்வழியிலேபுகட்டி இன்பமாக அருந்தென்று சொன்னார் பிரமன். எ-று. ௨

சோணகிரிவலம்புரிதல் பிறவியெனும் பெருங்கடற்குத் தோணியாகு. * மேனரகக்குழிபுகா தரியமுத்திவழிக்கேற வேணியாகும், காணரியதவத்தினுக்கு மரத்தினுக்கு மரும்பொருட்குங் காணியாகும், வாணுதன்மின் னிடத்திருக்குங் கண்ணுதலை மனமுருக்கு மகிழ்ச்சியாகும்.

இ-ள். அருணாசலத்தைவலஞ்செய்தல் பிறவியென்னும் பெரியகடலைத்தாண்டுவதற்கு ஒருதோணியாகும் எழுநரகக்குழியிலும்புகுதாமல் அருமையாகிய முத்தியில் ஏறுவதற்கு ஏணியாகும், காணியாயிருக்கும் ஒளிபுள்ளநெற்றியை யுடைய பார்வதியை இடப்பாகத்தில் வைத்திருக்கின்ற சுவாமியைமனமுருக்குஞ சந்தோஷமாகும். எ-று.

காசிமுதற்சிறப்புடையதலங்களிலே யிருந்திறையைக்கற்பகாலம்
பூசைசெய்தொருபலமு நெடுங்கால மரியதவம்பரிசைதானுந்
தேசிகனுரைத்தபடிசமாதியிலே யிருந்துபெறுஞ்சித்திதானு
நேசமுடனருணகிரிவலம்வருங் கென் றுரைப்பதற்குநிகரதாமோ.

இ-ள். காசிமுதலாகச் சொல்லப்பட்ட சிறப்புடைய தலங்களிலிருந்து சுவாமியைக் கற்பகாலம் பூசைசெய்தபலமும் அநேககாலந் தவஞ்செய்தலும், குருசொல்லிய முறைப்படியே சமாதியிலே யிருந்து அடைகின்றசித்திகளும், அருணாசலத்தை வலம்வரவேண்டுமென்று சொல்லியபலனுக்கு நிகராகுமோவென்று சொன்னார் எ-று.

அருணகிரிவலமவருகென் றுரைப்பளவி லதிகபிரமத்தி நீங்குங் கருமத்தையினளவு மதுவருந்துபாவம் வருந்தநடு நடுங்கியோடு, மருவு பெருமபொருளா கவர்ந்த பழவினைதங் கரங்குவித்து வழிகொண்டேகும், குருபரற்குத் தவறிழைத்த கொடுவினையும் பயந்துகருக் குலையுந்தானே.

இ-ள். அருணாசலத்தை வலஞ்செய்யென்று சொல்லுமளவில் பிரமஹத்தி பாதகமபோய்விடும். கருமத்தை யாற்றுமளவு மதுபானம்பண்ணியபாவமும் வருத்தமுற்று நடுநடுங்கி யோடிப்போகும

* எழுநரகக்குழியென்பது ஏனரகக்குழி எனமருவிமுடிபெண்க.

பிறநுடைய பொருளைக் களவுசெய்த பழமையாகிய பாவமும் கைகு விக்துக்கொண்டு ஓடிப்போகும், குருவாகிய சுவாமிக்குத் தவறுசெய் தபாவமும்பயந்து கர்ப்பங்குலைந்து ஓடிப்போகும். எ-று. ரு

அந்தவினை யுடன்பட்டலும் பெருங்காற்றி னெதிர்சுடர்போ லவி யாநிற்கும், தந்தையரைக்கடிந்தவினை கருடனுற்றவரவெனவே தளர்ந் துமாயு, மைந்தரைய மசனிரையுந்தொலைத்தவினைக் கடல்சுவறி வரிய வாகு, மெந்தைபொருள் கவர்ந்தவினை தனக்கிருக்கு மிடமேதென்றி ரைக்குந்தானே.

இ-ள். உறநினைபக்கெடுக்கும் பாவமும் அருணாசலத்தை வலஞ் செய்வோமென்று நினைத்த வளவில சூறைக்காற்றி னெதிரிலிருக்கும் தீபம்போலவிருந்துபோம் தந்தையைக்கொன்ற பாவமும் கருடனைக்க ண்டபாம்புபோல் நடுக்கமடைந்து ஓடிப்போம் குழந்தைகளையும், மாதரையுங் கொன்றபாவமாகிய கடலும் வற்றிபபோம் எம்முடைய சுவாமி திரவியம் திருடினபாவமும் நானிருக்கு மிட மெங்கேயென்று ஓடிப்போம். எ-று. சு

வே று.

ஓரடிக் கியாகஞ்செய்த பலத்தினை யுதவாநிற்கு
மீரடிராசசூய பலந்தருமினிய மூன்று
நேரடி பரிமேதத்தின் பலத்தினை நிறைக்குநாலு
பாரடி யிடுவர்க்கியாகப் பலனெலாம பலிக்குந்தானே.

இ-ள். அருணாசலத்தை வலஞ்செய்ய வேண்டுமென்று நினைத் தஓரடி எடுத்துவைத்தவர்களுக்கு யாகஞ் செய்தபலன் சித்தியாம். இரண்டடிக்கு இராசசூய யாகபலன் சித்தியாம், மூன்றடிக்கு அஸ்வ மேதபலனுண்டாம. நாலடிக்கு எல்லாயாகத்தின் பலனுஞ் சித்தியா ம எ-று. எ

வலங்கொளோரடியேபூமி வலஞ்செய்பும பலத்தைநல்கும்
அலங்குமீ ரடியேதீர்த்த மாடிய பலன்களியும்
தலங்கொண்மூன் றடிகளீரெண் டானத்தின் பலத்தைநல்கும்
மிலங்குநா லடிக்கியோகத் தெண்வகைப்பலத்தைநல்கும்

இ-ள். பிரதட்சணஞ்செய்கையில் தூக்கி வைத்த ஓரடியின்பலங் பூமிப்பிரதட்சணஞ் செய்தபலன்தரும், இரண்டடியின்பலன் சர்வதீ ர்த்தமாடிய பலன்தரும் மூன்றடியின்பலன் சோடசதானப்பலன் தரு ம் நாலடியின்பலன் அஷ்டாங்கயோகஞ்செய்தபலன்தரும் எ-று. அ

வைத்தவோரடியே பூசைப்பலனெலாம் வழங்குமங்கே
உய்த்தவீரடியேலிங்கந் தாபித்தவுறுதி நல்கு

மெய்த்தவேயடிமூன்றிட்ட பலன்சொலின்விமானங்கோடி
யெத்தனைதாபிக்கோயில் சமைத்தபேறெல்லாநல்கும்.

இ-ள். அதுவல்லாமலும் வலமாக வைத்த ஓரடிக்குப் பூசாபல
ன்களெல்லாம் பலிக்கும் இரண்டடிக்கு இலிங்கப்பிரதிட்டை செய்
தபலன் கொடுக்கும மூன்றடிக்குக் கோடிவிமானந் தாபிகளுடைய
கோயில் கட்டிய பலன்தரும். எ-று. க௦

வேறு.

நீடருணகிரிவலத்தோ ரடியிட்டோ ருருத்திரர்வா ணிலைக்
கொண்டோர், ஈரடியிரண் டடியிட்டோர் மகேசுரர்தம்பதத்தடைந்
தார் நதியுஞ்சூடி, ஆடரவம் புனைந்தமலை வலமாக வொருங்கொருமூ
ன் றடியிட்டார்க்கே, கோடிகலை முறை யவரைச் சிவலோகந் தனிற்
கொடுபோய்க் குடிவைத்தாரே.

இ-ள். நீண்டஅருணாசலத்தை வலஞ்செய்ய வேண்டுமென்று ஓ
ரடிவைத்தவர்கள் உருத்திரபதமடைவர்கள், இரண்டடி வைத்தவர்க
ள் மகேசுரபதமடைவார்கள் மூன்றடிவைத்தவர்கள்கோடிதலைமுறை
யிலுள்ளமனிதரையும்பதவியிற்கொண்டுபோய்ச்சேர்த்தவர்கள். எ-று

நன்றிதருமருணகிரிவலமாகச் சிறிதுவழிநடந்தபேர்க்குத்துன்று
நெடுங் கிரணவெள்ளிக் கயிலைமலைவழிகடுகித் தொலையாநிற்கு, மன்
றியுமம் மலைவலமாய் நடந்தவழிப் பாதூளியுத்துமழற்சியாலே, கன்றி
யகா லரைக்காணிற்கன்றியகா லரைப்போலக் காணும்பாவம்.

இ-ள். நன்றியைக்கொடுக்கும் அருணாசலத்தை வலமாகச் சிறி
துதூரம் நடந்தவர்களுக்கு நெருங்கிய கிரணத்தை வீசுகின்ற வெள்
ளிமலையாகிய கைலாயத்திற்குப் போகும்வழி விரைவில் தொலையும்
அல்லாமலும் அம்மலையை வலமாகப் போனபோது பாதக்கைக்கல்லு
களாலும் அழற்சியினாலும் கன்றிப்போன காலையுடையவரைக் கண்
டால் எமனென்று பயந்துபாவங்கள் ஓடிப்போம். எ-று. கக

வன்னிமலை வலம்புரிந்தோர் பதத்துகளொன் றொருவாயுவசத்
தினாலே, புன்னகரமனையவிடம் புகுதிலது கயிலையெனப் புனிதமா
கு, மின்றுமவர் பதத்துகளோர் மனிதருடற் செறிவிலவ ரிறப்புநீங்
குந், துன்னுமவர் பிறப்பொழியும் வலம்புரிந்தோர்பெருமைகளென்
சொல்லுவோமே.

இ-ள். அக்கினிமலையை வலம்வந்தவர்கள்பாததூளில் ஒட்டியதூக
ளொன்று காற்றினால் நகரத்தையொத்த இடங்களிற்சேர்ந்தால் அது

வுங் கைலாயம்போல் பரிசுத்தமாம், இன்னும்வலம்வந்தவர்கள் பாதத்துகளில் ஒன்றுமனிதர்தேகத்திற்பட்டால் இறப்பும் அவர்களைபின்பற்றிவருகிற பிறப்பும நீங்கும, அப்படி யாம்போது பிரதக்ஷணஞ்செய்தவர்பெருமைகளை என்னசொல்லுவோம். எ-று. ௰௨

இந்தமலை வலம்புரிந்தோர் சிவனிருக்குங் கயிலையின் ஏகும்போது, சந்திரன்வெண் குடையெடுக்குமிரவிவிளக் கெடுக்கு மங்கை தாமந்தாங்கும், மந்திரமேலிந்திரனார் வழக்குமலர்ப் பரப்பிடுவா னளகைக் கோமான், வந்தனைசெய்தருகுவருங் கந்தமலர் மழைசொரிவார் வசுக்கடாமே.

இ-ள். இவ்வருணாசலத்தை வலஞ்செய்தவர்கள் பரமசிவன் வாசஞ்செய்கின்ற கைலாயமலையைச் சேருமபோது சந்திரன்வெள்ளைக் குடைபிடிப்பான், சூரியன்விளக்கெடுப்பான் தருமதேவனை கைதாங்கிவரும இந்திரன்வருகிறவழியில புட்பங்களைபபரபபுவான். குபேரன்தண்டஞ்செய்து சமீபத்தில்வருவான், அஷ்டவசுக்கள்புட்பவருஷம்பொழிவார்கள். எ-று. ௰௩

மேனகைபு மரம்பையுட னூர்வசி திலோத்தமையும் வீணையார்க்கும், கானநடம்புரிவர் கங்கா நதியுடனே யமுனாநதி கவரி வீசும் போனகவின் னமுதமலைத் துகிலுமுகிலெடுத்தெதிரே போதும்போது, நாணமுங்கொண்டலர்மடந்தைநாணுமுன்னே மறைபுகழ்ந்துடக்குந்தானே.

இ-ள். மேனகையும், அரம்பையும, ஊர்வசியும், திலோத்தமையும், வீணைவாத்தியத்துடனே சங்கீதம்பாடி நடனஞ்செய்துகொண்டுவருவார்கள், கங்கையும் யமுனையும்சாமரம் வீசிக்கொண்டு வருவார்கள், சாப்பிடத்தந்த அமிர்தத்தையும்மலையளவு ஆடைகளையுமமேகலெடுத்துக்கொண்டு எதிரேவரும் அப்போது இலக்குமிபூவுங்கஸ்தூரியுங்கொண்டுவருவாள் முன்னேநாலுவேதங்களும புகழ்ந்துகொண்டுவரும். எ-று. ௰௪

வேறு.

சொற்பொதிந்துகளுங்கங்கை படிவதனுஞ்சிறந்தகானம்
பார்ப்பதுமியோகத்தாலே வருதலும்பலமொவ்வாதால்
ஆர்ப்பொலிசடையான்சோண சலந்தினைவலமாய்ச்சூழல்
காற்பலனென்றெண்ணுதே முழுப்பலங்கருதுங்காலே

இ-ள். சேற்கெண்டைகுதித்து விளையாடும் கங்கைமுதலிய தீர்த்தங்களாடிய பலனும் சிறந்த சிவத்தலங்களைத் தரிசனஞ் செய்த

பலனும் யோகஞ்செய்தலினால் வந்தபலனும் ஒப்பாகாது ஆத்திமாலை தரித்தசடையை சிவசொரூபமாகிய அருணாசலத்தை வலஞ்செய்தால் காற்பலமென்றெண்ணாமல் முழுப்பலமாம் நினைக்கும்போது.

நிரந்தரமிமையோர்போற்ற நெடியமால்வரையைச்சூழ்வோர்
பரந்திடும்வழியிறரேன்றும் பரவிறைற்சிவந்தபாதம்
வரங்கொளவணங்கும்வானோர் மகுடகோடிகளிற்றைத்து
விரிந்தசெம்மணிகடாக்கி மீளவுஞ்சிவக்குமாதோ.

இ-ள். எப்பொழுது தேவர்கள்வணங்கும் பெருமையுள்ள அருணாசலத்தை வலஞ்செய்வோர்களுடைய வழியிற்கிடக்கிற பருக்கைக் கலலுசலை மிதித்துச்சிவந்தபாதம் பின்புவரத்தைப்பெறுவதற்குவணங்கும் தேவர்களுடையமகுடகோடிகளிற் பதித்துப்பிரகாசிக்கும்இரத்தினக்கோடிகள் தாக்கிமறுபடியுஞ்சிவக்கும். எ-று. ம௬

கானடைகொடுக்கப்பெற்றென் கரியகண்டெரியப்பெற்றென்
மானிடப்பிறவியுற்றென் மலைவலம்புரியாமாந்த
ரூனுடைப்புழுக்கூடேறி நரகிடையூசலாடி
தானிடர்ப்படுவதல்லா லுய்கிலர்சனகவென்றார்.

இ-ள். அப்படிப்பட்ட அருணாசலத்தை வலஞ்செய்யாதவர்கள் கால்நடையுண்டாய் நடந்துதிரியப்பெற்றென்னபிரயோசனம், கறுத்தகண்கள் நன்றாகத்தெரியப்பெற்றென்ன பிரயோசனம், அரியமானிடப்பிறப்பாகப் பிறந்தென்னபிரயோசனம், மாமிசந்திரண்ட புழுக்களையுடைய தேகத்திற் சோர்ந்து நரகத்தில்வீழ்ந்து அலைந்து துன்பப்படுவதுமல்லாமல் பிழைக்கமாட்டார்கள் சனகனேஎன்றான் பிரமன் எ-று. ம௭

வஞ்சியர்புணர்ச்சிவேண்டின் மன்னர்கைவசமாவேண்டி
னஞ்சியபகைமையெல்லா மக்கணத்தகற்றவேண்டிற்
புஞ்சிளமதிபோனல்ல புதல்வரைப்பெறுதல்வேண்டிற்
சஞ்சிதமுதலாமூன்று கருமமுந்தவிர்க்கல்வேண்டி.

இ-ள். அதுவல்லாமலும் நல்லமாதருடையபோகம் வேண்டினாலும், அரசர்கள் கைவசமாகவேண்டுமானாலும், அஞ்சத்தகுந்தபகையெல்லாம் அக்கணத்திலேநீக்கவேண்டுமானாலும், பாலசந்திரனபோலநல்ல பிள்ளைகளைப் பெறவேண்டுமானாலும்,ஆகாமியசஞ்சிதபிராரத்துவமாகிய மும்மலங்களையு நீக்கவேண்டுமானாலும். எ-று. ம௮

முயலகனலகைபூத கணங்களைமுனியவேண்டிற்
றுயருறுபிணியுமாகச் சோகமுந்தவிர்க்கவேண்டி
னியலிசையறியவேண்டி னின்மலன்றன்னைத்தேடு
மயலறுபுகழைவேண்டின் மலைவலம்புரிவர்வல்லார்

இ-ள். முயலகன்போன்ற அரக்கரையும் பிசாசுகளையும் பூதகூட்டங்களையும் கோபிக்க வேண்டினாலும், துன்பஞ்செய்யும் வியாதியையும் தேகத்தில் வருமசோகத்தை நீக்கவேண்டினாலும், இயலிசை முதலாகிய கல்வியை வேண்டினாலும், அழகைவேண்டினாலும குற்றமற்ற கீர்த்தியை வேண்டினாலும் அம்மலையை வலஞ்செய்வார் பெரியோர்கள் எ-று. ௧௯

வரந்தருமருக்கவார மலைவலம்புரிந்தோர்வெய்யோன்
றெரிந்தமண்டலத்தைக்கீறிச் சிவகதிபதியாய்ச்சேர்வார்
திரந்தருஞ்சோமவாரந் திருமலைவலமாய்வந்தோர்
புரந்தரனெனவேழ்பாரும் புரந்தரன்றன்மைபூண்பார்.

இ-ள். சிறந்தஆதிவாரத்தில் அம்மலையைவலஞ் செய்தவர்கள் சூரியமண்டலத்தைபிளந்து சிவபதத்தைச் சேர்வார்கள், ஸ்திரமாகிய சோமவாரத்தில் வலமாய்வந்தவர்களஇந்திரன்போல் ஏழுலகத்தையாண்டு சிவசாரூப்பியமடைவார்கள் எ-று. உ௰

மங்கள தினத்திற் சூழ்வார் கடனுடன் வறுமைநீங்கிச்
சங்கிலித் தொடராமேழு பிறப்பையுந் தவிர்ப்பாராபுத்திக்
கெங்கணா யகரைச் சூழ்வோ ரிருங்கலை மறைகளெலா
றங்கமுந் தெரிந்து முத்திக் கருகரா யமரராவர்.

இ-ள். மங்களவாரத்தில் கிரியைவலஞ்செய்வோர் தங்களுக்குண்டாகிய கடனையும் தரித்திரத்தையும்நீங்கி சங்கிலிகட்டுபோல் தம்மைவிடாத ஏழுபிறப்பையுநீக்குவார்கள், புதவாரத்தில் சுவாமியைப்பிரதக்ஷணஞ் செய்வோர் நாலுவேதங்களும், ஆறுசாஸ்திரங்களும் அறுபத்து நான்குகலைகளுந்தெரிந்து முத்திக்கு நெருங்கினவராய்த்தேவர்களாவார்கள். எ-று. உக

மாவியாழத்திற்செய்ய மணிவரைவலமாய்சூழ்வோர்
மூவரும்புகழத்தேவர் முனிவர்தங்குரவராவர்
தாவிலாவெள்ளிவாரந் தனில்வலம்புரிந்தோர்கஞ்சப்
பூவையைப்புணரும்பூவை விணருமால்புரத்திற்சேர்வார்.

இ-ள். பெருமைபொருந்தியகுருவாரத்தில்அம்மலையைவலமாய் வந்தவர்கள் திரிமூர்த்திகளும்புகழும்படி தேவர்கள்முனிவர்களுக்கும்

எசமானராவார்கள் குறைவில்லாத சுக்கிரவாரத்திலேவலஞ்செய்தவர்கள் தாமரைமலரிலிருக்கின்ற இலக்குமியைச்சேரும் தாமரைமலரையொத்தவிட்டுணுபதத்தைச் சேருவார்கள். எ-று. உ௨

உதயமேசனிநாள்சூழ்வோர்க் கொன்பதுகிரகநன்றாய்ப்
பதினொன்றாமிடத்திற்றாய பலன்களைப்பலியாநிறகும்
மதியணிசிவனிராவும வருடம்வந்துதிக்குநாளும்
அதிகமாமதிகமாகு மைப்பசிமுதலாமூன்றும்.

இ-ள். சனிவாரஉதயத்தில் பிரதக்ஷணஞ் செய்வோர்களுக்கு நவக்கிரகங்களும் பதினொன்று மிடத்திலி நூதபலனைக்கொடுப்பார்கள்சிவராத்திரியிலும் வருஷப்பிறப்பினன்றும் ஐப்பசிமுதலாகிய மூன்றுமாதமும் வலஞ்செய்தவர்களுக்கு மேற்சொன்ன பலன்களிலும் அதிகபலஞ்சித்தியாகும். எ-று. உ௩

அயன்சங்கிராமமாசி மகத்திலர்த்தோதயத்தில
வெயிலுருங்கதியைபபாமபு விழுங்குநாள்விதிமாதத்திற்.
பயனுறவலஞ்செய்வோர்க்கிப் பலன்களிற்கோடியாகும்
அயரவறத்தினைமுஞ்சூழ்வார் பேற்றையாரறியவல்லார்.

இ-ள். உத்தராயணத்திலும் தக்ஷணாயனத்திலும், மாசிமகத்திலும அர்த்தோதயத்திலும் சூரியக்கிரணகாலத்திலும், விதிபாதத்திலும் இஷ்டசித்தியை அடையவிருமபி வலஞ்செய்தவர்களுக்குக்கோடியங்கதிகமாகப்பலன்கிடைக்கும் தளர்ச்சியடையாமல் தினந்தோறும்வலஞ்செய்தவர்களுக்குண்டாகும் பலனையாரறிந்து சொல்லவல்லவர்.

தாரிகையவரை யற்றைக் கனவிலும் புணர்ந்திடாம
ணீரினின்மூழ்கித்தூய துடுத்துவெண்ணீறுசாத்தி
யாரிடமுரைபேகான மளித்ததாமவைகொள்ளாமற்
பாரிடைநடந்துசூழ்ந்த தேவரைப்பணிந்துபோற்றி.

இ-ள். அப்படி அதிகபலனைத்தரும் அருணாசலத்தைவலஞ்செய்யும் விதமெப்படியெனில் பிரதக்ஷணஞ்செய்யும் அன்றைக்குப்பெண்களைச் சொர்ப்பனத்திலுநினையாமல் ஸ்நானஞ்செய்து பரிசுத்தமாகிய வஸ்திரமுடித்துக்கொண்டு விபூதிதரித்து அவ்விடத்திலேதானம்கிரமமாகக்கொடுத்துதாம் ஒருவரிடத்திலும் தானம்வாங்காமல் பூமியிலே காலினாலேநடந்து கிறியைச்சுற்றி யிருக்கின்ற தேவர்களைப் பணிந்து வணங்கினன். எ-று. உ௫

கஞ்சுகப் போர்வைநீத்துக் கவிகையுஞ் செருப்புநீத்தே
யஞ்சுதல் வெகுளிசோக மக்கணத்தாற்றிவாசி
குஞ்சர முதலாயுள்ள வாகனமேறுகிடாமல்
விஞ்சிய வடைக்காயுணவு வழியிடைபோருப்பதாக்கி.

இ-ள். அங்கத்தில் தரிக்குஞ்சட்டையும் போர்வையும் நீக்கிக்குடைபிடித்துக்கொள்ளாமலும் கால்களுக்குச் செருப்புப் போட்டுக்கொள்ளாமலும் பயமுங் கோபமுஞ்சோகமும் நீங்கிக்குதிரையானை முதலாகியவாகனங்களிலேறாமல் தாபூலம் தரிக்காமல் போசனத்தையுமவெறுத்தது. எ-று. உ௫

செங்கைவீ சாமற்சோரா துவகையாற்சிரத்திற்கூப்பி
மங்கையர் பதிதர்நீச ருறுப்பிலார் வடிவுநோக்கா
தங்குறுமடியிலோசை செவிப்புமாதரசாமாதர்
திங்களையிரண்டுசென்று நடந்திடுஞ்செயலபோற்சென்று.

இ-ள். கைகளைவீசிக்கொண்டுபோகாமலும், சோர்வில்லாமலும்சந்தோஷத்தோடு சிரசிற்கைவைத்து கூப்பிக்கொண்டு மாதரையும் பாவிகளையும் நீசரையும் அவயவீனரையும்பாராமல் நடக்கிறபோது அடியினுடைய சத்தமகாதிற்கேட்காமல்மெள்ளஅரசமாதர்கள்பத்துமாதத்துக்சர்பத்தோடு நடக்கிறதுபோலநடந்தது. எ-று. உ௭

யிருவினையகற்றுமந்த மலையையெண்டிசையும்வீழ்த்தப
பரவியங்கதனைச்சூழ்ந்த கடவுளர்பணிந்துபோற்றி
யருவமாய்வலமாஞ்சித்த ரமரரைமனத்தாற்போற்றி
யுருகியங்கவர்மேற்கைகாற் படுமெனவொதுங்கிச்சென்று.

இ-ள். நல்வினைதீவினைகள் இரண்டையும்நீக்கும் அக்கிரியையெட்டுதிக்கும் வணங்கி அத்திக்கிலிருக்கும் சுவாமிகளையும்வணங்கி உருவநதெரியாமல வலஞ்செய்துக்கொண்டுவருகிற சித்தர்களையும்தேவர்களையும் மனத்தினுல் வந்தனஞ்செய்து அவர்கள்மேல்தங்கள் கைகால்படுமென்று பயந்துவழியினின்றும் ஒதுங்கிச்சென்று. எ-று. உ௮

வானமார்மலையைப்பொன்னிற் படிகநன்மணியாயெண்ணி
மோனமாய்நடக்கவல்ல திரைபுகழ்மொழியைக்கேட்க
வானவிச்செயலினுலே வலஞ்செய்தாலயத்தினண்ணி
யேனமுன்னறியான்றாளைப் பணிந்துதன்னிருக்கையெய்தி.

இ-ள். ஆகாயமட்டுமளாவிய அம்மலையைப்பொன்போலவும் படிகம்போலவும் இரத்தினம்போலவும்நினைந்து மௌனமாய் நடக்

வேண்டியது அல்லது சுவாமி துதிகளைக்கேட்கவேண்டியது, இப்படிப்பட்ட தன்மையாக வலமவந்துகோயிலுட்சென்று விஷ்ணுவாகிய பன்றியறியாத சுவாமிபாதங்களை வணங்கித்தாங்களிருக்குமிடத்துக்கு வந்தது. எ-று. ௨௯

குன்றெனுங் குணத்தார்சூழ விருந்துதீங் கனிபால்கொள்க
வன்றியே புலவுநீத்த வடிசிலையுண்கநீதி
நின்றவத் தலத்தோர்செய்யுநிலைமையீ ததிதூரத்திற்
சென்றவர்வருத்தமாயெவ் வகைவலஞ்செயினுஞ்சீரம்.

இ-ள். மலைபோலுயர்ந்த குணத்தையுடையவராகிய சிவபக்தர்கள்சூழ இருந்துமதுரமாகிய பழங்களும்பாலுஞ்சாப்பிடக்கடவர் அப்படியில்லாவிட்டால் மாமிசபதார்த்தமில்லாமல் அன்னத்தைப்புசிக்கக்கடவர், இப்படிப்பட்டசெய்கைகளை நீதிபொருந்திய அத்தலத்திலிருக்கிறவர்கள செய்யவேண்டியது, அதிகதூரத்தில் நின்றும்வந்தவர்கள் தங்களுடையவருத்தத்தினாலே எவ்விதமாகவலஞ்செய்தாலும் நன்மையாம. எ-று. ௩௰

தண்டுத லிலாதஞானச் சனகவிச்சயிலஞ்சூழ
வெண்டிசை புரப்போர்தம்பே ரினிற்சிவ வுருவங்கண்டார்
வண்டிசை பெருகுமோதி மலைகண் மலையின்கீழ்பால்
கண்டனள் பவளவெற்பிற் கயிலைவெற்பிறைவன்காட்சி

இ-ள். கெடுதலில்லாத ஞானத்தையுடைய சனகரிஷியே இம்மலையினெட்டுத்திக்கிலும் திக்குப்பாலகர் எட்டுபேரும் தங்கள் பேரினாலே இலிங்கங்களைத் தாபித்துப் பூசித்திருக்கிறார்கள், வண்டுகளின் ஒலிபொருந்திய கூந்தலையுடைய பார்வதிகிரியின்கிழக்குத்திக்கில் பவளமலைபோல் ஒருஇலிங்கத்தைத்தாபித்துப் பூசித்தாள். எ-று. ௩௧

மணிவரைபரியிற்சூழ்ந்த வச்சிராங்கதனப்போது
புணர்பவந்தவிர்க்கத்தென்பால் புழுகணிபிறையைக்கண்டான்
தணிவிலாவினைகணீக்கத் தமியனேன்மலையின்மேற்பால்
அணியண்ணுமலையானென்னு மருவுருவிறையைக்கண்டேன்.

இ-ள். அருணாசலத்தினிடத்தில் குதிரையிலேறிக்கொண்டுவந்த வச்சிராங்கதபாண்டியன் அக்காலத்தில் தன்னையடைந்தபாவத்தைத் தீர்க்கத்தென்திக்கில் புழுகணிபிறைவனென்று ஒருலிங்கத்தைத்தாபித்துப்பூசித்தான் தணிபாதபாவங்களை நீக்கிக்கொள்ளநானும் அம்மலையின்மேற்குத்திக்கில் அணியண்ணுமலையானென்கிறபேரிட்டு ஒருலிங்கத்தைத்தாபித்துப் பூசைசெய்தேன் எ-று. ௩௨

வாலவெண் கதிர்போற்சோண வரைக்கடந் தொருநாள்பாய்ந்து
சாதுமத் துயரந்தீரத் தனதுபேரிறையைக் கண்டா
லைய மூழுதுந்தேவர் நாகர்கட் டுறைவோர்சித்தர்
சீலமா முனிவர்கண்ட சிவனுருந் தெரிக்கொணாதே.

இ-ள். சூரியன் அருணாசலத்தைத் தாண்டிப்போனதினால் வந்த பாவந்தீரத் தன்பேரிட்டு ஒரு இலிங்கத்தைத் தாபித்துப் பூசைசெய்தான். அதுவல்லாமல் அம்மலையிலிருக்கின்ற கோயில்கள்முழுதும் தேவர்கள், நாகலோகத்தார்கள், முனிவர்கள், சித்தர்கள் இவர்களாலே ஸ்தாபித்துப் பூசைசெய்யப்பட்ட சிவலிங்கங்களை இவ்வளவென்று சொல்லக்கூடாது எ-று. ௩௩

ஈசனார் வடிவமான லிலிங்கமவ் வெல்லைசூழ
யோசனை மூன்றுஞ்சேர நெருங்கும்வா னுடுக்கள்போலப
பேசுவ தெவனோவந்தத் தலத்தினிற் பெருமைவேலன்
றேசுறுங் கவுரியானை முகத்தினுந் தெரிகொணாதே.

இ-ள். பரமசிவரூபமான அநேக இலிங்கங்கள் அவ்வெல்லையைச்சுற்றி மூன்றுகாதவழிமட்டும் ஆகாயத்து நக்ஷத்திரங்கள்போல நெருங்கியிருக்கும் அப்படியிருக்கிறபோது அத்தலத்தின் பெருமையைச் சுப்பிரமணியர், பார்வதி, விநாயகர், இவர்களாலேயே சொல்லக்கூடாமலிருக்கிறபோது என்னால் சொல்லப்படுமோ எ-று. ௩௪

தாலவிழ் மலரோனிவ்வா றுரைத்தலுஞ் சனகன்போற்றி
வேதனே பிறவிதீர்க்கும் விமலனே விமலனுன
வாதினைப்பழித்தோர் செம்பொன்கவர்ந்தபே ரடையுந்தீங்கும்
பாதகர் தவிருமாறும் பகரெனப பதுமன்கூறும்.

இ-ள். தாதுவிரிந்த தாமரைமலரிலிருக்கின்ற பிரமன் இப்படிசொன்னதும, ஜனகரிஷி வணங்கி வேதமுழுதுங் கற்றுணர்ந்தவரே, பிறப்பைநீக்கும் பரிசுத்தரே, மலரகிதரான சிவனைபபழித்தவர்களுக்குவந்த பாவமும், அவர்தனத்தை அபகரித்தவர்களடையும்பாவமும் அவைகள்நீங்கும் வகையும் சொல்லுமென்றுகேட்கப் பிரமன்சொல்லுவானுயினன் எ-று. ௩௫


ஒன்பதாவது.

திருமலை வலம்புரிச்சருக்கம்.

முற்றிற்று.

---

ஆக திருவிருத்தம-584.





சிவமயம்.

## பத்தாவது,

# ஆதித்தச் சருக்கம்,


எழுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

அற்றமற்ற முனிவர்சூழ மருணபூதரத்தினை
மற்றவெற்பு மொக்குமென் றிகழ்ந்துரைத்த மனிதர்வாய்
புற்றெழுந்து புகையெழுந்து புழுநெளிந்து புலவுநீர்
சுற்றெழுந்து பெருகுமண்டு சோணமாரி சொரியுமே.

இ-ள். குற்றம்நீங்கிய முனிவர்கள சூழ்ந்துவரும் அருணாசல மென்னுமலையோடு மற்ற மலைகளையுமொக்குமென்று நிந்தைசொன்ன மனிதர்வாயிலே புற்றுண்டாகிப் புகைபுகைந்து புழுக்கள்நெளிந்து புலால்நாற்றம நாறுகின்ற நீர் சுற்றியெழுந்து மிகவும் இரத்தமாரி சொரியும் எ-று. க

அந்தமைந்தர் தம்மையேற்றி யந்தகன்ற னேவலாய்
வந்ததூதர் செக்கிலிட் டரைத்தரைத் தெடுப்பர்வாய்
வெந்தை வாளியாலறுப்ப ரெங்கைசோண வெற்பையே
நிந்தைசெய்வை என்றடித்து நெய்யில்வேக வைப்பரே.

இ-ள். அருணாசலத்தை நிந்தித்த அம்மனிதர்களைப்பின்பு ஏமனுடைய ஏவலாய்வந்த தூதர்கள் செக்கில் அநேகதரம்போட்டு அரைத்து எடுப்பார்கள் அவர்கள் வாய்களை, நெருப்பிற்போட்டுக்காய்ச்சி கத்தியினலறுப்பார்கள், எங்களாண்டவன் மலையையோ நிந்தைசெய்தாயென்று அடித்து நெய்யிலே வேகப்போடுவார்கள் எ-று. உ



பஞ்செழுத் துவைத்தரக் குருக்கி வாய்பரப்பியே
நஞ்சினைப் புகட்டி வெய்ய நரகிலே கிடத்துவார்
அஞ்சி யந்த நரகு தானு மருவ ருத்த லைத்திடும்
நெஞ்ச கத்தி லெண்ணி னார்த மக்குமீது நிகழுமே.

இ-ள். பின்னும் அவ்வருணாசலத்தை நிந்தித்தவர்களை யமகாதர்கள் பஞ்சாகத் துவைத்து அரக்கை யுருக்கி வாயிலேவிட்டு [illegible] குடிப்பித்துத் தீமையாகியநரகிலேதள்ளுவார்கள் அந்நரகமே [illegible] ருல்பயப்பட்டு இவர்களைத்தாங்குகிறதற்குச் சகிக்காமல்மிகவும் [illegible]த்தும்இப்படிப்பட்டதுன்பம்மனதிலே இம்மலையைக்குறைவாகவெண்ணினவர்களுக்கும் உண்டாம். எ-று. ௩

குருக்கடந்தை தாய ராவி கொன்ற தீயர் முதலினோ
ரிருக்கும் வெய்ய நரகின் மீதி லிட்டபோ திவர்களும்
பொருக்க நொந்து பாவியென்று பேசுவார் கடம்முடன்
சரிக்கொணாது தள்ளு மென்று தங்கள் கண் புதைப்பரே.

இ-ள். ஆசிரியர்களையும் தாய்தந்தையரையும் பிராணன்வாங்கிய தீயபாவிகள் முதலானவர்கள் வாசஞ்செய்யுங் கொடிய நரகத்திலே, இவ்வருணாசலத்தை நிந்தித்தவர்களைப்போட்டபோது இவர்களைமுன்னிருக்கும்பாவிகள் மிகவும் வருந்தப்பட்டு சுவாமியை நிந்தித்தபடியினால்நம்மிலும் பாவிகளென்றுசொல்லி நம்மோடிவர்கள்சரியாயிருக்கக்கூடாது தள்ளிவிடுமென்று தங்கள்கண்களைப்பொத்திக் கொள்ளுவார்கள். எ-று. ௪

என்று ரைத்து நானும் வைய மேழுமுண்ட மாலுமா
யன்று மின்று மளவிடாத வருணபூத ரத்தையோர்
குன்ற மென்றி கழ்ந்துசென்று குன்றி மெய் குறைந்துமுன்
கன்று ளொருத்த னென்று கதைவிளம்ப லாயினான்.

இ-ள். பிரமன் இப்படியென்று சனகரிஷிக்குச் சொல்லிப்பின்னுஞ்சொல்லுவார் நானும் ஏழுலகத்தையுமுண்ட விட்டுணுவுஞ்சேர்ந்து அன்றுமுதலின்றுவரையில அளவிடப்படாதமகிமையுள்ள அருணாசலத்தை, ஒருவன், ஒருமலையென்றிகழ்ந்துபோய்க் குன்றுதலடைந்து தேகங்குறைந்து துக்கப்பட்டான், முன்காலத்திலேயென்று அக்கதையைச் சொல்லத்தொடங்கினார். எ-று. ௫

உலாவுகின்ற தே[illegible]யாவு முள்ளில் வைத்திவ் வுலகிலோர்
மலைய தாகி நின் [illegible]ய்வ மலையை மற்ற மலைகள்போல்

அலகு பெற்ற விரவி வெண்ணி யாழி யொன்று வாசியே
மூலகு தோம் மலையி னுச்சி யெல்லைபால் நடத்தினான்.

இ-ள். நான்குதிக்கிலுஞ்சென்று விளங்கும் பிரகாசங்களையெல்லாம் தன் உள்ளத்தில் வைத்துக்கொண்டு இப்பூமியில் ஒப்பற்ற மலையுருவங்கொண்ட தெய்வீகமாகிய அருணாசலத்தை மற்றமலைகள்போல நினைத்து ஒருசக்கரமும் ஏழுகுதிரைகளையும் பூண்டதேரை அவ்வருணாசலத்தி னுச்சிவழியின் எல்லையாகநடத்தினான் சூரியன். எ-று.

முதுகர் தேடி மந்த வெற்றின் முடியின்மேவு மண்ணமே
பதுக்க சோதி யுள்ளி லும்பெ டித்தெ ழுந்து வெம்மையாய்
புகைந்து சொல்ல விரக மேவர் புரமெ னப்பொ ரிந்ததே
யுகைந்த பச்சை வாசி யோவு ளைந்து வாசியானதே.

இ-ள். சூரியன் விட்டுலுவினாற்தேடப் பட்ட அம்மலையின் உச்சியிலேபோவதற்குமுன்னே மிகுந்தபிரகாசமான மலையெடித்து அவ்வுள்ளிடத்திலிருந்து எழுந்து வெப்பங்கொண்டு புகைந்துவரத்தேர்த்திரிபுர மெரித்த பரமசிவன் நகையாகிய நெருப்பிலே பொரிந்ததுபோல பொரிந்துபோய்விட்டது, நடத்தப்பட்ட குதிரைகளோ சிவனில்லாதகுதிரைகளாயின. எ-று. எ

அறுசீர்க்கழிநெடி லாசிரிய விருத்தம்.

குதிரை யுங்க ரிக ளாகிக் கொடிஞ்சித் தலைத்தொராய்ச்
சுதினை யுஞ் சரசா ரகன் காலொன் கிழிந்த பமை
மதியமிர் திருமா னந்த மெல்லாஞ் செய்து ஞானக்
கதிபெறச் செலவோன் கண்டு திரும்பக் கிலைவையுரைத்தான்.

இ-ள். [illegible] விட்டுத்திக் [illegible] குதிரைகளெல்லாம் [illegible] கொடிஞ்சியையுடையதேர்சாரதியாகத்தானிருந்த பாகன் [illegible] சூரியன் [illegible] அந்த மலையை வலஞ்செய்துகொண்டு மேலான [illegible] அப்படி போமென்று நான் பார்த்து அச்சூரியனுக்கு [illegible] சொன்னேன். எ-று. அ

ஐயனே மலைமே லொன்றெண்ணி யசன்றய [illegible] விழ்ந்த
[illegible] யொரு சாதத்துங் கதியிலே புனக்கென்றுந்
செய்யுமோர் தொழிலினாலே தீர்க்கலாக் தெளிவு ளார்க்கு
[illegible]

இ-ள். அருணாசலேசனை ஒருமலையென்று நினைத்து அகங்காரத்தினால் நிந்தித்து கீழ் விழுந்து கிடக்கின்ற ஆயிரங் கிரணங்களையுடைய சூரியனே உனக்கு எவ்வகையிலும் ஒருகாலத்திலுங் கதிகிடைக்காது, அப்படியிருந்தாலும் ஒருதொழிலினாலே கிடைக்கலாம், அது யாதெனில் தெளிவுள்ளவருக்கு மெய்ம்மையாகிய அருணாசலத்தை வலஞ் செய்துகொண்டு வாவென்று சொல்லித் திரும்பினேனென்றான் பிரமன். எ-று. ௯

போதித்த படியேசென்று பொன்மலை வலமாய் முன்னஞ்
சாதித்த வருக்கன் சோணா சலத்தினை வலமாய்வந்தான்
வாதிக்கு மழவிடையின் மழவிடை மீதிற்கோடி
யாதித்த ரெனவே தோன்றி யாதித்தற் கருளிப்போனார்.

இ-ள். பிரமன் அனுக்கிரகஞ்செய்தபடியே மகாமேருகிரியைமுன்னே வலமாக வருகின்ற சூரியன் அருணாசலத்தை வலஞ்செய்துக்கொண்டுவந்தான் அச்சூரியனுக் கெதிரேவாதித்துச் சத்துருக்களைக் கொல்லுகின்ற மழவிடையேறிய பரமசிவன் இளமையாகிய ரிஷபத்திலே கோடி சூரியர்போலத்தோன்றி அனுக்கிரகஞ்செய்து கைலாயத்துக்கு எழுந்தருளினார் எ-று. ௰

பன்னிரு மாதந்தோறும் பரிதிமுற் பக்கத்தாலே
வன்னியின் வடிவதான மலையினை வலமாய்ச்செல்வான்
சென்னியி னெல்லை செல்லா னிடப்புறஞ்செல்வான் றன்றேர்
அந்நிலை வரும்போதேத்தி யகலச்செலுத்துமென்றான்.

இ-ள். சித்திரைமுதல் பங்குனியீறாகச்சொல்லப்பட்ட பன்னிரண்டு மாதமும் சூரியன் முன்னே காக்குன்றான பக்கத்தினாலே அக்கினிவடிவமாகிய மலையைவலஞ்செய்துக்கொண்டு போவான், அம்மலையுச்சியின்மேலும் போகான், இடப்புறமாகவும் போகான், அம்மலைக்குச்சமீபத்தில் வரும்போது தோத்திரஞ்செய்து புஷ்பமாரி பொழிந்துச்செல்வானென்று சொன்னான் பிரமன். எ-று. ௰௧

(பத்தாவது)

ஆதித்தச் சருக்கம்

முற்றிற்று.

---

ஆக-திருவிருத்தம்-௩௱௯௰௭.



௨

சிவமயம்.

# பதினொன்றாவது

# பிரதத்தராஜன் சருக்கம்.

எழுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

அருணைவாழிறைவன் றிரவியமணுமட் டாயினுங்கரந்தபேருடனே, மரணமாய்நமனாட்டழலிலேகுளிப்பவர் வச்சிரவுலக்கையான்மலிவ, ரிருணிறைநரகமிருபத்தெண்கோடியிடத்தினு மடைவிலேயிருப்பார் தரணியிற்புழுவாய்ப்பிறப்பர்களளவு தனக்கிலையிந்தவருமத்தகையர்.

இ-ள். அருணாசலேசரது திரவியத்தில் அணுவளவேனுந் திருடினவர்கள் உடனே மரணமடைந்து எமலோகத்திற்குப்போய் அக்கினிக்குழியிலேவிழுந்து அவஸ்தைப்படுவார்கள் வச்சிரத்தினாற்செய்த உலக்கையால் அடிபடுவார்கள் இருள்நிறைந்த இருபத்தெட்டுகோடி நரகங்களிலும் அடைவாக விழுந்து கிடப்பார்கள். மறுபடியும் பூமியிலே வந்து புழுவாகப்பிறப்பார்கள் அத்திருட்டுக்குடன்பட்டிருந்தவர்கள் அப்படிப்பட்ட துன்பத்தை யடைவார்கள். எ-று. க

ஓங்கியசரைபுளிசைத்தபொன்னெனதிரேயுற்றபேருடலையுமொறுக்குச், தேங்கியகருணைபருணாயகர்பொற் செய்கையைப்படியினிற்காந்து, வாங்கியபரைக்கிளையுடன்சிதைத்து மலைபினுங்கடலினுமொளித்து, நீங்கியபொழுதுந் தொடர்ந்திடும் விடுமோ நிழலெனத்தொடருமன்னிலத்தும்.

இ-ள். நிருடிப்பூமியினுள் ஒளித்து வைக்கப்பட்டபொன் அவ்விடத்தின்மேல் வந்தவருடைய தேகத்தையுங் கண்டிக்கும் அப்படிச் செய்வதிருக்க திருடினவருடைய அருணைசலேசருடைய திரவியக்



தின் செய்தியாம் அப்பூமியில் ஒளித்துவைத்து எடுத்துக்கொண்டவு ரையோவென்றல் அவர்களுறவோடுகெடுக்கும், மலையிலுங் கடலிலு மொளித்துக்கொண்டபொழுதுந்தொடர்ந்துவருத்துந்விடமாட்டா து, எவ்விடத்திற் போனாலும் நிழலைப்போலத்தொடரும். எ-று. ௨

கடிக்கலாஞ் சிலையைவிழுங்கலா நெருப்பைக் கடுவிடங்குழைத்
திறைத் தெடுத்துக், குடிக்கலாமிரும்பையருந்தலாங்கடும்பாற்கொள்
ளலா,மருந்தினகுணத்தால முடிக்கலாம்பகையையருணைநாயகர்பொ
ன் விழுங்கினல் மிடற்றியேபிடிக்கும், உடற்குளேகனலும்புகையுமவ்
வளவோ வுயிரையுமுளத்தையு மொருக்கும்,

இ-ள். பின்னும்பிரமன்சொல்லுவான்கல்லைக்கடிக்கலாம், நெருப்பையெடுத் துவிழுங்கிவிடலாம், விஷத்தோடுகொல்லும்படியானவஸ்துகளைச் சேர்த்துக்குழைத்தெடுத்துச்சாப்பிடலாம், இரும்பைபுசிக்கலாம், கள்ளிப்பால்முதலியவற்றையுங்குடிக்கலாம், இவைகள் உபத்திரவஞ்செய்யவொட்டாமல நல்லமருந்துகளாலே நிவர்த்திபண்ணிக்கொள்ளலாம், அருணாசலேசர் திரவியத்தைச்சாப்பிட்டவுனே தொண்டையைப்பிடித்துக்கொள்ளும், தேகத்துக்குள்ளேநெருப்பாககனுற்றும், புகையுண்டாகும் அவ்வளவுதானா செய்யுமோவென்றால்அவர்களுயிரைக்கொன்று உள்ளத்தையுங்கெடுக்கும். எ-று. ௩

முக்கண்ணன்பொருளைக் கவர்ந்தபேரிருக்க முயன்றபேர்நினைத்த
பேர்முதலா, யக்கணத்தழிவ ரவர்களுமிருக்க வடிவவாபொருள்கவர்
ந்தவர்க்கது, தகாத தனத்தால் கெடுவரென்றுரைத்துசத்தியம்பலபல
சாற்றி, மெய்ந்நயக்குக வொளிவிடு மணிப்பூண் திசைமுகனொருக
தைசெப்பும்.

இ-ள். அயன் முக்கண்ணனுடைய அருணாசலேசரதுதிரவியத்தைத் திருடினவர்களையன்றித்தப்பிப்பட்டது, அது இருக்கட்டும் அப்பொருளைத் திருடுகிறதற்குப்பிரயாசைசெய்தவர்களை நினைத்தவர்கள் இவர்களெல்லாரும் கணத்திலேயழிவார்கள் அவர்களிருக்கட்டும்சிவபக்தர்களுடைய பொருளைத்திருடினவர்களைத் துன்பப்படுத்தநினைத்தபேர்களுங்கெடுவார்களென்று பலசத்தியந்தோடுஞ் சொல்லிச் செவ்வானமுங் கருகும்படி யொளிவிடுகின்ற இரத்தினாபரணங்களைத்தரித்தபிரமன் ஒருகதைசொல்லத்தொடங்கினன். எ-று. ௪

முன்னமேயொருநாள் வடதிசைக் கிறைவன் முழுமணிக் கங்
கைநீர்த் துறைவன், இங்கிலத் திழந்த விரதிரனையா ருண்பதை

முருகவேணிகர்வான், அன்னவா நிறைந்த மகுடகோடிகளின் வயிர நாயகங்களாற்றேய்த்த, பொன்னவிர்கழலான் றருமமுங்கழலான்புக ழ்ப்பெயர்பிரதத்தனென்பான்,

இ-ள். பிரமன்சொல்லுவான், முற்காலத்திலே ஒருநாள்வடதேச த்துக்கு அரசனாயிருக்கின்றவன், விலையுயர்ந்தமுத்துகளுக் கிருப்பிட மாகியகங்காநதித்துறையையுடையவன், தேவலோகத்தில்நின்று பூமி யிலிறங்கியதேவேந்திரன்போன்றவன், ஆண்மைக்குணத்தில்சுப்பிரம ண்ணியருக்குச்சமானமானவன் அரசர்கள்பணியும்போது அவர்களா லே நிரைநிரையாகத் தாழ்க்தப்பட்ட கிரீடகோடிகளில் இழைக்கப்ப ட்டவீரகண்டையைத்தரித்தவன். தருமமென்பதைஇடைவிடாதுசெ ய்கிறவன் கீர்த்திபொருந்திய பிரதத்தனென்னும் பெயரையுடையவ ன். எ-று. ௫

காலநேர்விழியார்முகமெனவிளங்கிக்களங்குடைத்தொழுக்கியம திபோல், நீலமாணிக்கம்பிசைந்தவெண்கவிகை நெடுநிலப்பரப்பெலா நிகழ்த்துற. சாலவேபணியா வரசர்களிவன்போறசரணமேபடிந்துயி ர்பெருமென், லேறவே யழைக்குந் தருமதேவதைபோ லிரண்டுசாம ரைகளார்த்திடவே,

இ-ள். எமன்போலக் கொடுமைசெய்கிற கண்களையுடையபெண் கள்முகம்போல விளங்கிக் களங்கத்தையுடைத்து ஒழுகவிட்டசந்திர ன்போல நீலரத்தினமிழைத்திருக்கின்ற காமணையுடையவெள்ளைக்கு டைநீண்ட சந்திரிகையைப பூமியின்பரப்பெல்லாமநிகழ்த்தவுமரிகுந் தமரியாதையோடு பணியாதபகையரசரைப்பார்த்து இந்திரனுடைய அழகியபாதங்களை வணங்கி உங்களுயிரை இறக்காமல்பெறுக்கொள ளுங்களென்று பொருந்த அழைக்குந்தருமதேவதையைப்போல இர ண்டுசாமரங்களவீசும. எ-று. ௬

வருணமண்டலத்திரைவிபோர்கிடந்த மரகதக்குரகதம்வயங்க, அருணமண்டலத்தை யாவியங்கொடிகள் தடவிகவிடுவியையடை ப்பக் கிரணசிந்தூரத் துபாபுகாமுகமருப்பிற கிமபுரிகரித்திசைகளரத தரணிபர்நடுங்க மாதிரிகணத்தோடெருந்தனன்றண்டையத்திரையே.

இ-ள். வருணமண்டலத்தில்விளங்கும்குதிரைகள்போல் உயர்வா கியமரகதநிறத்தையுடைய குதிரைகள்பிரகாசிக்கவும்சூரியமண்டலத் தை யளாவிய கொடிகள் கட்டியதேர்க்காடுகள் பூமியையடைக்கவும்

கிரணம் பொருந்திய சிந்தூரம் தீட்டிய புள்ளிகளையுடைய முகத்தையும், பூண்கட்டிய தந்தங்களையுடைய யானைகள் திசைகள்தோறும் பிரகாசிக்கவும் படைமன்னர் பயப்பட மந்திரிகூட்டத்தோடுஞ் சேனைகளோடும் யாத்திரையாகப் பிரயாணப்பட்டான் பிரதத்தராசன். எ-று.

எ

அங்கற்புற்றேறயவனவெற்படைய வவந்தியர்வில்லினுண் கௌவச், சங்கிலித்தொடக்காய் மற்றமண்டலீகர் தம்மிறைதாங்கவே சுமக்க சிங்கவேறெனவேசோழ நாடணைவான் றிருநதிகடந்து தென்னருணைக் கங்கைவார்சடையான்கோயிலிற் புகுந்தனன் கங்கையுங் காசியும் புரப்பான்.

இ-ள். இப்பிரதத்தராசன் பிரயாணப்பட்டபோது அந்ததேசத்தரசர்பயந்து புற்றிலேறிக்கொள்ளவும், யவனதேசத்து அரசர்கள் மலையிலொளித்துக்கொள்ளவும், அவந்திதேசத்தரசர் வில்லிலிருக்கிற நாணியைக் கௌவிக்கொள்ளவும், மற்றதேசத்து அரசர்கள் சங்கிலிபோலத் தொடர்ந்துநின்று தாங்கள் கட்டவேண்டிய கப்பங்களைத் தாங்களே சுமந்துவரவும், ஆண்சிங்கம்போலச் சோழநாட்டுக்குப் போகும்படி புறப்பட்டுக் காவிரி நதியைத்தாண்டி அழகிய அருணாசலத்துக்கு வந்து கங்கையைத்தரித்த சடையையுடைய பரமசிவன் கோயிலிற் புகுந்தான் கங்காநதியையும் காசிதேசத்தையும் ஆளுகிற பிரதத்தராஜன் எ-று.

அ

அரும்பவிழ் மலர்கொண் டருச்சனை புரிய வருணைநாயகர்திருக்கோயில், விரும்பிப்புகுந்து பசுவிபுமவ்விடத்தில் விடத்திலுங் கொடிய கூர்விழியாள், இரும்பையுருக்கு மிசையினளொருத்தி யிலங்கிழையருடனிறைபால், கரும்பெனுமொழியார் பாடுதல் கேட்டான் கண்டனன் வளைத்தவேள் கரும்பை.

இ-ள். காசிதேசத்து அரசனாகிய பிரதத்தன் அரும்புகள் மலர்ந்த புட்பங்களைக்கொண்டு அருச்சனை பண்ணுகிறதற்காக அருணாசலேசர் வீற்றிருக்கும், திருக்கோயிலுள் பத்தியோடு போய்வந்தனஞ் செய்யும்போது அவ்விடத்திலும் விஷத்திலுங் கொடுமைசெய்கின்ற கூரியகண்களையுடையவள் இரும்பும் உருகும்படிசெய்யும் சங்கீதவித்தையையுடையவளாகிய ஒருதாசிபெண் பிரகாசிக்கின்ற ஆபரணங்களைத் தரித்த சிலபெண்களோடு நின்று சுவைநிறைந்த பாலும்கரும்பினிரசமும்போன்ற மொழியினாலே பாடுவதைக்கேட்டான் அக்கணத்தில்தானே மன்மதன் வளைத்தகரும்பு வில்லையுங்கண்டான் காமவிகாரங்கொண்ட பிரதத்தராசன் எ-று.

அன்னமோகினியோ வமிர்தவேர்திருவோ வமிர்தமோவமரருக்களித்த, வன்னமோகினியோ விரதியோபிரன் மனத்தினால் வகுத்த மேனகையோ, என்னமோ கமதாய்தன துநாட்டினிற்கொண்டேகுவ னினைந்தன னதற்கு, முன்னமே குரங்குமுகமதா யிருந்தான் முறுவலாயினதெவர் முகமும்.

இ-ள். காசிதேசத்துப் பிரதத்தராசன் அத்தாசிப்பெண்ணைப்பார்த்துச் சொல்லுவான் இவள் அன்னமோ, கிளியோ, தேவாமிர்தமோ இலட்சுமியோ, அசுரரைக்கொன்று அமுர்தத்தை முன்காலத்திலே தேவருக்குக்கொடுத்த அழகாகிய மோகினியோ, இரதிதேவியோ, பிரமன் மனத்தினால் சிருட்டித்த மேனகையோ என்றுநினைத்துமோகத்தோடு தன்னுடைய தேசத்துக்கு அப்பெண்ணைக்கொண்டு போவதற்கு நினைத்தான். அந்தநினைப்பு உண்டாகுமுன்னமே தானே குரங்குமுகத்தையுடையவனா யிருந்தான். அதைக்கண்டு எல்லாரும்நகைத்தார்கள் எ-று. ௧௦

மந்திரிக்கிழவராசனைவினவி மன்னவன்நினைத்தவாறதனால் வந்த வித்துயரந் தவிர்ந்திடமலைமேன் மருந்திடப்பணிகவெனவவனுஞ்சிந்துரக்குவடுங் ககனவாம்பரியுஞ் செழுமணிச்சிவிகையுந்தேரும் சந்தனமணியுந் தனத்திறற்பலருந் தமனியக் கோயின்முன் விடுத்தான்.

இ-ள். மந்திரிமார்கள் பிரதத்த ராசனைப்பார்த்து குரங்குமுகம் வந்ததற்கு காரணங்கேட்டறிந்து கொண்டு அரசனே நீமையாகிய உமதுநினைப்பினால் அடைந்த இத்துன்பம் நீங்கும்படி மலைமேல்மருந்தாகிய அருணசலேசரை வணங்கென்றுசொல்ல, அவ்வரசனும்மலையையொத்த யானைகளையும், வேகமாய்த்தாவுகின்ற குதிரைகளையும், நல்ல இரத்தினங்களா லிழைக்கப்பட்டிருக்கும் சிவிகைகளையும், தேர்களையும் சந்தனகுழம்பைப் பூசுகின்ற ஸ்தனங்களையுடையபெண்களையும் பொற்பிரகாசம் பொருந்திய அக்கோயிலுக்கு முன்காணிக்கையாகக் கொடுத்துவிட்டான் எ-று. ௧௧

பன்னருமந்தப் பூசனைபுரிந்தான் பரதனுமவற்கருள்புரிந்தான் இன்னரமொழியாள் விருப்பினை லடைந்த கிலேசவானரமுகமொழிந்தான், நன்னயமுகம்பெற்றியையுநடனைந்தா னதலாலரன்பொருளவா, உன்னியபாவம் பதின்மடங்கரும்பொன் னுதவினுற்றனிருமென்றுரைத்தான்.

இ-ள். பிரதத்தராசன் சுவாமிக்கு சொல்லுதற்கரிய அனந்தம்அருமையான பூசைகள்செய்ய அப்பொழுது சுவாமியும்அவ்வரசனுக்குக்கிருபைசெய்தார் வீணையினிசைபோலும் வார்த்தையுடைய பெண்மேற்கொண்ட ஆசையினாலடைந்த துன்பம்பொருந்தியகுரங்கு முகத்தையொழித்தான், நல்லமானிடமுகத்தையடைந்து அவ்வரசன்தன்னுடைய நாட்டுக்குப்போய்ச் சேர்ந்தான்ஆசையாலே அருணாசலேசருடையபொருளைத்திருடநினைத்ததனாலுண்டாகியபாவம்அப்பொருளுக்கும் பதின்மடங்கு திரவியங்கொடுத்தால் நீங்குமென்று சொன்னான் பிரமன். எ-று. கஉ

அறுசீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்.

மாதவனேயருணகிரிவளமிதுசா னைத்திருவாய்மலர்ந்தானந்தப்,போதனையங்கடி பணிந்தான் போதனையான்மகிழ்ந்தனமிப்புவியின்மீதே, கோதமுடனறிந்துசெய்தபாவந்தவிருங்கதையினையுங் கூறுகென்றான்,மூதறிவாயின்னுமுகத்தினுமாயிரமுகமாய் மொழியலுற்றான்.

இ-ள். மகத்தாகியதவத்தையுடைய சனகரிஷியே அருணாசலத்தினதுவளம் இதுதானென்று சொன்னான் அப்பிரமனை அவ்விடத்தில் சனகரிஷி வந்தனஞ்செய்து உம்முடைய போதனையினாலே ஆனந்தமடைந்தேன்இவ்வுலகத்தில்குற்றமாக அறிந்துசெய்தபாவம்நீங்கும்படியானகதையையும்அருள்செய்ய வேண்டுமெனப் பேரறிவுகொண்ட பிரமன், தம்முடையவாய்நான்கும் ஆயிரம்வாயாகச், சொல்லத்தொடங்கினான். எ-று. கங


பதினொன்றாவது,

## பிரதத்தராசன் சருக்கம்.

முற்றிற்று.

---

ஆக திருவிருத்தம்-சு0அ.



உ

சிவமயம்.

பன்னிரண்டாவது.

# பாவந்தீர்த்த சருக்கம்.

கலிவிருத்தம்.


வாக்கினால்வடிவினால் மனத்தினால்பவந்
தாக்கினாரருணைமா சயிலநோக்கினா
னீக்கினாரென்பது நிகழ்த்தினான்மறை
நாக்கினான்சிலகதை செப்பலாயினான்.

இ-ள். வாக்கினாலும் தேகத்தினாலும் மனத்தினாலும் துர்விஷயங்களைச்சொல்லியும், செய்தும், நினைத்தும், பாவத்தையடைந்தவர்கள் திருவண்ணாமலையைத் தரிசனஞ்செய்தால் அப்பொழுதேதங்கள்பாவத்தைநீக்குவார்களென்றுசொல்லி நான்குவேதங்களையுந்தன்னிடத்திலுடையபிரமன் சிலகதையைச் சொல்லத்தொடங்கினான். எ-று.

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

எம்பெரியசபையிடத்தி லிருநான்கு வசுக்களும்வந் திருந்தார்முன்னே, தம்பெரிய தவத்தினையும் புகழினையும் வியந்துரைத்த வகைமைநோக்கிக், கும்பமுனிமுதலானோ ரிடையிலுமைவியந்துரைத்த கொடுமையாலே, அம்புவியிலிழைத்த தவமனைத்தினையு மவமாக்கி யகற்றுமென்றேன்.

இ-ள். என்னுடைய பெரியசபையினிடத்தில் அஷ்டவசுக்களும் முன்னொரு காலத்தில் வந்திருந்தார்கள், அப்போது அவர்கள் தங்களுடைய தவத்தின் பெருமையும், அதனால் வந்த கீர்த்தியையும்



கொண்டாடிச் சந்தோஷித்தார்கள். அதைப்பார்த்து அகஸ்தியர்முதலானரிஷிகள் மத்தியிலே உங்களை நீங்களே புகழ்ந்து சொல்லிய கர்வத்தினால் அக்குற்றம் பூமியிற்செய்ததவமெல்லாம அவமாகச்செய்துவிடுமென்று சொன்னேன். எ-று. ௨

உற்றபெருந் தவத்தினையுந் தமதறத்தினலத்தினையு முறைதந்தமேரு, மற்றொருவர் தமையிகழ்ந்த வருந்துயரக்கடன்மூழ்கி மறிவரென்றேன், சிற்றறிவாகியவசுக்களனைவருமேங்கியது தீர்ந்தகாலமெனச்சொற்றருளுகெனவுரைத்தாரரனருளாற் றிருமுங்கடியர்தாமனைவரே.

இ-ள். பெருமைவாய்ந்ததம்முடைய தவத்தையும் செய்ததருமத்தையும் சொன்னவர்களும் மற்றொருவரையிகழ்ந்து பேசினவர்களும் துக்கசமுத்திரத்தில் முழுகிமறிபட்டுக் கிடப்பார்களென்றேன் சிற்றறிவுடைய அஷ்டவசுக்களும் அவ்வார்த்தையைக்கேட்டுநடுங்கி இச்சாபமென்னகாலத்தில்நீங்கும் அருள்செய்யவேண்டுமென்றுகேட்டார்கள் பரமசிவன் கிருபை உங்களுக்கு என்றைக்குக்கிடைக்குமோ அன்றைக்குத்தீருமென்றேன். எ-று. ௩

சொல்லுதலும் வசுக்களெலாமெனையகன்று நெடுங்கங்கைத்துறையிலேகி, எல்லையிலா நெடுங்காலமிறையைநினைத் தரியதவமியற்றினார்கள், வல்லிபங்க னொருநாளின் மறவிடைமேலடைந்து தவம் வரமேதென்றான், அல்லிமலரவனளித்த கொடுஞ்சாபக் கடலிலெடுத் தருளுமென்றார்.

இ-ள். அப்படிசொன்னவுடன் வசுக்களெல்லாரும் என்சபையைவிட்டு நெடுந்தூரஞ்செல்லுகின்ற கங்காநதியின் துறையிற்போய் அளவில்லாக்காலம பரமசிவனை நினைத்து அரிதாகியதவத்தைச்செய்தார்கள் பார்வதியை வாமபாகத்தில் வைத்துக்கொண்ட அருளாளி ஒருநாள் இளமையயான ரிஷபவாகனத்திலேறிவந்து நாமுங்களுக்குக்கொடுக்கவேண்டிய வரமென்னவென்றுகேட்டருளச்செய்தார் அவ்வசுக்கள் இதழினையுடையதாமரைமலரிலிருக்கின்றபிரமன்கொடுத்த கொடிய சாபமாகிய கடலினின்றுமெங்களையெடுத்தருளவேண்டுமென்றார். எ-று. ௪

கருணைமுகின் முகமலர்ந்து வசுக்களுமதுபவங் கடக்கவேண்டில், தரணியிலேயொருகரந தலேசாரமென்பிலங்குமந்தத் தலத்தின்மீதே, அருணகிரியெனுமலையாயிருக்குமந்தப்பதியணுகி யசலஞ்சேர்ந்த, வருணதிசைதொடங்கியெட்டுத் திசைகளினிருந்தவமியற்றுமென்றார்.

இ-ள். கிருபாவருஷம் பொழிகின்ற மேகமாகியபரமசிவன்திருமுகமலர்ந்து அந்தவசுக்களைப்பார்த்து உங்களுடைய பாவத்தைநீங்கள் கடக்கவேண்டினல், பூமியில் தலைச்சுரமென்று ஒருதிவ்யதலம்விளங்குகின்றது அத்தலத்தில் அருணாசலமென்றொருமலையுண்டு அத்தலத்தையடைந்து அம்மலையைச்சூழ்ந்தகிழக்குத்திக்குதொடங்கிஎட்டுத்திக்குகளிலுமிருந்து தவம்செய்யுங்களென்றருளிச்செய்தார். எ-று.

அன்னவயலருணையிற் சீரரியதவமியற்றிடுமவ்வளவேயுங்கள், முன்னரயிற்கிரியுமெட்டுமுகமாகவிளங்கிட்டமூர்த்தியாகு, மன்னமுங்களரும்பவமுந் தவிருமெனவுரைத்துவெள்ளிமலையிற்சேர்ந்தான், தன்னையடைந்தவர்களெலாந் தனைப்போலவிருக்கவரந்தருகுவானே.

இ-ள். அன்னப்பறவைகள் தங்கியவயல்சூழ்ந்த அருணாசலத்தலத்திற்குப்போய்நீங்கள் அரியதவத்தைச்செய்யுங்கள், அப்படிச்செய்தவளவிலேஅக்கினிசொரூபமாய்விளங்கியஒப்பற்றஅம்மலைஉங்களுக்குமுன்காட்சிகொடுக்கும்அப்போது நிலைபெற்றஉங்களுடையபாவமும்நீங்குமென்று திருவாய்மலர்ந்துகைலாயத்திற்கெழுந்தருளினர் தம்மிடத்திலடைந்தவர்கள்எல்லாரையுந்தம்மைப்போல் உருவத்தையடைந்திருக்க வரமருளிச்செய்யும் பரமசிவன். எ-று. சு

முந்தவசுரரையுமவர் புத்திரனையு மெரித்தபிரான் மொழிந்தவாறே, அந்தவசுவனைவருஞ்சென்றருணையிலேயரியதவமியற்றினர்க, ளிந்தவசுமதிதழைக்க வழற்கிரியெட்டுருவாகியிருந்ததங்கே, தந்தவசுநிலைபுகழ்ந்த கொடுஞ்சாபக்கிரிகளெல்லாந் தள்ளினர்கள்.

இ-ள். முன்பு அசுரர்களையும் அவர்கள் வாசஞ்செய்துக்கொண்டிருந்த திரிபுரங்களையும், நகைத்தெரித்தசுவாமி அருளிச்செய்தபிரகாரமே இவ்வெட்டு வசுக்களும்போய் அருணாசலத்தில் அருமையான தவம்செய்தார்கள் இப்பூமிதழைக்கும்படிஅக்கினிமலைஎட்டுமுகமாய்விளங்கியிருந்தது முன்னேதங்களுடைய தவத்தைப்புகழ்ந்துசொல்லியதனுல்வந்த கொடியசாபமென்று சொல்லப்பட்ட மலையைத்தாண்டிவிட்டார்கள் அவ்விடத்தில். எ-று. எ

பூதலஞ்சூழ் திசைகளெலாமிருந்தட்ட மூர்த்திகளைப் பூசித்தார்க, ளாதலினுற்பழயபவி தமதுபதவிகளையடைந்தருள்பெற்றூர்க, ளோதமறும்படிக்கரிய மறைபயனெட்டுருவாகியிருந்தபோதுஞ், சீதரனும்பதங்கிரமத்துடனறியான் முடியெனக்குத்தெரிந்திடின்றே.

இ-ள். அம்மலையைச்சூழ்ந்த யெட்டுத்திக்குகளிலுமிருந்து வசுக்கள் அஷ்டமூர்த்திமாகியசுவாமியைப்பூசித்தபடியினுலே பழயபடியே தம் பதவிகளைப்பெற்றுக்கொண்டு சுவாமிகிருபையும் பெற்றூர்கள் குற்றம் நீங்கும்படி அருமையான வேதப்பொருளாகிய அச்சுவாமியே அறியாமறபோனு எனக்கும் முடிதெரியவில்லை. எ-று. அ

சண்முகனை யளித்தவைந்து முகத்தவனெண்வசுக்கள் செயுந்தவத்தினாலே, எண்முகமா யிருந்ததுகண்டொருமுகமாயிழையலர்வாழ்த்தெடுத்தாரென்று, தண்முகனென் றுடையபிரான் சனகமுனிக்குரைத்தருளச்சயிலத்தூடே, பண்முகயா ழனையமொழித் திலோத்தமைசேர் கதையினுமே பகரலுற்றான்.

இ-ள். சுப்பிரமணியரைப்பெற்ற பரமசிவன் அட்டு வசுக்களுஞ்செய்த தபோபலத்தினாலே எட்டுமுகமா யிருந்ததைப்பார்த்துத் தேவரீர்கருணைபொருந்திய நான்குமுகங்களை யுடையபிரமன்சனகரிஷிக்குச்சொல்லி அருள்புரிகின்ற அத்திருமலையில் யாழின்இசைபோன்ற சொல்லையுடைய திலோர்த்தமை கதையையும் சொல்லத்தொடங்கினான். எ-று. ௬

கலிவிருத்தம்.

தேவர்கோன்முன்னமென்னிடத்திற்சேர்ந்துதன்
பாவம்தீரப்பெரும்பதவிவேண்டியே
யாவருமருந்தவமியற்றினாரதற்
காவதுசெய்யென்றுரைந்துபோயினான்.

இ-ள். பிரமன்சொல்லுவான் இந்திரன்முன்னே என்னிடத்தில் வந்து தன்னுடைய பரிசுத்தமான பதவியைச் சிந்தித்தெல்லாரு மருமையான தவத்தைச்செய்கிறார்கள அத்தவம் நிறைவேறுதபடி ஏதாவது ஒருவிக்கினம்செய்யவேண்டுமென்று சொல்லிவிட்டுப்போனான்.

இந்திரன்போனபின்னியக்கமங்கையை
யந்தரமங்கையராவநாட்டவர்
சுந்தரக்கடற்புவித்தோகைமாந்தரை
சுந்தரமுலைச்சியரழகுவாரியே.

இ-ள். இந்திரன்போனபிறகு இயக்கலோகத்து பெண்கள் தேவலோகத்துப்பெண்கள் நாகலோகத்துப்பெண்கள் அழகமைந்த கடல்சூழ்ந்த பூலோகத்திலுள்ள பெண்கள் மந்தரகிரிபோன்ற முலைகளையுடையவரையரமகளிர்இவர்களுடையஅழகுஎடுத்துக்கொண்டு எ-று.

குத்தமின்றிதிலோர்த்தமையெனும்வஞ்சியை
யுருத்தனன்வலிநன்மதியையோட்டினன்
மிகுத்ததோர்விஞ்சையிற்புலிபின்வேட்டுவ
னகத்துடலழித்துட லளிப்பதென்னவே.

இ-ள். குளவிதன்னிடத்திலுள்ள ஒருசாமர்த்திய விசேடத்தினாலேபுழுவின் உடலைக்கெடுத்ததற்கு வேறொரு தேகத்தைக் கொடுப்பதுபோலத் திலோர்த்தமையென்னும்பெண்ணை உண்டாக்கினேன் அப்பொழுதே அவள்மேற்கொண்ட ஆசையால்என்னுடைய வல்லமை

பையிழந்தேன் ஞானத்திற் செல்லுகின்ற என்னுடைய புத்தியையுந் தூரத்திவிட்டேன். எ-று.
௧௨

மன்மதன்கணையினான் மயங்கிடுவாளெய்யன்
றன்மையையறிந்துநான் தனக்குத்தாதையென்
றென்மனம்பொருந்திலா தெனதுகையுறான்
முன்பினின்றொளிக்கான் முகமுந்தேடினேன்.

இ-ள் மன்மதனுடைய பாணத்தினாலே மயக்கமடைந்துவாடுகின்ற என்னுடைய மயல்லையறிந்து நான்தனக்குத் தந்தையென்று என்கருத்துக்கு ஒவ்வாதவனாகியும், நான்பிடிக்கும்போதுஎன்கைக்ககப்படாதவனாகியும், எனக்கு முன்னின்றும் ஓரிடத்தில் தானறியாதபடி ஒளித்துக்கொள்ள நான்குபக்கங்களிலும அவனைத் தேடினேன். எ-று.
௧௩

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

கன்னிமானாகச்சென்றாள் கலையதாய்த் தொடர்ந்தேன்பேட்டு,வன்னியாய் பறந்தாள்சேவல் வடிவமாய்த் தொடர்ந்தேன்மங்கை பின்னையோர் கதியுங்காணாள் பிறங்கலாமருணைநாதன், றன்னையேதூரக்கண்டாள் சரணமென்றுரைத்துச்சார்ந்தாள்.

இ-ள். அப்படிநான்தேடி அவளைக்கண்டுபிடிக்கும்போது பிடிப்பதற்குமுன்னே பெண்மானாகி ஓடினாள் நான்கலைமானாகத் தொடர்ந்தேன் அதன்பின் பெண்கிளியாய்ப்பறந்தாள், நான் ஆண்கிளியாய்ப்பறந்து தொடர்ந்தேன் அததிலோர்த்தமை பிறகுஎன்கையி லகப்படாமலிருக்கிறதற்கு வேறொருகதியுங் காணாமல் வருந்தும்போது மலையுருவாகிய அருணாசலேசரைச் சிறிதுதூரத்திற்கண்டு நீரேதஞ்சமென்று சொல்லி அடைந்தாள். எ-று.
௧௪

மாயமால்விடையின்பாகர் வடிவிலாவிடையின்பாகர்
காயழலானமெய்யர் கானகத்தாடுமையர்
ஆயுமாரணத்தின்சோதி யடைக்கலமென்றாளையன்
சேயிளமழலைப்போலத் திருச்செவிசாற்றினாளே.

இ-ள். மாயஞ்செய்கின்ற விஷ்ணுவாகிய ரிஷபத்தின்மேல் வருகின்றவரே தோற்றாத இடையினையுடையபார்வதியைப் பாகத்தில்வைத்துக்கொண்டிருப்பவரே தகிக்கும் அக்கினிவடிவமானவரே திருவாலங்காட்டினிடத்தில் நடனஞ்செய்த சுவாமியே ஆராய்ந்து தேடுகிற வேதத்தையுடைய சோதியே நானடைக்கல மென்று சகலரையும் ஆளுகின்ற பரமசிவன் திருச்செவியிற் சொல்லும்படி குழந்தையினிளமையாகிய குதலைசொல்லைப்போலச்சொன்னாள். எ-று. ௧௫

முருகலர்குழலினாடன் முறையிடுமுறைக்கென்னையன்
திருவுருவனைத்துந்தூய செவிகளாயிருந்தபோது.

விரைவின்மால்வரையைக்கீறி வேட்டுவனாகினானு
சுந்திபுனைமகிபாகத் தோன்றினன்றேகைபாகன்

இ-ள். வாரணையமைந்த புட்பமாலையை யணிந்த கூந்தலையுடைய திலோர்த்தமை முறையிட்டதனுக்கு என்சுவாமி அழகியஉருவமெல்லாம்செவிகளானபிருந்தன அதனாலச்சக்கிரத்தில் மலையைக்கீறி அகினின்றும் தாம்வேடவடிவமாகவும், பார்வதி வேடிச்சிவடிவமாகவும் நாலுவேதங்களும்நாய்களாகவும் தோன்றினார்பார்வதியை இடதுபாகத்தில்வைத்துக்கொண்ட பரமசிவனார். எ-று. ௧௬

சூடகச்செங்கைபாகன் சிலையொடுதோன்றும்போதில்
வாடியமருங்குலாண்மேல் மயக்கமும்வருத்தந்தீர்ந்தே
நாடியபெருமானம்மை முனியுமென்றஞ்சித்தாழ்ந்தேன்
வேடனைப்பறவைகண்டால் வெருவுமோவெருவுறாதோ

இ-ள். வலைபலையணிந்த கையையுடையபார்வதியை ஒருபக்கத்தில்வைத்துக்கொண்டிருக்கிற பரமசிவன் வேடனாகி வில்லைக்கையிலேந்திக்கொண்டு தோன்றியபோது, முனனேநடனஞ்செய்த சுவாமிஎன்னைக் கோபித்துக்கொள்வாரென்று பயந்து வளைகின்ற இடுப்பினையுடைய திலோர்த்தமைமேலுண்டாகிய மையலையும் அதனாலுண்டாகியவருத்தத்தையுந்தீர்ந்து அச்சுவாமியை வணங்கினேன் வேடனைப்பறவைகண்டால் பயப்படுமோ பயப்படாதோ. எ-று. ௧௭

வெற்பெனுமுலையாடன்னை விதித்துநீவிரும்புந்தீமை
கற்பகோடியினுந்தீரா தாயினுங்கருணையாமித்
தற்பரமலைகண்டாயே யாதலாற்றவித்தோம்போவென்
றற்புதனமொழிந்துமீளப் புகுந்தனனருணைவெற்பில்

இ-ள். மலைக்குநிகராகிய தனத்தையுடையதிலோர்தமையைப் படைத்து நீதியேவிரும்புதலாலுண்டாகிய பாவம் கற்பகோடிகாலத்திலுந்தீரமாட்டாது, ஆனாலும் அருளுருவமாகியும் தாமேபரமாகியும் உள்ள இம்மலையைதரிசித்தாயாதலால், அப்படிபபட்டபாவம் தீர்த்துவிட்டோம் உன்னிடத்திற்குப்போவென்று திருவாய்மலர்ந்து அம்மலைக்குள் சுவாமிமறைந்துவிட்டார். எ-று. ௧௮

கலிவிருத்தம்.

தன்னையறியாமல்வினை சாருமுடற்றானுந்
தென்னருணைசேரிலது தீருவதுதிண்ண
மின்னல்வினையற்றதனி லெண்ணியதுபெற்றார்
முன்னமுளரென்றயன் முனிக்குமொழிகின்றான்.

இ-ள். ஒருவனுக்கு புத்திபூருவமாக வந்தபாவம்அவன் அழகுபொருந்திய அருணாசலத்தையடைந்தால்தீரும்அதுநிச்சயமே முற்காலத்திலும் அநேகர்தங்களுடைய வினையைநீக்கி அத்தலத்தில் நாங்கள்நினைத்தவரம் பெற்றுக்கொண்டார்களென்று பிரமன்சனகரிஷிக்குஒருகதைசொல்லுகின்றான். எ-று. ௧௯

கற்பமுடிவாகு மிருள் பெயர்ந்துபுலர்காலத்
தற்பவிருணின்றதுமன் ஞானிரையினாலே
சொற்பறவைமாயனுண ராதுதுயில்கொள்ளச்
சிற்பரமயோகியர்கள் செம்மலைநினைத்தார்

இ-ள். முற்காலத்தில் பரமசிவனுடைய திருவிளையாட்டினால்கற்பகாலம்முடிவுற்று மகத்தாகிய அந்தகாரம்நீங்கி வெளிச்சமுண்டாகிற காலத்தில அவ்வந்தகாரத்திற் கொஞ்சம்நின்ற அக்காலத்தில் இதனையறியாமல் விஷ்ணுசமுத்திரத்தில் நித்திரைசெய்துக் கொண்டிருக்க மேன்மையான சின்மயமாகிய யோகியர்கள் பரமசிவனை நினைத்தார்கள். எ-று. உ௰

அத்தனடியார்கடம தாணவமறுக்குஞ்
சுத்தனழலானதொரு சோதிவடிவானான்
றத்தலமுமெத்திசையு மெங்கும்வெளியானே
னய்த்தபொறிதம்மினுல வாயுலகெல்லாம்.

இ-ள். எல்லாச்சீவராசிகளுக்கும் பிதாவாகியும் தமதடியார்களுடைய ஆணவமலத்தைக்கெடுக்கின்ற பரிசுத்தராகியுமிருக்கும் பரமசிவன் நெருப்புமாகிய ஒருசோதிரூபத்தை யடைந்தார் எத்தலங்களிலும் எத்திக்குகளிலு மற்றமவ்விடங்களிலும ஆகாயமேதமக்குருவாகிய அச்சுவாமி அப்போதுசிந்திய பொறிகளாலே உலகமெல்லாம் உண்டாயின. எ-று. உக

ஊழிமுடிவாயிருள் புலர்ந்துமுணராதே
யாழிநிசையிற்றுயிலு மச்சுதனையெய்தி
வாழியெனயோகிய ரெழுப்புசலுமாயன்
பாழியினுநின்றதி பயத்துடனெழுந்தான்.

இ-ள். ஊழிகாலமுடிந்து மகத்தாகிய அந்தகாரம்நீங்கியும் அறியாமல் சமுத்திரத்தில் நித்திரைசெய்யவும் விஷ்ணுவினிடத்தில் வந்து வாழியென்றுசொல்லி யோகியர்கள் எழுப்புதலும அவ்விஷ்ணுசர்ப்பசயனத்தினின்றும் அதிகபயத்துடனெழுந்திருந்தார். எ-று. உஉ

வையகமளிக்கமல ரோனையுகவாதே
பையரவின்மிக்கதுயில் கொண்டபரிசாலே
வெய்யபுன்வினைத்தொழில் விளைத்தனனெனத்தன்
றைபுணர்வமஞ்சியென தையனைநினைந்தான்.

இ-ள்.உலகமுண்டாகும்பொருட்டுபிரமனைசிருஷ்டிக்காயல்படத்தையுடையபாம்பின்மேல் நித்திரைசெய்த தன்மையினாலேவெம்மையாகிய தீவினையைச்சம்பாதித்துக் கொண்டேனென்று ஐம்பொறிகளுந்தங்கியவென்னுடைய ஆண்டவனாகியசுவாமியைநினைத்தார். எ-று.

அன்பர்கருத்திற்கடுமை யாயெதிருவந்தே
துன்பையகல்விக்குமது தூதொழியிலானை
வன்படிகவெற்புநிசை மன்னுசுடர்போல
மின்படருமேனியுடன் வெள்விடையில்வந்தான்.

இ-ள். அடியார்கள் நினைத்தால் சீக்கிரத்தில்தானே அவர்களுக்கு எதிராகத்தோன்றித் துன்பங்களை நீக்குவதே தமக்குப் பரிசுத்தமாகிய தொழிலாகக்கொண்ட பரமசிவன் வன்மையாகிய படிகமலையின்மேல் விளங்கும் சோதிபோல் வெண்மையாகிய ரிஷபத்தின்மேல் மின்போன்ற நிரத்தோடும் எழுந்தருளிவந்தார் எ-று. உச

பொருக்கெனவெழுந்தடி பணிந்தருள்புகழ்ந்தே
யருக்கியமுதற்புரி யருச்சனையினாலே
யுருக்கியென் வினைத்தொட ரொருத்தனியென்று
னெருக்கணிதுவானிவை யெடுத்துமொழிகின்றான்.

இ-ள். அப்படி பரமசிவன் ரிஷபவாகனத்தில் எழுந்தருளி வந்தவுடனே விஷ்ணு சீக்கிரத்தில் எழுந்து திருவடிக் கமலங்களுக்கு வந்தனஞ்செய்து அவருடைய திவ்வியகிருபையைப்புகழ்ந்து அவருக்கு அர்க்கியமுதலிய பூசைகளினாலே சுவாமியினுடைய திருவுள்ளத்தை இளகச்செய்து எனக்கு நித்திரையினால் வந்தவினையைநீக்கி அருள் செய்ய வேண்டுமென்றார் எருக்கம்பூமாலையைத் தரிக்கும் சுவாமி இவைகளைச் சொல்லத்தொடங்கினார் எ-று. அர்க்கியம் முதலாயின என்பன அர்க்கியம், பாத்தியம் ஆசமனமாம். உரு

வாசிமதமேமுதன் மகம்பலசெய்தாலும்
பாதமகலாதவினை பற்றுதலாலெண்ணித்
தேசுமிகுதென்றிசை செறிந்தருணைதன்னிற்
பூசைபுரிவிட்டுவினை போகுமுனையென்றான்.

இ-ள். ஒருவன் தனக்குண்டான வினையை நீக்கும்படி நினைத்து அஸ்வமேதமுதலிய பலயாகங்களைச் செய்தாலும் அது பாகாது ஆகையினாலே சோதிமயமாகிய தெற்குத்திசையில் விளங்கும் அருணாசலத்திற்குப்போய் பூசைசெய்தால் உன்னைவிட்டு வினைபோமென்றார் பரமசிவனார் எ-று. உசா

நாறுபொழிலாருணகிரு நாமும்வடிவொன்றே
வேறலவதன்பெருமை வேதமுணதாரால்
நீறுபுனைவோர்களவிர்பலதொண்ணூற்
றுறுபிரமாவதி லருச்சனைபுரிந்தீர்

இ-ள். வாசனையுடைய சோலைகள் சூழ்ந்த அவ்வருணாசலத்திற்கும் எனக்கும் வடிவம்ஒன்றுதான் பேதமன்று அதனுடையபெருமையை வேதங்களும் அறியமாட்டா விபூதியை முக்கியமாகத் தரிக்கும் யோகியர்களும் விட்டுணுக்களாகிய நீங்கள்பலரும்தொண்ணூற்றுறு பிரமர்களும் அத்தலத்தினில் பூசைசெய்தீர்களா எ-று. உஎ

முற்றிழையுரோகிணிபு முலைக்கிடையின்மூழ்கா
மற்றவிருபத்தறுவர் வாழ்க்கையுமறந்தான்
கற்றைமதிதக்கனுடல் கன்றுறசபித்தான்
அற்றமதியப்பதியி லத்துயரொழித்தான்.

இ-ள். சந்திரனென்றுக வேலைதீர்ந்த ஆபரணங்களையுடைய உரோகிணி தனங்களின் போகத்தைவிரும்பி மற்ற இருபத்தாறு நாயகிகளுடைய போகவாழ்வுகளையு மறந்துவிட அதைமுன்சொன்ன இருபத்தேழுபெண்களுக்குந் தந்தையாகிய தக்கன்கேள்விப்பட்டு எல்லா நாயகிகளிடத்தும் விருப்பம்வையாமல் ஒருத்தியின்மேல்மாத்திரம் வைத்ததனால் அவனுடல்குன்றிப் போகக்கடவதென்று சபித்தான், அச்சாபத்தை யடைந்தசந்திரன் அவ்வருணாசலத்தில் வந்து அத்துன்பத்தை நீக்கிக்கொண்டான் எ-று. ௨௮

நினைப்பளவின்முத்திதரு நீணகரமுற்றே
மனக்குறைதவிர்த்திடுதி யெனவிறைமறைந்தா
னற்கிரியைநாடியரி யத்திசைபினண்ணியிச்
சுனைக்கமலவாசமிகு சோணகிரிகண்டான்.

இ-ள். நினைத்தமாத்திரத்தில் முத்தியைக்கொடுக்கும் அருணாசலமென்னும் அத்தலத்திற்குப்போய் மனக்குறையை நீக்கிக் கொள்ளென்று சுவாமிமறைந்தார். விட்டுணு அக்கினிவடிவமாகிய மலையை த்தியானஞ்செய்து அதுவிளங்குந் தென்றிசையையடைந்து சுனையிலிருக்கும் தாமரைப்பூவின் வாசனைமிகுந்த அத்தலத்தைக் கண்டார் எ-று. ௨௯

ஈசர்வடிவானமலை கண்டினிதிறைஞ்சித்
தேசுமிகுநன்னகர் சொரிந்துமகிழ்வாகி
வாசவந்தடத்திடை படிந்துவலமாகிப
பூசனைபுரிந்துவினை போயமலனானான்.

இ-ள். மலைவடிவமாகிய சுவாமியைத்தரிசித்து அன்போடுபணிந்து ஒளியமர்ந்தஅத்தலத்திற்குப்போய்ச் சந்தோஷமடைந்து இந்திரதீர்த்தத்தில் முழுகிக்கிரிப்பிரதக்ஷணம்வந்து பூசைசெய்துகொண்டு வரத்தமமுடைய வினைநீங்கி விட்டுணுபரிசுத்தனானான் எ-று. ௩௰

மேவியகருணைப்பதியின் மிகப்புகழுமாயன்
பாவமகல்வித்திடு பலத்தினையுரைத்துத்
தாவிலுமைபாகமுறை சோணகிரிநாத
னாவியின்மகிழ்ச்சியையு நான்முகனுரைப்பான்.

இ-ள். மிகுந்த புகழையுடையவிஷ்ணு அருணாசலத்துக்குப்போய் தம்முடையபாவத்தைநீக்கி அவர்அடைந்த பலனைப்பிரமன் சனற்குமாரருக்குச்சொல்லிப் பார்வதி ஒருபாகத்தில் வாசஞ்செய்கின்ற அருணாசலேசர் பூசைபுரிந்தனாலே அடைந்த சந்தோஷத்தையுஞ் சொல்லத் தொடங்கினார் எ-று. ௩௧

பன்னிரண்டாவது.

பாவந்தீர்த்தசருக்கம் முற்றிற்று.

---

ஆக திருவிருத்தம் - 649.



உ

சிவமயம்.

பதின்மூன்றாவது.

# புளகாதிபன் சருக்கம்.

---

எழுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

உருவுபலவேறுபுனை புளகனெனுமோரசுர னொருபொழுதுநாவி வடிவா, மருவணைகிரிமீதுலவி யரியபுழுகேசிரிய திகபலமாயவனியோர், வெருவவிமையோர்முனிவ ரொருவரொழியாதழியு வினைபுரிகையாயலவரெலாங், கருணைமலை போலிமைய மலைப மலைபாகருறை கயிலைமலைமேவிமொழிவார்.

இ-ள். நினைத்தபடிவெவ்வேறே உருவங்களையெடுத்துக்கொள்ள வல்லமையுள்ள புளகனென்னும் ஓரசுரன் ஒருநாள்புழுகுபூனை உருவமடைந்து வெவ்விய சிறத்தையுடைய அம்மலையின்மேல் உலாவிக்கொண்டு புழுகைச் சிதறியபடியால், சுவாமியினால் அதிகபலம்பெற்றும்பூமியிலுள்ளவர்கள்பயப்படவும். தேவர்கள் முனிவர்களெல்லாரும் துன்பப்படவும்,துற்கிருத்தியம் செய்வதனாலேஅவர்களெல்லாம்இமயபருவதராஜனுடைய புத்திரியாகிய பார்வதியை ஒருபாகத்தில் வைத்தருளியகருணைமலைபோன்ற பரமசிவன் எழுந்தருளியிருக்கின்ற கைலாயகிரிக்குப்போய்ச் சொல்லுவார்கள். எ-று. க

புளகனெனுமோரசுரர் மிருகவடிவாகிவதை புரியவுலகேழுமுறைபோய், வினையுயரமாயினர்களெனவுரைசெய்தாரவர்கள் விமலனவரோடுபுகல்வார், ரளவின் மணமானபுழு வருணகிரிமீதுதவி யதிகபல

மாய்மருவினு, னெளிதிலழியாதவனு மினியகதியேறருமைபிடாலேயி லேறவிடுவோம்.

இ-ள். புளகனென்னும்ஒரு அரசன் புழுகுபூனைவடிவங்கொண்டு ஏழுலகங்களிலும்முறையேபுகுந்து சீவராசிகளையும் வதைசெய்ய.அதனால் எல்லாரும் துன்பமடைந்தார்களென்று வந்தவர்கள் சொல்லிக்கொள்ளப் பரமசிவன் அவர்களோடு திருவாய்மலர்ந்தருளுவார்,மணம்வீச ம் அளவில்லாத புழுகைகமதுருவாகிய அருணாசலத்திற்சிதறியதனால் அதிகபலம் அடைந்திருக்கிறன், அப்படிப்பட்டவன் எளிதில் அழியமாட்டான், ஆனபடியாலே அவனைமோட்சத்தில் அடைவித்து உங்களை துக்கசமுத்திரத்தினின்றும் கரையேற்றுவோம், எ-று. உ

மேவுமெனவோதியரு ளோடுபுளகாதிபனை வேதமுதல் கூவியவுனு,காவிவடிவாகியவு நாவிவிடுவாயென்றுநாவிவடிவான்மொழிகுவான், பாவையொருபாகரரு ணலயபுராதன பராபரவிலோசனருளால், ஏவளெளியேன்மொழிபு மாறுதவனேவிறைவ னிரடியின்மீதுதொழுதே.

இ-ள். நீங்கள் உங்களிடத்திற்போய்ச் சேருங்களென்று விடைகொடுத்தருளி மிககக்கிருபையோடு புளகனென்னும் அவ்வரசனைவேதமுதலாகிய பரமசிவன் அழைத்து அசுரனை புழுகுபூனை வடிவங்கொண்ட உன்பிராணனை விடென்று சொல்லிய அளவில அவ்வசுரன் சொல்லுவான் பார்வதியை யொருபாகத்திற் கொண்டருளியவரே கிருபைக்கு இடமா யிருக்கின்றவரே பழமை யானவரே நெற்றிக் கண்ணையுடையவரே உமக்குஏவல் செய்தற்குறிய வெளியேன் கேட்டுக் கொள்ளுகிற வரங்கொடுத்தருளு மென்று சுவாமி இரண்டு திருவடிகளுக்கும் வந்தனஞ் செய்து சொல்லுவான். எ-று. ௩

எனதுகிளையாமிருக தனதுதிருமேனிபுகவினிய புழுகாதியொருபேர், பினையவெனவேபரவி யுயிர்விடலு நாவிகதி புகுதவிறையோனருளினன், மனமுருகியோமுனிவ ரிமையவர்கண்மானிடர்களமதிமுடியின்மேலனியவே, அனவரதமான்மழுவு மிமாலமுமாலயமதருவியெனவே பெருகுமே.

இ-ள். நானெடுத்த உருவமாகிய புழுகுபூனையின்மரபினால் உண்டாகின்றபுழுகு உம்முடைய திருமேனி ஏற்றுக்கொள்ளவும் அதனால் புழுகணி யிறைவனென்று ஒருநாமத்தை நீர் தரித்துக்கொள்ளவும், அருள்செய்யவேண்டுமென்று வணங்கி நாவியுயிர் விட்டவுடனே. அப

வசுரன் கதிசேரும்படி சுவாமியனுக்கிரகஞ்செய்தார் அப்படி அவனை இரட்சித்ததுங்கண்டு முனிவர்களும் தேவர்களும் மனிதர்களும் மனவருத்தமடைந்து சந்திரனைத்தரித்த சுவாமிகரத்தில் புழுகுகாப்புச்சாத்த, எப்போது அப்புழுகுகரைந்து பனிநீரோடு சுவாமி ஆலயம் அருவியை யுடையதாகப் பெருமியோடும் எ-று. ௪

புழுகுபனிநீர்களபப்பனுவளவதேனுமிறை புனையும்வகையானு தவினோர், விழிகுளிரநாடிபரனிணையடிகளைபரவி வினவிாகள்வீடுபெறுவர, ருழைமநவுபாணியினர் சரிதமிதுவாகுமெனவுவகையுடனே யுரைசெய்தான், மொழியுமலரானயனை முனிவருடனேசனக முனிபுகழ்விளேடு தொழுதான்.

இ-ள். புழுகும்பனிநீரும் கூட்டுவர்க்கச்சந்தனமுமாகிய இவைகளில் அணுவளவேனும் சுவாமி ஒப்புக்கொள்ளும்படி செய்தவர்களும கண்கள் களிப்படையும்படியாகத் தரிசித்துச் சுவாமி திருவடிகளை வணங்கி அவர்சரித்திரத்தைக் கேட்டவர்களும் மோட்சமடைநதார்கள் மானைக்கரத்தில் வைத்தருளிய பரமசிவனுடைய திவ்வியசரித்திரமிதுவாமென்று சந்தோஷமாய் அப்பிரமன்சொல்ல அப்படி சொல்லிய பிரமனைசனகாதி முனிவர்களோடு தோத்திரஞ் செய்து வணங்கினன் எ-று. ௫

கலி விருத்தம்.

அஞ்செழுத்தும் வாழிவாழி யருணைவாழி யருணையான்
கஞ்சமுற்ற சரணம்வாழி கருணைவாழி கருணைபோன்
மஞ்சுபெற்ற வானம்வாழி வையம்வாழி வையமேற்
றஞ்சமுற்ற நீறும்வாழி சைவம்வாழி வாழியே.

இ-ள். பாவங்களைப் போக்கக்காரணமான பஞ்சாக்ஷரம் வாழ்க அருணாசலத்தலம்வாழ்க, அருணாசலேசருடைய தாமரை மலர்போன்ற திருவடிகள்வாழ்க, அச்சுவாமி கிருபைவாழ்க, அக்கருணைபோன்ற அழகாகிய மேகவருஷம்வாழ்க, பூலோகமவாழ்க, பூமியில் உயிர்களுக்குப் பற்றுக்கோடாகிய திருநீறுவாழ்க, சைவசமயம்வாழ்க எ-று. ௬

ஞானம்வாழி நன்மைவாழி நாடுராச நீதிசீர்
தானம்வாழி தருமம்வாழி சகலவேத வாகமங்
கானம்வாழி கல்விவாழி கற்றறிந்த கேள்வியன்
பானவேர்கள வாழியீச னடியர்வாழி வாழியே.

இ-ள். ஞானம்வாழ்க, நன்மைவாழ்க, நாடும் இராசனும் அவனுக்குரிய நீதியும் கீர்த்தியும், தானமும்வாழ்க, தருமம்வாழ்க, உண்

மையாகிய வேதமும் ஆகமங்களும்வாழ்க, சங்கீதம்வாழ்க, கற்றவித்தைகளும்வாழ்க, அவைகளைக் கற்றறிந்தும் கேள்விப்பட்டும் யாவரிடத்தும் அன்பு உண்டானவர்கள்வாழ்க, பரமசிவன் அடியார்கள் வாழ்க, வாழ்க, எ-று. எ

அறுசீர்க்கழிநெடி லாசிரிய விருத்தம்.

இக்கதை படித்தோர்கேட்டோ ரெழுதினோ ரெழுதிவைத்தோர்
கமைச்கடல்சூழ்ந்த வித்தவையக முழுதுங்காத்துத், தக்கசந்தான
போக சவுக்கியந் தழையவாழ்ந்து, திக்கருணேசரன்பாற் சிவபதம்
பெறுவர்தாமே.

இ-ள். இவ்வருணாசலத்தின் மான்மியத்தைப் படித்தவர்களும் கேட்டவர்களும் எழுதினவர்களும் எழுதிவைத்துக் கொண்டவர்களும், கரியகடல்சூழ்ந்த பூமிமுழுதும் காத்துத்தகுந்த புத்திரசம்பத்தும் போகசௌரியமும் தழைக்கும்படியாக வாழ்ந்து யாவருக்கும் ஆதாரமாகிய அருணாசலேசர் கிருபையினால் சிவபதம் அடைவார்கள் எ-று. அ

பதின்மூன்றாவது.

புளகாதிபன் சருக்கம்.

முற்றிற்று.

---

அருணாசலபுராணம் மூலமும்-உரையும்,

முற்றிற்று.

---

பர்பிர முட்பட சருக்கம் பதினைங்குக்கும்
ஆக திருவிருத்தம்-௬௱௭௬.
திருசிற்றம்பலம்.

---

இ-ள். அடியார்கள் நினைத்தால் சீக்கிரத்திற்றானே அவர்களுக்கு எதிராகத்தோன்றித் துன்பங்களை நீக்குவதே தமக்குப் பரிசுத்தமாகிய தொழிலாகக்கொண்ட பரமசிவன் வன்மையாகிய படிகமலையின்மேல் விளங்கும் சோதிபோல் வெண்மையாகிய ரிஷபத்தின்மேல் மின்போன்ற நிறத்தோடும் எழுந்தருளிவந்தார் எ-று. உ௪

பொருக்கெனவெழுந்தடி பணிந்தருள்புகழ்ந்தே
யருக்கியமுதற்புரி யருச்சனையினாலே
யுருக்கியென்வினைத்தொட ரொருத்தளியென்று
னொருக்கணிதுவானிவை யெடுத்துமொழிகின்றான்.

இ-ள். அப்படி பரமசிவன் ரிஷபவாகனத்தில் எழுந்தருளி வந்தவுடனே விஷ்ணு சீக்கிரத்தில் எழுந்து திருவடிக் கமலங்களுக்கு வந்தனஞ்செய்து அவருடைய திவ்வியகிருபையைப்புகழ்ந்து அவருக்கு அர்க்கியமுதலிய பூசைகளினாலே சுவாமியினுடைய திருவுள்ளத்தை இளகச்செய்து எனக்கு நித்திரையினால் வந்தவினையைநீக்கி அருள்செய்ய வேண்டுமென்றார் எருக்கம்பூமாலையைத் தரிக்கும் சுவாமி இவைகளைச் சொல்லத்தொடங்கினார் எ-று. அர்க்கியம் முதலாயின என்பன அர்க்கியம், பாத்தியம் ஆசமனமாம். உ௫

வாசிமதமேமுதன் மகம்பலசெய்தாலும்
பாதமகலாதவினை பற்றுதலாலெண்ணித்
தேசுமிகுதென்றிசை செறிநதருணைதன்னிற்
பூசைபுரிவிட்டுவினை போகுமுனையென்றான்.

இ-ள். ஒருவன் தனக்குண்டான வினையை நீக்கும்படி நினைத்து அஸ்வமேதமுதலிய பலயாகங்களைச் செய்தாலும் அது பாகாது ஆகையினாலே சோதிமயமாகிய தெற்குத்திசையில் விளங்கும் அருணசலத்திற்குப்போய் பூசைசெய்தால் உன்னைவிட்டு வினைபோமென்றார் பரமசிவனார் எ-று. உ௬

நாறுபொழிலகநகரு நாமும்வடிவொன்றே
வேறலவதன்பெருமை வேதமுணராரால்
நீறுபுனைவோர்க ளவிர்பலதொண்ணூற்
றுறுபிரமாவதி லருச்சனைபுரிந்தீர்

இ-ள். வாசனையுடைய சோலைகள் சூழ்ந்த அவ்வருணைசலத்திற்கும் எனக்கும் வடிவம்ஒன்றுதான் பேதமன்று அதனுடையபெருமையை வேதங்களும் அறியமாட்டா விபூதியை முக்கியமாகத் தரிக்கும் யோகியர்களும் விட்டுணுக்களாகிய நீங்கள்பலரும்தொண்ணூற்றுறு பிரமர்களும் அத்தலத்தினில் பூசைசெய்தீர்கள் எ-று. உ௭

முற்றிழையுரோகிணிபு முலைக்கிடையின்மூழ்கா
மற்றவிருபத்தறுவர் வாழ்க்கையுமறந்தான்
கற்றைமதிதக்கனுடல் கன்றுறசபித்தான்
அற்றமதியப்பதியி லத்துயரொழித்தான்.

இ-ள். சந்திரகன்றுக வேலைதீர்ந்த ஆபரணங்களையுடைய உரோகிணி தனங்களின் போகத்தைவிரும்பி மற்ற இருபத்தாறு நாயகிகளுடைய போகவாழ்வுகளையு மறந்துவிட அதைமுன்சொன்ன இருபத்தேழுபெண்களுக் குந் தந்தையாகிய தக்கன்கேள்விப்பட்டு எல்லா நாயகிகளிடத்தும் விருப்பம்வையாமல் ஒருத்தியின்மேல்மாத்திரம் வைத்ததனால் அவனுடைக்குன்றிப் போகக்கடவதென்று சபித்தான், அச்சாபத்தை யடைந்தசந்திரன் அவ்வருணாசலத்தில் வந்து அத்துன்பத்தை நீக்கிக்கொண்டான் எ-று. உஅ

நினைப்பளவின்முத்திதரு நீணகரமுற்றே
மனக்குறைதவிர்த்திடுதி யெனறிறைமறைந்தா
னனற்கிரியைநாடியரி யத்திசைபினண்ணிச்
சுனைக்கமலவாசமிகு சோணகிரிகண்டான்.

இ-ள். நினைத்தமாத்திரத்தில் முத்தியைக்கொடுக்கும் அருணாசலமென்னும் அத்தலத்திற்குப்போய் மனக்குறையை நீக்கிக் கொள்ளென்று சுவாமிமறைந்தார். விட்டுணு அக்கினிவடிவமாகிய மலையைத்தியானஞ்செய்து அதுவிளங்குந் தென்றிசையையடைந்து சுனையிலிருக்கும் தாமரைப்பூவின் வாசனைமிகுந்த அத்தலத்தைக் கண்டார் எ-று. உகூ

ஈசர்வடிவானமலை கண்டினிதிறைஞ்சித்
தேசுமிகுநன்னகர் சொரிந்துமகிழ்வாகி
வாசவந்தடத்திடை படிந்துவலமாகிப
பூசனைபுரிந்துவினை போயமலனானான்.

இ-ள். மலைவடிவமாகிய சுவாமியைத்தரிசித்து அன்போடுபணிந்து ஒளியமர்ந்தஅத்தலத்திற்குப்போய்ச் சந்தோஷமடைந்து இந்திரதீர்த்தத்தில் முழுகிக்கிரிப்பிரதக்ஷணம்வந்து பூசைசெய்துகொண்டு வரத்தமமுடைய வினைநீங்கி விட்டுணுபரிசுத்தனானான் எ-று. ௩௰

மேவியகருணைப்பதியின் மிகப்புகழுமாயன்
பாவமகல்வித்திடு பலத்தினையுரைத்துத்
தாவிவுமைபாகமுறை சோணகிரிநாத
னாவியின்மகிழ்ச்சியையு நான்முகனுரைப்பான்.

இ-ள். மிகுந்த புகழையுடையவிஷ்ணு அருணாசலத்துக்குப்போய் தம்முடையபாவத்தைநீக்கி அவர்அடைந்த பலனைப்பிரமன் சனகரிஷிக்குச்சொல்லிப் பார்வதி ஒருபாகத்திலே வாசஞ்செய்கின்ற அருணாசலேசர் புரங்குபூசனையிலே அடைந்த சந்தோஷத்தையுஞ் சொல்லத் தொடங்கினார் எ-று. ௩௧

பன்னிரண்டாவது.

பாவந்தீர்த்தசருக்கம் முற்றிற்று.

---

ஆக திருவிருத்தம் - 649.



உ

சிவமயம்.

பதின்மூன்றாவது.

# புளகாதிபன் சருக்கம்.

---

எழுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

உறுவுபலவேறுடனே புளகனெனுமோரசுர னொருபொழுதுநாவி வடிவா, மருணைகிரிமீதுலவி யரியபுழுகேசிரிய திகபலமாயவனியோர், வெருவவிமையோர்முனிவ ரொருவரொழியாதழியு வினைபுரிகையாயலவரெலாங், கருணைமலை போலிமைய மலைமலைபாகருறை கயிலைமலைமேவிமொழிவார்.

இ-ள். நினைத்தபடிவெவ்வேறே உருவங்களையெடுத்துக் கொள்ள வல்லமையுள்ள புளகனென்னும் ஓரசுரன் ஒருநாள்புழுகுபூனை உருவமடைந்து வெவ்வியசிறத்தையுடைய அம்மலையின்மேல் உலாவிக்கொண்டு புழுகைச் சிதறியபடியால், சுவாமியினால் அதிகபலம்பெற்றும்பூமியிலுள்ளவர்கள்பயப்படவும். தேவர்கள் முனிவர்களெல்லாரும் துன்பப்படவும்,துற்கிருத்தியம் செய்வதனாலேஅவர்களெல்லாம்இமய பருவதராஜனுடைய புத்திரியாகிய பார்வதியை ஒருபாகத்தில் வைத்தருளியகருணைமலைபோன்ற பரமசிவன் எழுந்தருளியிருக்கின்ற கைலாயகிரிக்குப்போய்ச் சொல்லுவார்கள். எ-று. க

புளகனெனு மோரசுரர் மிருகவடிவாகிவதை புரியவுலகேழுமுறைபோய், வினைதுயரமாயினர்க ளெனவுரைசெய்தாரவர்கள் விமலனைவரோடுபுகல்வா, ரவின் மணமானபுழு வருணகிரிமீதுறவி யதிகபல

மாய்மருவினு, னெளிதிலழியாதவனு மினியகதியேறருமைபிடாலீயி லேறவிடுவோம்.

இ-ள். புளகனென்னும்ஒரு அரசன் புழுகுபூனைவடிவங்கொண்டு ஏழுலகங்களிலும்முறையேபுகுந்து சீவராசிகளையும் வதைசெய்ய.அத னால் எல்லாரும் துன்பமடைந்தார்களென்று வந்தவர்கள் சொல்லிக் கொள்ளப் பரமசிவன் அவர்களோடு திருவாய்மலர்ந்தருளுவார்,மண ம்வீச ம் அளவில்லாத புழுகைகமதுருவாகிய அருணாசலத்திற்சிதறிய தனால் அதிகபலம் அடைந்திருக்கிறான், அப்படிப்பட்டவன் எளிதில் அழியமாட்டான், ஆனபடியாலே அவனைமோட்சத்தில் அடைவித்து உங்களை துக்கசமுத்திரத்தினின்றும் கரையேற்றுவோம், எ-று. உ

மேவுமெனவோதியரு ளோடுபுளகாதிபனை வேதமுதல் கூவியவு னு,காவிவடிவாகியவு நாவிவிடுவாயென்றுநாவிவடிவான்மொழிகுவா ன், பாவையொருபாகரரு ணாலயபுராதன பராபரவிலோசனருளா ல், ஏவளெளியேன்மொழிபு மாறுதவனேவிறைவ னிரடியின்மீதுதொ ழுதே.

இ-ள். நீங்கள் உங்களிடத்திற்போய்ச் சேருங்களென்று விடை கொடுத்தருளி மிககக்கிருபையோடு புளகனென்னும் அவ்வரசனைவே தமுதலாகிய பரமசிவன் அழைத்து அசுரனை புழுகுபூனை வடிவங் கொண்ட உன்பிராணனை விடென்று சொல்லிய அளவில அவ்வசு ரன் சொல்லுவான் பார்வதியை யொருபாகத்திற் கொண்டருளி யவரே கிருபைக்கு இடமா யிருக்கின்றவரே பழமை யானவரே நெற்றிக் கண்ணையுடையவரே உமக்குஏவல் செய்தற்குறிய யெளி யேன் கேட்டுக் கொள்ளுகிற வரங்கொடுத்தருளு மென்று சுவா மி இரண்டு திருவடிகளுக்கும் வந்தனஞ் செய்து சொல்லுவான். எ-று. ௩

எனதுகிளையாமிருக துனதுதிருமேனிபுகவினிய புழுகாதியொ ருபேர், பினையவெனவேபரவி யுயிர்விடலு நாவிகதி புகுதவிறைவயோ னருளினன், மனமுருகியோமுனிவ ரிமையவர்கண்மானிடர்கள மதி முடியின்மேலனியவே, அனவரதமான்மழுவு மிமாலமுமாலயமதருவி யெனவே பெருகுமே.

இ-ள். நானெடுத்த உருவமாகிய புழுகுபூனையின்மரபினால் உண் டாகின்றபுழுகு உம்முடைய திருமேனி ஏற்றுக்கொள்ளவும் அதனால் புழுகணி யிறைவனென்று ஒருநாமத்தை நீர் தரித்துக்கொள்ளவும், அ ருள்செய்யவேண்டுமென்று வணங்கி நாவியுயிர் விட்டவுடனே. அப

வசுரன் கதிசேரும்படி சுவாமியனுக்கிரகஞ்செய்தார் அப்படி அவனை இரட்சித்ததும்கண்டு முனிவர்களும் தேவர்களும் மனிதர்களும் மன வருத்தமடைந்து சந்திரனைத்தரித்த சுவாமிகரத்தில் புழுகுகாப்புச்சா த்த, எப்போது அப்புழுகுகரைந்து பனிநீரோடு சுவாமி ஆலயம் அ ருவியை யுடையதாகப பெருமியோடும் எ-று. ௪

புழுகுபனிநீர்களபப்பனுவளவதேனுமிறை புனையும்வகையாலு தவினோர், விழிகுளிரநாடிபரனிணையடிகளேபரவி வினவிாகள்வீடுபெ றுவா, ருழைமநவுபாணிபினர் சரிதமிதுவாகுமென வுவகையுடனே யுரைசெய்தான், மொழியுமலராலயனை முனிவருடனேசனக முனிபு கழ்வினேடு தொழுதான்.

இ-ள். புழுகும்பனிநீரும் கூட்டுவர்க்சச்சந்தனமுமாகிய இவை களில் அணுவளவேனும் சுவாமி ஒப்புக்கொள்ளும்படி செய்தவர்க ளும கண்கள் களிப்படையும்படியாகத் தரிசித்துச் சுவாமி திருவடி களை வணங்கி அவர்சரித்திரத்தைக் கேட்டவர்களும் மோட்சமடைந தார்கள் மானைக்கரத்தில் வைத்தருளிய பரமசிவனுடைய திவ்வியசரி த்திரமிதுவாமென்று சந்தோஷமாய் அப்பிரமன்சொல்ல அப்படி சொல்லிய பிரமனைசனகரிஷி முனிவர்களோடு தோத்திரஞ் செய்து வணங்கினன் எ-று. ரு

கலி விருத்தம்.

அஞ்செழுத்தும் வாழிவாழி யருணைவாழி யருணையான்
கஞ்சமுற்ற சரணம்வாழி கருணைவாழி கருணைபொன்
மஞ்சுபெற்ற வானம்வாழி வையம்வாழி வையமேற்
றஞ்சுமுற்ற நீறும்வாழி சைவம்வாழி வாழியே.

இ-ள். பாவங்களைப் போக்கக்காரணமான பஞ்சாக்ஷரம் வாழ்க அருணசலத்தலம்வாழ்க, அருணசலேசருடைய தாமரை மலர்போ ன்ற திருவடிகள்வாழ்க, அச்சுவாமி கிருபைவாழ்க, அக்கருணைபோ ன்ற அழகாகிய மேகவருஷம்வாழ்க, பூலோகமவாழ்க, பூமியில் உயி ர்களுக்குப் பற்றுக்கோடாகிய திருநீறுவாழ்க, சைவசமயம்வாழ்க எ-று. சு

ஞானம்வாழி நன்மைவாழி நாடுராச நீதிசீர்
தானம்வாழி தருமம்வாழி சகலவேத வாகமங்
கானம்வாழி கல்விவாழி கற்றறிந்த கேள்வியன்
பானவேர்கள வாழியீச னடியர்வாழி வாழியே.

இ-ள். ஞானம்வாழ்க, நன்மைவாழ்க, நாடும் இராசனும் அவ னுக்குரிய நீதியும் கீர்த்தியும், தானமும்வாழ்க, தருமம்வாழ்க, உண்

மையாகிய வேதமும் ஆகமங்களும்வாழ்க, சங்கீதம்வாழ்க, கற்றவித்தைகளும்வாழ்க, அவைகளைக் கற்றறிந்தும் கேள்விப்பட்டும் யாவரிடத்தும் அன்பு உண்டானவர்கள்வாழ்க, பரமசிவன் அடியார்கள் வாழ்க, வாழ்க, எ-று. எ

அறுசீர்க்கழிநெடி லாசிரிய விருத்தம்.

இக்கதை படித்தோர்கேட்டோ ரெழுதினோ ரெழுதிவைத்தோர் கமைச்கடல்சூழ்ந்த வித்தவையக முழுதுங்காத்துத், தக்கசந்தான போக சவுக்கியந் தழையவாழ்ந்து, திக்கருணேசரன்பாற் சிவபதம் பெறுவர்தாமே.

இ-ள். இவ்வருணாசலத்தின் மான்மியத்தைப் படித்தவர்களும் கேட்டவாகளும் எழுதினவர்களும் எழுதிவைத்துக் கொண்டவர்களும், கரியகடல்சூழ்ந்த பூமிமுழுதும் காத்துத்தகுந்த புத்திரசம்பத்தும் போகசௌரியமும் தழைக்கும்படியாக வாழ்ந்து யாவருக்கும் ஆதாரமாகிய அருணாசலேசர் கிருபையினால் சிவபதம் அடைவார்கள் எ-று. அ

பதின்மூன்றுவது.

புளகாதிபன் சருக்கம்.

முற்றிற்று.

---

அருணாசலபுராணம் மூலமும்-உரையும்,

முற்றிற்று.

---

பர்பிரமுட்பட சருக்கம் பதின்மூன்றுக்கும்

ஆக திருவிருத்தம்-௯௱௪௯.

திருச்சிற்றம்பலம்.

---